# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் : 158 / CPT அங்கீகாரம் பெற்றது இணைப்பு : CITU & EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005

Telephone No: 044-28548529
Fax No: 044-28516574
Email: coteecitu_hqchennai@yahoo.com
coteecitu@gmail.com

CITU

**சுற்றறிக்கை எண் 01/2012** **நாள் : 07.01.2011**

பெறுநர்
மத்திய அமைப்பின் அனைத்து நிர்வாகிகள்,
கிளைச் செயலாளர்கள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள்.

அன்பார்ந்த தோழர்களே ! வணக்கம்.

## அனைவருக்கும் புத்தாண்டு பொங்கல் நல்வாழ்த்துக்கள்

**24.01.2012 சென்னை ஆர்ப்பாட்டம்** 2011 டிசம்பர் 13-14 ஆகிய தேதிகளில் சென்னையில் நடைபெற்ற மாநில செயற்குழு முடிவின் அடிப்படையில் மின்வாரிய ஊழியர்களின் தீர்க்கப்படாத கோரிக்கைகளை முன்வைத்து 24.01.2012 அன்று மின்வாரிய தலைமையகம் முன்பாக பெருந்திரள் ஆர்ப்பாட்டம் செய்வதென்று முடிவு செய்ததை மீண்டும் நினைவூட்ட விரும்புகிறோம்.

ஆட்சி மாற்றத்திற்கு பிறகும் நாம் வைத்த கோரிக்கைகள் மீது தீர்வு காணப்படாத நிலையே நீடிக்கின்றது. அதாவது 1.12.2011 முதல் வழங்கவேண்டிய ஊதிய உயர்வு பேச்சுவார்த்தையே துவங்காத நிலை நீடிக்கின்றது. காலி இடங்களை நிரப்புகின்ற பிரச்சனையில் உதவி பொறியாளர் பதவிகளில் ஒரு பகுதி மட்டும் நிரப்புவதற்குண்டான நடவடிக்கை எடுத்துள்ளதை தவிர மற்ற ஆரம்பகட்ட பதவிகள் உட்பட ஆயிரக்கணக்கான காலியிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கையை வாரியம் எடுத்ததாக தெரியவில்லை. மேலும் மின்வாரியத்தில் மஸ்தூர்களாக பணியாற்றியவர்களுக்கு இரண்டு ஆண்டு காலத்திற்குள் அவர்களின் பதவி உயர்வு சம்மந்தமாக முடிவு எடுக்கப்படும் என்று ஒப்பந்தம் போடப்பட்டு பல ஆண்டுகள் ஆன பின்னரும் மஸ்தூர்களுக்கு அடுத்த பதவி உயர்வு சம்மந்தமாக முடிவு எடுப்பதில் தேக்க நிலையே நீடிக்கிறது. அதேபோல் கணக்கீட்டுப்பிரிவு ஊழியர்களின் கணிணி பழுதுபார்த்தல் உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகளில் வாரியம் முடிவு எடுப்பதில் மெத்தனப்போக்கையே கடைபிடிக்கின்றது. இந்த பின்னனியில் 24.01.2012 அன்று சென்னையில் நடத்தவுள்ள ஆர்ப்பாட்டத்தை சக்திமிக்க ஆர்ப்பாட்டமாக நடத்தவேண்டியுள்ளது. அதனால் உடனடியாக மண்டல, வட்ட, கோட்ட கூட்டங்களை நடத்தி இந்த ஆர்ப்பாட்டத்தை வெற்றிகரமாக்குவதற்கு திட்டமிட வேணுமாய் கேட்டுக்கொள்கிறோம்.

ஆர்ப்பாட்டம் திட்டமிட்டவாறு 24.1.2012 அன்று காலை 10.00 மணிக்கு துவங்கி பிற்பகல் 2.00 மணியளவில் முடிவடையவுள்ளது. இந்த ஆர்ப்பாட்டம் மின்வாரிய தலைமை அலுவலகம் முன்பாக நடைபெற உள்ளதால் தோழர்கள் குறிப்பிட்ட நேரத்திற்குள் திட்டமிட்டவாறு

கலந்துகொண்டு ஆர்பாட்டத்தை வெற்றிகரமாக்கிட வேண்டுகிறோம். திட்டவாரியாக கலந்துகொள்வோரின் பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. ஆர்ப்பாட்ட கோரிக்கைகளை பிரச்சாரமாக கொண்டுசெல்லும் வகையில் பொதுவான சுவரொட்டி மாநில மையத்திலிருந்து கிளைகளுக்கு அச்சடித்து அனுப்பப்பட்டுள்ளது.

## 2011 ஆம் ஆண்டு உறுப்பினர் சேர்ப்பு இறுதிபடுத்துதல்

2011 ஆம் ஆண்டு முடிவடைந்துவிட்டது. அந்த அடிப்படையில் நமது உறுப்பினர் சேர்ப்பையும் இறுதிபடுத்திட வேண்டியுள்ளது. 20 க்கும் மேற்பட்ட கிளைகள் 2010 ஆம் ஆண்டு உறுப்பினர் எண்ணிக்கையை புதுப்பித்து புதிய உறுப்பினர்களையும் சேர்த்துள்ளனர். சில கிளைகள் 2010 ஆம் ஆண்டு உறுப்பினர் எண்ணிக்கைகளை அடைய நெருங்கிக்கொண்டுள்ளார்கள். இந்த சூழ்நிலையில் கிளைகள் 2011 ஆம் ஆண்டு உறுப்பினர் சேர்க்கையை இறுதிபடுத்தி 20.1.2012 க்குள் மாநில மையத்திற்கு வந்துசேருமாறு அனுப்பிவைத்திட கேட்டுக்கொள்கிறோம்.

தோழமையுள்ள



**(எஸ்.எஸ். சுப்பிரமணியன்)**
பொதுச் செயலாளர்.

# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் : 158 / CPT
அங்கீகாரம் பெற்றது
இணைப்பு : CITU & EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005

Telephone No: 044-28548529
Fax No: 044-28516574
Email: coteecitu_hqchennai@yahoo.com
coteecitu@gmail.com
CITU


சுற்றறிக்கை எண் 02/2012 நாள் : 06.01.2011

## அவசரம்

பெறுதல்,
மாநில நிர்வாகிகள் மற்றும்
கிளைச்செயலாளர்கள்.

அன்புள்ள தோழரே! வணக்கம்.

மாநில மையத்தின் 2009 மற்றும் 2010 ஆண்டுக்கான வரவு செலவு உள்முக தணிக்கை முடித்து அரசுக்கு அறிக்கை அனுப்ப வேண்டியுள்ளதால் கீழக்கண்ட இனங்கட்கான முழுதும் பயன்படுத்தப்பட்ட, முழுதும் பயன்படுத்தாத புத்தகங்களின் அடிக்கட்டைகளை உடனடியாக மாநில மையத்திற்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

1) சந்தா புத்தகம் (2008-2011)
2) போனஸ் நன்கொடை புத்தகம் (2008-2011)
3) பகுதிநேர ஊழியர்களின் நன்கொடை புத்தகம் (2011)

14.12.2011 அன்று நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில் 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுக்கான கிளையின் வரவு செலவுகளை தணிக்கை செய்து முடிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். மேலும் செயற்குழு கூட்டத்தின் முடிவின்படி 2011 சந்தா முடிக்காத கிளைகள் இலக்கை முடித்து கைவசமுள்ள சந்தாக்களை உடனடியாக மாநில மையத்திற்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**குறிப்பு:-**

கிளைகள் பராமரிக்கவேண்டிய வரவுசெலவு பதிவேடு, உறுப்பினர் பதிவேடு, குடும்பநல பாதுகாப்புத்திட்ட பதிவேடு, வரவு/செலவு வவுச்சர் ஆகிய பதிவேடுகள் 24.01.2012 அன்று சென்னையில் நடைபெற உள்ள ஆர்ப்பாட்டத்தின் போது நேரடியாக வழங்கப்படும்.

பொங்கல் வாழ்த்துக்களுடன்...

தோழமையுள்ள

**(எஸ்.எஸ். சுப்பிரமணியன்)**
பொதுச் செயலாளர்.

இணைப்பு :-
2009,2010 ஆண்டு கிளைகளின் வரவு/செலவுகளை தணிக்கை செய்திட ஒதுக்கப்பட்டுள்ள தணிக்கையாளர்களின் விவரங்கள்.

# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு
# மின்வாரிய தலைமை அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம்

2011 ஜனவரி 24, சென்னை.

| வ.எண் | கிளை | ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ள வேண்டிய உறுப்பினர்கள் |
|---|---|---|
| 1. | வடசென்னை | 100 |
| 2. | மத்திய சென்னை | 100 |
| 3. | மேற்கு சென்னை | 100 |
| 4. | தென்சென்னை | 100 |
| 5. | செங்கல்பட்டு | 75 |
| 6. | காஞ்சிபுரம் | 75 |
| 7. | வேலூர் | 25 |
| 8. | திருப்பத்துார் | 50 |
| 9. | தர்மபுரி | 50 |
| 10. | விழுப்புரம் | 75 |
| 11. | கடலூர் | 75 |
| 12. | திருவண்ணாமலை | 75 |
| 13. | திருச்சி வடக்கு | 30 |
| 14. | திருச்சி/மாநகர் | 30 |
| 15. | கரூர் | 20 |
| 16. | புதுக்கோட்டை | 20 |
| 17. | தஞ்சாவூர் | 20 |
| 18. | நாகப்பட்டிணம் | 10 |
| 19. | மதுரை | 50 |
| 20. | மதுரை மாநகர் | 10 |
| 21. | தேனி | 20 |
| 22. | ராமநாதபுரம் | 20 |
| 23. | சிவகங்கை | 30 |
| 24. | திண்டுக்கல் | 20 |
| 25. | விருதுநகர் | 10 |
| 26. | திருநெல்வேலி | 30 |
| 27. | துாத்துக்குடி | 30 |
| 28. | கன்னியாகுமரி | 20 |

| | | |
|---|---|---|
| 29. | நீலகிரி | 10 |
| 30. | கோவைதெற்கு | 20 |
| 31. | கோவை வடக்கு | 20 |
| 32. | கோவை மாநகர் | 20 |
| 33. | திருப்பூர் | 20 |
| 34. | உடுமலைபேட்டை | 20 |
| 35. | சேலம் | 20 |
| 36. | மேட்டூர் | 20 |
| 37. | ஈரோடு | 40 |
| 38. | நாமக்கல் | 20 |
| 39. | கோபி | 20 |
| 40. | வடசென்னை அனல் | 20 |
| 41. | எண்ணூர் | 20 |
| 42. | மேட்டூர் அனல் | 20 |
| 43. | தூத்துக்குடி அனல் | 20 |
| 44. | ஈரோடுஉற்பத்தி | 20 |
| 45. | காடம்பாறை | 5 |
| 46. | குந்தா உற்பத்தி | 5 |
| 47. | நெல்லைஉற்பத்தி | 5 |
| 48. | காற்றாலைபண்ணை | 5 |
| 49. | பொதுகட்டுமான ம் | 50 |
| 50. | தலைமயகம் | 10 |
| | **மொத்தம்** | **1675** |

# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் : 158 / CPT அங்கீகாரம் பெற்றது இணைப்பு : CITU & EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005

Telephone No: 044-28548529
Fax No: 044-28516574

Email: coteecitu_hqchennai@yahoo.com
coteecitu@gmail.com


**சுற்றறிக்கை எண் 3/2012** **நாள் : 27.01.2012**

*பெறுநர்*
மத்திய அமைப்பின் அனைத்து நிர்வாகிகள் மற்றும்
மத்திய அமைப்பின் கிளைச் செயலாளர்

## மத்திய அமைப்பின் மாநில நிர்வாகிகள் கிளைச்செயலாளர்கள் கூட்ட அழைப்பிதழ்

அன்பான தோழரே!, வணக்கம்.

மத்திய அமைப்பின் **மாநில நிர்வாகிகள் மற்றும் கிளைச் செயலாளர்கள் அவசர கூட்டம் எதிர்வரும் 5.02.1012 ஞாயிற்றுக்கிழமை** அன்று

**காலை 10.00 மணிக்கு**
**தோழர்.டி.ஜே. நினைவகம்,**
**எண்-177, சிங்கண்ணசெட்டித் தெரு,**
**சிந்தாதிரிப்பேட்டை, சென்னை 600 002**

மேற்கண்ட முகவரியில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் மாநில சி.ஐ.டி.யூ., வின் சார்பாக உதவி பொதுச் செயலாளர் தோழர். ஆர்.கருமலையான் கலந்து கொள்ள உள்ளார் ஒரு நாள் கூட்டம் என்பதால் குறித்த நேரத்தில் பங்கேற்க வேணுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

### நிகழ்ச்சி நிரல்

1. அஞ்சலி
2. தலைவர் உரை
3. நடைபெற்ற பணிகள்
4. 28.02.1012 வேலை நிறுத்தம் - தயாரிப்பு
5. இதர பிரச்சனைகள்

தோழமையுள்ள

**(எஸ்.எஸ். சுப்பிரமணியன்)**
பொதுச் செயலாளர்.

# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் : 158 / CPT அங்கீகாரம் பெற்றது இணைப்பு : CITU & EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005

Telephone No: 044-28548529 Email: coteecitu_hqchennai@yahoo.com
Fax No: 044-28516574 coteecitu@gmail.com

CITU


**சுற்றறிக்கை எண் 04/2012** **நாள் : 28.01.2011**

பெறுநர்

மத்திய அமைப்பின் அனைத்து நிர்வாகிகள்,
கிளைச் செயலாளர்கள்,
செயற்குழு உறுப்பினர்கள்.
பொதுக்குழு உறுப்பினர்கள்

அன்பார்ந்த தோழர்களே ! வணக்கம்.

## 24.01.2012 வெற்றிகரமான ஆர்ப்பாட்டம்

தமிழக மின்வாரிய ஊழியர்கள் மின் நுகர்வோர்களின் கோரிக்கைகளை முன்வைத்து 24.01.2012 அன்று திட்டமிட்டவாறு ஆயிரக்கணக்கான ஊழியர்கள் கலந்துகொண்ட ஆர்பாட்டம் நடைபெற்றுள்ளது. இந்த வெற்றிகரமான ஆர்பாட்டத்தில் ஊழியர்கள் கலந்துகொள்ள முன்முயற்சி செய்த அத்துனை மாநில நிர்வாகிகள், கிளைச்செயலாளர்கள், செயற்குழு உறுப்பினர்களுக்கும் கலந்துகொண்ட அத்துனை தொழிலாளர்களையும் மின்ஊழியர் மத்திய அமைப்பு மனதார வாழ்த்துவதோடு நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறது.

திரளான ஊழியர்கள் கலந்துகொண்ட இந்த ஆர்ப்பாட்டம் சில கோரிக்கைகளின் மீது வாரியத்தின் அறிவிப்புகளை பெறச்செய்துள்ளது. ஆர்ப்பாட்டத்தினை ஒட்டி முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் மீது பேச்சுவார்த்தை நடைபெற்றுள்ளது.

பேச்சுவார்த்தையில் வாரியத் தரப்பில் இயக்குநர்/டிரான்ஸ்மிஷன், இயக்குநர்/உற்பத்தி, வாரிய செயலாளர் சட்டஆலோசகர்,தலைமைப்பொறியாளர்/பணியமைப்பு, தொழில்உறவு அதிகாரிகளும். மத்திய அமைப்பு சார்பில் தோழர்கள் எஸ்.எஸ். சுப்பிரமணியன், கே. விஜயன், து. கோவிந்தராஜு, பி. கண்ணன், இ. அந்தோணி, கே. ரவிச்சந்திரன், தி. ஜெய்சங்கர் ஆகியோர் பங்கேற்றனர்.

1) மின்வாரியத்தில் பணியாற்றும் மஸ்தூர்கள் இரண்டு ஆண்டு காலம் பணியாற்றிய பின்னர் அவர்களின் பதவி உயர்வு சம்மந்தமாக முடிவு செய்யப்படும் என ஒப்பந்தம் கண்டு 5 ஆண்டு காலம் பணிமுடிந்த பின்னரும் அப்பிரச்சனை முடிவு காணப்படவில்லை. எனவே மின்வாரியத்தில் பணியாற்றும் மஸ்தூர்களுக்கு கள உதவியாளர்களாக பதவி உயர்வு வழங்குவதற்குண்டான உத்தரவை ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் முடித்திட வேண்டுமென வலியுறுத்தியதின் அடிப்படையில் ஒருமாத காலத்திற்குள் இதற்கான உத்தரவு பிறப்பிக்கப்படும் என்ற அறிவிப்பினை செய்துள்ளார்கள்.

மஸ்தூர்களுக்கு அளிக்கப்பட்ட சைக்கிள் அலவன்சை சில திட்டங்களில் நிறுத்தி, கொடுத்த தொகை பிடித்தம் செய்ததையும் உடனடியாக கைவிட்டு மஸ்தூர்களுக்கு சைக்கிள் அலவன்சை அனைத்து திட்டங்களிலும் உள்ள ஊழியர்களுக்கு வழங்குவதை உத்தரவாதப்படுத்திட வேண்டும் என வலியுருத்தியதில் இதன் மீது அவசர நடவடிக்கை எடுத்து உடன் உத்தரவு வழங்கப்படும் என வாரியத்தரப்பில் கூறப்பட்டது.

2) அனல்மின் நிலையத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்கு பதவி உயர்வு வழங்குவதற்குண்டான ஒப்பந்தம் காணுவதில் ஏற்பட்டுள்ள காலதாமதத்தை கலைந்து அதற்கான ஒப்பந்தத்தை கண்டு பதவி உயர்வு வழங்கிட வேண்டுமென்று நாம் வலியுறுத்தியதின் அடிப்படையில் தொழிலாளர் துறை ஆணையரோடு கலந்துபேசி தேதி நிர்ணயம் செய்து 10 நாட்களுக்குள் ஒப்பந்தம் கானப்படும் என வாக்குறுதி அளித்துள்ளார்கள்.

புனல், சிவில் மற்றும் பொதுக்கட்டுமான வட்டத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்கு பதவி உயர்வு வழங்குவது சம்மந்தமாக உடன் நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறியுள்ளனர்.

3) கணக்கீட்டுப்பிரிவில் பணியாற்றும் ஊழியர்களுக்கு பதவி உயரவு வழங்குவதில் விதிக்கப்பட்டுள்ள தேவையற்ற நிபந்தனைகளை அகற்றி பதவி உயர்வு வழங்க வேண்டுமென நாம் வலியுறுத்தி உள்ளோம். இதில் வருவாய் மேற்பார்வையாளரில் இருந்து கணக்கீட்டு அலுவலர் பதவி உயர்வு வழங்குவதற்கு விதிக்கப்பட்டுள்ள நிபந்தனையை தளர்த்தி அடுத்த வாரிய கூட்டத்தில் ஒப்புதல் பெற்று பதவி உயர்வு வழங்கப்படும். மேலும் 1982 ல் கணக்கீட்டாளராக தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு ஒன்றரை ஆண்டுகள் ஒப்பந்த காலம் என்பதை நீக்கி அந்த காலத்தை முறைப்படுத்தி பென்சன் கணக்கிடுவதற்கு அந்த காலத்தையும் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்று வலியுறுத்தியதில் இதை கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டு இதை நடைமுறைபடுத்தப்படும் என்று வாக்குறுதி அளிக்கப்பட்டது. இவை தவிர கணக்கீட்டாளர் இரண்டாம் நிலையை கணக்கீட்டளராக மாற்றுவது 30 நாட்களும் தொடர்ந்து கணக்கீட்டு பணி செய்வதை தவிர்ப்பது போன்ற பிரச்சனைகள் மீது தொடர்ச்சியாக பேச்சுவார்த்தை நடத்தப்படும் என வாரியத்தரப்பில் கூறப்பட்டுள்ளது.

4) விடுபட்டுப்போன 4631 தொழிலாளர்களோடு தேவை அடிப்படையில் ரூ.120 தினக்கூலியாக பெறும் தொழிலாளர்களை அடையாளம் கண்டு பணி நிரந்தரம் செய்வது சம்மந்தமாக வலியுறுத்திய போது 31.3.2012 க்குள் இந்த ஊழியர்களை அடையாளம் காண நடவடிக்கை எடுக்கப்படும் என வாரியத்தரப்பில் வாக்குறுதி அளிக்கப்பட்டது.

5) 1.12.2011 முதல் மின்வாரிய ஊழியர்களுக்கு புதிய ஊதிய உயர்வு வழங்குவது சம்மந்தமாக பேச்சுவார்த்தை நடத்த குழு அமைக்கப்பட்ட போதிலும் பேச்சுவார்த்தை துவங்காததை குறிப்பிட்டு உடன் பேச்சுவார்த்தை துவங்கிட வேண்டும் என்றும் 18.12.2009 ல் ஒப்பந்தம் ஏற்பட்ட போது சில கோரிக்கைகள் மீது பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்று ஏற்றுக்கொள்ளப்பட்ட கோரிக்கைகள் மீது பேச்சுவார்த்தை துவங்கவேண்டும் என நாம் வலியுறுத்திய போது இதன்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் வாரியத்தரப்பில் கூறப்பட்டுள்ளது.

6) சேவைத் துறையாம் மின்சாரத்துறையில் 20,000 க்கும் மேற்பட்ட கள உதவியாளர் பதவிகள் காலியாக உள்ளன. இந்த காலிப்பதவிகளை மின்சார வாரியத்தில் பணியாற்றும் ஒப்பந்த தொழிலாளர்களை பணிநிரந்தரம் மூலமும் ஐடிஐ படித்தவர்களை பணி நியமணம் மூலமும் நிரப்பிட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது. அதேபோல தளவாட சாமான்களை தடையின்றி வழங்கிட வேண்டும் என்றும் நமது தரப்பில் வலியுறுத்தப்பட்டது.

7) கணக்குப்பிரிவு, நிர்வாகப்பிரிவு, தணிக்கைப்பிரிவு போன்ற பதவிகளில் உள்ள காலி இடங்களை பதவி உயர்வு மூலம் நிரப்பிட வேண்டும்.

8) கணக்கீட்டாளர் இரண்டாம் நிலை, கள உதவியாளர் மற்றும் மீட்டர் ரீடர் ஆகியோர் அடுத்த பதவி உயர்விற்கு 5 ஆண்டு காலம் காத்திருக்க வேண்டும் என்ற தேவையற்ற நிபந்தனையை ரத்துசெய்து பதவி உயர்வு அளித்திட வேண்டும்.

9) மின்வாரிய ஊழியர்களின் ஊர்மாற்றம், பதவி உயர்வு போன்றவைகளை வாரிய விதிகளின் படி நடைமுறைப்படுத்திட வேண்டும்.

10) தரமான மின்சாரத்தை தடையின்றி வழங்கிட வேண்டும் பிரித்த மின்வாரியத்தை ஒன்றாக இணைத்திட வேண்டும் என்பன போன்ற கோரிக்கைகள் நமது தரப்பில் வலியுறுத்திய போது இவைகள் சம்மந்தமாக தொடர்ச்சியாக பேச்சுவார்த்தை நடத்தப்படும் என வாரியத்தரப்பில் கூறப்பட்டது.

அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சங்கங்களோடு நடத்தப்படுகின்ற பேச்சுவார்த்தைகளுக்கு அளிக்கும் குறிப்பை நிறுத்திவைத்துள்ளதை கைவிட்டு பேச்சுவார்த்தைக்கான குறிப்புகள் அளிக்கவேண்டும் என்று நமது தரப்பில் வலியுறுத்திய போது இதன் மீது சாதகமான நடவடிக்கை எடுப்பதாக வாரியத்தரப்பில் பதில் அளிக்கப்பட்டது.

பொதுவாக போராட்டத்தினை ஒட்டி நடைபெற்ற பேச்சுவார்த்தை என்பது சுமுகமாகவும் பல கோரிக்கைகள் மீது காலநிர்ணயம் செய்து தீர்வு காணப்படும் என்ற அறிவிப்புகளை பெற்றுள்ள பேச்சுவார்த்தையாக நடைபெற்றுள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

திட்டமிட்டவாறு இப்போராட்டம் வெற்றிபெற திரளாக கலந்துகொண்ட அனைவருக்கும் மீண்டும் ஒருமுறை நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

தோழமையுள்ள

**(எஸ்.எஸ். சுப்பிரமணியன்)**
பொதுச் செயலாளர்.

# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் : 158 / CPT அங்கீகாரம் பெற்றது இணைப்பு : CITU & EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005

Telephone No: 044-28548529 Email: coteecitu_hqchennai@yahoo.com

Fax No: 044-28516574 coteecitu@gmail.com

CITU


**சுற்றறிக்கை எண் 05/2012** **நாள் : 09.02.2012**

பெறுநர்

அனைத்து மாநில நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் கிளைச் செயலாளர்

## மாநில நிர்வாகிகள் மற்றும் கிளைச்செயலாளர்கள் கூட்ட முடிவுகள்

அன்பார்ந்த தோழர்களே ! வணக்கம்.

நமது மத்திய அமைப்பின் மாநில நிர்வாகிகள் கூட்டம் 05.02.2012 அன்று சென்னையில் மாநில தலைவர் தோழர் கே. விஜயன் தலைமையில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் மாநில சி.ஐ.டி.யு.-வின் துணைப்பொதுச் செயலாளர் தோழர் ஆர். கருமலையான் அவர்களும் கலந்து கொண்டார். கூட்டத்தில் நிர்வாகிகள் மற்றும் கிளைச் செயலாளர்கள் உட்பட 56 தோழர்கள் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் விழுப்புரம், புதுக்கோட்டை, நாகப்பட்டினம், சிவகங்கை, சேலம், வடசென்னை அனல், மேட்டூர் அனல், காடம்பாறை, குந்தா, நெல்லை உற்பத்தி, பொது கட்டுமான வட்டம், சென்னை மற்றும் பெரம்பலூர் ஆகிய கிளைகளில் இருந்து பிரதிநிதிகள் கலந்து கொள்ளவில்லை

சி.ஐ.டி.யு.-வின் துணைப் பொதுச் செயலாளர் தோழர் ஆர். கருமலையான் அவர்கள் பிப்ரவரி 28 வேலை நிறுத்தம், நவீன தாராளமயத்தால் துறை வாரியாக நடைபெறும் ஊழல்கள், பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை ரூ. 40,000/- கோடிக்கு விற்க இலக்கு, குறைந்தபட்ச ஊதியம், வேலை பாதுகாப்பு அற்ற நிலமைகளை விளக்கியதோடு பிப்ரவரி 28 இல் நடைபெறும் வேலை நிறுத்ததில் மின் ஊழியர்கள் அதிக அளவில் கலந்து கொள்ள பிரச்சாரம் விரிவாக நடத்த வேண்டியதின் அவசியத்தையும் விளக்கினார். ஜனவரி 13-14 தேதிகளில் காஞ்சியில் நடைபெற்ற சி.ஐ.டி.யு.-வின் ஸ்தாபன பரிசீலனை சம்மந்தமாக எடுத்த முடிவுகளை மின் அரங்கத்தில் அமல்படுத்துவது சம்மந்தமாகவும் விளக்கினார்.

மத்திய அமைப்பின் மாநிலத் தலைவர் 24ந் தேதி நடைபெற்ற ஆர்ப்பாட்டம், பிப்ரவரி 28 வேலை நிறுத்தம், தானே புயல் பாதிப்பு போன்றவைகளை விளக்கிதோடு புதிய பொருளாதார கொள்கையை அமல்படுத்தும் அரசாங்கமாகத்தான் தமிழக அரசு உள்ளதை சுட்டிக்காட்டினார்.

அதன்பின்னர் மத்திய அமைப்பின் பொதுச்செயலாளர் சென்ற நிர்வாகிகள் கூட்டத்திற்கு பின்னர் நடைபெற்ற பணிகள் சம்மந்தமாகவும், எதிர்காலத்தில் நமது நடவடிக்கைகள் சம்மந்தமாகவும் ஒரு அறிக்கையை முன்மொழிந்தார். மேலும், 24.01.2012 அன்று நடைபெற்ற ஆர்ப்பாட்டம் அதில் திட்டமிட்டவாறு கிளைகளின் பங்கு, அதையொட்டி நடைபெற்ற பேச்சுவார்த்தை அப்பேச்சு வார்த்தையில் சில பிரச்சனைகளை தீர்த்து வைப்பதற்கான கால அவகாசத்தை வாரியம் குறிப்பிட்டதையும், மீதம் உள்ள பிரச்சனைகள் சம்மந்தமாக தொடர்ச்சியாக பேச்சுவார்த்தை வாரியம் நடத்த உள்ளதையும் குறிப்பிட்டு பொதுவாக 24.01.2012 அன்று நடைபெற்ற ஆர்ப்பாட்டம் வெற்றிகரமான ஆர்ப்பாட்டம் என்றும், சில பிரச்சனைகளை முடிவுக்கு கொண்டுவரும் நிலை ஏற்பட்டதையும் குறிப்பிட்டார்.

மேலும் விடுபட்டு போன ஒப்பந்த தொழிலாளர்கள் 4631 பேர்களை பணி நிரந்தரம் செய்வதற்குண்டான நடவடிக்கையில் ஏற்பட்டுள்ளது முன்னேற்றம், பகுதி நேர ஊழியர்களுக்கு சத்துணவு ஊழியர்களுக்கான சம்பளத்தை பெற்றுத் தருவதில் உள்ள சில பிரச்சனைகள் சம்மந்தமாக தொடர்ச்சியாக நடவடிக்கை எடுத்து வருவது, கணக்கீட்டு பிரிவு ஊழியர்களின் பிரச்சனைகளை மத்திய அமைப்பு கையிலெடுத்து அதில் சில மாற்றங்களை கொண்டுவந்துள்ள போதிலும், தொடர்ச்சியாக நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளதையும், நாம் எடுத்த நடவடிக்கைகளை அப்பிரிவு ஊழியர்கள் மத்தியில் கொண்டு செல்ல வேண்டியுள்ளதையும் விளக்கினார்.

மேலும் இந்த இடைபட்ட காலத்தில் எழுந்த பிரச்சனையான அபரிவிதமான மின்வெட்டு, தவிர்க்கப்பட வேண்டிய மின் கட்டண உயர்வு என்பதையும், சென்னையில் நடைபெற்றுள்ள கருத்துகேட்பு கூட்டத்தில் பதிவு செய்துள்ளதோடு, இதர பகுதிகளான திருச்சி, மதுரை, கோவை போன்ற இடங்களில் நடைபெறும் கருத்துக்கணிப்புக் கூட்டத்தில் இதே கருத்துக்களை வெளிப்படுத்த வேண்டியதையும் விளக்கினார். இந்த காலகட்டத்தில் தானேபுயலால் பாதிக்கப்பட்ட கடலூர், விழுப்புரம் மாவட்டங்களில் பாதிப்புக்களை சரி செய்ய மின் ஊழியர்கள் ஆற்றிய பணிகள், அவர்களுக்கு சில சலுகைகளை பெற்றுத் தருவதற்கு மின் ஊழியர் மத்திய அமைப்பு எடுத்த நடவடிக்கைகள், அதன் பயனாக அப்பகுதியில் பணியாற்றிய ஊழியர்களுக்கு கிடைத்த நிவாரணங்களை விளக்கினார்.

மேலும் 28.02.2012 அன்று நடைபெற உள்ள வேலை நிறுத்ததை வெற்றிகரமாக்க மின் ஊழியர் மத்தி அமைப்பு சுயேச்சையாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகயோடு இந்த வேலை நிறுத்தத்தையொட்டி மின்வாரியத்தில் உள்ள தொழிலாளர் முன்னேற்ற சங்கம், ஐ.என்.டி.யூ.சி. , எச்.எம்.எஸ்., பி.எம்.எஸ். பொறியாளர் சங்கம், பொறியாளர் கழகம் மற்றும் தமிழ்நாடு மின்துறை பொறியாளர் அமைப்பு ஆகிய அமைப்புகளை ஒன்றிணைத்து இந்த வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக்கிட மின் ஊழியர் மத்திய அமைப்பு எடுக்க உள்ள நிலைகள் சம்மந்தமாகவும் விளக்கினார்.

2011 ஆம் ஆண்டு உறுப்பினர் சேர்ப்பை இறுதிப்படுத்தும் விதமாக இதுவரையில் 2010 ஆம் ஆண்டு உறுப்பினர் எண்ணிக்கையை அடைகின்ற வகையில் மாநில மையத்தில் உறுப்பினர் வந்துள்ள விபரங்களையும், மேலும் முயற்சித்து இந்து ஆண்டு நமது உறுப்பினர் 30,000/- இலக்கை அடைவதற்கான அவசியத்தையும் விளக்கினார். மேலும் விநியோகத்தையும், உற்பத்தியையும் தனியாக பிரிப்பது, விநியோகத்தை இலாபம் தரும் மையங்களாக பிரிப்பது போன்ற நடவடிக்கையில் வாரியம் ஈடுபட்டுள்ள போது தொழிலாளர்களின் எண்ணிக்கையை குறைக்கின்ற விதமாக வாரியத் தலைவரின் நடவடிக்கை உள்ளதையும், இதனால் இவைகளுக்கு எதிராக மின்வாரிய ஊழியர்களை திரட்ட வேண்டியதின் அவசியத்தையும் விளக்கியதோடு, ஓய்வுபெற்ற நல அமைப்பு வருகின்ற 14.02.2012 அன்று மாவட்ட வாரியாக நடத்த உள்ள ஆர்ப்பாட்டத்தில் மின்ஊழியர் மத்திய அமைப்பு ஊழியர்கள் கலந்து கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் விளக்கினார்.

மத்திய அமைப்பின் மாநில பொருளாளர் தோழர்.டி.கோவிந்தராஜு ஏற்கனவே திட்டமிட்டவாறு 2009, 2010 ஆம் ஆண்டு மத்திய அமைப்பு மாநில மையத்தின் கணக்கு தணிக்கை செய்யப்பட்டுள்ளது என்பதையும், இந்த அடிப்படையில் கிளைகளின் 2009 & 2010 இரண்டு ஆண்டுகள் கணக்கை தணிக்கை செய்ய வேண்டியதன் அவசியத்தையும் விளக்கினார்.

தோழர்களின் விவாதத்திற்கு பின்னர் கீழ்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன.

✱ 28.02.2012 அன்றைய வேலை நிறுத்தத்தில் மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் குறிப்பிட்டு உள்ளவாறு மின்ஊழியர் மத்திய அமைப்பு, மின்கழக தொழிலாளர் முன்னேற்ற சங்கம், ஐ.என்.டி.யு.சி., தொழிலாளர் ஐக்கிய சங்கம் (எச்.எஸ்.எஸ்), பி.எம்.எஸ்., தமிழ்நாடு மின்துறை பொறியாளர் அமைப்பு ஆகிய அமைப்பு இந்த வேலை நிறுத்தத்தில் கலந்து கொள்ள உள்ளனர். இது சம்மந்தமாக 06.02.2012 அன்று நடைபெற்ற கூட்டுக்குழுவின் நடவடிக்கைகள், முடிவுகள் சம்மந்தமாக சங்கங்கள் கையொப்பமிட்ட சுற்றறிக்கை ஒன்றும் இத்தோடு இணைக்கப்பட்டுள்ளது.

கூட்டு நடவடிக்கைக் குழுவில் கலந்து கொண்ட பொறியாளர் கழகமும், பொறியாளர் சங்கமும் இந்த வேலை நிறுத்தத்திற்கு தார்மீக ஆதரவு தருவது என்றும் முடிவு செய்யப்பட்டு உள்ளது. வேலை நிறுத்த கோரிக்கைகளை நடவடிக்கை குழு சார்பாக பிரச்சாரம் செய்யும் வகையில் மாநில மையத்தில் இருந்து பொதுவான சுவரொட்டி போடுவதென்றும், கூட்டான பிரச்சாரத்தை கொண்டு செல்லும் வகையில் அனைத்து வட்ட மேற்பார்வை பொறியாளர் அலுவலகத்திற்கு முன்னர் கூட்டு நடவடிக்கைக்குழு சார்பாக வேலை நிறுத்த கோரிக்கை விளக்க கூட்டங்களை 22.2.2012 அன்று நடத்துவது, இக்கூட்டங்களில்சி.ஐ.டி.யு வின் மாநில மையத்திலிருந்து வெளிவந்துள்ள பிரசுரத்தையும், மின்ஊழியர் மத்திய அமைப்பு சார்பில் வெளியிட்டுள்ள பிரசுரத்தையும் மின் ஊழியர்கள், நுகர்வோர்கள் மத்தியிலும் கொண்டு செல்ல வேணுமாய் கேட்டுக்கொள்கிறோம். அனைத்து சங்கங்களும் வேலை நிறுத்த நோட்டீசை 13, 14 தேதிகளில் நிர்வாகத்திற்கு வழங்கப்பட உள்ளது. இவைகளின் அடிப்படையில் இந்த வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாகவும், பல ஆயிரக்கணக்கான தோழர்கள் கலந்துகொள்ளக் கூடிய வேலை நிறுத்தமாக மாற்றுவதற்குண்டான அத்துனை நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறோம்.

✱ அனல் மின் நிலையத்தில் பணியாற்றும் ஊழியர்களின் பதவி உயர்வு சம்மந்தமாக 8.2.2012 அன்று பேச்சுவார்த்தை நடைபெற்று ஒப்பந்தம் விரைவில் ஏற்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பேச்சுவார்த்தையில் கல்வித் தகுதியை தளர்த்துதல், தேர்வுநிலை கள உதவியாளர் அனைவரையும் பிட்டராக நியமிப்பது, மின் நிலையங்களில் பணியாற்றும் பெண்களுக்கு வழக்கம்போல் பதவி உயர்வு வழங்குவது, புதிய பதவிகள் அனுமதிக்கும் போது மாநில முதன்மைப் பதவிகளாக உள்ள தொழில்நுட்ப உதவியாளர், டெஸ்டர், கெமிக்கல் போன்ற பதவிகளை தவிர்த்து பதவிகள் அனுமதிக்கப்பட வேண்டும், புதிய மின் நிலையங்களுக்கு பதவிகள் புதியதாக அனுமதிக்கப்பட வேண்டுமென நமது தரப்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

✱ 24.1.2012 ஆர்ப்பாட்டத்தில் எழுப்பப்பட்ட கோரிக்கைகளான காலி இடங்களை நிரப்புதல், கணக்கீட்டு பிரிவு, கணக்கு பிரிவு, நிர்வாக பிரிவு, தணிக்கை பிரிவு ஊழியர்களின் கோரிக்கைகள் மீது தொடர்ச்சியாக பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு காண்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

✱ பகுதிநேர ஊழியர்களை நிரந்தரப் படுத்துவதில் உள்ள குறைகளை களைகின்ற வகையில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் சில விபரங்களைப் பெற்று விடுபட்டுபோன பகுதிநேர ஊழியர்களுக்கு நிரந்தரத்தைப் பெற்றுத் தருவது.

✱ எஸ்.எம்.எஸ் அனுப்புவதை முறைப்படுத்துவது, மத்திய அமைப்பின் இணைய தளத்தில் மத்திய அமைப்பின் சுற்றறிக்கைகள், வாரிய உத்தரவுகள் உடனுக்குடன் போட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## குறிப்பு

1. நமது தொடர் முயற்சியின் விளைவாக வருவாய் மேற்பார்வையாளராக இருந்து மதிப்பீட்டு அலுவலராக பதவி உயர்வு வழங்குவதற்கு 5 ஆண்டுகள் அனுபவம் என்பதை 4 ஆண்டுகளாக குறைத்து வாரியம் உத்தரவு வெளியிட்டு பதவி உயர்வு வழங்க பேனல் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

2. மஸ்தூர்களுக்கு சைக்கிள் அலவன்ஸ் கொடுப்பதை உத்தரவாதப்படுத்தும் வாரிய உத்தரவு வெகு சீக்கிரத்தில் வெளியிட ஏற்பாடு செய்யப்படுகிறது.

3. இளநிலை உதவியாளர்களில் திட்டம் விட்டு திட்டம் மாறுதலாகி சென்றவர்களுக்கும் இரு திட்டங்களில் பணியாற்றிய காலத்தை கணக்கில் கொண்டு தேர்வுநிலை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தோழமையுள்ள

**(எஸ்.எஸ். சுப்பிரமணியன்)**
பொதுச் செயலாளர்.

# மின்வாரிய தொழிற்சங்கங்களின் கூட்டு நடவடிக்கைக் குழு

அன்பான தோழரே,

நாள் : 06/02/2012

மின்வாரிய தொழிற்சங்கங்களின் கூட்டு நடவடிக்கைக் குழு தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பின் பொதுச்செயலாளர் தோழர்.எஸ்.எஸ்.சுப்பிரமணியன் அவர்கள் தலைமையில் 06.02.2012 அன்று சென்னை மின் வாரிய தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது.

அக்கூட்டத்தில் தமிழ்நாடு மின்கழக தொழிலாளர் முன்னேற்ற சங்கத்தின் சார்பாக திரு.சிங்கார இரத்தின சபாபதி/பொதுச் செயலாளர், திரு.இரெ.பரமசிவம் / பொருளாளர். ஐஎன்டியுசி சார்பாக திரு.டி.வி.சேவியர் / பொதுச் செயலாளர், தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பின் சார்பாக தலைவர் தோழர்.கே.விஜயன், பொருளாளர் தோழர்.து.கோவிந்தராஜு, பி.எம்.எஸ் சார்பாக தலைவர் - முரளி கிருஷ்ணன், பொதுச் செயலாளர் - திரு.சந்திரன், தொழிலாளர் ஐக்கிய சங்கம் சார்பாக (எச்எம்எஸ்) தலைவர் - திரு.மனோகரன், பொதுச் செயலாளர் - திரு.எம்.சுப்ரமணியன், பொறியாளர் கழகத்தின் சார்பாக தலைவர் - திரு.அப்பர்சாமி, பொறியாளர் சங்கத்தின் சார்பாக பொதுச் செயலாளர் - திரு. வி.அசோக்குமார், திரு. ஜி. முரளிகிருஷ்ணன் - செயலாளர்/நலநிதி, தமிழ்நாடு மின்துறை பொறியாளர் அமைப்பின் தலைவர் - திரு. டி. அறிவழகன், மாநில செயலாளர் - திரு. ஏ. பழனி ஆகியோர் கலந்து கொண்டனர்.

விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்து, வேலை வாய்ப்பை பறிக்காதே, புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்கு, பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை விற்காதே, பொதுத் துறையை தனியார் மயமாக்காதே, 1.12.2011 முதல் மின்வாரிய ஊழியர்களுக்கு புதிய ஊதிய உயர்வு வழங்கிடு, மின்வாரியத்தில் உள்ள காலி இடங்களை நிரப்பி மக்கள் சேவையை தொடர்ந்திடுக என்பன போன்ற கோரிக்கைகளை முன்வைத்து ஐஎன்டியூசி உள்ளிட்ட மத்திய தொழிற்சங்கங்களும், 40க்கும் மேற்பட்ட தொழில்வாரியான சம்மேளனங்களும் இணைந்து 28.12.2012 அன்று நடைபெறும் நாடு தழுவிய வேலை நிறுத்தத்தில் மின் வாரிய ஊழியர்கள் திரளாக கலந்து கொள்வது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. (அதில் பொறியாளர் கழகமும், பொறியாளர் சங்கமும் அப்போராட்டத்திற்கு தார்மீக ஆதரவு தருவது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.)

இந்த வேலை நிறுத்த அறிவிப்பினை மின்வாரிய நிர்வாகத்திற்கு அறிவிக்கும் விதமாக இரு பொறியாளர்கள் அமைப்பு தவிர மற்ற அனைத்து அமைப்புகளும் பிப்ரவரி 13 மற்றும் 14 ஆகிய தேதிகளில் வேலை நிறுத்த நோட்டீஸ் தனித்தனியாக வழங்குவது, அதோடு வேலை நிறுத்தத்தில் கலந்து கொள்ளுகின்ற சங்கங்கள் கூட்டான வேலை நிறுத்த அறிவிப்பையும் வாரியத்திற்கு வழங்குவது.

வேலை நிறுத்த கோரிக்கைகளை மின்வாரிய ஊழியர்கள் மத்தியில் கொண்டு செல்லுகின்ற வகையில் கூட்டு நடவடிக்கைக் குழு சார்பாக சுவரொட்டி ஒன்று தயாரித்து கிளைகளுக்கு அனுப்புவது.

அனைத்து வட்ட மேற்பார்வை பொறியாளர் அலுவலகம் முன்னால் பிப்ரவரி 22 அன்று கூட்டு நடவடிக்கை குழு சார்பாக வேலை நிறுத்த கோரிக்கை பிரச்சாரத்தை நடத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

இம்முடிவுகளை முழுமையாக அமல்படுத்தி வேலை நிறுத்தத்தை வெற்றிபெற செய்ய வேணுமாய் நடவடிக்கைக் குழு கேட்டுக்கொள்கிறது.

சமீபத்தில் வீசிய தானே புயலால் பாதிக்கப்பட்ட கடலூர், விழுப்புரம் மாவட்டங்களில் புயல், வெள்ள நிவாரண பணிகளை ஊண் உறக்கமின்றி இரவு பகல் பாராமல் புயல் வேகத்தில் செய்து முடித்த பொறியாளர்கள், அதிகாரிகள், ஊழியர்கள், களப்பிரிவு தொழிலாளர்கள், மஸ்தூர்கள், தினக்கூலி தொழிலாளர்கள் அனைவரையும் இக்கூட்டு நடவடிக்கைக்குழு மனதார பாராட்டுவதோடு, வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறது.

இங்ஙனம்

**சிங்கார ரத்தினசபாபதி**
(பொதுச் செயலாளர்)
தமிழ்நாடு மின்கழக தொழிலாளர்
முன்னேற்ற சங்கம்

**எஸ்.எஸ். சுப்பிரமணியன்**
(பொதுச் செயலாளர்)
தமிழ்நாடு மின்ஊழியர்
மத்திய அமைப்பு (சிஐடியு)

**டி.வி. சேவியர்**
(பொதுச் செயலாளர்)
ஐ.என்.டி.யு.சி

**என். சந்திரன்**
(பொதுச் செயலாளர்)
பி.எம்.எஸ்

**எம். சுப்பிரமணியன்**
(பொதுச் செயலாளர்)
மின்வாரிய ஐக்கிய தொழிலாளர் சங்கம்

**சங்கர நாராயணன்**
(பொதுச் செயலாளர்)
மின்வாரிய பொறியாளர் கழகம்

**வி. அசோக்குமார்**
(பொதுச் செயலாளர்)
மின்வாரிய பொறியாளர் சங்கம்

**தி. அறிவழகன்**
(தலைவர்)
தமிழ்நாடு மின்துறை பொறியாளர் அமைப்பு

# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் : 158 / CPT அங்கீகாரம் பெற்றது இணைப்பு : CITU & EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005

Telephone No: 044-28548529
Fax No: 044-28516574

CITU

Email: coteecitu_hqchennai@yahoo.com
coteecitu@gmail.com


**சுற்றறிக்கை எண் 6/2012** **நாள் : 09/03/2012**

*பெறுநர்*
மத்திய அமைப்பின் அனைத்து நிர்வாகிகள்

## மாநில நிர்வாகிகள்
## கூட்ட அழைப்பிதழ்

அன்பான தோழரே!, வணக்கம்.

மத்திய அமைப்பின் **மாநில நிர்வாகிகள் கூட்டம் எதிர்வரும் 01/04/2012 ஞாயிற்றுக்கிழமை**

**காலை 10.00 மணிக்கு**
**தோழர்.டி.ஜே. நினைவகம்,**
**எண்-177, சிங்கண்ணசெட்டித் தெரு,**
**சிந்தாதிரிப்பேட்டை, சென்னை 600 002**

என்ற முகவரியில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் மாநில சி.ஐ.டி.யூ., வின் சார்பாக உதவி பொதுச் செயலாளர் தோழர். ஆர்.கருமலையான் கலந்து கொள்கிறார். ஒரு நாள் கூட்டம் என்பதால் குறித்த நேரத்தில் தோழர்கள் பங்கேற்க வேணுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

**நிகழ்ச்சி நிரல்**

1. அஞ்சலி
2. தலைவர் உரை
3. நடைபெற்ற பணிகள்
4. 28.02.1012 வேலை நிறுத்தம் - பரிசீலனை
5. புதிய பென்ஷன் திட்ட எதிர்ப்பு கருத்தரங்கம்-தயாரிப்பு
6. வரவு - செலவு
7. இதர பிரச்சனைகள்

தோழமையுள்ள

**(எஸ்.எஸ். சுப்பிரமணியன்)**
பொதுச் செயலாளர்.

# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் : 158 / CPT அங்கீகாரம் பெற்றது இணைப்பு : CITU & EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005

Telephone No: 044-28548529
Fax No: 044-28516574

Email: coteecitu_hqchennai@yahoo.com
coteecitu@gmail.com

CITU


**சுற்றறிக்கை எண் 7/2012** **நாள் : 14/03/2012**

*பெறுநர்*
மத்திய அமைப்பின் அனைத்து நிர்வாகிகள்
மத்திய அமைப்பின் அனைத்து கிளைச் செயலாளர்கள்
மத்திய அமைப்பின் அனைத்து மாநில செயற்குழு உறுப்பினர்கள்

அன்பான தோழரே,

வணக்கம்,

## 28.02.2012 அன்று வேலை நிறுத்தம்

விலைவாசி உயர்வை குறைத்திடுக, வேலைவாய்ப்பை பறிக்காதே, பொதுத்துறை பங்குகளை விற்காதே, பொதுத்துறையை தனியார் மயமாக்காதே,ஒப்பந்த தினக்கூலி முறையை அகற்றிடுக, குறைந்தபட்ச சம்பளம் ரூ. 10,000 என நிர்ணயம்செய்திடுக, தொழிலாளர் நலச் சட்டங்களை மீறுபவர்கள் மீது நடவடிக்கை எடுத்திடுக என்பன போன்ற கோரிக்கைகளை முன்வைத்து அகில இந்திய ரீதியில் 16 அமைப்புகளும் 40-க்கும் மேற்பட்ட தொழில் வாரியான சம்மேளனங்களும் 28.2.2012 அன்று அகில இந்திய ரீதியில் வேலைநிறுத்தம் செய்ய வேண்டும் என்ற அறைகூவலின் அடிப்படையில் மின்வாரியத்தில் 28.02.2012 அன்று வேலை நிறுத்தம் வெற்றிகரமாக நடைபெற்றுள்ளது.

28.02.2012 அன்று வேலை நிறுத்தத்தில் தமிழக மின்சார வாரியத்தில் தொழிலாளர்கள், பொறியாளர்கள், அதிகாரிகள், அலுவலர்கள் உள்ளிட்ட 23,802 பேர்கள் இந்த வேலை நிறுத்ததில் கலந்து கொண்டுள்ளனர். இந்த வேலை நிறுத்தம் சிஐடியு, தொழிலாளர் முன்னேற்ற சங்கம், ஐ.என்.டி.யு.சி, பி.எம்.எஸ்., தமிழ்நாடு மின்துறை பொறியாளர் அமைப்பு ஆகிய சங்கங்கள் இணைந்தும் சம்மேளனமும், ஐக்கிய தொழிலாளர் சங்கமும், இந்த வேலை நிறுத்ததில் தனித்தனியாக கலந்து கொண்டனர். பொறியாளர் கழகமும், பொறியாளர் சங்கமும் இந்த வேலை நிறுத்தத்திற்கு தார்மீக ஆதரவு தந்தனர். இந்த வேலை நிறுத்தத்தில் 23,802 நிரந்தரத் தொழிலாளர்கள் கலந்து கொண்டுள்ளதோடு, 5,000க்கும் மேற்பட்ட ஒப்பந்த தொழிலாளர்களும், 5000க்கும் மேற்பட்ட பகுதி நேர ஊழியர்களும் இந்த வெற்றிகரமான வேலை நிறுத்தத்தில் கலநது கொண்டுள்ளனர். சதவீத அடிப்படையில் பார்க்கும் போது 34% -மாகும். இந்த மகத்தான வேலை நிறுத்ததத்தில் கலந்து கொண்ட அனைத்து மின்வாரிய ஊழியர்களுக்கும் இந்த வேலை நிறுத்தம் வெற்றிகரமாக்க முன்முயற்சி எடுத்த அனைத்து கிளைநிர்வாகிகளுக்கும், மாநில நிர்வாகிகளுக்கும், செயற்குழு உறுப்பினர்களுக்கும், மின்ஊழியர் மத்திய அமைப்பு புரட்சிகரமான வாழ்த்துக்களையும், பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறது.

வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்டுள்ளோரின் எண்ணிக்கை கிளைகளிலிருந்து ஒட்டுமொத்தமாக அனுப்பப்பட்டுள்ளது. சங்கங்கள் வாரியாக விவரங்களை சேகரித்து அனுப்பினால் தான் இந்த வேலை நிறுத்தத்தில் நாம் எங்குள்ளோம் என்பதை துல்லியமாக கணக்கிட முடியும். ஈரோடு மண்டலத்திலிருந்து வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்டோரின் விவரங்களை அனுப்பும் போது மொத்த தொழிலாளர்களின் எண்ணிக்கை, வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்டோரின் எண்ணிக்கை, அதில் நமது சங்கத்தை சார்ந்தவர்கள் எத்தனை பேர்? என்பன போன்ற விவரங்கள் அடங்கிய அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. ஈரோடு மண்டலத்தை பின்பற்றி வேலை நிறுத்த விவரங்களை அனுப்பாத மண்டலங்கள் விவரமாக அறிக்கையை அனுப்பி வைத்திடுமாறு கேட்டுக் கொள்கிறோம். அந்த விவரங்களை கொண்டு தான் 2012 ஏப்ரல் 1ல் நடைபெறும் நிர்வாகிகள் கூட்டத்தில் துல்லியமாக பரிசீலிக்க முடியும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

## மஸ்தூர்கள் - களஉதவியாளர்களாக பதவி உயர்வு

மின்வாரிய ஊழியர்களின் நீண்ட நாட்களாக தீர்க்கப்படாத கோரிக்கைகளான மஸ்தூர்களை கள உதவியாளராக நியமித்தல், அனல் மின் நிலையத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்கு முறையான பதவி உயர்வு வாய்ப்பை உருவாக்கும் ஒப்பந்தத்தை ஏற்படுத்துதல், விடுபட்டுபோன ஒப்பந்த தொழிலாளிகளை அடையாளம் கண்டு பணிநிரந்தரம் செய்வது, தேவையான மின்உற்பத்தி, மின் கட்டணத்தை உயர்த்தாதே, கணக்கீட்டு பிரிவு ஊழியர்களின் பல்வேறு பிரச்சனைகளின் மீது பேச்சு வார்த்தை நடத்திதீர்வு காண்பது என்பன போன்ற கோரிக்கைகளை வைத்து 24.1.2012 அன்று பெருந்திரள் ஆர்ப்பாட்டம் மின்வாரிய தலைமை அலுவலகத்தின் முன்னர் நடத்தப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தையொட்டி நடைபெற்ற பேச்சு வார்த்தையில் மஸ்தூர்களை களஉதவியாளராக பதவி உயர்வு அளிப்பது சம்மந்தமாக ஒரு மாத காலத்திற்குள் முடிவு செய்யப்படும்என்று வாரியத்தரப்பில் கூறப்பட்டது. மின்வாரியத்தில் உள்ள சில சங்கங்கள் மஸ்தூர்களுக்கு கள உதவியாளராக பதவி உயர்வு அளிக்கக் கூடாது என்று தங்களது சக்தி முழுவதையும் திரட்டி வாரிய அதிகாரிகளிடம் வற்புறுத்தி வந்தனர். ஆனால் மின்ஊழியர் மத்திய அமைப்பு இந்த பதவி உயர்வினை மஸ்தூர்களுக்கு அளித்திட வேண்டுமென்று பல கட்டத்தில் வாரிய அதிகாரிகளை சந்தித்து வலியுறுத்தியதன் பயனாகவும், 24.1.2012 அன்று திரளான ஊழியர்கள் கலந்துகொண்டு நடத்திய ஆர்ப்பாட்டத்தின் விளைவாகவும் மின்சார வாரியம் மத்திய அமைப்புடன் சொன்ன வாக்குறுதிகளை நிறைவேற்றுகின்றவகையில் மஸ்தூர்களுக்கு கல்வித் தகுதியை தளர்த்தி களஉதவியாளராக நியமனம்செய்வது சம்மந்தமாக வாரியக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது என்பதையும் இன்னும் ஓரிரு தினங்களில் அதற்கான உத்திரவு வெளியிடப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறோம்.

வெளியிடவுள்ள உத்தரவில் அனைத்து மஸ்தூர்களுக்கும், களஉதவியாளர்களாக பதவி உயர்வு அளிப்பது என்று முடிவு செய்து ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதை அமலாக்கம் விதமாக முதற்கட்டமாக 6,900 பேர்களுக்கு கள உதவியாளராக நியமிக்கப்படுவார்கள் என்றும் மீதம்உள்ளவர்கள் படிப்படியாக கள உதவியளாராக மாற்றப்படுவார்கள் என்றும் வாரியத் தரப்பு செய்தி கூறுகிறது. உத்தரவு வெளிவந்தவுடன் அதை அமலாக்கம் செய்வதில் உள்ள குறைகளை மின்ஊழியர் மத்திய அமைப்பு தலையிட்டு தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

அனல் மின்நிலைய ஊழியர்களின் பதவி உயர்வு சம்மந்தமாக ஒப்பந்தம் சங்கரன் கோயில் இடைத் தேர்தலுக்கு பின்னர்வெகு சீக்கிரத்தில் ஏற்படுத்தப்படும்என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

நமது வழக்கில் கண்ட விடுபட்டு போன ஒப்பந்த தொழிலாளர்களை அடையாளம் கண்டு பணிநியமனம் செய்வது சம்மந்தமாக, நீதிமன்றத்தில் நடக்கும் நீதிமன்ற அவமதிப்பு வழக்கையொட்டியும், நமது ஆர்ப்பாட்டத்தையொட்டி கொடுத்த வாக்குறுதியான 31.1.2012க்குள் அடையாளம் கண்டு பணிநிரந்தரம் செய்வதற்கான நடவடிக்கையை வாரியம் எடுத்துள்ளதாக தெரியவருகிறது. அதையொட்டி தான் நமது நீதிமன்ற வழக்கில்கொடுக்கப்பட்ட பட்டியலில் உள்ள பெயர்களை திட்டவாரியக அனுப்பி அதன் மீது விவரங்களை கேட்பது என்பன போன்ற பனிகள் நடைபெற்று வருகிறது. நமது சங்கம் சார்பில் அவ்வப்போது வாரியத் தலைவரை சந்தித்து கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறோம்.

## SE விருதுநகர் வஜ்ஜிரவேலு அராஜக போக்கினை கண்டித்து மாநிலந் தழுவிய ஆர்ப்பாட்டம் 21.3.2012

விருதுநகர் மின்விநியோக வட்டத்தில் 9.3.2012 அன்று வத்திராயிப்பு பிரிவில் உள்ள 11 கே.வி. மின்மாற்றியில் முறையான ஏற்பாடுகள் இல்லாமல் மின்மாற்றியில் ஏற்பட்ட பழுதை சரிசெய்ய மஸ்தூரை நிர்பந்தித்த காரணத்தினால் விபத்து ஏற்பட்டு திரு. வி. அன்புராஜ் என்ற மஸ்தூர் அவ்விடத்திலேயே கருகி இறந்துள்ளார்.

முறையான ஏற்பாடு இல்லாத காரணத்தினால் ஏற்பட்டுவிட்ட விபத்து சம்மந்தமாக மேற்பார்வை பொறியாளர் திரு. வஜ்ஜிரவேலு அவர்களிடம் நமது மண்டலச் செயலாளர் தோழர் எஸ். தங்கராஜ் உட்பட 10 தோழர்கள் முறையீடு செய்ய சென்ற போது நமது நிர்வாகிகளை பார்த்து பேச முடியாது என மறுத்த போது நமது தோழர்கள் அமைதியான முறையில் உள்ளே சென்று முறையீட்டை துவங்கிய போது நான் உங்களிடம் பேச முடியாது என்று கூறியதோடு மட்டுமல்லாமல் உடனடியாக காவல்துறைக்கு செய்தி அனுப்பி காவல்துறை அதிகாரிகள் வந்து பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டிருக்கும் போதே நமது தோழர்கள் 11 பேர்கள் மீது பொய்யான புகார்களை காவல்துறைக்கு அனுப்பி புகார் பதிவு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கும் நிலையை உருவாக்கி உள்ளார். அதுமட்டுமல்லாமல் முறையான நடவடிக்கை இல்லாததினால் ஏற்பட்ட பரிதாபமான விபத்து சம்மந்தமாக எடுத்துரைக்க சென்ற 6 மத்திய அமைப்பின் நிர்வாகிகள் முன்னணி ஊழியர்களை இரவு நேரத்தில் தற்காலிக பணிநீக்கத்திற்கான உத்தரவினை பிறப்பித்ததோடு மட்டுமல்லாமல் பேச்சு வார்த்தைக்கு சென்ற இரு தலைவர்களை பார்த்து தாழ்த்தப்பட்ட வகுப்பை சார்ந்த உங்களோடு பேச முடியாது என்று அநாகரீகமாக நடந்துக் கொண்டுள்ளார். இப்படிப்பட்ட நிகழ்வானது விருதுநகர் மாவட்ட மின்வாரிய ஊழியர்களுக்குள் ஒரு பதட்டத்தை உருவாக்கி உள்ளது.

மின்ஊழியர் மத்திய அமைப்பு இப்பிரச்சனையை வாரியத் தலைமையிடம் கொண்டு சென்று தீர்வு காண்பதற்கான நடவடிக்கையை எடுத்து வருகிறது.

விருதுநகர் வட்டமேற்பார்வை பொறியாளரின் அராஜகமான, அநாகரீகமான தொழிற்சங்க விரோத நடவடிக்கையை கண்டித்து வருகின்ற 21.3.2012 (புதன் கிழமை) அன்று விருதுநகர் மின்வாரிய அலுவலகத்திற்கு முன்னால் பெருந்திரள் ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது. இதற்கான போஸ்டர் மாநில மையத்திலிருந்து அச்சடிக்கப்பட்டு அனைத்து கிளைகளுக்கும் அனுப்பி

வைக்கப்படுகின்றது. இந்த அராஜக போக்கினை கண்டித்து விருதுநகர் வட்டத்தில் ஆர்ப்பாட்டம் நடைபெறும் அன்றே **மாநிலம் முழுவதுமுள்ள அனைத்து மேற்பார்வை பொறியாளர் அலுவலகத்திற்கு முன்னால் கணிசமான தொழிலாளர்களை திரட்டி பெருந்திரள் ஆர்ப்பாட்டம் நடத்துவது என்றுமாநில மையத்தில் முடிவு செய்யப்பட்டது.** இம்முடிவின் அவசர அவசியத்தை உணர்ந்து 21.03.2012 அன்றை ஆர்ப்பாட்டத்தை வெற்றிகரமாக நடத்திட வேண்டுமாய்கேட்டுக் கொள்கிறோம்.

2011 ஆம் ஆண்டு உறுப்பினர் சேர்ப்பு என்பது இறுதிப்படுத்தப்பட்டுள்ளது. சென்ற ஆண்டைவிட சுமார் 1000 உறுப்பினர்கள் எண்ணிக்கை மட்டுமே கூடியுள்ளது. 25.3.2012 வரை வருகின்ற உறுப்பினர் எண்ணிக்கையை இறுதிப்படுத்தி ஈ-படிவத்தை அனுப்ப உள்ளோம் அதற்கேற்றவாறு கிளைகளில் வசூலிக்கப்பட்டுள்ள சந்தாக்கள் 24.3.2012 க்குள் அனுப்பி உதவிடுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

ஏற்கனவே நிர்வாகிகள், பொதுக்குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில் இந்த ஆண்டு உறுப்பினர்களாக சேர்ந்தவர்கள் அனைவருக்கும் மின்கதிர் அனுப்பப்பட்டுள்ளது. அதை கிளை நிர்வாகிகளும் உறுப்பினராக சேர்ந்தவர்களுக்கு மின்கதிர் வந்துள்ளதா என்பதை உறுதி படுத்துமாறு கேட்டுக் கொள்கிறோம். மாநில மையத்திற்கும் தகவல் அனுப்ப வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

2012 ஆம்ஆண்டு டைரி பாக்கி வைத்துள்ளவர்கள் இந்த வாரத்திற்குள் பாக்கியை விரைந்து அனுப்ப வேண்டுகிறோம்.

தோழமையுள்ள

**(எஸ்.எஸ். சுப்பிரமணியன்)**
பொதுச் செயலாளர்.

## குறிப்பு

கணக்கீட்டு ஆய்வாளரிலிருந்து, வருவாய் மேற்பார்வையாளராக பதவி உயர்வு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது. அதில் கணக்கீட்டு ஆய்வாளராக பணியில் சேர்ந்த தேதியை கணக்கில் கொண்டு பதவி உயர்வு வழங்கும் போது சில ஊழியர்களுக்கு பதவி உயர்வு கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளது. இது சம்மந்தமாகவும், பணியில் சேர்ந்த தேதி என்பதை தவிர்த்து பேனல் தேதியை அடிப்படையாக கொண்டு பதவி உயர்வு வழங்க வேண்டும் என்று மின்ஊழியர் மத்திய அமைப்பு முறையீடு செய்துள்ளது,

கணக்கீட்டாளரிலிருந்து கணக்கீட்டு ஆய்வாளர் பதவி உயர்வும் வருவாய் மேற்பார்வையாளரி லிருந்து கணக்கீட்டு அலுவலர் பதவி உயர்வும் சங்கரன் கோயில் இடைத் தேர்தலுக்கு பிறகு வழங்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் : 158 / CPT அங்கீகாரம் பெற்றது இணைப்பு : CITU & EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005

Telephone No: 044-28548529
Fax No: 044-28516574

CITU

Email: coteecitu_hqchennai@yahoo.com
coteecitu@gmail.com


**சுற்றறிக்கை எண் 8/2012** **நாள் : 05/04/2012**

*பெறுநர்*
மத்திய அமைப்பின் அனைத்து நிர்வாகிகள்
மத்திய அமைப்பின் அனைத்து கிளைச் செயலாளர்கள்
மத்திய அமைப்பின் அனைத்து மாநில செயற்குழு உறுப்பினர்கள்

அன்பான தோழரே,

வணக்கம்

நமது சங்கத்தின் மாநில நிர்வாகிகள் கூட்டம் 1.4.2012 அன்று சென்னையில் மாநிலத் தலைவர் தோழர் கே. விஜயன் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் தோழர்கள் கே. குப்புசாமி, டி.அறிவழகன் மற்றும் என்.மூர்த்தி ஆகியோர் தவிர்த்து சிஐடியு துணைப் பொதுச் செயலாளர் தோழர் ஆர். கருமலையான், மாநிலத் துணைத் தலைவர் தோழர் கே. செல்லப்பன் உள்ளிட்ட ஏனைய அனைத்து நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.

10 கோடி தொழிலாளர்கட்கு மேல் கலந்து கொண்ட அகில இந்திய பொது வேலைநிறுத்தம் 28.2.12 அன்று நடத்தியிருந்தாலும் இந்திய அரசாங்கம் பெரு முதலாளிகளுக்கு ஆதரவாக தொடர்ந்து பயணிக்கிறது, மாநில அரசும் பஸ் கட்டணம், பால்விலை, மின்கட்டணம் ஆகியவற்றின் விலைகளை உயர்த்தி ஏழை நடுத்தர மக்களை பாதிக்கும் செயல்களை செய்து வருகிறது என்று தலைவர் குறிப்பிட்டார்.

சிஐடியு துணைப் பொதுச் செயலாளர் ஆர். கருமலையான் மத்திய பட்ஜெட் மக்களுக்கு எதிரானது, முதலாளிகளுக்கு ஆதரவானது. தொழிலாளர்களின் பி.எப். வட்டி விகிதம் குறைப்பு, பங்குவிற்பனை, பென்சனில் சீர்திருத்தம் ஆகிய மத்திய அரசின் நடவடிக்கைக்கு எதிராக நாம் விழிப்புடன் செயலாற்ற வேண்டும். மாநில அரசும் பேருந்து கட்டணம், பால்விலை, மின்கட்டண உயர்வின் மூலம் சுமார் 20,000 கோடி கட்டண உயர்வினை சாமானிய மக்களின் மேல் திணித்துள்ளது - என்றும் கோவையில் ஜூன் 2 முதல் 5 வரை நடைபெற உள்ள சிஐடியு அகில இந்திய பொதுக் குழு அதற்கான தயாரிப்பு - பேரணி அதில் நமது பங்கேற்பு பற்றியும் குறிப்பிட்டார்.

பொதுச் செயலாளர் எஸ்.எஸ். சுப்பிரமணியம், 28.02.2012 அன்று நடைபெற்ற அகில இந்திய வேலை நிறுத்தம், விருதுநகர் மேற்பார்வை பொறியாளர்க்குகெதிரான இயக்கங்கள், அனல் மின்நிலைய ஊழியர்கள் பதவி உயர்வுக்கான இருதரப்பு ஒப்பந்தம், 2011 ஆம் ஆண்டுக்கான ஈ-படிவம் சமர்பித்தது, சங்க துணை விதிதிருத்தம் ஒப்புதல் பெற்றது, உழைக்கும் பெண்கள்

ஒருங்கிணைப்புக்குழு மாநிலக்குழு கூட்டம் நடந்தது, மின்கதிர், மஸ்தூர்களுக்கு பதவி உயர்வு, சைக்கிள் அலவன்ஸ், இளநிலை உதவியாளர், தட்டச்சர் போன்ற பதவிகளுக்கு தேர்வு நிலை கணக்கீடு செய்வதில் முரண்பட்டு வழங்கப்பட்ட தொகையினை பிடித்தம் செய்திடும் தணிக்கை பிரிவின் நடவடிக்கைகையை நிறுத்தி வைத்த உத்தரவு பெற்றது, கணக்கீட்டுப்பிரிவு ஊழியர்களுக்கான பதவி உயர்வு வழங்கிட நமது தொடர் முயற்சிகள் ஆகியவை பற்றிய சுருக்கமான அறிக்கையை முன்மொழிந்து பேசினார்.

பொருளாளர் து. கோவிந்தராஜு 1.7.2012 முதல் 31.12.2011 முடிய உள்ள மத்திய அமைப்பின் வரவு செலவுகளை முன்மொழிந்தார். பகுதி நேர ஊழியர்கள் நன்கொடை, 2011 ஆம் ஆண்டு போனஸ் நன்கொடை வரவு பற்றிய விவரங்களை தெரிவித்தார்.

2009, 2010 ஆம் ஆண்டு கிளைகளின் வரவு செலவு இதுவரையிலும் மத்திய சென்னை, மதுரை,திருநெல்வேலி மற்றும் திண்டுக்கல் ஆகிய கிளைகளில் மட்டும் நடந்துள்ளது. ஏனைய கிளைகளும் உடனடியாக தணிக்கை நடத்தி முடிக்க வேண்டும். 2009, 2010 ஆம் ஆண்டு மாநில மையத்தின் வரவு - செலவு தணிக்கை செய்து முடித்துள்ளதாகவும், தணிக்கை அறிக்கை அடுத்த நிர்வாகிகள் கூட்டத்தில் வைக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

தோழர்களின் விவாதத்துக்குப் பின் கீழ்கண்ட முடிவுகள் ஒருமனதாக மேற்கொள்ளப்பட்டன.

**1. 28.2.2012 வேலை நிறுத்தம் பரிசீலனை**

10 அம்ச கோரிக்கையை வலியுறுத்தி, அகில இந்திய அளவில் அனைத்து தொழிற் சங்கங்கள் சார்பில் நடைபெற்ற வேலை நிறுத்தம் தமிழ்நாடு மின்சார வாரியத்திலும் சிறப்பாக நடந்தேறியுள்ளது. தமிழ்நாடு மின்சார தொழிலாளர் சம்மேளனமும், ஐக்கிய தொழிலாளர் சங்கமும் தனித்து வேலை நிறுத்ததில் கலந்து கொண்டனர். ஏனைய சங்கங்களின் கூட்டுக் குழு கூட்டத்தை கூட்டியது. பொதுவான போஸ்டர் 2500 அச்சடித்து மாநிலம் முழுவதும் விநியோகம் செய்தது,வேலை நிறுத்த பங்கேற்பு குறித்து அனைத்து சங்க நிர்வாகிகள் கையொப்பமிட்ட சுற்றறிக்கையை சுற்றுக்கு அனுப்பியது, ஒரே தேதியில் (13.2.2012) அனைத்து சங்கங்களையும் வேலை நிறுத்த அறிவிப்பு வழங்க வைத்தது உட்பட அனைத்து வேலைகளிலும் மத்திய அமைப்பு முழுமூச்சுடன் முன்கையெடுத்து செயல்பட்டது.

மத்திய அமைப்பின் சார்பில் கூடுதலாக 50,000 பிரசுரம் வேலை நிறுத்தத்திற்கு ஆதரவாக விநியோகம் செய்யப்பட்டது, அனைத்து மேற்பார்வை மின் பொறியாளர் அலுவலக வாயிலிலும் வேலை நிறுத்த விளக்க கூட்டம் 22.2.12 அன்று அனைத்து சங்கம் சார்பில் நடத்தப்பட்டது.

இந்த வேலை நிறுத்தத்தில் சுமார் 23,850 நிரந்தர ஊழியர்களும், 5000க்கும் மேற்பட்ட ஒப்பந்த தொழிலாளர்களும், 5000 பகுதி நேர ஊழியர்களும் பங்கேற்றுள்ளனர். வாரிய ஊழியர்களின் எண்ணிக்கையில் இது 34 சதவீதமாகும்.

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் நமது தலைமையிலான மின்துறை பொறியாளர் அமைப்பும் வேலை நிறுத்தத்தில் பங்கேற்றது. ஏனைய பொறியாளர் அமைப்புகள் தார்மீக ஆதரவளித்தனர். அனைத்து தொழிற் சங்கங்களும் இந்த தேசம் தழுவிய வேலை நிறுத்தத்தில்பொதுவான கோரிக்கைக்காக இணைந்து ஈடுபடுகின்றனர் என்ற எண்ணத்தை கீழ்மட்ட ஊழியர்கள் வரையிலும் கொண்டு செல்ல முடிந்ததே வேலை நிறுத்த வெற்றிக்கு அடிப்படை காரணமாகும்.

இந்த வேலை நிறுத்தத்தில் மத்திய அமைப்பின் மாநில பொருளாளர் து. கோவிந்தராஜு குடும்ப சூழ்நிலையின் காரணமாக கலந்து கொள்ளாதது குறித்து மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் தன்னிலை விளக்கமளித்தார். எதிர் காலத்தில் இதுபோன்ற தவறுகள் நேராத வண்ணம் கவனமாக செயல்பட வேண்டும் என்று எச்சரித்து அவருக்கு கடிதம் கொடுப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

மேலும் வேலை நிறுத்தத்தில் கலந்து கொள்ளாத செயற்குழு உறுப்பினர்கள், கிளை நிர்வாகிகளின் பட்டியலை சேகரித்து எதிர்வரும் கூட்டங்களில் பரிசீலிப்பது எனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

**2. விருதுநகர் மேற்பார்வை மின்பொறியாளர்க்கு எதிரான இயக்கம்**

9.3.12 அன்று மின்விபத்தில் இறந்தபோன மஸ்தூர் வி. அன்புராஜ் சம்பந்தமாக பேச்சு வார்த்தை நடத்த சென்ற விருதுநகர் திட்ட நிர்வாகிகளை சந்திக்க மறுத்து 11 தோழர்கள் மீது பொய் புகார் கொடுத்து 6 நிரந்தர ஊழியர்களை இரவோடு இரவாக தற்காலிக பணி நீக்கம் செய்துள்ள மேற்பார்வை மின் பொறியாளர் / விருதுநகர் அவர்களின் அராஜக போக்கினை கண்டித்து மாநில மையம் எடுத்த நடவடிக்கைகள், மாநிலம் முழுவதும் நடைபெற்ற மேற்பார்வை பொறியாளர்க்கு எதிரான 21.3.12 கண்டன ஆர்ப்பாட்டம் உள்ளிட்டு மாநில மையம் எடுத்த நடவடிக்கைகளை நிர்வாகிகள் கூட்டம் முழுமனதோடு ஏற்றுக் கொண்டது.

மேலும் பாதிக்கப்பட்டுள்ள 11 தோழர்கள் மீதான பொய் புகார், தற்காலிக பணிநீக்கம் இவைகளை ரத்து செய்திட உரிய நடவடிக்கைகளையும் இயக்கங்களையும் தொடர்ந்து கொண்டு செல்வதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**3. 2011 உறுப்பினர் சந்தா**

2011 ஆம் ஆண்டுக்கான ஈ படிவம் - தொழிலாளர் ஆணையர் அலுவலகத்தில் 30.3.1012 அன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

சென்னை மேற்கு, சென்னை மையம், காஞ்சி, விழுப்புரம், கடலூர், இராமநாதபுரம் மற்றும் 4 அனல் மின்நிலைய கிளைகள் 2010 ஆம் ஆண்டு உறுப்பினர் எண்ணிக்கை அளவை 2011 உறுப்பினர் எண்ணிக்கையை நிறைவு செய்யாத கிளைகளாக உள்ளது.

அரசுக்கு ஈ-படிவம் அனுப்பப்பட்டிருந்தாலும் மேற்கண்ட கிளைகள் விடுபட்டுள்ள உறுப்பினர் எண்ணிக்கையை நிறைவு செய்திட முயற்சிக்க வேண்டும்.

**4. உழைக்கும் பெண்கள் ஒருங்கிணைப்புக்குழு**

18.3.2012 திண்டுக்கல்லில் நடைபெற்ற உழைக்கும் பெண்கள் ஒருங்கிணைப்புக் குழுவின் மாநிலக்குழு கூட்டத்தில் 20 கிளைகளிலிருந்து 24 பெண் தோழர்கள் கலந்து கொண்டு எதிர்கால உழைக்கும் பெண்கள் ஒருங்கிணைப்புக் குழுவின் வளர்ச்சிக்கு நல்ல முடிவுகளை எடுத்துள்ளனர்.

குவியலாக நமது முயற்சியின் காரணமாக நிரந்தரம் பெற்றுள்ள பகுதி நேர பெண்களை நமது அமைப்பில் தொடர்ந்து தக்கவைக்க அமைப்பு ஏற்படுத்தாத கிளைகள் உடனடியாக பெண்கள் அமைப்பை ஏற்படுத்துவதற்கு உதவிட வேண்டும்.

**5. மின்கதிர்**

உறுப்பினர் சந்தாவோடு மின்கதிர் ஆண்டு சந்தாவும் சேர்த்து வசூலித்து, அவர்களுக்கு மின்கதிர் அனுப்பி வைப்பது என்ற தூத்துகுடி பொதுக்குழுவின் முடிவு அமலாக்கம் தொடங்கி விட்டது.

ஏப்ரல் 2012 மின்கதிர் கூடுதலாக 2400 பிரதிகள் அச்சிட்டு ஒட்டு மொத்தம் 6700 என்ற எண்ணிக்கையில் உறுப்பினர்களுக்கு அனுப்பபட்டுள்ளது. இந்த எண்ணிக்கை மாதா மாதம் கூடிக் கொண்டேயிருக்கும். சந்தாதாரர்களுக்கு, மின்கதிர் கிடைப்பதை உத்தரவாதம் செய்திட கூடுதல் கவனத்துடன் மையத் தோழர்கள் செயல்பட வேண்டியுள்ளது.

6. தமிழக மின்சார வாரியத்தால் ரூ. 7874 கோடி அளவிற்கு கடுமையாக உயர்த்தப்பட்டுள்ள மின் கட்டண உயர்வுக்கெதிராக சிஐடியு சார்பில் நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டங்களில் மின்வாரிய ஊழியர்களும் திரளாக கலந்து கொள்வது.

7. நமது 24.1.2012 ஆர்ப்பாட்டம், தொடர்ச்சியான போராட்டங்கள், முறையீடுகள் பேச்சுவார்த்தைகள் மூலம் மஸ்துாரிலிருந்து கள உதவியாளராக பதவி உயர்வு வழங்குவதற்கான உத்திரவு இந்த வாரம் வெளியாக உள்ளது.

அதே போல நீண்ட நாள் கோரிக்கையான 4 அனல் மின்நிலைய ஊழியர்களின் பதவி உயர்வுக்காக 26.3.12 அன்று இருதரப்பு ஒப்பந்தம் ஏற்பட்டு 3.4.12 வாரிய உத்திரவும் வெளியாகி விட்டது.

இந்த நிலையை விளக்கி 4 அனல் மின்நிலையங்களிலும், அனைத்து விநியோக வட்ட கிளைகளிலும் இம் மாதம் 30.4.2012க்குள் சிறப்பு பேரவைகள் நடத்த வேண்டும். பேரவையில் கலந்து கொள்ள உள்ள மாநில நிர்வாகிகளின் பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது.

2009 - 2010 ஆம் ஆண்டு கிளைகளின் வரவு /செலவு அறிக்கைகளை சம்மந்தப்பட்ட தணிக்கையாளர்கள் இம்மாத இறுதிக்குள் தணிக்கை செய்து மாநில மைய்யத்திற்கு அறிக்கை அனுப்புவது.

ஆகிய முடிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முடிவுகளை அமலாக்கி முன்னேறுவோம்.

வாழ்த்துக்களுடன்
தோழமையுள்ள

**(எஸ்.எஸ். சுப்பிரமணியன்)**
பொதுச் செயலாளர்.

## வாரியச் செய்திகள்

1. மஸ்துார்களுக்கு சைக்கிள் அலவன்ஸ் வழங்கி வாரியம் உத்திரவிட்டுள்ளது.

2. JE, Typist, Steno உள்ளிட்ட பதவிகளில் உள்ளவர்களுக்கு தேர்வு நிலை வழங்கிட வேறு வட்டங்களில் பணிபுரிந்த காலத்தையும் கணக்கில் கொண்டு வழங்கப்பட்ட தேர்வு நிலை ஊதியம் தவறு என்று தணிக்கைக்குழுவில் பிடித்தம செய்ப்பட்ட தொகையை பிடித்தம் செய்யக் கூடாது என்று வாரியம் உத்திரவிட்டுள்ளது.

3. 849 கணக்கீட்டாளர்களுக்கு - கணக்கீட்டு ஆய்வாளர் பதவி உயர்வுக்கான பட்டியல் 3.4.12 ல் வாரியம் வெளியிட்டுள்ளது.

4. 129 வருவாய் மேற்பார்வையாளர்களுக்கு கணக்கீட்டு அலுவலர் பதவி உயர்வுக்கான பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

மஸ்துாரிலிருந்து கள உதவியாளர் பதவி உயர்வு மற்றும் 4 அனல் மின்நிலைய ஊழியர்கள் பதவி உயர்வு ஒப்பந்தம் விளக்க சிறப்பு பேரவை

| கிளைகள் | | பங்குகேற்கும் நிர்வாகிகள் |
|---|---|---|
| 1. | வடசென்னை | எஸ்.எஸ். சுப்பிரமணியன் |
| 2. | மத்திய சென்னை | எம்.வெங்கடேசன் |
| 3. | மேற்கு சென்னை | கே. விஜயன் |
| 4. | தென்சென்னை | து. கோவிந்தராஜு |
| 5. | செங்கல்பட்டு | ஈ. அந்தோணி |
| 6. | காஞ்சிபுரம் | எம். தனலட்சுமி |
| 7. | வேலூார் | ஏ. பழனி |
| 8. | திருப்பத்துார் | ஜி. மோகன்ராஜ் |
| 9. | தர்மபுரி | பி. கண்ணன் |
| 10. | விழுப்புரம் | கே. அருட்செல்வன் |
| 11. | கடலுார் | டி. அறிவழகன் |
| 12. | திருவண்ணாமலை | டி. ஜெய்சங்கர் |
| 13. | பெரம்பலுார் | ஆர். ஸ்ரீதர் |
| 14. | திருச்சி/மாநகர் | எஸ். ராஜேந்திரன் |
| 15. | கரூர் | வி. மதுசூதனன் |
| 16. | புதுக்கோட்டை | ஆர். குருவேல் |
| 17. | தஞ்சாவூர் | எம். புருசோத்தமன் |
| 18. | நாகப்பட்டிணம் | என். மூர்த்தி |
| 19. | மதுரை | |
| 20. | மதுரை மாநகர் | எம். பன்னீர்செல்வம் |
| 21. | தேனி | கே. செல்லப்பன் |
| 22. | ராமநாதபுரம் | எஸ். தங்கராஜ் |
| 23. | சிவகங்கை | எஸ். வண்ணமுத்து |
| 24. | திண்டுக்கல் | சி. ஜோதிமணி |
| 25. | விருதுநகர் | வி. பாலசுப்பிரமணியன் |
| 26. | திருநெல்வேலி | ஆர். சிவராஜ் |
| 27. | துாத்துக்குடி | ஆர். குருவேல் |
| 28. | கன்னியாகுமரி | எஸ். முத்துக்குமாரசாமி |
| 29. | நீலகிரி | கே. அருட்செல்வன் |
| 30. | கோவைதெற்கு | |
| 31. | கோவைவடக்கு | வி. இளங்கோ |
| 32. | கோவை மாநகர் | |
| 33. | திருப்பூர் | எஸ். ஆனந்தன் |
| 34. | உடுமலைபேட்டை | பி.கே. சிவக்குமார் |
| 35. | சேலம் | கே. ரவிச்சந்திரன் |
| 36. | மேட்டூர் | ஈ. அந்தோணி |
| 37. | ஈரோடு | வி.பி. கந்தசாமி |
| 38. | கோபி | எச். ஜான்சௌந்தரராஜ் |
| 39. | நாமக்கல் | எஸ். ராஜேந்திரன் |
| 40. | வடசென்னை அனல் | டி. கோவிந்தராஜு |
| 41. | எண்ணுார் | கே. ரவிச்சந்திரன் |
| 42. | மேட்டூர் அனல் | கே. விஜயன் |
| 43. | துாத்துக்குடி அனல் | ஆர். குருவேல் |

# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் : 158 / CPT அங்கீகாரம் பெற்றது இணைப்பு : CITU & EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005

Telephone No: 044-28548529
Fax No: 044-28516574

CITU

Email: coteecitu_hqchennai@yahoo.com
coteecitu@gmail.com


**சுற்றறிக்கை எண் 9/2012** **நாள் : 07/04/2012**

*பெறுநர்*
மத்திய அமைப்பின் அனைத்து நிர்வாகிகள்
மற்றும் கிளைச் செயலாளர்கள்

அன்பான தோழரே,
வணக்கம்

## 13.04.2012 - தோழர் து. ஜானகிராமன் நினைவு தினம்



நமது அமைப்பின் ஸ்தாபக தலைவர் தோழர் து. ஜானகிராமன் அவர்களின் 9வது நினைவு தினத்தை 13.4.2012 அன்று அனைத்து கிளைகளும் கடைபிடிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

நமது சங்கம் தமிழ்நாடு மின்சார வாரியத்தால் புறக்கணிக்க முடியாத ஊழியர்களால் நம்பிக்கையுடன் அணுகக்கூடிய 30,000 உறுப்பினர்களை உள்ளடக்கிய சங்கமாக செயல்பட்டு வருகிறது.

“ஒன்றுபடுவோம் - போராடுவோம்” - என்ற உன்னத நோக்கத்தோடு துவக்கப்பட்ட நமது அமைப்பை 33 ஆண்டுகளுக்கும் மேலாக தலைமையேற்று - பாதுகாத்து வளர்த்த உன்னத தலைவர் தோழர் D.J.

அவரது 10வது நினைவு தினமான எதிர்வரும் 13.4.2012 அன்று நமது சங்க அலுவலக வாயிலில் அவரது திருஉருவப் படத்துக்கு மாலை அணிவித்து, பேரவை நடத்தி அவரது உழைப்பை - தியாகத்தை ஒவ்வொரு கிளையும் கொண்டாடுகிற வகையில் கடைபிடிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

## 14.4.2012 - டாக்டர் அம்பேத்கர் பிறந்த தினம்



இந்திய அரசியலமைப்பு சட்ட உருவாக்க குழுவின் தலைவர், முதன்மையானவர், சுதந்திர இந்தியாவின் முதல் சட்டதுறை அமைச்சர், அதிகம் படித்தவர், அடித்தட்டு மக்களின் சுதந்திரம் வேண்டி இறுதி வரையில் இடையறாது போராடியவர், சாதீயத்துக்கெதிராக சமரசமின்றி போராடி வென்ற போர்ப்படை தளபதி, அனைத்து மக்களுக்கும் அடிப்படை உரிமைகளை உத்தரவாதம் செய்திட்ட ஒப்பற்ற தலைவர் பாரத் ரத்னா டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் அவர்களின் 122வது பிறந்த தினமான எதிர்வரும் 14.4.2012 அன்று நமது சங்க அலுவலக / மின்வாரிய அலுவலக வாயிலில் அம்பேத்கர் அவர்களின் திருவுருவ படத்தை அலங்கரித்து வைத்து கொண்டாட வேண்டுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**வாரியச் செய்தி**
28.2.2009 மற்றும் 03.06.2009 ஆகிய தேதிகளில் தொகுப்பூதியத்தில் நியமனம் செய்யப்பட்ட 4000 ஐ.டி.ஐ படித்த கள உதவியாளர்களுக்கு முதன்மைப் பட்டியல் தயாரிப்பது சம்மந்தமாக வாரியம் உத்திரவு எண் 100718/583/G57/G572/2012 Dated 26.03.2012 வெளியிட்டுள்ளது.

வாழ்த்துக்களுடன்
தோழமையுள்ள

**(எஸ்.எஸ். சுப்பிரமணியன்)**
பொதுச் செயலாளர்.

# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் : 158 / CPT அங்கீகாரம் பெற்றது இணைப்பு : CITU & EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005

Telephone No: 044-28548529 Email: coteecitu_hqchennai@yahoo.com

Fax No: 044-28516574 coteecitu@gmail.com

CITU


சுற்றறிக்கை எண் 10/2012 நாள் : 12/04/2012

## ஊதிய உயர்வு கோரிக்கை தயாரிப்பு குழுக் கூட்ட அழைப்பிதழ்

அன்பான தோழரே,வணக்கம்

1.12.2011 முதல் மின்வாரிய ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு வழங்க வாரியத்தை வலியுறுத்தும் வகையில் நமது அமைப்பின் சார்பில் ஊதிய உயர்வு கோரிக்கை தயாரிப்புக்குழுவின் இரண்டாவது கூட்டம் எதிர்வரும் **23.04.2012 (திங்கட் கிழமை)** சென்னையில் நடைபெற உள்ளதால் கீழே குறிப்பிட்டுள்ள குழு உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் குறிப்பிட்டநேரத்தில் கலந்துக் கொள்ள வேண்டுகிறோம்.

**23.04.2012 அன்று திங்கட் கிழமை காலை 10.00 மணிக்கு**
**தோழர்.டி.ஜே. நினைவகம்,**
**எண்-177, சிங்கண்ணசெட்டித் தெரு,**
**சிந்தாதிரிப்பேட்டை, சென்னை 600 002-ல்**

தோழமையுள்ள

**(எஸ்.எஸ். சுப்பிரமணியன்)**
பொதுச் செயலாளர்.

---

**பெறுநர்**
**குழு உறுப்பினர்கள்:-**

1. தோழர். கே.விஜயன்
2. தோழர். எஸ்.எஸ்.சுப்பிரமணியன் (கன்வீனர்)
3. தோழர். டி.கோவிந்தராஜு
4. தோழர். கே.செல்லப்பன்
5. தோழர். பி.கண்ணன்
6. தோழர். இ.அந்தோணி
7. தோழர். எம்.வெங்கடேசன்
8. தோழர். ஆர்.ஸ்ரீதர்
9. தோழர். ஆர்.குருவேல்
10. தோழர். கே.ரவிச்சந்திரன்
11. தோழர். கே.அருள் செல்வன்
12. தோழர். என்.தனலட்சுமி
13. தோழர். எஸ்.ராஜேந்திரன்
14. தோழர். வி.பாலசுப்ரமணியன்
15. தோழர். ஏ.பழனி
16. தோழர். வி.இளங்கோ
17. தோழர். தி.ஜெய்சங்கர்
18. தோழர். பி.கே.சிவக்குமார்

# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் : 158 / CPT அங்கீகாரம் பெற்றது இணைப்பு : CITU & EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005

Telephone No: 044-28548529
Fax No: 044-28516574

CITU

Email: coteecitu_hqchennai@yahoo.com
coteecitu@gmail.com


**சுற்றறிக்கை எண் 11/2012** **நாள் : 23/04/2012**

பெறுநர்
மத்திய அமைப்பின் நிர்வாகிகள்
கிளை செயலாளர்
செயற்குழு உறுப்பினர்கள்

அன்பான தோழரே,
வணக்கம்,

புதிய பொருளாதாரக்கொள்கை அமலாக்கலின் தாக்கம் அனைத்து துறைகளிலும்பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. அது மின்சாரத் துறையையும் விட்டு வைக்கவில்லை, மின்சாரத் துறையில் நிரந்தர தொழிலாளர்களின் எண்ணிக்கையை குறைப்பது அப்பணியை தினக்கூலி ஒப்பந்த அவுட்சோர்சிங் முறைகளை கொண்டு செய்வது, அவர்களுக்கு மிகக் குறைந்த கூலியையே கொடுப்பது என்ற உழைப்புச் சுரண்டல் அமலாக்கம் இந்திய நாட்டின் அனைத்து மின்வாரியங்களிலும் பல ஆண்டுகளாக நடந்து கொண்டுள்ளது.

மின்வாரியத்தில் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள உழைப்புச் சுரண்டலுக்கு எதிராக, பல மாநிலங்களில் பாதிக்கப்பட்டுள்ள தொழிலாளிகளை திரட்டுவது. அவர்களுக்கு சட்டத்தில் சொல்லப்பட்டுள்ள நிரந்தரம் உள்ளிட்ட ஏனைய உரிமைகளை பெற்று தருவதில் சிறிய அளவில் முன்னேற்றங்கள் காணப்பட்டுள்ளது. தமிழகத்திலும் மின்சாரத் துறையில் ஒப்பந்த தொழிலாளிகளை ஈடுபடுத்தி உழைப்புச் சுரண்டல் என்பது நடைபெற்று வருகிறது. இருப்பினும் மின்ஊழியர் மத்திய அமைப்பு தலையிட்டு உழைப்புச் சுரண்டலுக்கு ஆளாகியுள்ள தொழிலாளிகளை திரட்டி பல கட்ட போராட்டங்கள் நடத்தி பல்லாயிரக் கணக்கான ஊழியர்களுக்கு நிரந்தரம் உட்பட பல சலுகைகளை பெற்றுத் தந்துள்ளது.

இந்தியா முழுவதுமுள்ள பல மாநில மின்வாரியங்களில் தினக்கூலி ஒப்பந்த தொழிலாளிகள், அவுட்சோர்சிங் முறைக்கு ஆளாக்கப்பட்டு பல்லாயிரக் கணக்கில் பணிபுரிகிறார்கள் என்ற நிலையை உணர்ந்து அவர்களை அணி திரட்டுவதற்கான நடவடிக்கையில் அகில இந்திய மின்ஊழியர் கூட்டமைப்பு ஈடுபட்டுள்ளது.

மின்சாரத் துறையில் உள்ள ஒப்பந்த தொழிலாளிகளை அணிதிரட்டும் விதமாக மண்டல வாரியான கருத்தரங்குகளை நடத்துவது என்று முடிவு செய்து, வட மாநிலங்களில் சில கருத்தரங்குகளும் நடைபெற்றுள்ளது.

இவைகளின் பின்னணியில் தமிழ்நாடு, ஆந்திரம், கேரளம், கர்நாடகா, புதுச்சேரி ஆகிய தென்மாநில மின்வாரிய ஒப்பந்த தொழிலாளர்களின் சிறப்பு கருத்தரங்கத்தை 13.5.2012 (ஞாயிற்றுக்கிழமை) ஆந்திர மாநிலம் நெல்லூாரில் நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டு அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

**கூட்டம் நடைபெறும் இடம்**
**NGO ஹோம்**
**(திருப்பதி தேவஸ்தான கல்யாண மண்டபம் எதிரில்)**
**நெல்லூர் / ஆந்திர மாநிலம்**

13.5.2012 அன்று நெல்லூரில் நடைபெறும் தென்மாநில மின்வாரிய ஒப்பந்த தொழிலாளர்களின் சிறப்பு கருத்தரங்கத்தில் தமிழகத்திலிருந்து கணிசமான ஒப்பந்த தொழிலாளர்கள் கலந்து கொள்வது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. அதில் சென்னையில் உள்ள நான்கு மின்திட்டக்கிளைகள், காஞ்சிபுரம், வேலூர், திருப்பத்துர், திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர், செங்கல்பட்டு, வடசென்னை அனல், எண்ணூர் அனல் ஆகிய திட்டங்களில் இருந்து தலா 2 ஒப்பந்த தொழிலாளர் பிரதிநிதிகளும் மற்ற வட்டங்களிலிருந்து தலா ஒரு பிரதிநிதியும் கலந்து கொள்வது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது..

அந்த முடிவினை முழுமையாக அமல்படுத்தும் விதமாக 13.5.2012 (காலை 10.30 மணி அளவில்) ஆந்திர மாநிலம், நெல்லூரில் இருப்பதற்குரிய வகையில் ஏற்பாட்டை செய்திட வேண்டுகிறோம். **காலை 5.00 மணி அளவில் சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்திலிருந்து நெல்லூருக்கு ஒரு ரயில் உள்ளது என்பதையும் பிரதிநிதிகள் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறோம்.** பிரதிநிதிகள் அனைவரும், ஒப்பந்த தொழிலாளிகளாக அல்லது ஒப்பந்த தொழிலாளிகளிலிருந்து மஸ்துார்களாக பணிநியமனம் செய்யப்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

24.01.2012 அன்றை ஆர்ப்பாட்டத்தையொட்டி மஸ்துார்களுக்கு கள உதவியாளர்களாக பதவி உயர்வு அளிப்பது, அனல் மின் நிலையத்தில் பணியாற்றும் களப்பரிவு ஊழியர்களுக்கு பதவி உயர்வு அளிக்கும் வாய்ப்பை உருவாக்குவது, விடுபட்டுபோன ஒப்பந்த தொழிலாளிகளை பணிநியமனம் செய்வது போன்ற பிரச்னைகளின் மீது பேச்சு வார்த்தை நடத்தி வாக்குறுதிகளை பெற்று அவைகள் ஒவ்வொன்றாக நடைமுறைக்கு வரும் நிலை ஏற்பட்டுள்ளது. இவை தவிர நமது தலையீட்டின் பயனாக கணக்கீட்டு பிரிவு, கணக்குபிரிவு ஊழியர்களுக்கு பதவி உயர்வு அளிக்கும் வாய்ப்பு உருவாகி உள்ளது. இவைகளை நமது ஊழியர்கள் மத்தியில் கொண்டு செல்லும் வகையில் திட்டவாரியாக சிறப்பு பேரவைகள் நடத்த வேண்டும் என்பதை முழுமையாக அமல்படுத்துவதற்கான நடவடிக்கை எடுத்திட வேண்டுகிறோம்.

கிளைகள் 2009 - 2010 ஆம் ஆண்டு வரவு செலவு கணக்குகளை ஒதுக்கப்பட்டுள்ள தணிக்கையாளர்களை கொண்டு தணிக்கை செய்து முடிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

ஊதிய உயர்வு குழுக் கூட்டம் வருகின்ற 23.4.2012 அன்று கூடி ஊதிய உயர்வு கோரிக்கைகளை உருவாக்கி இறுதிப்படுத்திட உள்ளது. அதை ஊதியஉயர்வு கோரிக்கை புத்தமாக கொண்டு வந்து வெளியிடுவதை ஓர் இயக்கமாக நடத்த வேண்டியுள்ளது.

1.1.2012 முதல் வழங்க வேண்டிய 7 சதவீத பஞ்சப்படி உயர்வு சம்மந்தமாக 23.4.2012 அன்று நடைபெறும் வாரியக் கூட்டத்தில் ஒப்புதல் பெற்று பின்னர்உத்தரவாக வெளிவரலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மஸ்துார்களை கள உதவியாளர்களாக பதவி உயர்வு வழங்குவதற்கு வாரிய கூட்டத்தில் ஒப்புதல் பெறப்பட்ட பின்னர் அதில் சில பிரச்னைகள் எழுந்ததை சரி செய்து இன்னும் சில தினங்களில் வாரிய உத்திரவாக வெளிவரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

சுமார் 110 தொழிற் நுட்ப உதவியாளர்களுக்கு இளநிலை பொறியாளர் இரண்டாம் நிலையாக வட்டஒதுக்கீடும் வெகு சீக்கிரத்தில் வெளிவர உள்ளது.

இளநிலை பொறியாளர் இரண்டாம் நிலையில் இருந்து முதல்நிலை பதவி உயர்வு வழங்குவதற்கான பேனல் தயாரிப்பு பணி நடைபெற்று வருகிறது.

உதவி பொறியாளர் பணிக்கு வேலை தேடிதரும் அலுவலகம்மூலம் தேர்வு செய்வதற்குண்டான நேர்காணல் துவங்கப்பட உள்ளது.

- இளநிலை உதவியாளர், தட்டச்சர், சுருக்கெழுத்தர் போன்ற பதவிகளிலிருந்து உதவியாளர்/கணக்கு பதவி உயர்வு வழங்கவும், உதவியாளர் / கணக்கிலிருந்து கணக்கு மேற்பார்வையாளராக பதவி உயர்வு வழங்கவும், கணக்கு அலுவலரிலிருந்து துணைநிதி கட்டுப்பாட்டு அலுவலராக பதவி உயர்வு வழங்கவும் தகுதிகாண் அறிக்கை கேட்கப்பட்டுள்ளது. (தகுதி பெறும் நாள் 20.3.2012)

- நமது முயற்சியின் காரணமாக நிரந்தரம் பெற்றுள்ள பகுதி நேர ஊழியர்கட்கு 2 ஆம் தவணை நிலுவைத் தொகை இம்மாதம் இறுதிக்குள் வழங்கப்பட வேண்டும். அதனையொட்டி வாரிய தலைமையகத்திலிருந்து தேவைப்படும் நிதி ஒதுக்கீடு (Fund Requirment) விவரங்களை கேட்டு, அனைத்து திட்ட மேற்பார்வை மின் பொறியாளர்கட்கும் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. கிளை செயலாளர்கள் இதில் கவனம் செலுத்துமாறு கேட்டுக் கொள்கிறோம்.

- நிர்வாக காரணத்தால் தாமதமாக பணிவிடுவிப்பு செய்யப்பட்டு கணக்கீட்டாய்வாளராக பணியேற்பு செய்து, கணக்கீட்டாய்வாளராக 2 ஆண்டுகள் பணிக்காலம் குறைந்ததால் வருவாய் மேற்பார்வையாளர் பதவி உயர்வு வழங்கப்படாத வர்களின் பட்டியலை வாரியம் கேட்டுள்ளது. பாதிக்கப்பட்டுள்ளவர்களின் பட்டியலை பெற்று வழிமுறையாக தலைமைப் பொறியாளர் / பணியமைப்பு அவர்களுக்கு அனுப்பிட கேட்டுக் கொள்கிறோம்.

தோழமையுள்ள

**(எஸ்.எஸ். சுப்பிரமணியன்)**
பொதுச் செயலாளர்.

# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் : 158 / CPT அங்கீகாரம் பெற்றது இணைப்பு : CITU & EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005

Telephone No: 044-28548529 Email: coteecitu_hqchennai@yahoo.com
Fax No: 044-28516574 coteecitu@gmail.com

CITU


சுற்றறிக்கை எண் 12/2012 நாள் : 07/05/2012

பெறுநர்
மத்திய அமைப்பின் நிர்வாகிகள்
கிளை செயலாளர்
செயற்குழு உறுப்பினர்கள்

அன்பான தோழரே,
வணக்கம்,

எதிர்வரும் 13.5.2012 அன்று நடைபெறும் தென் மாநில மின்வாரிய ஒப்பந்த தொழிலாளர்களின் சிறப்பு கருத்தரங்கில் சென்னை கிளைகள், காஞ்சிபுரம், வேலூர், திருப்பத்தூர், திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர், செங்கல்பட்டு, வடசென்னை அனல், எண்ணூர் அனல் ஆகிய திட்டங்களில் இருந்து தலா இரு ஒப்பந்த தொழிலாளி பிரதிநிதிகளும், மற்ற வட்டங்களில் இருந்து தலா ஒரு பிரதிநிதி கலந்து கொள்வது என்றும் அதற்கான ஏற்பாடுகள் கிளைகள் செய்ய வேண்டும் என்றும் ஏற்கனவே சென்ற சுற்றறிக்கையில் குறிப்பிட்டு இருந்தோம். கிளைகள் அதற்கான ஏற்பாடுகளை செய்து இருக்கும் என்றும் நம்புகிறோம்.

13.5.2012 அன்று ஆந்திரமாநிலம் நெல்லூரில் நடைபெறும் கருத்தரங்கிற்கு செல்லும் தோழர்கள் 12.5.2012 இரவு அன்றே தோழர் டி.ஜே. நினைவகத்திற்கு வந்துவிட்டால் 13.5.2012 அன்று காலை 5.00 மணி அளவில் சென்னை சென்டரலில் இருந்து புறப்படும் ரெயிலில் செல்ல ஏதுவாக இருக்கும். அந்த அடிப்படையில் தங்களது பயணத்தை உறுதி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

## சி.ஐ.டி.யூ. அகில இந்திய பொதுக்குழு

ஜூன் 2 இல் இருந்து 5 வரையில் சி.ஐ.டி.யூ.-வின் அகில இந்திய பொதுக்குழு கோவையில் நடைபெற உள்ளது. பொதுக்குழு நடப்பதையொட்டி 5.6.2012 அன்று பேரணியும் பொதுக்கூட்டமும் நடைபெற உள்ளது. அன்று நடைபெறும் பேரணியில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் கலந்து கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. அந்த பேரணியில் மின்னரங்கம் சார்பாக 1000 ஊழியர்கள் கலந்து கொள்வது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. அந்த முடிவினை நிறைவேற்றும் விதமாக கோவை மண்டலம் தவிர்த்து அனைத்து பெரிய கிளைகளும் கிளைக்கு தலா 15 தோழர்கள் என்ற அடிப்படையில் கலந்து கொள்ளுவதற்குண்டான ஏற்பாட்டினை செய்திட வேண்டுகிறோம். கோவை மண்டல கிளைகள் ஒரு கிளைக்கு 50 தொழிலாளர்கள் என்ற முறையில் பேரணியில் கலந்து கொள்வதற்குண்டான ஏற்பாட்டினை செய்திட வேண்டுகிறோம்.

# 26.4.2012 மின்சார மான்ய கோரிக்கையில் எழுப்பப்பட்ட மின்ஊழியர் கோரிக்கைகள்

26.4.2012 அன்று மின்துறை சம்மந்தமாக மான்ய கோரிக்கையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) சிதம்பரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தோழர். கே. பாலகிருஷ்ணன் அவர்கள் கலந்து கொண்டு விவாதத்தில் ஈடுபட்டார். விவாதத்தில் மின்பற்றாக்குறை அதைப் போக்குவதற்குண்டான ஆலோசனைகள் தவிர்க்கப்பட வேண்டிய மின் கட்டண உயர்வு போன்ற பொதுப்பிரச்சனைகளை பேசிய அதே நேரத்தில் மின்வாரிய ஊழியர்களுக்கு ஏற்கனேவ உள்ள ஒப்பந்த காலம் 30.11.2011 உடன் முடிவுயடைவதையும் 1.12.2011 முதல் மின்வாரிய ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு வழங்கவேண்டும் என்ற கோரிக்கையை எழுப்பிய போது மின்துறை அமைச்சர் திரு. நத்தம்.விஸ்வநாதன் அவர்கள் உறுப்பினர் கேள்விக்கு பதிலளிக்கும் வகையில் மின் வாரிய ஊழியர்களின் ஊதிய உயர்வு ஒப்பந்த காலம் 30.11.2011 வுடன் முடிவடைந்து விட்டது என்றும் 1.12.2011 முதல் புதிய ஊதிய உயர்வு வழங்கிட வேண்டும் என்றும், ஊதிய உயர்வு வழங்க பேச்சு வார்த்தை நடத்துவதற்கு ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. அந்த குழு பேச்சு வார்த்தை நடத்தி முடிவுக்கு வந்து ஊதிய உயர்வு வழங்கப்படும் என்றும் வாக்குறுதி அளித்துள்ளார்.

2009 இல் மின்வாரிய ஊழியர்கள் ஒரு கணிசமான ஊதிய உயர்வு பெறுவதற்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) பெரம்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ்.கே. மகேந்திரன் அவர்களின் பேச்சு எப்படி அடிப்படையாக அமைந்ததோ அதைப்போல இந்த ஊதிய உயர்விலும், ஊதிய உயர்வு பேச்சு வார்த்தை காலத்தே முடித்து கணிசமான ஊதிய உயர்வு பெற தோழர். கே. பாலகிருஷ்ணன் அவர்களின் சட்டமன்ற பேச்சின் மூலமாக வித்திடப்பட்டுள்ளது. சென்ற முறை தோழர். எஸ்.கே. மகேந்திரன் இந்த முறை தோழர். கே.பாலகிருஷ்ணன் என்பதை மின்வாரிய ஊழியர்கள் மத்தியில் பிரச்சாரமாக கொண்டு செல்வதற்குண்டான நடவடிக்கையை எடுத்திட வேண்டுகிறோம்.

இவை தவிர மின்வாரிய காலி இடங்களை நிரப்புதல், மின்சார சேமிப்பாக, அனைத்து வீட்டு மின் இணைப்புகளுக்கும் குண்டு பல்புகளுக்கு பதிலாக குழல் விளக்குகளை அரசே இலவசமாக அளித்திட வேண்டும் என்று எடுத்துரைக்கப்பட்ட தோழர். கே. பாலகிருஷ்ணன் அவர்களின் பேச்சின் அடிப்படையில் 1 கோடியே 40 லட்சம் இணைப்புகளுக்கு மான்ய விலையில் குழல் விளக்குகள் அளிக்கப்பட்டு 280 மெகாவாட் மின்சாரம் சேமிக்கப்படும் என்ற அறிவிப்பினை அமைச்சர் வெளியிட நேர்ந்தது.

இந்த சட்டமன்ற நிகழ்வுகளில் நமது தலையீடு சம்மந்தமாக வந்துள்ள சாதகமான அம்சங்களை நமது மின்வாரிய ஊழியர்கள் மத்தியில் கொண்டு சென்றிட தேவையான நடவடிக்கையை எடுத்திட வேண்டுகிறோம்.

மின்வாரிய ஊழியர்களுக்கு 1.1.2012 முதல் வழங்க வேண்டிய 7% பஞ்சப்படி உயர்வுக்கான உத்திரவு வெளியிடப்பட்டுள்ளது அதே போன்று ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கு பஞ்சப்படி உயர்வுக்கான உத்தரவு வழங்கப்பட்டு இரு பிரிவினருக்கும் 11.5.2012 அன்று நிலுவைத் தொகை கிடைக்க உள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

4 புனல் மின் நிலையங்களிலும் ரிமோட் பகுதியில் பணியாற்றும் ஊழியர்களுக்கு ஊக்க ஊதியம் (பர்பாமன்ஸ் இன்சன்டிவ்) வழங்குவது சம்மந்தமான வாரிய உத்தரவு வெளியிடப்பட்டுள்ளது.

கணக்கீட்டு ஆய்வாளரில் இருந்து வருவாய் மேற்பார்வையாளராக பதவி உயர்வுக்கான நிர்ணயிக்கப்பட்ட தேதியில் (குருசியல் தேதி) கணக்கீட்டு ஆய்வாளராக இரண்டாண்டு காலம் பணி முடிக்காதவர்களின் பட்டியல் ஒன்று வெளியிடப்பட்டு அதற்கான காரணத்தை கேட்கப்பட்டுள்ளது. பணியேற்பில் நிர்வாக காரணத்தால் காலதாமதம் என்று நிரூபிக்கப்பட்டால் அவருக்கு வருவாய் மேலாளராக பதவி உயர்வு பெற வாய்ப்புள்ளது.

மஸ்தூர்களில் இருந்து கள உதவியாளராக பதவி உயர்வு வழங்குவதற்குண்டான வாரிய உத்தரவை வெளியிடுவதில் இன்னும் காலதாமதம் என்பது நிலவி வருகிறது. உத்திரவு வெளியிட நமது தரப்பில் தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டு வருகிறது. இன்னும் சில தினங்களில் உத்தரவு வெளியிட வாய்ப்புள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

ஊதிய உயர்வு கூட்டம் ஏற்கனவே திட்டமிட்டவாறு 23.4.2012 அன்று நடைபெற்று கோரிக்கைகள் வடிவமைப்பது முழுமை அடைந்துள்ளது நிர்வாகிகள் கூட்டத்தின் முடிவுக்கு பின்னர் அது புஸ்தகமாக அச்சிட்டு ஊழியர்கள் மத்தியில் கொண்டு செல்லவும் வாரியத்திற்கும் கோரிக்கை பட்டியலாக கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

96 தொழில் நுட்ப உதவியாளரில் இருந்து இளநிலை பொறியாளராக தேர்வு செய்யப்பட்டு அதற்கான உத்தரவும் வட்ட ஒதுக்கீடும் வழங்கப்பட்டுள்ளது.

தோழமையுள்ள

**(எஸ்.எஸ். சுப்பிரமணியன்)**
பொதுச் செயலாளர்.

# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் : 158 / CPT அங்கீகாரம் பெற்றது இணைப்பு : CITU & EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005

Telephone No: 044-28548529
Fax No: 044-28516574
Email: coteecitu_hqchennai@yahoo.com
coteecitu@gmail.com


CITU

**சுற்றறிக்கை எண் 13/2012** **நாள் : 18/05/2012**

*பெறுநர்*
மத்திய அமைப்பின் அனைத்து நிர்வாகிகள்

## மத்திய அமைப்பின்
## மாநில நிர்வாகிகள் கூட்டம்
## 2012 மே 27 / சென்னை

அன்பான தோழரே!, வணக்கம்.

மத்திய அமைப்பின் **மாநில நிர்வாகிகள் கூட்டம் எதிர்வரும் 27/5/2012 ஞாயிற்றுக்கிழமை**

**காலை 10.30 மணிக்கு**

**தோழர்.டி.ஜே. நினைவகம்,**

**எண்-177, சிங்கண்ணசெட்டித் தெரு,**

**சிந்தாதிரிப்பேட்டை, சென்னை 600 002**

என்ற முகவரியில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் மாநில சி.ஐ.டி.யூ., வின் சார்பாக மாநில சி.ஐ.டி.யூ.-வின் உதவி பொதுச் செயலாளர் தோழர். ஆர்.கருமலையான் கலந்து கொள்கிறார். ஒரு நாள் கூட்டம் என்பதால் குறித்த நேரத்தில் தோழர்கள் பங்கேற்க வேணுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

### நிகழ்ச்சி நிரல்

1. அஞ்சலி
2. தலைவர் உரை
3. சி.ஐ.டி.யூ. முடிவுகள் (தோழர். ஆர். கருமலையான்)
4. நடைபெற்ற பணிகள்
5. ஊதிய உயர்வு கோரிக்கை இறுதிப்படுத்துதல்
6. ஒப்பந்த தொழிலாளரின் தென் மண்டல கருத்தரங்கு
7. இதர பிரச்சனைகள்

தோழமையுள்ள

**(எஸ்.எஸ். சுப்பிரமணியன்)**
பொதுச் செயலாளர்.

# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் : 158 / CPT அங்கீகாரம் பெற்றது இணைப்பு : CITU & EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005

Telephone No: 044-28548529
Fax No: 044-28516574

Email: coteecitu_hqchennai@yahoo.com
coteecitu@gmail.com

CITU


**சுற்றறிக்கை எண் 14/2012** **நாள் : 31.05.2012**

*பெறுநர்*
மத்திய அமைப்பின் அனைத்து நிர்வாகிகள்
மாநில செயற்குழு உறுப்பினர்கள்

# மாநில செயற்குழுகூட்ட அழைப்பிதழ்

அன்பான தோழரே!, வணக்கம்.

மத்திய அமைப்பின் **மாநில செயற்குழுக் கூட்டம் எதிர்வரும் 10.06.2012 ஞாயிற்றுக்கிழமை**

**நேரம் :** **காலை 10.00 மணிக்கு**
**இடம் :** **ரசாக் டவர்** (புதிய பேரூந்து நிலையம் அருகில்), மயிலாடுதுறை.

என்ற முகவரியில் நடைபெற உள்ளது. ஒரு நாள் கூட்டம் என்பதால் தோழர்கள் உரிய நேரத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தோழமையுள்ள

**(எஸ்.எஸ். சுப்பிரமணியன்)**
பொதுச் செயலாளர்.

## நிகழ்ச்சி நிரல்

1. அஞ்சலி
2. தலைவர் உரை
3. சி.ஐ.டி.யூ. முடிவுகள்
4. நடைபெற்ற இயக்கங்கள் பரிசீலனை
5. ஊதிய உயர்வு கோரிக்கை இறுதிப்படுத்துதல்
6. வரவு செலவு
7. கிளைகளின் 2009, 2010 வரவு செலவு தணிக்கை
8. மஸ்தூர் / அனல் மின் நிலைய ஒப்பந்தம் விளக்க பேரவை
9. இதர பிரச்சனைகள்

**தொடர்பு கொள்ள:**
தோழர் **ஜி. இராமகிருஷ்ணன்,**
(நாகை கிளை செயலாளர்)
கைபேசி: **9488004600**

# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் : 158 / CPT அங்கீகாரம் பெற்றது இணைப்பு : CITU & EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005

Telephone No: 044-28548529
Fax No: 044-28516574

Email: coteecitu_hqchennai@yahoo.com
coteecitu@gmail.com

CITU


**சுற்றறிக்கை எண் 15/2012** **நாள் : 12/06/2012**

பெறுநர்
மத்திய அமைப்பின் நிர்வாகிகள்
கிளை செயலாளர்கள் மற்றும்
செயற்குழு உறுப்பினர்கள்

அன்பான தோழரே,

வணக்கம்,

மின் ஊழியர் மத்திய அமைப்பின் மாநில செயற்குழு கூட்டம் 10.6.2012 அன்று மயிலாடுதுறையில் மாநில தலைவர் தோழர் கே. விஜயன் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் மாநில சி.ஐ.டி.யூ.-வின் துணைப் பொதுச்செயலாளர் தோழர் ஆர். கருமலையான், சங்கத்தின் பொதுச்செயலாளர் தோழர் எஸ்.எஸ். சுப்ரமணியன், சி.ஐ.டி.யூ. துணைத் தலைவர் தோழர் கே. செல்லப்பன், பொருளாளர் தோழர் டி. கோவிந்தராஜு, துணை பொதுச்செயலாளர்கள் தோழர் பி. கண்ணன் மற்றும் தோழர் இ.அந்தோணி ஆகியோர் உள்ளிட்ட 68 தோழர்கள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் திருச்சி மாநகர், மதுரை மாநகர், உடுமலை, கோவை மாநகர், கோபி, மேட்டூர், தர்மபுரி, மற்றும் 4 புனல் உற்பத்தி வட்டங்களில் இருந்தும் மேட்டூர், எண்ணூர் அனல் மின் நிலைய கிளைகளிலிருந்தும் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவில்லை.

சி.ஐ.டி.யூ.-வின் துணைப் பொதுச்செயலாளர் தோழர் ஆர். கருமலையான் அவர்கள் தனது உரையில் ஜுன் 2 முதல் 5 வரை நடைபெற்ற சி.ஐ.டி.யூ.-வின் அகில இந்திய பொதுக்குழுவின் முடிவுகளை விளக்கினார். மேலும் சமீபத்தில் அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜீயை சந்தித்தது, டாலர் மதிப்பு அதிகரிப்பு, அதன் விளைவுகள், வருங்கால வைப்பு நிதி பணத்தை பங்கு சந்தையில் தள்ளிவிடும் முயற்சி, எரிவாயு தட்டுபாடு, அனைத்து துறையிலும் ஒழுங்குமுறை ஆணையங்களை அமைத்தல் ஆகியவைகளை விளக்கியதோடு பிப்ரவரி 28 வேலை நிறுத்தம், அதில் தொழிலாளி வர்க்கத்தின் மகத்தான பங்கேற்பு குறித்தும், அகில இந்திய சி.ஐ.டி.யூ.-வின் பொதுச் செயலாளராகவும், தலைவராகவும் நீண்ட நாள் செயலாற்றிய தோழர்.எம்.கே. பாந்தே நினைவு நிகழ்ச்சியை கடைபிடிப்பது சம்மந்தமாகவும், அதே போன்று சி.ஐ.டி.யூ.-வின் முன்னணி தலைவராக விளங்கிய தோழர். பி. சுந்தரய்யா அவர்களின் நூற்றாண்டு விழாவை சிறப்பாக ஓராண்டு காலம் கொண்டாடுவது சம்மந்தமாகவும், மேலும் இந்த ஆண்டு மத்திய அரசால் நடத்தப்படும் உறுப்பினர் சரி பார்ப்பை கவனமாக செய்திட வேண்டியதின் அவசியத்தையும் மின் ஊழியர் மத்திய அமைப்பின் ஸ்தாபன பலத்தை அதிகப்படுத்த வேண்டியதின் அவசியத்தையும் விளக்கினார்.

மத்திய அமைப்பின் மாநில தலைவர் தோழர். கே. விஜயன் தனது தலைமை உரையில்

மின் உற்பத்திக்கு திட்டமிடுவதில் குறை உள்ளது. அதனால் ஏற்பட்டுள்ள மின் பற்றாக்குறையை போக்க நடவடிக்கை ஏதும் இல்லை என்றும் மஸ்தூர்களை கள உதவியாளர்களாக ஆக்கியது. ஊதிய உயர்வு, மாநில மாநாடு நடத்துவது போன்றவைகளை குறியிட்டு பேசினார்.

அதன் பின்னர் மத்திய அமைப்பின் பொதுச் செயலாளர் தோழர் எஸ்.எஸ்.சுப்ரமணியன் சென்ற செயற்குழு கூட்டத்திற்கு பின்னர் நடைபெற்ற பணிகள் சம்மந்தமாகவும், எதிர்காலத்தில் நாம் எதிர்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் சம்மந்தமாகவும், ஓர் எழுத்துபூர்வமான அறிக்கையை முன்வைத்தார். அதாவது சென்ற செயற்குழுவிற்கு பின்னர் 28.2.2012 அன்று நடைபெற்ற வேலை நிறுத்தம், அதற்கான தயாரிப்பு, சுயேச்சையான கூட்டு நடவடிக்கைகள் சம்மந்தமாகவும் விளக்கியதோடு முறையான விரிவான தயாரிப்பு செய்த காரணத்தால் 28.2.2012 வேலைநிறுத்தம் ஒரு மகத்தான வேலை நிறுத்தமாக நடைபெற்றதை விளக்கினார். மேலும் மத்திய அரசு சமீபத்தில் அபரிமிதமாக உயர்த்திய பெட்ரோல் விலை உயர்வுக்கு எதிராக மத்திய அமைப்பின் அறைகூவல் அதையொட்டி இயக்கங்களில் பங்கேற்பு சம்மந்தமாகவும் விளக்கினார்.

1.12.2011 முதல் மின் வாரிய ஊழியர்களுக்கு வழங்க வேண்டிய ஊதிய உயர்வு கோரிக்கைப்பட்டியல் தயாரிப்பு அது நிர்வாகிகள் கூட்டத்தில் ஒப்புதல் பெற்றுள்ளதையும் அந்த கோரிக்கையில் சேர்ப்பு, நீக்கம், பற்றிய புதிய ஆலோசனைகளை எதிர்ப்பார்ப்பதாகவும், செயற்குழுவில் வருகின்ற ஆலோசனைகளையும் கணக்கில் கொண்டு கோரிக்கைப்பட்டியலை இறுதிப்படுத்தி, கோரிக்கை பட்டியலை வெளியிட்டு அரசுக்கும், வாரியத்திற்கும் அளிக்க உள்ளது சம்மந்தமாக விளக்கியதோடு, மின் வாரிய ஊழியர்களின் ஊதிய உயர்வு சம்மந்தமாக சமீபத்திய தமிழக சட்டமன்ற கூட்டத் தொடரில் சி.பி.ஐ.(எம்) ன் சிதம்பரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தோழர். கே. பாலகிருஷ்ணன் அவர்கள் வினா எழுப்பியதையும் அதற்கு மின் துறை அமைச்சர் பதில் அளித்ததையும் விளக்கினார்.

ஆந்திர மாநிலம் நெல்லூரில் நடைபெற்ற ஒப்பந்த தொழிலாளர்களின் தென் மாநில கருத்தரங்கு, மஸ்தூர்களிலிருந்து கள உதவியாளராக பதவி உயர்வு அதற்கு மத்திய அமைப்பு எடுத்த முன் முயற்சி, அதை ஊழியர்கள் மத்தியில் கொண்டும் செல்லும் விதமாக நடத்த வேண்டிய சிறப்பு கூட்டங்களையும், அதேபோல் அனல் மின் நிலைய ஊழியர்களின் பதவி உயர்வு சம்மந்தமாகவும் விளக்கினார். அடுத்து விடுபட்டுபோன ஒப்பந்த தொழிலாளர்களின் பணிநிரந்தரம் அதற்கான வழக்கு, மத்திய அமைப்பு எடுத்த முயற்சியின் விளைவாக ஒப்பந்த தொழிலாளர்களுக்கு சி.பி.எஸ். திட்டத்தின் கீழ் சந்தா பிடித்தம் செய்வது, பகுதி நேர ஊழியர்கள் சம்மந்தமாக மத்திய அமைப்பு எடுத்து வந்துள்ள தொடர் நடவடிக்கைகள், கணக்கு, நிர்வாகம் மற்றும் தணிக்கைப் பிரிவு ஊழியர்களுக்கு பதவி உயர்வுக்காக மத்திய அமைப்பு எடுத்த நடவடிக்கைகள், விருதுநகர் வட்டத்தில் நமது ஊழியர்கள் மீது மேற்பார்வைபொறியாளர், விருதுநகர் அவர்கள் எடுத்த பழிவாங்கும் நடவடிக்கை, அதற்கெதிராக மத்திய அமைப்பு எடுத்த இயக்கம், அதையொட்டி தற்காலிக பணி நீக்கத்தை ரத்து செய்ய வாரியம் எடுத்துள்ள நடவடிக்கை போன்றவைகளை விளக்கியதோடு, உழைக்கும் பெண்கள், மின்கதிர், 2011 ஆம் ஆண்டு உறுப்பினர் சேர்ப்பை இறுதிப்படுத்துதல் 2012 ஆம் ஆண்டு உறுப்பினர் சேர்ப்பை வேகப்படுத்துதல் ஆகியவைகளை விளக்கினார்.

மத்திய அமைப்பின் மாநில பொருளாளர் தோழர். டி. கோவிந்தராஜு 2011 ஆம் ஆண்டு ஜுலை முதல் டிசம்பர் முடிய உள்ள வரவு செலவு கணக்குகளை முன்மொழிந்ததோடு 2009 - 2010 ஆம் ஆண்டு மத்திய அமைப்பின், மாநில மைய கணக்கு தணிக்கை செய்யப்பட்டுள்ளதை எடுத்துச் சொல்லி அதே போல் கிளைகளும் 2009 - 2010 ஆம் ஆண்டு கிளைகளின் கணக்குகளை தணிக்கை செய்து முடித்திட வேண்டியதின் அவசியத்தை விளக்கியதோடு 2011 ஆம் ஆண்டு வசூல் செய்யப்பட்ட பகுதி நேர ஊழியர்களின் நன்கொடை, போனஸ் நன்கொடை அதில் மாநில

மையத்திற்கு சேர வேண்டிய ஈவுக்தொகையை வழங்குதல் 2011 ஆம் ஆண்டு உறுப்பினர் சந்தா எண்ணிக்கை. 2012 ஆம் ஆண்டுக்கு இதுவரை மாநில மையத்திற்கு வந்துள்ள உறுப்பினர் சந்தா விபரங்களை முன் வைத்து பேசினார்.

**தோழர்களின் விவாதத்திற்கு பின்னர் கீழ்கண்டமுடிவுகள் எடுக்கப்பட்டன.**

1). மின்வாரிய ஊழியர்களுக்கு 1.12.2011 முதல் வழங்கப்பட வேண்டிய ஊதிய உயர்வு சம்மந்தமாக மின் ஊழியர் மத்திய அமைப்பில் தயாரிக்கப்பட்ட கோரிக்கை பட்டியலை புத்தக வடிவில் கொண்டு வந்து ஊழியர்கள் மத்தியில் கொண்டு செல்வது.

நாம் வைத்த கோரிக்கைகளை ஊழியர் மத்தியிலேயும், வாரியத்தின் கவனத்திற்கும் கொண்டுசெல்லும் விதமாக 23.6.2012 அன்று மின் வாரிய தலைமை அலுவலகத்தில் திரளான ஊழியர்கள் கலந்து கொள்ளும் கூட்டத்தை நடத்தி கோரிக்கைப்பட்டியலை வெளியிடுவது.

அந்த கூட்டத்தில் மாநில சி.ஐ.டி.யூ. -வின் பொதுச் செயலாளரும், பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினருமான தோழர் அ. சவுந்தரராஜன் அவர்கள் கலந்து கொண்டு கோரிக்கைப்பட்டியலை வெளியிடுவது. அக்கூட்டத்தில் சென்னை இரு மண்டலங்கள், வேலூர், விழுப்புரம், ஆகிய மண்டலங்களில் இருந்து கணிசமான தோழர்களை கலந்து கொள்ள வைப்பது என்றும் மற்ற கிளைகளில் இருந்து குறைந்தபட்சம் 10 ஊழியர்கள் மற்றும் நிர்வாகிகளை கலந்து கொள்ள வைப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது. கோரிக்கைப்பட்டியல் உள்ளடக்கிய புத்தகத்தை மின் வாரிய ஊழியர்கள் மத்தியில் பரவலாக கொண்டு செல்வது. அதன் விலை ரூ.10/- என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

2). மஸ்தூர்களை கள உதவியாளர்களாக பதவி உயர்வு பெற்றுத்தந்த விவரத்தை ஊழியர்கள் மத்தியில் கொண்டு செல்லும விதமாக பேரவைகளை நடத்தாக கிளைகள் உடனடியாக பேரவைகளை நடத்திடுவது. அது சம்மந்தமாக மாநில மையத்தால் தயாரிக்கப்பட்டுள்ள நோட்டீஸ் நகலை அச்சடித்து உடனடியாக ஊழியர்கள் மத்தியில் கொண்டு செல்வது.

3). அனல் மின் நிலைய ஊழியர்களின் பதவி உயர்வு சம்மந்தமாக ஏற்பட்டுள்ள ஒப்பந்தத்தை விளக்கி அப்பகுதி ஊழியர்களின் பேரவையை நடத்தாத கிளைகள் உடனடியாக பேரவையை நடத்துவது.

4). பகுதிநேர ஊழியர்களின் பணி நிரந்தரம் மற்றும் சத்துணவு ஊழியர்களுக்கான சம்பளம் அளித்தல் சம்மந்தமாக வட்ட மேற்பார்வையாளர் அலுவலகத்தில் எழுப்பப்படும் வினாக்களுக்கு தலைமைப் பொறியாளர், பணியமைப்பு மூலம் விளக்கம் அளிக்கச் செய்வது. அப்பகுதி ஊழியர்களுக்கு 1.9.2006 முதல் சத்துணவு ஊழியர்களுக்கு புதிய சம்பள பொருத்தம் செய்துள்ளதை மின் வாரிய பகுதி நேர ஊழியர்களுக்கும் வழங்கிட வலியுறுத்துவது. புதிய பிரிவுகளுக்கு பகுதி நேர பணியாளர்களின் பதவிகளை அனுமதிக்கச் செய்வது போன்றவற்றில் மாநில மையம் தொடர் நடவடிக்கை எடுப்பது.

5). விடுபட்டு போன ஒப்பந்த தொழிலாளர்கள் பணி நிரந்தரம் சம்மந்தமாக நீதி மன்ற அவமதிப்பு வழக்கை தொடர்ந்து நடத்திடுவது இதற்கிடையில் வாரிய மட்டத்திலும் பேச்சு வார்த்தை வேகப்படுத்திடுவது.

6). மின் ஊழியர் மத்திய அமைப்போடு இணைந்துள்ள தமிழ்நாடு மின் துறை பொறியாளர் அமைப்பு துவங்கி பத்து ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில் அதன் பத்தாம் ஆண்டு நிறைவு விழாவை வருகின்ற 24.6.2012 அன்று சென்னையில் நடத்த உள்ளனர். அந்நிகழ்ச்சியில் சி.ஐ.டி.யு. அகில இந்திய துணைத் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தோழர் டி.கே. ரெங்கராஜன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்த உள்ளார்கள்.

அந்நிகழ்ச்சியை வெற்றிகரமாக்கிடும் வகையில் அனைத்து கிளைகளிலிருந்தும் 23.6.2012 நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் தோழர்கள் அனைவரும் 24.6.2012 நிகழ்ச்சியில் கலந்து கொண்டு நிகழ்ச்சியை வெற்றிகரமாக்கிடுவது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சிக்கு கிளைகளிலிருக்கும் பொறியாளர்களை அனுப்பி வைக்கும் முயற்சிகளை கிளை செயலாளர்கள் மேற்கொள்வது.

7). செப்டம்பரில் டெல்லியில் நடைபெற உள்ள ஒப்பந்த ஊழியர் கருத்தரங்கில் மத்திய அமைப்புக்கு என நிர்ணயிக்கப்பட்ட பிரதிநிதிகளை முழுமையாக கலந்து கொள்ளச் செய்வது.

8). புனல் மின் திட்ட ஊழியர்களின் பிரச்சனைகளான கல்வித் தகுதியை தளர்த்தி பதவி உயர்வு வாய்ப்புகளை உருவாக்குவது, வண்டி பாளையம் மின் நிலையத்திற்கு தேவையான பதவிகளை அனுமதித்து பதவி உயர்வு மூலம் நிரப்புவது. மேட்டூர் அணை மின் நிலையத்தின் பவள விழா நிகழ்ச்சியையொட்டி அங்கு பணியாற்றும் ஊழியர்களுக்கு மின் ஊழியர் மத்திய அமைப்பு வைத்த கோரிக்கைகளை தொடர்ச்சியாக வலியுறுத்தி பெற்று தருவது.

9). மாவட்ட வாரியாக உழைக்கும் பெண்களை திரட்டி கூட்டம் நடத்தி மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்களை அமைப்பது, மேலும் ஏற்கனவே திட்டமிட்டவாறு மின் வாரியத்தில் பணியாற்றும் பகுதி நேர ஊழியர்களை திரட்டி வெற்றி விழா கூட்டத்தை சென்னையில் நடத்துவது அதற்கான தேதியை பின்னர் முடிவு செய்வது என்றும் முடிவு செய்யப்பட்டது. பகுதி நேர ஊழியர்களுக்கு நிலுவைத் தொகை இரண்டாம் தவணை அளித்தபோது வசூலித்த நன்கொடையில் மாநில மையத்திற்கு சேர வேண்டிய ஈவுத் தொகையை உடனடியாக அளித்திடுவது.

10). 2012 ஆம் ஆண்டு உறுப்பினர் சேர்ப்பில் 2011 ஆம் ஆண்டு உறுப்பினர்களை புதுப்பிப்பதை ஆகஸ்ட்டு இறுதிக்குள் முடிக்க வேண்டும். அதன் பிறகு புதிய உறுப்பினர்களை சேர்ப்பதற்குண்டான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

11). 2009-2010 ஆம் ஆண்டு தணிக்கையும் பேரவையும் முடிக்காத கிளைகள் பேரவையையும், தணிக்கையையும் உடன் முடிப்பதற்குண்டான நடவடிக்கையை எடுக்க வேண்டும்.

12). 2011-2012 ஆம் ஆண்டு டைரி பாக்கி வைத்துள்ள கிளைகள் டைரி பாக்கிகளை உடனடியாக செலுத்தி அடுத்த ஆண்டு டைரி, உரிய காலத்தில் வருவதற்கு உதவிடுவது.

- என்பன போன்ற முடிவுகள் ஒருமனதாக மேற்கொள்ளப்பட்டது. செயற்குழு முடிவுகளை சிறப்பாக அமலாக்கிட உரிய நடவடிக்கைகளை கிளைகள் மேற்கொள்ள வேண்டுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

நிறைவாக குறுகிய கால இடைவெளியில் மாநில மையம் கேட்டுக் கொண்டதற்கிணங்க மயிலாடுதுறையில் சிறப்பான முறையில் செயற்குழுவை நடத்தி கொடுத்த நாகை - திருவாரூர் கிளை நிர்வாகிகளுக்கு பாராட்டும், வாழ்த்தும் தெரிவிக்க மிகுந்த உற்சாகத்துடன் செயற்குழு நிகழ்ச்சிகள் நிறைவு பெற்றது.

வாழ்த்துக்களுடன்
தோழமையுள்ள

**(எஸ்.எஸ். சுப்பிரமணியன்)**
பொதுச் செயலாளர்.

# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் : 158 / CPT அங்கீகாரம் பெற்றது இணைப்பு : CITU & EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005

Telephone No: 044-28548529
Fax No: 044-28516574

Email: coteecitu_hqchennai@yahoo.com
coteecitu@gmail.com

CITU

**சுற்றறிக்கை எண் 16/2012** **நாள் : 30/06/2012**

பெறுநர்
மத்திய அமைப்பின் நிர்வாகிகள்,
கிளை செயலாளர்கள் மற்றும்
செயற்குழு உறுப்பினர்கள்

அன்பான தோழரே, வணக்கம்!

## ஊதிய உயர்வு கோரிக்கை பட்டியல் வெளியீடு

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்கு 1.12.2011 முதல் புதிய ஊதிய உயர்வு அளித்திட வேண்டும். மத்திய அமைப்பின் மாநில நிர்வாகி, செயற்குழு கூட்டங்களில் விவாதித்து தயாரிக்கப்பட்ட கோரிக்கைப் பட்டியலில் தமிழக மின்வாரிய ஊழியர்ககளையம் இணைக்கின்ற வகையில் 23.6.2012 அன்று நூற்றுக்கணக்கான ஊழியர்கள் கலந்து கொண்ட எழுச்சிமிகு கோரிக்கைப்பட்டியல் வெளியீடு நிகழ்ச்சி வெற்றிகரமாக சென்னை தலைமையகம் முன்பாக நடைபெற்றுள்ளது. அக்கோரிக்கைப்பட்டியல் வெளியீட்டு விழாவில் ஊழியர்களை திரளாக கலந்து கொள்ளச் செய்த அனைத்து மாநில நிர்வாகிகள், கிளைச் செயலாளர்கள், செயற்குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் மின் ஊழியர் மத்திய அமைப்பு தனது மனமார்ந்த நன்றியையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறது.

ஊதிய உயர்வு சம்மந்தமாக நாம் வைத்த கோரிக்கைகளை ஊழியர்கள் மத்தியில் கொண்டு சென்று அதை அவர்களின் கோரிக்கையாக மாற்றுவதற்கு கோரிக்கை பட்டியல் புத்தகமாக அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. அக்கோரிக்கை புத்தகங்கள் கிளைகளுக்கு அனுப்பட்டுள்ளது மேலும் புத்தகங்கள் தேவைபடுகின்ற கிளைகள் மாநில மையத்தோடு அணுகி பெற்று அதை ஊழியர்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கான நடவடிக்கையை எடுத்திட வேண்டும்.

23.6.2012 இயக்கத்திற்கு பின்னர் வாரியத்தால் அமைக்கப்பட்ட ஊதிய உயர்வு குழு கூடுவதற்குண்டான ஏற்பாடுகள் நடைபெற்று கொண்டுள்ளன. 23.6.2012 அன்று வெளியிடப்பட்ட கோரிக்கைப்பட்டியலை வருகின்ற 2.7.2012 அன்று மின்துறை அமைச்சரையும், வாரிய அதிகாரிகளையும் சந்தித்து வழங்குவதற்கான ஏற்பாடுகளும் நடைபெற்று வருகின்றன.

## மின்வாரிய பிரிப்பும் வாரியம் அளித்துள்ள முத்தரப்பு ஒப்பந்த நகலும்

தமிழக மின்வாரிய பிரிப்பையொட்டி ஊழியர்களின் நலன்களை பாதுகாப்பது சம்மந்தமாக ஒரு ஒப்பந்தத்தை உருவாக்குகின்ற வகையில் ஏற்கனவே ஒப்பந்த சரத்துக்கள் அடங்கிய நகல்கள் தொழிற்சங்கங்களுக்கு அளிக்கப்பட்டு அது சம்மந்தமாக தொழிற்சங்கங்களின் கருத்துகள் வாரியத்துக்கு தெரிவித்திருந்தோம்.

இதற்கிடையில் 26.6.2012 அன்று மீண்டும் மின்சார வாரியம் தொழிற்சங்கங்களோடு செய்து கொள்ள உள்ள முத்தரப்பு ஒப்பந்தத்திற்கான நகல் ஒன்றை தயாரித்து அதை அரசின் ஒப்புதலுக்காக அனுப்பி இருந்ததாகவும் அதன்மீது சென்ற தி.மு.க. அரசு தெரிவித்த கருத்துக்களையும் இணைத்து ஒப்பந்த நகலாக அளித்து அதன் மீது கருத்து கேட்கப்பட்டுள்ளது.

மின் ஊழியர் மத்திய அமைப்பை பொருத்தவரையில் ஊழியர்களின் பணி நிலைமைகளான பதவி உயர்வு, ஊர் மாற்றம், பணிநியமனம், உள்முக தேர்வு, மின்வாரிய ஓய்வு பெற்ற ஊழியர்களின் பென்சன், பணிக்கொடை, இதர ஓய்வு கால சலுகைகள் தொடர்வது சம்மந்தமாக அரசே பொறுப்பேற்க வேண்டும் என்ற நீதிமன்ற தீர்ப்பினை பெற்றுள்ள நிலையில் அதற்கு மாறாக அரசு மேற்கூறிய பிரச்சனைகளில் தனது பொறுப்பை தட்டிக்கழிக்கும் விதமாக வாரியத்திற்கு அளித்துள்ள பதிலையும் இணைத்து ஒப்பந்த நகலாக தொழிற்சங்கங்களுக்கு அளித்துள்ளதை ஏற்க முடியாது. மின் வாரியப்பரிப்பை அமல்படுத்துகின்ற போது தொழிலாளர்கள் ஏற்கனவே பெற்றுள்ள பயன்கள் தொடர அரசே பொறுப்பேற்க வேண்டும். அப்படியான சரத்துகள் வாரிய ஒப்பந்த நகலில் இணைக்கப்பட வேண்டும் என்றும் மேலும் விரிவான பதில் அளிப்பதற்கு ஒரு மாத கால அவகாசம் வேண்டும் என்றும் வாரிய தலைமைக்கு கடிதம் கொடுத்துள்ளோம்.

## விடுபட்டு போன ஒப்பந்த தொழிலாளர்களின் பணி நிரந்தரமும் உயர்நீதிமன்ற வழக்கும்

10.8.2007 ஒப்பந்தத்தில் விடுபட்டு போன ஒப்பந்த தொழிலாளர்கள் பணி நிரந்தரம் சம்மந்தமாக மின் ஊழியர் மத்திய அமைப்பு தொடர்ச்சியாக முயற்சித்து வருகிறது. 2008 இல் நீதிமன்றத்திற்கு சென்றது 2009 இல் அடையாளங்கண்டு நிரந்தரத்திற்காக பரிசீலிக்க வேண்டும் என்ற தீர்ப்பினை பெற்றது. தீர்ப்பை வாரியம் அமலாக்காததனால் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடுக்கப்பட்டு வழக்கு விசாரணையில் உள்ளது. 5.6.2012 அன்று நீதிமன்ற அவமதிப்பு வழக்கு விசாரணைக்கு வந்த போது வழக்கை விசாரிக்கும் நீதிபதி அமல்படுத்தாதற்கு காரணத்தை கேட்டதோடு 8 வாரகாலம் அவகாசம் அளித்து விசாரணையை தள்ளி வைத்துள்ளார். 5.6.2012 அன்று நடைபெற்ற நீதிமன்ற நடவடிக்கை வாரியம் இப்பிரச்சனையில் வேகம் காட்ட வேண்டும் என்ற நிலையை உருவாக்கி உள்ளது.

இதன் அடிப்படையில் வாரியம் அனைத்து தலைமை பொறியாளர்களுக்கும் இந்த வழக்கின் சாராம்சத்தை விளக்கி நீதிமன்றம் விதித்த கெடுவுக்குள் இந்த வழக்கை முடிவுக்கு கொண்டுவர வேண்டும் என்ற உணர்வோடு நாம் கொடுத்தபட்டியலை திட்டங்களுக்கு அனுப்பி அதன் விபரங்களை 9.7.2012 க்கு முன்பாக அனுப்பிட வேண்டும் என்ற கடுமையான கடிதம் அனைத்து மேற்பார்வை மின் பொறியாளர்கட்கும் கடித நகல் அனுப்பப்பட்டுள்ளது. அனுப்பிய கடிதத்தின் நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

வட்ட நிர்வாகிகள் உடனடியாக சம்மந்தப்பட்ட மேற்பார்வை பொறியாளரோடு தொடர்பு கொண்டு 4631 ஒப்பந்த ஊழியர் பட்டியலில் தங்கள் திட்டத்தில் சம்மந்தப்பட்ட தொழிலாளர்களின் (பணியாற்றுபவர்கள் மற்றும் இப்போது பணியில் இல்லாதவர்கள்) அவர்களுடைய முழு விபரங்களையும் அனுப்புவதற்குண்டான ஏற்பாட்டையும், வற்புறுத்தலையும் செய்திட வேண்டும் குறிப்பாக பட்டியலில் உள்ளவர்கள் ஒரு காலத்தில் பணியாற்றி வாரிய தலையீட்டின் காரணமாக இப்போது பணியில் இல்லாமல் இருப்பார்களேயானால் அவருடைய பெயரையும் திட்டத்தில் இருந்து வரும் பட்டியலில் இணைத்து அவர்கள் பணியாற்றிய காலத்தையும் குறிப்பிட்டு அனுப்புவதற்குண்டான ஏற்பாட்டை செய்திட வேண்டும். திட்ட நிர்வாகிகள், வேகமாகவும், கவனமாகவும் செயல்படுவதின் மூலமே மின் வாரியத்தில் பட்டியலில் இடம் பெற்ற ஒப்பந்த

தொழிலாளர்களுக்கு வேலைக்கான உத்திரவாதத்தை ஏற்படுத்திட இயலும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

## மஸ்தூர்கள் மஸ்தூர்களாகவே பணி தொடர அனுமதித்தல்

மஸ்தூர்களை கள உதவியாளர்களாக நியமிப்பது சம்மந்தமாக வாரியம் உத்திரவு பிறப்பித்து அதன் மூலமாக 6953 ஊழியர்களுக்கு கள உதவியாளர்களாக நியமிக்கும் பணி நடைபெற்று வருகிறது. அதில் 58 வயதை கடந்த சில மஸ்தூர்கள் மஸ்தூர்களாகவே பணி தொடர விரும்புகின்றனர். அவ்வாறு விரும்புகின்றவர்கள் மஸ்தூர்களாகவே பணி தொடர வகை செய்யும் வாரிய உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதன் நகலும் இத்தோடு இணைக்கப்பட்டுள்ளது.

## உதவிப் பொறியாளர்கள் பணி நியமனம்

வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் பி.இ. பட்டப்படிப்பு படித்தவர்களை நேரடித் தேர்வு மூலம் உதவி பொறியாளராக பணி நியமன உத்தரவு வழங்குவதற்கான பணிகள் நடைபெற்று முற்று பெறும் நிலையில் உள்ளது. 600 உதவி பொறியாளர்கள் பணி நியமனத்திற்கான உத்தரவு வெகு சீக்கிரத்தில் வழங்கப்பட உள்ளது.

## அகில இந்திய சி.ஐ.டி.யூ. வின் பிரச்சார இயக்கம்

விலைவாசியை குறைத்திடுக தொழிற்சங்க உரிமையை அளித்திடுக, குறைந்தபட்ச கூலி ரூ.10000/- என நிர்ணயித்திடுக. தினக்கூலி, ஒப்பந்த தொழிலாளருக்கு சமூக பாதுகாப்பு அளிக்கும் விதத்தில் அவர்களுக்கு உதவிடும் வகையில் நிதியம் அமைத்திடுக என்பன போன்ற கோரிக்கைகளை வைத்து ஜூலை 2 முதல் 8 வரை பாரத தேசம் முழுவதும் பிரச்சாரம் செய்து தொழிலாளர்கள் மத்தியில் விழிப்புணர்வை உருவாக்குக என்ற அகில இந்திய சி.ஐ.டி.யூ பொதுக்குழு முடிவை அமலாக்கும் வகையில் மாவட்ட வாரியாக சி.ஐ.டி.யூ. திட்டமிடுகின்ற அந்த பிரச்சார இயக்கத்தில் மத்திய அமைப்பைச் சார்ந்தவர்களும் கலந்து கொள்ளும் ஏற்பாட்டினை செய்திட வேண்டும்.

**குறிப்பு**

10.6.12 தேதியுடன் ஸ்டார் ஹெல்த் மருத்துவ காப்பீட்டு திட்டம் நிறைவு பெற்றதை தொடர்ந்து 1.7.2012 முதல் யூனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனம் மின் வாரிய ஊழியர்களின் மருத்துவ காப்பீட்டு திட்டத்தை அமல்படுத்த உள்ளது. இடைப்பட்ட காலத்திற்கான (11.6.2012 முதல் 30.6.2012 முடிய) மருத்துவ உதவிகளை தமிழ்நாடு மின்சார வாரியமே நேரடியாக வழங்க வேண்டுமென்று பிறப்பிக்கப்பட்டுள்ள வாரிய உத்தரவின் நகல் இணைக்கப்பட்டுள்ளது.

வாழ்த்துக்களுடன்
தோழமையுள்ள

**(எஸ்.எஸ். சுப்பிரமணியன்)**
பொதுச் செயலாளர்.

# தமிழ்நாடு மின் அரங்க மாநில பிராக்ஷன்

27, மசூதி தெரு, சேப்பாக்கம்,
சென்னை - 5

**30/06/2012**

அன்புள்ள தோழர்களே,

வணக்கம்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) யின் மாநில மாநாட்டுக்கு பின் திருத்தி அமைக்கப்பட்டுள்ள புதிய மாநில பிராக்ஷன் கூட்டத்தில் கலந்து கொண்டுள்ள அனைவருக்கும் வணக்கத்தையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

28.4.2012 இல் மதுரையில் நடைபெற்ற மாநில பிராக்ஷனுக்கு பின்னர் நடைபெற்ற பணிகள் சம்மந்தமாக ஒரு சிறு குறிப்பு பரிசீலனைக்காக முன் வைக்கப்படுகிறது.

சென்ற பிராக்ஷனில் ஏற்கனவே மின் அரங்கம் சார்பாக உள்ள மாவட்ட செயற்குழு, மாவட்ட குழு இடைக்கமிட்டி செயலாளர்கள் பிராக்ஷன் கன்வீனர்கள் ஆகியோர்களுக்கு இரண்டு நாள் வகுப்பு நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டது. திட்டமிட்டவாறு வகுப்பு நடத்த முடியவில்லை. இந்தக் கூட்டத்தில் வகுப்பிற்கான தேதி, பொருள், இடம் ஆகியவைகளை ஸ்தூலமாக முடிவு செய்து, அம்முடிவை கறாறாக அமல்படுத்திட வேண்டியுள்ளது.

மாவட்ட வாரியாக ஆதரவாளர்கள் சேர்ப்பது சம்மந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் அதையொட்டியே விரிவாக்கம் சம்மந்தமாக பரிசீலிப்பதற்கு மாநில முழுவதும், மாவட்ட வாரியான மின் அரங்க கட்சி நிலைமைகளை சேகரித்து அதன் மீது விவாதம் நடத்தி விரிவாக்கத்திற்கு செல்வது என்றும் திட்டமிடப்பட்டது.

## சேகரித்த விபரங்கள்

1. மாவட்ட வாரியாக பிராக்ஷன் இடைகமிட்டிகள் உள்ள விபரங்கள்

| | | | |
|---|---|---|---|
| அ) | இடைக்கமிட்டிகள் | - | 11 |
| ஆ) | பிராக்ஷ்ன் | - | 12 |
| இ) | கட்சி உறுப்பினர்கள் எண்ணிக்கை | - | 1165 |
| ஈ) | பரிட்ச் சார்த்த உறுப்பினர்கள் | - | 227 |
| உ) | ஆதரவாளர்கள் (துணைக்குழு) | - | 394 |
| ஊ) | மாநிலம் முழுவதும் தீக்கதிர் விற்பனை | - | 649 |

கிடைத்த விபரங்களின் அடிப்படையில் பார்க்கும் போது 11 இடைக்கமிட்டிகளும், 12 பிராக்ஷன்களும் உள்ளன. காஞ்சிபுரம், கரூர், பெரம்பலூர், புதுக்கோட்டை, திருவாரூர், நாகப்பட்டினம், நீலகிரி, திருப்பூர் போன்ற மாவட்டங்களில் இடைக்கமிட்டியோ, பிராக்ஷனோ இல்லாத நிலையை ஆழ்ந்து பரிசீலித்து, அவைகளை அமைப்பதற்குண்டான நடவடிக்கையில் ஈடுபட வேண்டியுள்ளது. அதே போல் மாநிலம் முழுவதும் தீக்கதிர் என்பது 649 அளவே கொண்டு செல்லப்பட்டுள்ளது. தொழிற்சங்க ஸ்தாபன பலத்திற்கும், தீக்கதிர் எண்ணிக்கைக்கும் சம்மந்தம் இல்லாத நிலையே உள்ளது. இவைகளை பரிசீலித்து விரிவாக்கம் செய்வதற்குண்டான பணிகளை

திட்டமிட வேண்டியுள்ளது.

## நடைபெற்ற பணிகள்

### பெட்ரோல் விலை உயர்வுக்கெதிரான கண்டன முழுக்க ஆர்ப்பாட்டம்,

மத்திய அரசானது என்றும் இல்லாத அளவில் பெட்ரோல் விலையை உயர்த்தியது. மத்திய அரசு அறிவித்த அபரிமிதமான பெட்ரோல் விலை உயர்வுக்கெதிராக இந்திய நாடு முழுவதும் தன் எழுச்சியான போரட்டங்கள் நடைபெற்றன. தமிழகத்தில் பெட்ரோல் விலை உயர்வுக்கெதிராக 30.5.2012 அன்று மறியல், பந்த் போராட்டத்தில் ஈடுபடவேண்டும் என்று அறை கூவல் விடப்பட்டது. மின் அரங்கத்திலும் பெட்ரோல் விலை உயர்வுக்கெதிராக தன் எழுச்சியான போராட்டங்களில் ஈடுபட வேண்டும் என்றும் 30.5.2012 அன்று நடைபெறும் மறியல் போராட்டத்தில் மின் வாரிய ஊழியர்களும் ஈடுபட வேண்டும் என்று வேண்டுகோள் விடப்பட்டது. அதன் அடிப்படையில் இயக்கங்கள் நடைபெற்ற போதிலும் அது நமது ஸ்தாபன பலத்தை பிரதிபலிக்க கூடிய வகையில் அமையவில்லை. மாநிலம் முழுவமும் மின் அரங்கத்தில் கட்சி உறுப்பினர்கள் தங்களை இந்த இயக்கத்தில் ஈடுபடுத்திக் கொள்வது. தொழிற்சங்க ஊழியர்களை இப்போராட்டத்தில் ஈடுபட வைப்பதில் வெற்றிகாண முடியவில்லை. எதிர்காலத்தில் கட்சி விடுகின்ற அறைகூவலை நாம் சார்ந்திருக்கின்ற இயக்கத்தை சார்ந்தவர்களை முழுமையாக ஈடுபடுத்துவதற்குண்டான நடவடிக்கையில் ஈடுபடவேண்டியுள்ளது.

24.6.2012 அன்று கோவையில் கட்சி பேரவை நடத்தி அகில இந்திய மாநாட்டு முடிவுகளை மாநில செயற்குழு உறுப்பினர் தோழர் கே. கனகராஜ் அவர்கள் விளக்கி பேசியுள்ளார்.

இந்த காலகட்டத்தில் மின் வாரிய ஊழியர்கள் அனைவரின் பிரச்சனையான ஊதிய உயர்வு பிரச்சனையில் கோரிக்கைப்பட்டியல் தயாரிக்கப்பட்டு கணிசமான ஊழியர்கள் கலந்து கொள்ளக்கூடிய கோரிக்கை பட்டியல் வெளியீட்டு நிகழ்ச்சி என்பது நடைபெற்றுள்ளது.

மின் அரங்கத்தில் புதியவர்களை கட்சிக்கு கொண்டு வரும் வகையில் வர்க்க அரசியல் ஓர் அறிமுகம் என்ற தலைப்பில் 8.7.2012 அன்று தர்மபுரியில் நூற்றுக்கும் மேற்பட்ட ஊழியர்கள் கலந்து கொள்ளும் நிகழ்வுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வடசென்னையிலும் மின்வாரியத்தில் பணியாற்றி நிரந்தரம் பெற்றிருக்கக்கூடிய பெண்களை அணி திரட்டி 4.7.2012 அன்று அக்கூட்டத்தை நடத்தி ஆதரவாளர்களாக கட்சிக்கு கொண்டு வரும் நடவடிக்கைக்கு திட்டமிடப்பட்டுள்ளது.

மதுரையிலும் மின்வாரிய ஊழியர்கள் குவியலாக கலந்து கொள்ளும் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட உள்ளது.

மதுரையில் நடைபெற உள்ள மாணவர் சங்கத்தின் அகில இந்திய மாநாட்டிற்கு நிதி உதவி அளிக்கின்ற வகையில் மின் அரங்கத்திற்கு ரூபாய் ஒரு லட்சம் அளிக்க வேண்டுமென்று நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதை வசூலித்து கொடுப்பதற்குண்டான திட்டத்தை இக்கூட்டத்தில் முடிவு செய்ய வேண்டியுள்ளது.

மின் அரங்கத்தில் தீக்கதிர் விரிவாக்கம் என்ற வகையில் அண்மையில் நடைபெற உள்ள மத்திய அமைப்பு மாநாட்டில் ஆயிரம் சந்தாதாரர்களை சேர்ப்பதற்குண்டான நடவடிக்கையும் எடுக்க வேண்டியுள்ளது.

தோழமையுள்ள

**(எஸ்.எஸ். சுப்பிரமணியன்)**
கன்வீனர்

# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் : 158 / CPT அங்கீகாரம் பெற்றது இணைப்பு : CITU & EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005

Telephone No: 044-28548529
Fax No: 044-28516574

CITU

Email: coteecitu_hqchennai@yahoo.com
coteecitu@gmail.com


**சுற்றறிக்கை எண் 17/2012** **நாள் : 02/07/2012**

பெறுநர்
மத்திய அமைப்பின் நிர்வாகிகள்,
கிளை செயலாளர்கள் மற்றும்
செயற்குழு உறுப்பினர்கள்

## அவசரம்

அன்பான தோழரே, வணக்கம்!

விடுபட்டு போன ஒப்பந்த தொழிலாளர்களின் பணி நிரந்தரம் சம்பந்தமாக நாம் தொடுத்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கினையொட்டி 26.06.2012 அன்று தலைமைப் பொறியாளர், பணியமைப்பு அவர்களிடமிருந்து அனைத்து மண்டல தலைமை பொறியாளர்களுக்கும் அனுப்பப்பட்ட கடிதத்தின் நகலை அனுப்பி அதன் மீது கிளை நிர்வாகிகள் கவனமாக செயல்பட்டு நமது உயர்நீதிமன்ற வழக்கில் உள்ள திட்டபட்டியலில் உள்ளவர்களை அனைவரின் மீது குறிப்பெழுதி அனுப்பவதற்குண்டான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஏற்கனவே மத்திய அமைப்பு சுற்றறிக்கை எண். 16 நாள் 30.6.2012 தேதி மூலம் அறிவித்து இருந்தோம்.

மின் ஊழியர் மத்திய அமைப்பின் நீதிமன்ற அவமதிப்பு வழக்கை விரைவாக முடிக்க வேண்டிய நிர்ப்பந்தம் உள்ளதால் 29.6.2012 அன்று மீண்டும் ஒரு கடிதத்தை தலைமைப் பொறியாளர், பணியமைப்பு அவர்கள் அனைத்து மண்டல தலைமை பொறியாளர்களுக்கும் அனுப்பி உள்ளனர். அதன் நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. அதில் 120 ரூபாய் தினக்கூலி வாங்காதவர்கள் (பட்டியலில் இடம்பெற்று இப்போது பணியாற்றாதவர்கள்), 8.8.1998 அன்று அடையாளம் காணப்பட்டவர்கள்.

1998 இல் இருந்து 2000 வரை கருணைத் தொகை வாங்கியவர்கள். ஐ.ஓ.எல்./ உயர்நீதிமன்ற வழக்கிற்கு உட்பட்டவர்கள் இடை இடையே பணியாற்றி விடுபட்டு போனவர்கள் அனைவருடைய விபரங்களையும் அனுப்ப வேண்டுமென அந்த சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ளதையும் கணக்கில் கொண்டு நமது திட்ட நிர்வாகிகள் விழிப்பாக மேற்பார்வை பொறியாளர்ககளோடு தொடர்பு கொண்டு பட்டியலில் இடம் பெற்று பணி ஆற்றுபவர்கள் பணியாற்றாதவர்கள் அனைவருடைய பெயரையும் மேற்பார்வை பொறியாளரிடம் இருந்து அனுப்பி வைத்திடும் நடவடிக்கையில் ஈடுபடுமாறு கேட்டுக் கொள்கிறோம். **கிளை நிர்வாகிகள் இதன் அவசர தன்மையை உணர்ந்து காலதாமதமின்றி செயலாற்றிட வேண்டுமாறு கேட்டுக்கொள்கிறோம்.**

**இணைப்பு :-** வாரிய கடிதம்

தோழமையுள்ள

**(எஸ்.எஸ். சுப்பிரமணியன்)**
பொதுச் செயலாளர்.

# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் : 158 / CPT அங்கீகாரம் பெற்றது இணைப்பு : CITU & EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005

Telephone No: 044-28548529
Fax No: 044-28516574

Email: coteecitu_hqchennai@yahoo.com
coteecitu@gmail.com

CITU


**சுற்றறிக்கை எண் 18/2012** **நாள் : 14.07.2012**

*பெறுநர்*
மத்திய அமைப்பின் அனைத்து நிர்வாகிகள்

## மத்திய அமைப்பின் மாநில நிர்வாகிகள் கூட்டம்
## 2012 ஆகஸ்ட் 11 / சென்னை

அன்பான தோழரே!, வணக்கம்.

மத்திய அமைப்பின் **மாநில நிர்வாகிகள் கூட்டம் எதிர்வரும் 11.08.2012 சனிக்கிழமை**

**நேரம் :** **காலை 10.30 மணிக்கு**

**இடம் :** **டி.ஜே. நினைவகம்**
எண்: 177, சிங்கண்ண செட்டித் தெரு
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை 600 002.

என்ற முகவரியில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் மாநில சி.ஐ.டி.யூ.-வின் சார்பாக மாநில சி.ஐ.டி.யூ. -வின் உதவிப் பொதுச் செயலாளர் தோழர் ஆர். கருமலையான் கலந்து கொள்கிறார். ஒரு நாள் கூட்டம் என்பதால் தோழர்கள் உரிய நேரத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தோழமையுள்ள

**(எஸ்.எஸ். சுப்பிரமணியன்)**
பொதுச் செயலாளர்.

### நிகழ்ச்சி நிரல்

1. அஞ்சலி
2. தலைவர் உரை
3. சி.ஐ.டி.யூ. வின் மாநில குழு முடிவுகள்
   (தோழர் ஆர். கருமலையான்)
4. நடைபெற்ற பணிகள்
5. மின் ஊழியர் மத்திய அமைப்பின் மாநாடு திட்டமிடல்
6. ஒப்பந்த ஊழியர் டெல்லி கருத்தரங்கம் / பணிநிரந்தரம்
7. வரவு செலவு
8. ஊதிய உயர்வு கோரிக்கைப் பிரச்சாரம்
9. கணக்கீட்டு பிரிவு ஊழியர் இயக்கம்
10. இதர பிரச்சனைகள்

தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் : 158 / CPT அங்கீகாரம் பெற்றது இணைப்பு : CITU & EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005

Telephone No: 044-28548529
Fax No: 044-28516574

CITU

Email: coteecitu_hqchennai@yahoo.com
coteecitu@gmail.com


**சுற்றறிக்கை எண் 19/2012** **நாள் : 14/07/2012**

பெறுநர்
மத்திய அமைப்பின் நிர்வாகிகள்
கிளை செயலாளர்கள் மற்றும்
செயற்குழு உறுப்பினர்கள்

அன்பான தோழரே,

வணக்கம்,

மத்தியில் ஆளும் ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு நவீன தாராளமய கொள்கையை இந்தியாவில் அமல்படுத்த பாய்ச்சல் வேகத்தில் நடவடிக்கை எடுத்து வருகிறது. அரசுத்துறையில் மத்திய மாநில பொதுத்துறை நிறுவனங்களில் நிரந்தரத் தொழிலாளர்களின் எண்ணிக்கையை குறைப்பது, ஓய்வூதியம் உள்ளிட்ட சலுகைகளில் கை வைப்பது போன்ற நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

மத்திய அரசின் இந்த கொள்கை மின்சாரத்துறையிலும் தாக்கத்தை ஏற்படுத்த துவங்கியுள்ளது. இத்துறையில் நிரந்தரத் தொழிலாளர்கள் எண்ணிக்கையை குறைத்து அங்கு ஒப்பந்த தொழிலாளர்கள், தினக்கூலி தொழிலாளர்கள், என்.எம்.ஆர். மற்றும் பிராங்சைசிங் முறையை கையாள்வது என பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது. இதனால் நிரந்தர தொழிலாளர்களின் எண்ணிக்கை மின்சாரத் துறையில் 12 லட்சமாக இருந்தது இன்றைக்கு ஏழு லட்சமாக குறைந்துள்ளது. ஒப்பந்த, தினக்கூலி தொழிலாளர்களின் எண்ணிக்கை இந்திய நாடு முழுவதும் பல லட்சங்களாக உயர்ந்து கொண்டே வருகிறது.

பெருகி வரும் ஒப்பந்த தொழிலாளர்களுக்கு சட்டத்தில் சொல்லப்பட்ட சலுகைகள் கூட அளிக்கப்படுவதில்லை ஒப்பந்த தொழிலாளர்களின் அவல நிலமையை அவர்கள் மத்தியில் சொல்லி விழிப்படையச் செய்வது என்று இந்திய மின் ஊழியர் கூட்டமைப்பு முடிவு செய்து மண்டல வாரியாக விழிப்புணர்வு கருத்தரங்குகள் நடத்துவது அதன் பின்னர் டெல்லியில் சிறப்புக் கருத்தரங்கை நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டு மண்டல வாரியான கருத்தரங்குகள் நடைபெற்று முடிந்துள்ளன. அடுத்த கட்ட நடவடிக்கையாக வருகின்ற ஆகஸ்ட்டு 31 ந் தேதி டெல்லியில் சிறப்புக் கருத்தரங்கை நடத்துவதற்குண்டான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. டெல்லியில் நடக்கும் கருத்தரங்கில் தமிழகத்தில் இருந்து 100 பிரதிநிதிகள் கலந்து கொள்ள வேண்டுமென்று இந்திய மின் ஊழியர் கூட்டமைப்பில் முடிவு செய்யப்பட்டுள்ளது. அந்த அடிப்படையின்படி கிளைகளில் இருந்து தலா 2 பிரதிநிதிகள் வீதம் கலந்து கொள்வதற்குண்டான ஏற்பாட்டை கிளைகள் செய்திட வேண்டும்.

**கருத்தரங்கு நடைபெறும் இடம்**

**மாவலங்கர் ஹால்,** நியூ டெல்லி

இக்கருத்தரங்கில் கலந்து கொள்ள செல்லும் பிரதிநிதிகளுக்கு தங்கும் இடம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

| தங்கும் இடம் விபரம் | ACCOMMODATION |
|---|---|
| **சங் தர்மசாலா**<br>8, உத்யன் மார்க், (அருகில்)<br>சி.என்.ஜி. பம்ப்<br>கோல் மார்க்கெட் | **CHUGH DHARMASALA**<br>C8, Udyan Marg, (Near CNG Pump<br>GOL Market) New Delhi.<br>**Contact: SRIPAUL :09868430782** |

இக்கருத்தரங்கில் கலந்து கொள்பவர்கள் ஆகஸ்ட் 30 ந் தேதி காலையே டெல்லியில் இருக்க வேண்டும். மேற்கூறிய இடத்தில் தங்குவதற்கு ஒரு படுக்கைக்கு நாள் ஒன்றுக்கு ரூபாய் 70/- செலுத்தி அந்த தங்கும் இடத்தை பயன்படுத்திக் கொள்ளலாம்.

முக்கியமான இக்கருத்தரங்கில் திட்டங்களுக்கு ஒதுக்குப்பட்ட இரண்டு தோழர்கள் கலந்து கொள்வது என்பதை உத்தரவாதப்படுத்திட வேண்டும்.

## தோழர் பி.சி.வேலாயுதம் நினைவு கல்வி உதவி நிதி

மறைந்ததோழர் பி.சி.வி நினைவாக வருடம் தோறும் மின்வாரியத்தில் பணியாற்றும் ஊழியர்களின் மாணவ/மாணவியர்கள் (10ம் வகுப்பு மற்றும் +2) தேர்வில் அதிக மதிப்பெண் பெறும் பிள்ளைகளுக்கு முதல் பரிசு, இரண்டாம் பரிசு என்ற அடிப்படையில் கல்வி உதவி நிதி வழங்குவது அனைவரும் அறிந்ததே.

அதே போல் இந்த ஆண்டு (2010-2011) 10ம் வகுப்பு, +2 மதிப்பெண் பட்டியலை வாங்கி கிளைச் செயலாளர் கையொப்பமிட்டு ஆகஸ்ட் 15க்குள் மாநில மையத்திற்கு அனுப்ப வேண்டுகிறோம்.

வாழ்த்துக்களுடன்
தோழமையுள்ள

**(எஸ்.எஸ். சுப்பிரமணியன்)**
பொதுச் செயலாளர்.

**குறிப்பு**

மின் அரங்கத்தில் பிராக்சன் சார்பாக திருச்சியில் ஆகஸ்ட் 11, 12 தேதிகளிள் நடைபெறுவதாக இருந்த வகுப்பு ஆகஸ்ட் 25, 26 தேதிகளுக்கு தள்ளிவைக்கப்பட்டுள்ளது. இது சம்மந்தமான அழைப்பிதழ் தனியாக அனுப்பி வைக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் : 158 / CPT அங்கீகாரம் பெற்றது இணைப்பு : CITU & EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005

Telephone No: 044-28548529
Fax No: 044-28516574

Email: coteecitu_hqchennai@yahoo.com
coteecitu@gmail.com

CITU


**சுற்றறிக்கை எண் 20/2012** **நாள் : 31/07/2012**

பெறுநர்
மத்திய அமைப்பின் நிர்வாகிகள்
கிளை செயலாளர்கள் மற்றும்
செயற்குழு உறுப்பினர்கள்

அன்பான தோழரே, வணக்கம்,

மின் வாரிய பிரிப்பை அமல்படுத்தும் போது ஏற்பட உள்ள முத்தரப்பு ஒப்பந்தம் சம்மந்மாக ஏற்கனவே திமுக ஆட்சியின் போது ஒரு ஒப்பந்த நகல் அளிக்கப்பட்டு அதன் மீது தொழிற்சங்கங்களின் கருத்துக்கள் கேட்கப்பட்டது. நமது தரப்பில் மின் வாரிய பிரிப்பை ஏற்க முடியாது, அதை மறு பரிசீலனை செய்திட வேண்டும் என்ற அடிப்படையில் மின் வாரியம் அளித்த வரைவு ஒப்பந்த நகலுக்கு நாம் பதில் அளித்தோம்.

18 மாதங்களுக்கு பின்னர் தமிழகத்தில் அதிமுக ஆட்சியில் உள்ள இந்த கால கட்டத்தில் திரும்பவும் ஏற்கனவே சங்கங்களுக்கு வழங்கப்பட்ட வரைவு ஒப்பந்த நகலுடன் திமுக அரசு ஆட்சியில் இருந்தபோது வாரியம் சங்கங்களுக்கு வழங்கிய ஒப்பந்த நகலின் மீது 24.3.2011 அன்று அரசு அளித்துள்ள கருத்துரு கடிதத்தையும் சேர்த்து 26.6.2012 அன்று சங்கங்களுக்கு வழங்கி, சங்கங்களின் கருத்தை கேட்டுள்ளது. 24.3.2011 அன்று அரசு அளித்துள்ள கருத்துரு கடிதத்தில் வாரிய பிரிப்புக்கு பின்னர் தொழிலாளிகளின் உரிமைகளை உத்திரவாதப்படுத்த அரசு எந்தவித பொறுப்பை ஏற்க முடியாது என்றும் தொழிற்சங்கங்களின் முக்கியத்துவத்தை முற்றிலும் நிராகரிக்கின்ற வகையில் அரசு குறிப்பிட்டு உள்ளது. தமிழக அரசின் அந்த கடிதத்தையும் வாரியம் தயாரித்துள்ள வரை ஒப்பந்த நகலையும் இணைத்து தொழிற்சங்கங்களின் கருத்துக்களை வாரியம் கேட்டிருந்தது.

இதற்கிடையில் மின் வாரியத்தில் உள்ள அண்ணா தொழிற்சங்கம் ஒற்றுமைக்கான ஒரு முயற்சி எடுத்தது. அந்த கூட்டத்திலும் நாம் கலந்து கொண்டோம் அனைத்து சங்கம் சார்பில் முத்தரவு ஒப்பந்தம் சம்மந்தமாக வாரிய தலைவரிடமும், மாண்பு மிகு மின்துறை அமைச்சரிடமும் கடிதம் கொடுத்து முறையீடு செய்வதென்று முடிவுசெய்யப்பட்டது. வாரிய பிரிப்பிற்கெதிராக நீதிமன்றத்தில் நாம் தொடுத்த வழக்கின்போது நீதிமன்றத்தில் வாரிய தரப்பிலும், அரசு தரப்பிலும் வாரிய ஊழியர்கள் தற்போது பெறுகின்ற அனைத்து விதமான சலுகைகளுக்கும் வாரியமும், அரசாங்கமும் பொறுப்பேற்றுக் கொள்ளும் என்று வழங்கப்பட்ட உத்தரவாதத்திற்கு எதிராக தற்போது சங்கங்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் முத்தரப்பு ஒப்பந்த நகல், அதன் மீதான அரசின் கருத்து இருப்பதால் அனைத்து சங்கங்கள் சார்பில் வாரியத்திடம், அமைச்சரிடமும் முறையீடு செய்யும் நிகழ்ச்சியில் நாம் கலந்து கொள்ள இயலாத நிலையிலிருந்தோம் என்பதை தெரிவித்து கொள்கிறோம்.

மத்திய அமைப்பை பொறுத்தவரையில் சென்ற அரசு கொடுத்த கடிதத்தை இணைத்து வாரியம் கொடுத்த வரைவு ஒப்பந்தத்தின் மீது கருத்துக்களை எழுத்துப் பூர்வமாக வாரியத்திடம்

வழங்கியுள்ளோம். ஏற்பட்டுள்ள, இந்நிலைமைகளை நமது வழக்கறிஞரிடமும் எடுத்துரைத்துள்ளோம். தேவைப்படுமானால் சட்ட ரீதியாக இப்பிரச்சனையை எதிர் கொள்ளவும் தயாராகவும் உள்ளோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

மின் துறையாம் சேவைத்துறையில் அனுமதிக்கப்பட்ட பதவிகள் ஆயிரக்கணக்கில் நிரப்பப்படாமல் மக்கள் சேவையை தொடரமுடியாது என்று வாரியத்திடம் தொடர்ந்து வலியுறுத்தி வந்ததன் அடிப்படையில்தான் மின் வாரியத்தில் 6953 மஸ்தூர்களை கள உதவியாளர்களாக நியமித்து உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. அதையொட்டியே 600 உதவிப் பொறியாளர்களை வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் நியமித்து பணி ஆணையும் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் கள உதவியாளர் பதவிகளை நிரப்புகின்ற வகையில் 4000 ஐ.டி.ஐ. படித்தவர்களை பணி நியமனம் செய்ய வேண்டும் என்று அரசு உத்தரவு பிறப்பித்து அதற்கான பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. கள உதவியாளர் காலி இடங்களை நிரப்பிட வேண்டுமென்று மின் ஊழியர் மத்திய அமைப்பு முறையீட்டின் மூலமும், தொடர் போராட்டங்களின் மூலமும் நாம் தொடர்ந்து கொடுத்த நிர்ப்பந்தம்தான் இந்த 4000 பதவிகளை நிரப்பிட அரசும், வாரியமும் இந்த நேரடி நியமனத்துக்கு உத்தரவிட்டுள்ளது. 4000 பேர்களை தேர்வு செய்வதற்கான பட்டியலை அனுப்புமாறு மின்சார வாரியம் வேலை வாய்ப்பு அலுவலகத்துக்கு கடிதம் அனுப்பியுள்ளது. 1:5 என்ற அடிப்படையில் 20,000 பேர்கள் கொண்ட பட்டியலை வேலை வாய்ப்பு அலுவலகம் அனுப்பிட உள்ளது. இந்நிலையில் நமது திட்ட நிர்வாகிகள் வேலை வாய்ப்பு அலுவலகத்தோடு தொடர்பு கொண்டு நிலைமையை அறிந்து சம்பந்தப்பட்ட ஐ.டி.ஐ. படித்தவர்களை தொடர்பு கொள்ள வேண்டுகிறோம். முடிந்தவரை பேரவைகள், சிறு குழுக் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்து 4000 ஐ.டி.ஐ. படித்தவர்கள் வாரியத்தில் பணி நியமனம் செய்ய நாம் எடுத்த முயற்சியை அவர்களை மத்தியில் கொண்டு செல்ல வேண்டுகின்றோம்.

இவைகள் சம்மந்தமாக அனைத்து மேற்பார்வை பொறியாளர் மற்றும் செயற்பொறியாளர் அலுவலகத்திற்கு முன்னால் கீழ்க்கண்ட வாசகங்கள் அடங்கிய டிஜிட்டல் பேனர்களை உடனடியாக வைக்க நடவடிக்கை எடுத்திட வேண்டுகிறோம்.

**டிஜிட்டல் நகல்**

**தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு**
**காலிப்பணியிடங்களை நிரப்பிட தொடர்ந்து நடத்திய**
**போராட்டத்திற்கு வெற்றி!**

- சேவைத்துறையாம் மின் துறையில் 55,000 காலிப் பணியிடங்களை நிரப்பிட வலியுறுத்தி நடத்திய போராட்டங்கள்....
- 6953 மஸ்தூர்கள் கள உதவியாளர்களாக பதவி உயர்வு.
- 600 உதவிப் பொறியாளர்கள் பணி நியமனம்.
- 4000 ஐ.டி.ஐ. படித்தவர்கள் கள உதவியாளராக பணி நியமனம்.
- 40000க்கும் மேற்பட்ட ஒப்பந்த தொழிலாளர்கள் மஸ்தூர் பயிற்சியாளராக பணி நியமனம்.

அனைத்தும் சி.ஐ.டி.யூ. போராட்டத்திற்கு கிடைத்த வெற்றி!

மக்கள் சேவையை தொடர்ந்திட,
மீதமுள்ள காலிப் பணியிடங்களை நிரப்பிட,
தொடர்ந்து குரல் கொடுப்போம் வாரீர்! வாரீர்!

**தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு**

**...................................கிளை**

**தமிழக அரசே! மின் வாரியமே!**

## சிஐடியு-வின் தொடர் போராட்டத்தால்
## 4000 ஐடிஐ படித்தவர்கள் பணி நிரந்தரம்.
## நேர்மையான முறையில் நியமனம் செய்திடுக!

- சிஐடியு தலைமையில் ஒப்பந்த தொழிலாளர்களும், மஸ்தூர்களும் தங்களை கள உதவியாளர்களாக நியமனம் செய்திடுக என்றும், காலியிடங்களை நிரப்பிடுக என்றும் வலுவாக போராடியதால் மஸ்தூர்கள், கள உதவியாளர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளதை வரவேற்கின்றோம்.

- தற்போதுள்ள 54000 க்கும் மேற்பட்ட மின்வாரிய காலிப்பணி இடங்களை நிரப்பி மக்கள் சேவையை மேம்படுத்த மஸ்தூர்களை கள உதவியாளர்களாகவும் 4000 ஐ.டி.ஐ படித்தவர்களை புதியதாக நியமனம் செய்வதாக அறிவித்துள்ளதை, சிஐடியு - விற்கு கிடைத்த மகத்தான வெற்றி என மகிழ்கின்றோம்.

- மின் வாரியத்தில் பயிற்சி பெற்றுள்ள அனைத்து டிரேட் அப்பரண்டிஸ்களையும் நேர்காணல் செய்திட அழைத்திடுக.

- சிஐடியு தலைமையில் மஸ்தூர்களை கள உதவியாளர்களாக்க வேண்டும் என்று போராடி வெற்றி பெற்றதால் அறிவிக்கப்பட்டுள்ள 4000 ஐடிஐ படித்தவர்களின் கள உதவியாளர் பணி நியமனம் அரசியல் தலையீடு இல்லாமல், தகுதி அடிப்படையில் வழங்கிடுக.

- ஒன்றுபட்ட வலுமிக்க போராட்டத்தின் மூலம் அரசையும், வாரியத்தையும் நிர்பந்தம் செய்து மின் வாரிய காலி இடங்களை நிரப்பி - மக்கள் சேவையை மேம்படுத்துவோம் வாரீர்! வாரீர்!

C I T U

**தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு**

......................................கிளை

## தமிழக அரசே! மின் வாரியமே!

## சிஐடியு-வின் தொடர் போராட்டத்தால் 4000 ஐடிஐ படித்தவர்கள் பணி நிரந்தரம். நேர்மையான முறையில் நியமனம் செய்திடுக!

அன்புடையீர், வணக்கம்!

மின்வாரியத்தில் தற்போது 54000க்கும் மேற்பட்ட காலியிடங்கள் உள்ளன. குறிப்பாக கள உதவியாளர் பதவியில் 17,000 காலியிடங்களும், அடுத்த பதவி உயர்வான கம்பியாளர்/ வணிக உதவியாளர் பதவியில் 13,000 காலியிடங்களும் உள்ளன. எனவே களப்பணியில் 30,000 கீழ் மட்ட பதவிகள் காலியாக உள்ளன. காலியிடங்களை நிரப்பிடுக! மக்கள் சேவையை மேம்படுத்திடுக! என்ற வலுமிக்க களப் போராட்டத்தை தொடர்ந்து எவ்விதம சமரசமும் இல்லாமல் உறுதியாக நடத்தும் அமைப்பு தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு (சிஐடியு) மட்டுமே என்பதை யாரும் மறைக்க முடியாது! மறுக்க முடியாது!

மின்வாரிய காலியிடங்களை நிரப்ப வேண்டும் மக்கள் சேவையை மேம்படுத்திட வேண்டும் மின்வாரியத்தில் பணிபுரியும் ஒப்பந்த தொழிலாளியும், மஸ்தூர்களும் தங்களை நிரந்தரப்படுத்த வேண்டும், கள உதவியாளராக பதவி உயர்வு வழங்க வேண்டும். காலியிடங்களை நிரப்ப வேண்டும் என வல்லமையுடன் பலம் பொருந்திய ஒற்றுமையுடன் சிஐடியு தலைமையில் போராடியதால் ஒப்பந்த தொழிலாளர்களையும், மஸ்தூர்களையும் வேறுவழியில்லாமல் மின்வாரியம் கள உதவியாளராக நிரந்தரம் செய்தது. இதன் தொடர்ச்சியாகத்தான் ஒவ்வொரு முறையும் வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து ஐடிஐ படித்தவர்களை கள உதவியாளராக புதிய நியமனங்களை மின் வாரியம் செய்துள்ளது என்பதே வரலாறு. மாறாக மின்வாரியத்தில் ஐடிஐ படித்துள்ளவர்களை புதியதாக நியமனம் செய்த பிறகு அதற்கு இணையாக ஒப்பந்த ஊழியர்கள் மற்றும் மஸ்தூர்களை மின்வாரியம் கள உதவியாளராக நிரந்தரம் செய்யவில்லை என்ற புறக்கணிக்க முடியாத உண்மையை எவரும் மூடி மறைக்க முடியாது.

ஆனால் சிலர் அரசும், வாரியமும் விரும்பி செய்தாக புகழ்பாடுவார்கள்! நாங்கள்தான் ஐடிஐ படித்தவர்களுக்கு வேலை வாங்கி கொடுத்தோம் என சுயமான பணிகள் எதுவும் செய்யாமல் காலியிடங்களை நிரப்பிடுக என வலுவான போராட்டமோ முயற்சிகளோ எடுக்காமல் ஐடிஐ பணி நியமனத்திற்கு காரணமாக உதவியாக வலுமிக்க அளவில் போராடியுள்ள ஒப்பந்த தொழிலாளிகளையும், மஸ்தூர்களையும் எதிரிகளாக சித்தரித்து, யாரோடு இணைந்து போராடி காலியிடங்களை நிரப்பிடுக என அரசையும், வாரியத்தையும் நிர்பந்திக்க வேண்டுமோ, அவர்களுக்கு எதிராக செயல்பட்டு முழுக்க முழுக்க லஞ்ச ஊழலோடு நடைபெறும் பணி நியமனத்தை போராடி சரி செய்ய முயற்சிக்காமல் இத்ததைகய மோசமான நடவடிக்கையை வாழ்த்தி புகழ்பாடுவதையே சங்க நடவடிக்கையாக வாடிக்கையாக்கியுள்ளனர்.

மின் ஊழியர்கள் மற்றும் ஒப்பந்த தொழிலாளர்கள், மஸ்தூர்களின் தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு (சிஐடியு) தலைமையில் நடத்திய வலுமிக்க போராட்டத்தால் 6000 மஸ்தூர்கள் கள உதவியாளர்களாக பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளதால்தான், தற்போது 4000 ஐடிஐ படித்தவர்களுக்கு கள உதவியாளர் புதிய நியமனம் என வாரியமும், அரசும் அறிவித்துள்ளது. இந்த மஸ்தூர்கள் தற்போது கள உதவியாளராகாமல் மேலும் இரண்டு வருடம், காலதாமதமாகியிருந்தால் - இரண்டு வருடங்களுக்கு பிறகுதான் ஐடிஐ படித்தவர்களுக்கு மின் வாரியத்தில் வேலை வாய்ப்பு கிடைத்திருக்கும் என்பதை தற்போது ஐடிஐ படித்து மின் வாரியத்தில் பணி புரிபவர்கள் ஆழ்ந்து சிந்தித்து பார்க்கவேண்டும்.

எனவே, சிஐடியு-வின் போராட்டத்தால் புதியதாக ஐடிஐ படித்தவர்கள் 4000 பேர்கள் கள உதவியாளர்களாக பணி நியமனம் லஞ்ச ஊழல் இல்லாமல், அரசியல் தலையீடு இல்லாமல் நேர்மையான முறையில் தகுதியின் அடிப்படையில் நடைபெற வேண்டுமென சிஐடியு கேட்டுக் கொள்வதுடன், அனைத்து பகுதி ஊழியர்களும் இத்தகைய அநீதிகள் அகற்றப்படவும், காலியிடங்கள் நிரப்பிடவும், மக்கள் சேவை மேம்படவும் ஒருங்கிணைந்து போராட வருக! வருக! என அன்புடன் அழைக்கின்றது.

CITU

**தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு**

**....................................கிளை**

மேலே கண்ட டிஜிட்டல் போர்டுகள் தவிர ஐடிஐ பணி நியமனம் சம்மந்தமாக அலுவலகங்களுக்கு முன்னால் வைக்க வேண்டிய டிஜிட்டல் பேனர்களுக்கான வாசகங்களும் துண்டறிக்கைகளும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. இவைகளை முறையாக பயன்படுத்தி பிரச்சாரத்திற்கு கொண்டு செல்ல வேணுமாய் கேட்டுக்கொள்கிறோம்.

## விடுப்பட்டுப்போன ஒப்பந்த தொழிலாளர்கள் பணி நியமனம் சம்பந்தமாக நாம் தொடுத்துள்ள வழக்கின் நிலை

10.8.2007 ஒப்பந்தத்திற்கு பிறகு விடுபட்டு போன ஒப்பந்த தொழிலாளர்கள் 4631 ஊழியர்களின் பணி நியமனம் சம்மந்தமாக நாம் தொடுத்த வழக்கு, அதன் மீது நீதிமன்றம் அளித்த தீர்ப்பு வாரியம் அதை அமல்படுத்தாத நிலை, நீதிமன்ற அவமதிப்பு வழக்கிற்கு நாம் சென்றது. அதன் மீது வாரியம் 30.7.2012 அன்று ஒரு கடிதத்தை அளித்துள்ளது. அக்கடிதத்தில் 1219 பேர்கள் தேவையின் அடிப்படையில் நியமிக்கப்பட்டவர்கள் மஸ்தூராகவும், ஐடிஐ கள உதவியாளராகவும், எடுத்துள்ளதாகவும் மீதமுள்ள 2671 பேர்கள் முன்னால் ஒப்பந்த தொழிலாளிகளாகவும், கே 2, சிட் அக்ரிமெண்ட் அடிப்படையில் பணியாற்றி வந்தவர்கள் என்றும் அவர்களுக்கும் மின் வாரியத்திற்கும் தொடர்பு இல்லை வாரிய உத்தரவு 9 .9.2008 அடிப்படையில் பணி நியமனம் செய்ய தகுதி அற்றவர்கள் என்றும் ஒரு பதிலை நமக்கு அளித்ததுவிட்டு அதையே நீதிமன்றத்திற்கும் அளித்துள்ளது.

நீதிமன்ற அவமதிப்பு வழக்கு இன்று விசாரணைக்கு வந்து வாரியம் நமக்கு அளித்த பதிலையே தீர்ப்பாக வழங்கி நீதிமன்ற அவமதிப்பு வழக்கை முடிவுக்கு கொண்டு வந்துள்ளதாக தெரிய வருகிறது. பணி நியமனம் செய்யப்படாதவர்கள் சார்பாக மீண்டும் தனியாக நீதிமன்றத்தில் மனு சமர்ப்பித்து வழக்காட மத்திய அமைப்புக்கு வாய்ப்பு கொடுத்து வழக்கை முடித்துள்ளதாக தெரிய வருகிறது. நீதிமன்ற தீர்ப்பு நமக்கு கிடைத்த பின்னர் திரும்பவும் நீதிமன்றத்திற்கு செல்ல முயற்சிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம். விடுப்பட்டு போன ஒப்பந்த தொழிலாளர்கள் பணி நிரந்தரம் சம்மந்தமாக மின்வாரியத்தில் தேவையின் அடிப்படையில் ரூ.120/- பெற்று வருகின்றவர்கள், ஐஓஎல் வழக்கு தொடுத்து தீர்ப்பினை பெற்றவர்கள் மத்திய அமைப்பு தொடுத்த வழக்கில் தேவையின் அடிப்படையில் பணியாற்றுபவர்களை கொண்ட 4037 பேர்களை மஸ்தூர் பயிற்சியாளராக முதலாம் ஆண்டு ரூ.3100ம், இரண்டாம் ஆண்டு ரூ.3200ம், மூன்றாம் ஆண்டு ரூ.4000 /-ம் தொகுப்பூதியமாக வழங்க வாரியம் உத்தரவு வெளியிட உள்ளது. வாரிய உத்தரவு வெளி வந்த பின்னர் தொகுப்பூதியம் சம்மந்தமாகவும், பயிற்சி காலம் சம்மந்தமாகவும் நமது கருத்துக்களை வாரியத்திடம் கொண்டு சென்று அதில் மாற்றம் காண நடவடிக்கை எடுக்க உள்ளோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

## ஒப்பந்த தொழிலாளர்களின் டில்லி கருத்தரங்கு

ஆகஸ்ட் 31 டெல்லியில் நடைபெறும் ஒப்பந்த தொழிலாளர்களின் டெல்லி கருத்தரங்கில் கலந்து கொள்வதற்கு வட்ட வாரியான கோட்ட நிர்ணயிக்கப்பட்டு கிளைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

கிளைகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட அடிப்படையில் டில்லி கருத்தரங்கில் பிரதிநிதிகளை கலந்து கொள்ள உத்தரவாதபடுத்த வேண்டுகிறோம்.

**உறுப்பினர் சேர்ப்பு :** 7 மாதங்கள் கடந்துள்ள நிலையில் மத்திய அமைப்பின் மாநில மையத்திற்கு 10,000க்குண்டான சந்தாக்கள் மட்டுமே வந்துள்ளன என்பதை தங்களின் கவனத்திற்கு கொண்டு வந்து 2012 ஆம் சந்தா சேர்ப்பை விரைவுப்படுத்திட வேணுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

வாழ்த்துக்களுடன்
தோழமையுள்ள

**(எஸ்.எஸ். சுப்பிரமணியன்)**
பொதுச் செயலாளர்.

# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் : 158 / CPT அங்கீகாரம் பெற்றது இணைப்பு : CITU & EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005

Telephone No: 044-28548529
Fax No: 044-28516574

CITU

Email: coteecitu_hqchennai@yahoo.com
coteecitu@gmail.com


**சுற்றறிக்கை எண் 21/2012** **நாள் : 13/08/2012**

பெறுநர்
மத்திய அமைப்பின் நிர்வாகிகள்,
கிளை செயலாளர்கள்,
செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள்.

அன்பான தோழரே, வணக்கம்,

மின் ஊழியர் மத்திய அமைப்பின் மாநில நிர்வாகிகள் கூட்டம் 11.8.2012 அன்று சென்னையில் மாநில தலைவர் தோழர் கே. விஜயன் தலைமையில் நடைபெற்றது.

நிர்வாகிகள் கூட்டத்தில் கலந்து கொண்ட மாநில சிஐடியூ -வின் துணைப் பொதுச்செயலாளர் தோழர் ஆர். கருமலையான் அவர்கள் சமீபத்தில் நடந்த சிஐடியூ வின் பொதுக்குழு, மாநிலக்குழு முடிவுகளை விளக்கிய போது இந்தியாவின் மொத்த உற்பத்தியில் 2.39 (ஜி.டி.பி)அளவுக்கு குறைய வாய்ப்புள்ளது. அமெரிக்கா, பிரான்ஸில் ஏற்பட்ட நெருக்கடி தொடர்வது. வட்டிவீதத்தில் ஏற்பட்டுள்ள மாற்றம், பெட்ரோல், டீசல் விலை கடுமையாக உயர வாய்ப்பு, பருவ மழை பொய்த்ததால் உணவு உற்பத்தியில் பாதிப்பு இவைகளினால் அகவிலைப்படியில், ஊதிய உயர்வில் நெருக்கடி ஏற்பட வாய்ப்புள்ளதையும் விளக்கி இவைகளை எதிர்த்து நாம் பலமாக போராட வேண்டிய சவால்கள் உள்ளது என்றும் இடதுசாரிகள் உணவு பாதுகாப்பு சம்மந்தமாக நடத்திய இயக்கம் சம்மந்தமாகவும் குறிப்பிட்டார்.

மேலும் இந்த நெருக்கடிகளுக்கு எதிராக அகில இந்திய ரீதியிலும் துறைவாரியாக ஏற்படும் நெருக்கடிகளுக்கு எதிராகவும் பல இயக்கங்கள் நடைபெற்றுள்ளது சம்மந்தமாகவும் பேசினார். தமிழகத்தில் அங்கன்வாடி, டாஸ்மாக், மின்சாரம், போக்குவரத்து போன்ற துறைவாரியாக நடக்கும் இயக்கங்கள், எதிர்வரும் காலங்களில் நடைபெற உள்ள சிஐடியூவின் மாவட்ட, மாநில அகில இந்திய மாநாடுகள் சம்மந்தமாகவும், விளக்கியதோடு எதிர்வரும் சவால்களை சந்திக்க நமது ஸ்தாபனத்தை வலுப்படுத்த வேண்டியதின் அவசியம், உறுப்பினர் சரிபார்ப்பிற்கு மத்திய அமைப்பு தயாராக வேண்டியதன் அவசியத்தையும் விளக்கினார்.

மத்திய அமைப்பின் மாநில தலைவர் தோழர் கே.விஜயன் தலைமை உரையில் மின்சார சட்டம் 2003 அதையொட்டி பிரச்சனை சமீபத்தில் வட மாநில மின்தொகுப்பில் ஏற்பட்ட கோளாறு ஆகியவற்றை விளக்கியதோடு ஒப்பந்த தொழிலாளர்கள் சம்மந்தமாகவும், வாரியத்தில் நிலவுகின்ற ஊழல், பணி நியமனம், பதவி உயர்வு, இடம் மாறுதல் தளவாட சாமான்கள் கொள்முதல் இவைகள் மட்டுமல்லாமல் ஐடிஐ படித்தவர்களை எடுப்பதிலும் கடுமையான லஞ்சம்

+ ஊழல் நடைபெற்று வருவதை சுட்டிக்காட்டி அதற்கெதிராகவும் நாம் போராட வேண்டியதின் அவசியத்தை விளக்கினார்.

அதன் பின்னர் மின் ஊழியர் மத்திய அமைப்பின் பொதுச்செயலாளர் சென்ற செயற்குழு கூட்டத்திற்கு பின்னர் நடைபெற்ற பணிகள் சம்மந்தமாகவும் எதிர்காலத்தில் நாம் எதிர்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் சம்மந்தமாகவும் ஓர் எழுத்து பூர்வமான அறிக்கையை முன் வைத்தார்.

சென்ற செயற்குழுவிற்கு பின்னர் மின் வாரிய ஊழியர்களுக்கு 1.12.2011 முதல் வழங்க வேண்டிய ஊதிய உயர்வுக்கான கோரிக்கை பட்டியல் தயாரிப்பு, அதை புத்தகமாக கொண்டுவந்தது, மின்வாரிய தலைமை அலுவலகத்திற்கு முன்னர் தொழிலாளர்களை திரட்டி கோரிக்கைப் பட்டியலை வெளியிட்டது. பின்னர் கோரிக்கைப் பட்டியலை அமைச்சர், வாரியத் தலைவரிடம் கொடுத்து பேச்சு வார்த்தையை துவங்கிட வலியுறுத்தியது போன்ற நிகழ்வுகளை முன்வைத்தார்.

கோரிக்கைப்பட்டியலை கொடுத்த பின்னரும் வாரியம் பேச்சு வார்தையை துவங்க மெத்தனப் போக்கை கடைப்பிடிப்பதால் அதை ஊழியர்கள் மத்தியில் கொண்டு சென்று இயக்கம் நடத்தி வாரியத்திற்கு நிர்ப்பந்ததை உருவாக்கிட வேண்டும் என்றும் மின் வாரிய பிரிப்பு அதை அமலாக்குவதற்கு வாரியம் எடுத்த நடவடிக்கை, மின் வாரிய பிரிப்பின் போது ஊழியர்களின் உரிமைகளை காக்கும் வகையில் ஒப்பந்தம் அமைய வேண்டும் என ஒருபக்கத்தில் வலியுறுத்திக்கொண்ட மறுபக்கத்தில் அரசின் ஆணையை தடுப்பதற்கு உண்டான நடவடிக்கையை மத்திய அமைப்பு எடுத்தது சம்மந்தமாகவும், இப்போது வாரியம் மின் வாரிய பிரிப்பின் போது ஊழியர்கள் நலன்கள் சம்மந்தமாக ஒரு ஒப்பந்தம் காண வரைவு ஒப்பந்தம் நகல் கொடுத்தது, அந்த நகலோடு 23.3.2011 இல் திமுக அரசு கொடுத்த பாதகமான பதிலையும் இணைத்தும் கருத்து கேட்டது சம்மந்தமாகவும், அதற்கு நாமும் மற்ற தொழிற் சங்கங்களும் அளித்துள்ள கருத்துக்களை விளக்கியதோடு, ஒரு பக்கத்தில் மின் வாரிய பிரிப்பை மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று வலியுறுத்திகின்ற நிலையிலும், ஏற்பட உள்ள ஒப்பந்த நிகழ்வுகளிலும் நாம் தொடர்ந்து பங்கு பெற வேண்டியதன் அவசியத்தையும் விளக்கினார்.

இவைகளோடு 4631 ஒப்பந்த ஊழியர்கள் பணி நிரந்தரம் சம்மந்தமாக நாம் தொடுத்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கு, அதற்கு வாரியம் அளித்த பதில், அந்த பதிலோடு நீதிமன்ற அவமதிப்பு வழக்கை முடிவுக்கு வந்துள்ள நிலை, அந்த பட்டியலில் அங்கம் பெற்றுள்ள 2671 ஊழியர்களின் பணி நிரந்தரம் சம்மந்தமாக, நாம் நீதிமன்றத்தை தொடர்ந்து அணுகவேண்டியதின் அவசியம் உள்ளது சம்மந்தமாகவும் விளக்கினார்.

மின் வாரியத்தில் உள்ள காலி இடங்களை நிரப்பிட வேண்டும் என்று தொடர்ச்சியாக எடுத்த முயற்சியின் விளைவாக மஸ்தூர்களிலிருந்து கள உதவியாளர்களாக பதவி உயர்வு,. உதவி பொறியாளர் நேரடி நியமனம், 4000 ஐடிஐ படித்தவர்கள் கள உதவியார் பயிற்சியாக தேர்வு செய்வது, நமது பட்டியலில் இடம் பெற்ற ஒப்பந்த ஊழியர்கள் தேவையின் அடிப்படையில் பணியாற்றும் தொழிலாளர்கள், ஐ.ஓ.எல். இல் வழக்கு போட்டவர்கள் ஆகியோர்களையும் இணைத்து 4037 ஒப்பந்த ஊழியர்களையும், 236 தினக்கூலி தொழிலாளர்களையும் மஸ்தூர் பயிற்சியாளராக பணி நியமனம் என்ற உத்தரவு போன்றவைகள் இக்காலத்தில் நடைபெற்றுள்ளது சம்மந்தமாகவும் விளக்கினார்.

தவிர கணக்கீட்டு பிரிவு ஊழியர் பல்வேறு பிரச்சனைகள் மீது வாரியத் தனி கவனத்தை ஈர்க்க நாம் நடத்த வேண்டியும் இயக்கத்தைப் பற்றி விளக்கியதோடு, பகுதி நேர ஊழியர்கள் பிரச்சனை, தனியார் மின் நிறுவன ஊழியர்களை திரட்டுதல் என்ற அடிப்படையில் திருவாரூர் மாவட்டத்தில் ஒக்கூர் என்ற இடத்தில் துவங்கி உள்ள தனியார் மின் நிறுவன ஊழியர்களை திரட்டி ஒப்பந்தம் கண்டது போன்றவைகளை விளக்கினார் மாநில பொதுத்துறை நிறுவன ஊழியர்களின் இயக்கங்கள் சம்மந்தமாகவும் மின் துறை பொறியாளர் அமைப்பின் 10 ஆம் ஆண்டு நிறைவு விழா, ஓய்வு பெற்றோர் நல அமைப்பு செப்டம்பர் 22, 23 தேதிகளில் நடத்தவுள்ள மாநில மாநாடு, உழைக்கும் பெண்கள் ஒருங்கிணைப்பு குழுவின் நடவடிக்கைகள் போன்றவற்றை விளக்கிதோடு, மின் ஊழியர் மத்திய அமைப்பின் 14வது மாநில மாநாட்டை டிசம்பரில் கோவையில் நடத்துவது சம்மந்தமான ஆலோசனையையும் முன் வைத்தார்.

மின் ஊழியர் மத்திய அமைப்பின் மாநாட்டுக்கு முன்னர் பேரவை தணிக்கை நடத்தாத கிளைகள், பேரவை, தணிக்கைகளை நடத்திட வேண்டுமென்றும் மின் ஊழியர் மத்திய அமைப்பின் உறுப்பினர் சேர்ப்பில் ஏற்பட்டுள்ள நிலைமைகளை விளக்கியதோடு செப்டம்பர் இறுதிக்குள் 2011 ஆம் ஆண்டு உறுப்பினர் புதுப்பித்தலை முடித்து மீதமுள்ள மாதங்களில் புதிய உறுப்பினகள் சேர்ப்பு ஆலோசனைகளையும் முன்வைத்தார்.

மத்திய அமைப்பின் மாநில பொருளாளர் தோழர் டி. கோவிந்தராஜு 2012, ஜனவரி முதல் ஜுன் முடிய உள்ள வரவு, செலவு கணக்குகளை முன்மொழிந்ததோடு 2010ஆம் ஆண்டு தணிக்கை முடித்த கிளைகளின் பெயர்களை முன் வைத்து தணிக்கை முடிக்காத கிளைக்ள உடனடியாக தணிக்கையை முடிப்பதற்குரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்றும், பகுதி நேர ஊழியர்களுக்கு ஏப்ரலில் நிலுகைத் தொகை வழங்கிய போது பெரும்பாலான கிளைகளில் விடுபட்டுள்ள நன்கொடையை வசூலித்ததில் மாநில மையத்திற்கு சேர வேண்டிய ஈவுத் தொகையை செங்கை கிளையை தவிர மற்றக் கிளைகள் செலுத்தாததை சுட்டிகாட்டி கிளைகள் நன்கொடை வசூலித்திருக்குமானால் மாநில மையத்திற்கு அனுப்ப வேண்டிய ஈவுத் தொகையை உடனடியாக அனுப்பிட வேண்டுமென்றும், உறுப்பினர் சேர்ப்பில் 2012 வரை வந்துள்ள உறுப்பினர் எண்ணிக்கை விபரங்களையும் முன் மொழிந்து பேசினார்.

## தோழர்களின் விவாதங்களுக்கு பின்னர் கீழ்கண்ட முடிவுகள் ஒருமனதாக எடுக்கப்பட்டுள்ளன.

1) *மின் வாரிய ஊழியர்களுக்கு 1.12.2011 முதல் வழங்க வேண்டிய ஊதிய உயர்வுக்கான பேச்சு வார்த்தையை துவங்க, வாரியத்தின் கவனத்தை ஈர்க்கின்ற வகையிலும், ஊதிய உயர்வு சம்மந்தமாக நாம் வைத்த கோரிக்கைகளை மின் வாரிய ஊழியர்கள் மத்தியில் கொண்டு செல்லும் வகையிலும் செப்டம்பர் 25, 26 மற்றும் 27 தேதிகளில் பிரச்சார ஆர்ப்பாட்ட கூட்டங்களை உபகோட்டம், கோட்ட, திட்டமட்டங்களில் நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டது. ஒரு குறிப்பிட்ட இடைவெளிக்கு பின்னர் கூட்டு இயக்கத்திற்கு முயற்சிப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது. இதற்கான துண்டு பிரசுர நகல் மாநில மைய்யத்திலிருந்து அனுப்பி வைக்கப்படும்.*

2) *மின்வாரிய பிரிப்பின் போது தொழிலாளர்கள் உரிமைகளை பாதுகாக்கின்ற வகையில் சாதகமான சரத்துக்களை ஒப்பந்தத்தில் இணைத்திட வலியுறுத்தும் வகையில் ஏற்பட உள்ள முத்தரப்பு ஒப்பந்த நிகழ்வுகளில் தொடர்ச்சியாக பங்கு பெறுவது என்றும்,*

*பிரிப்புக்கு எதிராகவும் மின் வாரிய பிரிப்பு அறிவிப்பினையொட்டி நீதிமன்றத்தில் நாம் பெற்ற தீர்ப்பு போன்றவைகளை ஊழியர்கள் மத்தியில் தொடர்ச்சியாக பிரச்சாரம் செய்வதுஎன்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.*

3) *4631 ஒப்பந்த தொழிலாளர்கள் பணி நிரந்தரம் சம்மந்தமாக நீதிமன்ற அவமதிப்பு வழக்கின் தீர்ப்பினையொட்டி, அதில் இடம் பெற்றுள்ளவர்களில் ஒரு பகுதியினரின் நிரந்தரம்போக மீதமுள்ளவர்கள் பணி நிரந்தரம் சம்மந்தமாக தொடர்ந்து நீதிமன்றத்தை நாடுவது.*

4) *4000 ஐடிஐ படித்தவர்களை வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் கள உதவியாளர் - பயிற்சியாளராக நியமிப்பதில் ஊழலற்ற முறையிலும், அதில் இதர டிரேட் படித்தவர்களையும் இதில் இணைப்பது, பெண்கள், மாற்றுத்திறனாளிகளுக்குள்ள ஒதுக்கீட்டை முறையாக அமல்படுத்தச் செய்வது நிர்ணயிக்கப்பட்ட வயது வரம்புகளில் மாற்றங்கள் செய்வது போன்றவைகள் சம்மந்தமாக, சம்மந்தப்பட்ட துறைக்கு கடிதம் கொடுத்து வற்புறுத்துவது.*

5) *கணக்கீட்டு பிரிவு ஊழியர்களின் குழு கூட்டத்தை உடனடியாக கூட்டி அதில் அப்பிரிவு ஊழியர்களின் பிரச்சனைகளை பரிசீலித்து, பிரச்சனைகளின் மீது அரசின், வாரியத்தின் கவனத்தை ஈர்க்கின்ற வகையில் வட்டமட்ட மற்றும் மாநில அளவில் இயக்கத்திற்கு திட்டமிடுவது*

6) *மின் ஊழியர் மத்திய அமைப்பின் 14 வது மாநில மாநாட்டை கோவையில் டிசம்பர் 15, 16 மற்றும் 17 தேதிகளில் நடத்துவது 17ந் தேதி பேரணியை நடத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.*

7) *அகில இந்திய ரீதியில் ஒப்பந்த தொழிலாளர்களின் கோரிக்கைகள், உரிமைகளை பரிசீலித்து, இயக்கத்திற்கு திட்டமிடுவதற்கு ஆகஸ்ட் 31 இல் நடைபெற உள்ள ஒப்பந்த தொழிலாளர்களின் டெல்லி கருத்தரங்கில் ஏற்கனவே வட்ட வாரியாக திட்டமிட்ட பிரதிநிதிகளை கலந்து கொள்ள செய்வது.*

8) *மின் வாரியத்தில் புதியதாக துவங்கியுள்ள பிரிவு அலுவலகங்கள், துணை மின் நிலையங்களுக்கு தேவையான பகுதி நேர ஊழியர்கள் புதிய பதவிகளை அனுமதிக்கச் செய்வது, மேலும் பகுதி நேர ஊழியர்களுக்கு நிரந்தரப் படுத்தப்பட்ட பின்னர் நிரந்தர ஊழியர்களுக்கு கிடைக்கின்ற சலுகைகளை, பகுதி நேர ஊழியர்களுக்கு கிடைத்திட செய்வது.*

9) *தனியார் மின் நிறுவனங்களில் உள்ள தொழிலாளர்களை திரட்டுவதற்குண்டான நடவடிக்கைளில் ஈடுபடுவது.*

10) *பொதுத்துறை நிறுவன ஊழியர்களின் ஒருங்கிணைப்புக் குழுவின் முடிவின் அடிப்படையில் பொதுத்துறை நிறுவன ஊழியர்களின் கோரிக்கைகளை வடிவமைத்து அதை ஊழியர்கள் மத்தியில் கொண்டு செல்லும் வகையில் 20.8.2012 முதல் 25.8.2012 வரை வாயிற் கூட்டம் நடத்துவது, மேலும் 11.9.2012 அன்று ஊழியர்களை திரட்டி திட்ட அளிவில் தர்ணா போராட்டம் நடத்துவது என்ற முடிவினை மின் வாரியத்தில் அமல் படுத்துவது.*

11) *அனல் மின் நிலைய ஊழியர்களின் பதவி உயர்வு சம்மந்தமாக பிறப்பித்த உத்தரவில் தேவையான விளக்கங்களை அனுப்ப தொடர்ந்து முயற்சிப்பது*

12) புனல் மின் நிலையத்தில் குறிப்பாக ஈரோடு மின் உற்பத்தி வட்டத்தில் கனரக வாகன ஓட்டுநர் பதவி அனுமதிக்கச் செய்வது புதிய மின் நிலையங்களுக்கு அனுமதித்த பதவிகளை பதவி உயர்வு மூலம் நிரப்பச் செய்வது, பவள விழாவை யொட்டி நாம் முன் வைத்த கோரிக்கைகளை அடைய முயற்சிப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

13) 2012 ஆம் ஆண்டு உறுப்பினர் சேர்ப்பை பொறுத்த வரையில் 2011 ஆம் ஆண்டு உறுப்பினர் புதுப்பித்தலை செப்டம்பர் இறுதிக்குள் முடிப்பது, மீதமுள்ள மாதங்களில் புதிய உறுப்பினர்களை சேர்க்க முயற்சிப்பது.

14) உழைக்கும் பெண்கள் ஒருங்கிணைப்புக்குழு துவங்காத கிளைகள் துவங்குவதற்குரிய ஏற்பாட்டை செய்வது.

15) தமிழ்நாடு மின்துறை பொறியாளர் அமைப்பின் கிளைகள் துவங்காத வட்டங்களில் துவங்க உதவி செய்வது.

16) மின் வாரிய ஓய்வு பெற்றோர் நல அமைப்பின் செப்டம்பரில் நடைபெறும் மாநில மாநாட்டை வெற்றிகரமாக நடத்திட தேவையான உதவிகளை செய்வது.

17) மேட்டூர் அனல், விருதுநகர் கிளைக் கூட்டங்க1ளில் மத்திய அமைப்பின் பொதுச்செயலாளர் கலந்து கொண்டு அந்த கிளை நடவடிக்கைகளை முறைப்படுத்துவது.

18) கணக்குப்பிரிவு, நிர்வாகக்குழு பிரிவினர் ஆலோசனை குழு கூட்டங்களை நடத்தி அவர்களின் கோரிக்கைகளை நிர்வாகத்திற்கு கொண்டு சென்று உரிய நடவடிக்கை எடுப்பது.

19) பொதுகட்டுமான வட்ட ஆலோசனை குழுவை புதுப்பிப்பது.

20) மாநில மாநாட்டிற்கு முன்னர் பேரவை தணிக்கை நடத்தாத கிளைகள் பேரவையையும், தணிக்கையும் முடிப்பது.

21) தீக்கதிர் பொன்விழா ஆண்டையொட்டி, மின் அரங்கத்தில் மின் ஊழியர் மத்திய அமைப்பின் மாநில மாநாட்டிற்கு முன்பாக 1000 ஆண்டு சந்தாக்களை சேர்ப்பது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. அதற்கு திட்ட வாரியான கோட்டா நிர்ணயிக்கப்பட்டுள்ளது கோட்டா விபரம் தனியாக இணைக்கப்பட்டுள்ளது.

- என்பன போன்ற முடிவுகள் ஒரு மனதாக மேற்கொள்ளப்பட்டது. நிர்வாக குழு முடிவுகளை சிறப்பாக அமலாக்கிட உரிய நடவடிக்கைகளை கிளைகள் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்.

வாழ்த்துக்களுடன்
தோழமையுள்ள

**(எஸ்.எஸ். சுப்பிரமணியன்)**
பொதுச் செயலாளர்.

# தீக்கதிர் விரிவாக்கம்

**சென்னை வடக்கு மண்டலம்**

| | | |
|---|---|---|
| 1. | வடசென்னை | 50 |
| 2. | மத்திய சென்னை | 50 |

**சென்ன தெற்கு மண்டலம்**

| | | |
|---|---|---|
| 3. | மேற்கு சென்னை | 50 |
| 4. | தென்சென்னை | 50 |
| 5. | செங்கல்பட்டு | 20 |

**வேலூர் மண்டலம்**

| | | |
|---|---|---|
| 6. | காஞ்சிபுரம் | 30 |
| 7. | வேலூர் | 20 |
| 8. | திருப்பத்துார் | 30 |
| 9. | தர்மபுரி | 50 |

**விழுப்புரம் மண்டலம்**

| | | |
|---|---|---|
| 10. | விழுப்புரம் | 50 |
| 11. | கடலூர் | 50 |
| 12. | திருவண்ணாமலை | 50 |

**திருச்சி மண்டலம்**

| | | |
|---|---|---|
| 13. | பெரம்பலூர் | 20 |
| 14. | திருச்சி/மாநகர் | 25 |
| 15. | கரூர் | 20 |
| 16. | புதுக்கோட்டை | 20 |
| 17. | தஞ்சாவூர் | 20 |
| 18. | நாகப்பட்டிணம் | 20 |

**மதுரை மண்டலம்**

| | | |
|---|---|---|
| 19. | மதுரை | 25 |
| 20. | மதுரை மாநகர் | 5 |
| 21. | தேனி | 20 |
| 22. | ராமநாதபுரம் | 20 |
| 23. | சிவகங்கை | 20 |
| 24. | திண்டுக்கல் | 20 |

**திருநெல்வேலி மண்டலம்**

| | | |
|---|---|---|
| 25. | விருதுநகர் | 20 |
| 26. | திருநெல்வேலி | 50 |
| 27. | துாத்துக்குடி | 50 |
| 28. | கன்னியாகுமரி | 20 |

| | | |
|---|---|---|
| **கோவை மண்டலம்** | | |
| 29. | நீலகிரி | 15 |
| 30. | கோவைதெற்கு | 20 |
| 31. | கோவைவடக்கு | 20 |
| 32. | கோவை மாநகர் | 20 |
| 33. | திருப்பூர் | 20 |
| 34. | உடுமலைபேட்டை | 15 |
| **ஈரோடு மண்டலம்** | | |
| 35. | சேலம் | 25 |
| 36. | மேட்டூர் | 25 |
| 37. | ஈரோடு | 25 |
| 38. | கோபி | 20 |
| 39. | நாமக்கல் | 20 |
| **அனல் மின்நிலையங்கள்** | | |
| 40. | வடசென்னை அனல் | 10 |
| 41. | எண்ணூர் | 10 |
| 42. | மேட்டூர் அனல் | 15 |
| 43. | தூத்துக்குடி அனல் | 15 |
| **புனல் மின்நிலையங்கள்** | | |
| 44. | ஈரோடுஉற்பத்தி | 5 |
| 45. | காடம்பாறை | 5 |
| 46. | குந்தா உற்பத்தி | - |
| 47. | நெல்லைஉற்பத்தி | 5 |
| 48. | காற்றாலைபண்ணை | 5 |
| 49. | பொதுகட்டுமான ம் | 15 |
| 50. | தலைமையகம் | - |
| | மொத்தம் | 1170 |

# இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)
# மாநில மின் அரங்க பிராக்ஷன் பயிற்சி முகாம்
**திருச்சி, 2012 ஆகஸ்டு 25, 26**

**22/08/2012**

அன்புள்ள தோழர்களே,

வணக்கம்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)-யின் மின் அரங்க மாநில உபகுழுவின் சார்பில் நடைபெறும் பயிற்சி முகாமுக்கு வருகை தந்துள்ள மாநில செயற்குழு உறுப்பினர்கள், மாநிலக்குழு உறுப்பினர் மற்றும் கலந்து கொண்டுள்ள அனைத்து தோழர்களுக்கும் மின் அரங்க மாநில உபகுழுவின் சார்பாக வணக்கத்தையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

சமீபத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) அகில இந்திய மாநில மாநாடுகள் நடைபெற்றுள்ளன. அம்மாநாடுகளில் நிறைவேற்றப்பட்ட தத்துவார்த்த, அரசியல், ஸ்தாபன தீர்மானங்களை மின் அரங்க கட்சி அணிகள் மத்தியில் கொண்டு செல்வதும், மின் அரங்கத்தில் கட்சி ஸ்தாபன விரிவாக்கத்தை உறுதிப்படுத்துவதுமே இம்முகாமின் நோக்கமாகும். மாநாட்டில் இயற்றப்பட்ட தத்துவார்த்த, அரசியல், ஸ்தாபன தீர்மானங்களோடு கட்சி திட்டத்தையும் மாநில செயற்குழு உறுப்பினர்கள், மாநிலக்குழு உறுப்பினர்கள் விளக்க உள்ளனர்.

அகில இந்திய மாநாட்டில் ஸ்தாபனம் விரிவாக்கம் சம்மந்தமாக சொல்லப்பட்டவைகளை மின் அரங்கத்தில் அமல்படுத்துவதற்கான ஒரு சிறுகுறிப்பை மாநில மின் அரங்க உபகுழுவின் சார்பாக உங்கள் முன் வைக்க விரும்புகின்றோம்.

மின் அரங்கத்தில் கட்சி பணிகள், விரிவாக்கம் என்பவைகள் மின் அரங்கத்தில் உள்ள வெகு ஜன அமைப்பின், வளர்ச்சியோடு ஒட்டிய ஒன்றாகும். அந்த அடிப்படையில் மின் அரங்கத்தில் 75000 நிரந்தர ஊழியர்கள் (பொறியாளர்கள், அலுவலர்கள்) சுமார் 10000 ஒப்பந்த ஊழியர்கள் (உற்பத்தி, விநியோகம், டிரான்ஸ்மிஷன்). சுமார் 6000 பகுதி நேர ஊழியர்கள் ஆக மொத்தம் 91000 ஊழியர்கள் பணியாற்றுகின்றனர். அதில் 2011 கணக்கின் படி 28510 உறுப்பினர்கள் நமது அமைப்பில் உள்ளனர். சதவீத அடிப்படையில் பார்க்கும் போது 30.60 சதவீதமாகும். இந்த ஸ்தாபனம் பலமென்பது நமது தொடர்ச்சியான செயல்பாட்டை முழுமையாக பிரதிபலிக்கக்கூடிய வகையில் அமையவில்லை என்பதை பார்க்க வேண்டியுள்ளது. நமது கட்சி மாநாட்டில் இயற்றப்பட்ட ஸ்தாபன சம்மந்தமான தீர்மானத்தில் கூட சொல்லுகின்ற போது நமது கட்சி அகில இந்திய அளவிலான பிரச்சனைகளின் மீது நடத்திட எண்ணற்ற பிரச்சாரங்களை, போராட்டங்களை வெகுஜன அமைப்பில் பிரதிபலிக்கக் கூடிய வகையில் அமையவில்லை என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

மின் அரங்கத்திலேயும் நமது தொழிற்சங்க வளர்ச்சி என்பது தமிழகம் முழுவதும் ஒரே சீராக அமையவில்லை என்பதை மண்டல வாரியாக நமது ஸ்தாபன பலத்தை பரிசீலிக்கின்ற போதே தெரிந்து கொள்ள முடியும்.

அதாவது சென்னை வடக்கு மண்டலம் 2697உறுப்பினர்கள், சென்னை தெற்கு மண்டலம் 2700, வேலூர் மண்டலம் 2507, விழுப்புரம் மண்டலம் 3455, திருச்சி மண்டலம் 2825, கோவை மண்டலம் 1925, ஈரோடு மண்டலம் 3718, நெல்லை மண்டலம் 4129, மதுரை மண்டலம் 2790,

என்ற அளவில் நமது மத்திய அமைப்பின் உறுப்பினர் எண்ணிக்கை அமைந்துள்ளது. இதில் கோவை, வேலூர் மண்டலங்கள் இன்னும் கூடுதல் வளர்ச்சியை நோக்கி செல்ல வேண்டியுள்ளது.

மின் ஊழியர் மத்திய அமைப்பை பொருத்த வரையில் ஏராளமான பணிகளை தொடர்ந்து செய்து கொண்டே உள்ளது. குறிப்பாக ஒரு கணிசமான ஊதிய உயர்வை பெற்றுத்தந்தது. மின் வாரிய பிரிப்பை கடைசி வரையில் தடுத்து நிறுத்துவதற்குண்டான நடவடிக்கையை எடுத்துவருவது ஒப்பந்த ஊழியர்கள், பகுதி நேர ஊழியர்கள் பிரச்சனைகள், கேட்டகிரி வாரியான ஊழியர்களை திரட்டுவது போன்றவற்றில் இதர சங்கங்கள் போலல்லாமல் மாறுபட்டு சிறப்பான பணியாற்றி வருகிறது. குறிப்பாக கடந்த சில ஆண்டுகளில் 20,000 க்கும் மேற்பட்ட ஒப்பந்த ஊழியர்களை நிரந்தரமாக்குவதற்கு நாம் எடுத்த முயற்சி, பகுதி நேர ஊழியர்களின் வாழ்க்கை நிலையை உயர்த்த நாம் எடுத்த முயற்சி இவைகள் முழுவதும் நமது ஸ்தாபன வளர்ச்சியில் ஒரளவே பிரதிபலித்துள்ளது. நமது மின் ஊழியர் மத்திய அமைப்பின் நிரந்தர உறுப்பினர்களில் ஒரு கணிசமான பகுதி மஸ்தூர், கம்பியாளர், கணக்கீட்டு பிரிவு ஊழியர்களாக உள்ளனர். இதர பகுதி ஊழியர்களை ஸ்தாபனமாக்குவதில் நாம் அதிக கவனம் செலுத்த வேண்டியுள்ளது. மஸ்தூர்கள், கணக்கீட்டாளர் 2ம் நிலை, பகுதி நேர ஊழியர்களை முழுமையாக ஸ்தாபனப்படுத்த வேண்டிய கடமையும் நம் முன்னால் உள்ளது.

நமது வெகுஜன ஸ்தாபனத்தில் சுமார் 28, 500 உறுப்பினர்கள் இருந்த போதிலும் அது நமது கட்சி ஸ்தாபன வளர்ச்சியில் பிரதிபலிக்கவில்லை. தமிழ்நாடு முழுவதும் கட்சி உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் இணைந்து 1392 பேர்களே உள்ளனர். இது சதவீத அடிப்படையில் பார்க்கும் போது 4.89 சதவீதமாக உள்ளது. நமது தொழிற்சங்க உறுப்பினராக உள்ளவர்கள் அனைவரையுமே நமது கட்சி அமைப்புக்குள் கொண்டு வருவது அவ்வளவு எளிதான காரியம் அல்ல. இருந்த போதிலும் கட்சி சம்மந்தமாக நமக்குள்ள கட்டமைப்பை பயன்படுத்தி விரிவாக்கத்திற்கு திட்டமிட்டு முயற்சித்தால் இந்த எண்ணிக்கையில் மாற்றத்தை உருவாக்க இயலும். குறைந்தபட்சம் 4.89 சதவீதம் என்பதை எல்லா மாவட்டங்களிலும் கட்சி வளர்ச்சியை மையமாக வைத்து செயலாற்றினால் இந்த ஆண்டு பரிசீலனை முடிக்கின்ற போது அதை 10 சதவீதமாக உயர்த்த வாய்ப்புகள் உள்ளன. மாநிலம் முழுவதும் இப்போதுள்ள கட்சி அமைப்பு சம்மந்தமான விவரங்களை விவாதத்திற்காக முன் வைக்கின்றோம்.

## விபரங்கள்

1. மாவட்ட வாரியாக பிராக்ஷன் & இடைகமிட்டிகள் உள்ள விபரங்கள்

| | | | |
|---|---|---|---|
| அ) | இடைக்கமிட்டிகள் | - | 8 |
| ஆ) | பிராக்ஷ்ன் | - | 11 |
| இ) | கட்சி உறுப்பினர்கள் எண்ணிக்கை | - | 1165 |
| ஈ) | பரிட்ச் சார்த்த உறுப்பினர்கள் | - | 227 |
| உ) | ஆதரவாளர்கள் (துணைக்குழு) | - | 394 |
| ஊ) | மாநிலம் முழுவதும் தீக்கதிர் விற்பனை | - | 649 |

இந்த விபரங்களை கொடுக்கும் போது 8 இடைக்கமிட்டிகளும், 11 பிராக்சன்களும் உள்ளன. காஞ்சிபுரம், கரூர், பெரம்பலூர், புதுக்கோட்டை, திருவாரூர், நாகப்பட்டினம், நீலகிரி, திருப்பூர்,

திருவள்ளூர், நாமக்கல் போன்ற மாவட்டங்களில் இடைக்கமிட்டியோ, பிராக்சனோ இல்லாத நிலையை ஆழ்ந்து பரிசீலித்து அவைகளை அமைப்பதற்குண்டான செயலில் ஈடுபட வேண்டி உள்ளது. மேலும் வட சென்னை அனல், காஞ்சிபுரம், திருப்பத்தூர், கரூர், புதுக்கோட்டை, நாகை, மதுரை மாநகர், நீலகிரி, திருப்பூர் போன்ற வட்டங்களில் கட்சி உறுப்பினர்களும், பரிட்சார்த்த உறுப்பினர்களும் சேர்ந்து 10 க்கும் குறைவாகவே உள்ளனர்.

பிராக்சனோ, இடைக்கமிட்டியோ இல்லாத மாவட்டங்களில் அவைகளை அமைப்பது, உறுப்பினர் எண்ணிக்கை 10க்கும் குறைவாக உள்ள இடங்களில் தனி கவனம் செலுத்தி ஆதரவாளர்களை சேர்ப்பது போன்ற நடவடிக்கைகள் நமது ஸ்தாபன விரிவாக்கத்திற்கு உதவும். குறிப்பாக அனைத்து வட்டங்களிலும் ஒப்பந்த தொழிலாளிகளிலிருந்து மஸ்தூர்களாக மாறியவர்கள் நமது முயற்சியால் பயன் அடைந்த பகுதி நேர ஊழியர்களை இலக்கு வைத்து குவியலாக ஆதரவாளர்களை சேர்ப்பதற்கான முயற்சியில் இறங்குவது இவை போன்ற நடவடிக்கைள் நமது ஸ்தாபன விரிவான இலக்கை அடைய உதவிகரமாக அமையும் என்பதை குறிப்பிட விரும்புகின்றோம்.

இந்த வழிகாட்டுதலின் அடிப்படையில் சமீப மாதங்களில் குவியலாக ஆதரவாளர்களை சேர்ப்பதற்குண்டான சிறுமுயற்சி நடைபெற்றுள்ளது. அதாவது 8.7.2012 அன்று தர்மபுரியில் சுமார் 100 தோழர்களை கொண்ட ஆதரவாளர் கூட்டம் நடத்தப்பட்டு அதில் தோழர் கே. கனகராஜ் மற்றும் ஆர். கருமலையான் அவர்களும் கலந்து கெண்டுள்ளனர். இதுபோன்ற ஆதரவாளர்கள் கூட்டம் மாநிலம் முழுவதும் நடத்தப்பட வேண்டும்.

தென் சென்னை இடைக்கமிட்டி முன் முயற்சி எடுத்து 40 பகுதி நேர பெண் ஊழியர்கள் உள்ளிட்ட சுமார் 175 தோழர்களுக்கு பல கட்டங்களில் கூட்டங்கள் நடத்தி ஆதரவாளர்களாக அடையாளம் காட்டப்பட்டுள்ளது.

சென்னை வடக்கு திட்டத்தில் பகுதி நேர பெண்களை ஆதரவாளர்களாக சேர்க்கும் ஒரு கூட்டம் நடத்தப்பட்டு அதில் 30 பேர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சென்னை மேற்கு திட்டத்தில் பகுதி நேர பெண்களை ஆதரவாளர்களாக சேர்க்கும் ஒரு கூட்டம் நடத்தப்பட்டு அதில் 30 பேர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். நாகையில் 13 பேர்கள் கொண்ட கட்சி ஆதரவாளர் கூட்டமும், புதுக்கோட்டையில் 9 பேர்கள் கொண்ட கட்சி ஆதரவாளர் கூட்டமும் நடந்துள்ளது.

சென்ற 19.8.2012 அன்று சேலம் மாவட்டத்தில் ஒரு குவியலான கட்சி ஆதரவாளர் கூட்டத்தை நடத்த முயற்சி எடுக்கப்பட்டது. ஆனால் கூட்டம் திட்டமிட்டவாறு ஆதரவாளர்களுக்கென்று தனிக் கூட்டமாகவும், ஏற்கனவே கட்சி உறுப்பினர்களுக்கென்று தனிக்கூட்டம் திட்டமிட்டவாறு நடத்திட முடியவில்லை. கலந்து கொண்ட 40 பேர்களில் 20 பேர்கள் ஏற்கனவே கட்சி உறுப்பினராக உள்ளவர்கள் 20 தோழர்களைத்தான் ஆதரவாளர்களாக அடையாளங் காணுவதற்கு கொண்டு வரப்பட்டது இருப்பினும் கூட்டம் திட்டமிட்டவாறு நடைபெற்றது. இந்த கூட்டத்திலும் மாநில செயற்குழு உறுப்பினர் தோழர் கே. கனகராஜ் அவர்களும், சேலம் மாவட்ட செயற்குழு உறுப்பினர் தோழர். வெங்கிடபதி அவர்களும் கலந்து கொண்டனர்.

23.9.2012 அன்று வேலூர், திருப்பத்தூர் ஆகிய இரு திட்டங்களையும் இணைத்து குவியலான ஆதரவாளர் கூட்டத்தை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. அந்த கூட்டத்திலும் மாநில செயற்குழு உறுப்பினர் தோழர் கே. கனகராஜ் அவர்களும் கலந்து கொள்ளவுள்ளார்கள்.

காஞ்சி, மதுரை போன்ற திட்டங்களிலும் இப்படிப்பட்ட கூட்டங்களை நடத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்போது ஏற்பட்டுள்ள இந்த உத்வேகத்தை தமிழகம் முழுவதும் கொண்டு சென்றால் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் மாநில பிராக்சன் முன் முயற்சி எடுத்து சுமார் 750 தோழர்களை ஆதரவாளர்களாக அடையாளம் காட்ட முடியும் என்ற நம்பிக்கையுள்ளது. கலந்து கொண்டுள்ள தோழர்கள் இந்த முயற்சியை அமல்படுத்துகின்ற வகையில் கருத்துக்களை பகிர்ந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறோம்.

## தீக்கதிர்

தமிழகம் முழுவதும் மின் அரங்கத்தில் தீக்கதிர் கொண்டு செல்வது சம்மந்தமாக கிடைத்த விபரங்களின் அடிப்படையில் பார்க்கும் போது 649 தீக்கதிர் மின் அரங்கத்தில் விநியோகிக்கப்படுவதாக தெரிகிறது. மின் அரங்கத்தில் உள்ள கட்சி உறுப்பினர்களில் ஒரு பகுதியினர் கூட தீக்கதிர் வாங்குவதாக தெரியவில்லை. அனைத்து கட்சி உறுப்பினர்களையும் தீக்கதிர் வாங்கச் செய்வதோடு தீக்கதிர் பொன்விழா ஆண்டை முன்னிட்டு தீக்கதிர் நாளிதழை மின் அரங்கத்தில் விரிவாக கொண்டு செல்ல வேண்டி உள்ளது. அதற்கு திட்டமிடும் வகையில் தீக்கதிர் விரிவாக்கம் என்பதை மத்திய அமைப்பின் மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் வைத்து விவாதிக்கப்பட்டு இந்த ஆண்டு இறுதியில் நடைபெற உள்ள மத்திய அமைப்பின் மாநில மாநாட்டுக்கு முன்னர் 1000 தீக்கதிரை மின் அரங்கத்தில் கொண்டு செல்வதென முடிவெடுத்து திட்டவாரியான அதற்னெ கோட்டாக்கள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அதன் நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. மத்திய அமைப்பின் சில கிளைகள் இதற்கான பணியில் ஈடுபட்டு கிளை பேரவைகள் நடைபெறுகின்றபோது இந்த கோட்டாக்களை முடிப்பதற்குண்டான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. உதாரணமாக 8.9.2012 அன்று கடலூர் மின் விநியோக வட்டத்தின் கிளை மாநாடு நடைபெற உள்ளதையொட்டி அவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட முழுவதுமாக முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இது போன்ற நடவடிக்கைகளை அனைத்து கிளைகளிலும் எடுக்கின்றபோது தீக்கதிர் கோட்டாவை எளிதாக முடிக்க வாய்ப்புள்ளது.

## லெவி

மின் அரங்கதில் உள்ள கட்சி உறுப்பினர்கள் மத்தியில் லெவி வசூலில் சிறிது முன்னேற்றம் இருந்த போதிலும். மத்திய குழுவால் நிர்ணயிக்கப்பட்டுள்ள லெவியை வசூலிப்பதில் பெருத்த இடைவெளி உள்ளது இந்த இடைவெளியை போக்குகின்ற வகையில் மத்திய குழு நிர்ணயித்த லெவியை வசூலிக்க முயற்சி எடுக்க வேண்டியுள்ளது. வசூலாகும் லெவியில் மாநில உபகுழுவிற்கு வழங்க வேண்டிய 25% லெரவியை அனைத்து இடைக்கமிட்டி/பிராக்ஷன்களும் வழங்குவதை உறுதிப்படுத்த வேண்டும்.

## கிளைக் கூட்டங்கள்

மின் அரங்கத்திலும் கட்சிக்கிளைக் கூட்டத்தை கூட்டுவதில் பெரிய சுணக்கமும், தேக்கமும் உள்ளது. இரு மாதத்திற்கு ஒரு முறை கூடுகின்ற கிளைகளும், ஆறு மாதத்திற்கு ஒரு முறை கூடுகின்ற கிளைகளும், புதுப்பித்தலுக்காகவே கூடுகின்ற கிளைகளும் உள்ளன. இந்த சுணக்கங்களை அகற்றி குறைந்தபட்சம் 2 மாதத்திற்கு ஒரு முறையாவது கிளைக் கூட்டத்தை நடத்துவதற்குண்டான ஏற்பாட்டை செய்ய வேண்டியுள்ளது.

தோழர்களே! மின் அரங்கத்தில் கட்சியின் செயல்பாடு விரிவாக்கம் சம்மந்தமாக ஒரு சிறிய குறிப்பு உங்கள் முன்னால் வைக்கப்பட்டுள்ளது. இதன் மீது தங்களது ஆழ்ந்த கருத்துக்களை எடுத்துச் சொல்லி இந்த அறிக்கையை முழுமைப்படுத்துவதோடு கட்சி விரிவாக்கத்திற்கு வழிவகுக்க வேணுமாய் கேட்க்கொள்கிறோம்.

# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் : 158 / CPT அங்கீகாரம் பெற்றது இணைப்பு : CITU & EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005

Telephone No: 044-28548529
Fax No: 044-28516574

CITU

Email: coteecitu_hqchennai@yahoo.com
coteecitu@gmail.com


**சுற்றறிக்கை எண் 22/2012** **நாள் : 06/09/2012**

பெறுநர்
மத்திய அமைப்பின் நிர்வாகிகள், கிளை செயலாளர்கள்,
செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள்.

அன்பான தோழரே, வணக்கம்,

## ஊதிய உயர்வு பேச்சுவார்த்தை

1.12.2011 முதல் மின்வாரிய ஊழியர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஊதிய உயர்வுக்கான பேச்சு வார்த்தை மின் ஊழியர் மத்திய அமைப்பு எடுத்த முன் முயற்சி விளைவாக 1.9.2012 அன்று நடைபெற்றது. அப்பேச்சு வார்த்தையில் மின் ஊழியர் மத்திய அமைப்பு சார்பாக தோழர்கள் எஸ்.எஸ். சுப்ரமணியன், கே.விஜயன், டி. கோவிந்தராஜு, பி. கண்ணன். எம். வெங்கடேசன், இ. அந்தோணி, கே.ரவிச்சந்திரன், டி. அறிவழகன், எம். தனலெட்சுமி மற்றும் ஏ. பழனி ஆகியோரும், வாரிய தரப்பில் இயக்குநர் நிதி (பேச்சு வார்த்தைக்குழு தலைவர்), நிர்வாக இயக்குநர்/டிரான்டிரான்ஸ்கோ, இயக்குநர்/உற்பத்தி, இயக்குநர்/ விநியோகம், செயலாளர், தலைமை பொறியாளர்/ பணியமைப்பு, தலைமை நிதி கட்டுபாட்டு அலுவலர் / பொது டான்ஜெட்கோ அவர்களும் கலந்து கொண்டனர்.

பேச்சு வார்த்தையில் கலந்து கொண்ட நாம் 9 மாதங்களுக்கு பின்னர் கால தாமதமாக இப்பேச்சு வார்தை நடைபெற்றபோதும் பேச்சு வார்த்தையை தொடர்ந்து நடத்தி விரைவில் ஒப்பந்தம் காண வேண்டும் என்று வலியுறுத்தினோம். மேலும் ஊதிய உயர்வு கோரிக்கை சம்மந்தமாக பேச்சு வார்த்தை துவங்குவதற்கு முன்னர் சென்ற ஊதிய உயர்வு ஒப்பந்தத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட 15 அம்சங்கள் மீது உடனடியாக தீர்வுக்காண வலியுறுத்தினோம்.

.அனல் மின் நிலைய ஊழியர்களின் பதவி உயர்வு சம்மந்தமாக வாரிய உத்தரவை தொடர்ந்து எழுந்துள்ள பிரச்னையான பதவு உயர்வுக்கு மாநில அளவில் உள்ள பதவிகளான தொழில்நுட்ப உதவியாளர், டெஸ்டர், கெமிக்கல், வாகன ஒட்டுநர் போன்றவைகளை கணக்கில் கொள்ளாமல் ஒப்பந்தத்தில் அனுமதிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் பதவி உயர்வு வழங்கிட வேண்டும் என்று நாம் வலியுறுத்தினோம். இதன் மீது 7.9.2012 அன்று நடைபெற உள்ள ஊதிய உயர்வு குழுவில் பேசி முடிவு எடுக்கப்படும் என்று வாரிய தரப்பில் பதில் அளிக்கப்பட்டுள்ளது.

பொதுக்கட்டுமான வட்டம், சிவில் பிரிவுகளிலுள்ள ஊழியர்களின் பதவி உயர்வு சம்மந்தமாக உடனடியாக பேச்சு வார்த்தை நடத்தி முடிவுக்கு வரலாம் என்று வாரிய தரப்பில் பதில் அளிக்கப்பட்டது.

புனல் மின் திட்டத்தில் மின்பாதையாளர், அதற்கு சமமான பதவிகளை மின் பாதை ஆய்வாளர் அதற்கு சமமான பதவிகளுக்கு அப்கிரேடு செய்வது, ரீடிப்ளாய்மெண்ட் மூலம் பதவிகளை நிரப்புவதை மறு பரிசீலனை செய்தல், பதவி உயர்வு வாய்ப்புக்களை உருவாக்குவது போன்றவைகள் சம்மந்தமாக உடனடியாக அந்த குழுக்கூட்டங்களை நடத்தி முடிவு செய்யலாம் என்று வாரிய தரப்பில் பதில் அளிக்கப்பட்டுள்ளது.

வரைவாளர், தலைமை வரைவாளர், ஸ்டாப் நர்ஸ், தொழில் நுட்ப உதவியாளர், தட்டச்சர், சுருக்கெழுத்தர், டெஸ்டர் கெமிக்கல், பதிவறை எழுத்தர் போன்ற பிரிவு ஊழியர்களுக்கு அரசு ஊழியர்களுக்கு அளித்ததை போல ஊதியம் அளிப்பது, விநியோக வட்டங்களில் மீதமுள்ள

கோட்டங்களுக்கு உதவி நிர்வாக அலுவலர், கணக்கீட்டு அலுவலர், பதவிகளை அனுமதிப்பது, 1.12.2002 முதல் சிறப்பு நிலை பதவி அனுமதிக்கப்பட்டதினால் சில இளையவர்கள், மூத்தவர்களை விட அதிக சம்பளம் பெறும் நிலையை போக்குவது, மின் வாரிய ஊழியர்களின் பதவி உயர்வு தேக்க நிலையை அகற்றும் வகையில் பணிக்காலத்தில் 3 பதவி உயர்வுகளை உத்தரவாதப்படுத்துவது, வேலை பளு ஒப்பந்தத்திற்கு உட்படாத பகுதியில் பணியாற்றும் ஊழியர்களுக்கு பதவி உயர்வு வாய்ப்புகளை உருவாக்குவது.

1982 இல் பணியமர்த்தப்பட்ட மதிப்பீட்டாளர்களின் ஒப்பந்த காலத்தை ஓய்வூதியம் கணக்கீடு செய்வதற்கு சேர்த்துக் கொள்வது, பயிற்சி காலத்தை அனைவருக்கும் ஒரே அளவு பயிற்சி காலமாக நிர்ணயிப்பது, பயிற்சி காலத்திற்கு அளிக்கப்படும் தொகுப்பூதியத்தை ரூ.4000/- ஆக உயர்த்தி அளிப்பது. விடுபட்டு போன ஒப்பந்த ஊழியர்களை பணி நிரந்தரம் செய்வது, தேர்வு நிலை ஊழியர்களுக்கு பதவி உயர்வுக்கான சம்பளத்தில் பொருத்தம் செய்வது, தமிழக அரசின் ஒரு நபர் குழுவின் பரிந்துரையை மின் வாரியத்தில் அமல்படுத்தி, பொருத்தமான பணியாளர்களுக்கு பணப்பயன் கிடைக்க செய்வது போன்றவைகள் சம்மந்தமாக நமது தரப்பில் வலியுறுத்தப்பட்டது. இவை சம்மந்தமாக வாரியம் பரிசீலித்து பதில் அளிப்பதாக பேச்சு வார்த்தையில் தெரிவித்தனர்.

ஊதிய உயர்வு சம்மந்தமாக நாம் வைத்த கோரிக்கையின் நியாயத்தை எடுத்து வைக்கும் வகையில் மின் பற்றாக்குறை, ஊழியர்கள் பற்றாக்குறை இருந்த போதிலும் இருக்கின்ற மின் வாரிய ஊழியர்கள் அர்ப்பணிப்பு உணர்வோடு மக்கள் சேவை ஆற்றி வருவதை கணக்கில் கொள்ள வேண்டும். மேலும் மின் வாரியத்தில் அனுமதிக்கப்பட்ட பதவிகளில் 55000 க்கும் மேற்பட்ட காலி பணியிட பணிகளையும் சேர்த்து மின் வாரியத்தில் இருக்கும் அதிகாரிகள், பொறியாளர்கள், ஊழியர்கள், ஒப்பந்த தொழிலாளர்கள் பணியாற்றித்தான் இந்தியாவிலேயே தமிழகத்தில் அதிக அலகுகளை (1040 அலகுகள்) மின் நுகர்வோர்கள் நுகரும் அளவுக்கு மின் வாரிய ஊழியர்கள் பணியாற்றி வருகிறார்கள்.

தானே புயல் போன்ற இயற்கை பேரிடர்களும், அனல் மின் நிலையங்களில் அடிக்கடி நிகழும் தொடர் தீ விபத்து பாதிப்புகளையும் உடனுக்குடன் சரி செய்து அந்த பேரிடர் நடந்த அடிச்சுவடே இல்லாத நிலைக்கு மின் வாரிய ஊழியர்கள் பணியாற்றியுள்ளதையும் கணக்கில் கொண்டு ஊதிய உயர்வை வழங்கிட வேண்டும் என கோரினோம்.

மேலும் இந்த ஊதிய உயர்வு பேச்சு வார்தையில் கலந்து கொள்ளும் அதிகாரிகள் ரயில்வே துறையில் ஊழியர்களுக்கு ஊதியமாக மொத்த செலவில் 37% சதவீதமும், தேசிய அனல் மின் கழகத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்கு 25% சதவீதமும் ஊதியத்திற்காக செலவிடுகின்ற போது தமிழக மின் வாரிய ஊழியர்களுக்கு 15% சதவீதம் மட்டுமே ஊதியம் மற்றும் ஊழியர்களின் நலன்களுக்கு செலவிடப்படுவது நியாயம் வழங்குவதாக அமையுமா? என்பதை பரிசீலிக்க வேண்டுமாறும் கோரினோம்.

மின்வாரிய ஊழியர்கள் ஏற்கனவே கூடுதல் பணிச்சுமையை தாங்கி பணியாற்றி வருவதால் ஊதிய உயர்வோடு வேலை பளுவை இணைக்ககூடாது என்றும் நாம் ஏற்கனவே வைத்த கோரிக்கைகளில் முக்கியமான அம்சங்களான அடிப்படை சம்பளத்தில் 50% சத ஊதிய உயர்வு, மஸ்தூர், அசசர் இரண்டாம் நிலை பதவிகளை அகற்றுதல், குறைந்த பட்ச பணப்பயன் ரூ. 5000 த்தை உறுதிப்படுத்துதல், ஆண்டு உயர்வு 5% சதவீதமாக வழங்குதல், சர்வீஸ் வெயிட்டேஜ் 7, 14, 21 மற்றும் 30 ஆகிய ஆண்டுகளில் பணிமுடித்தவர்களுக்கு ஒவ்வொரு நிலையிலும் ஒரு ஆண்டு உயர்வு வழங்க வேண்டும் என்றும், மத்திய அரசு ஊழியர்களுககு வழங்குகின்ற பஞ்சப்படியை தொடர்ந்து வழங்கிட வேண்டும்.

மின் வாரியத்தில் பணியாற்றி விடுபட்டுபோன ஒப்பந்த தொழிலாளிகளை அடையாளங்கண்டு பணி நிரந்தரம் செய்வதோடு அவர்களுக்கு வழங்கப்படும் தினக்கூலியை சம வேலைக்கு சம ஊதியம் என்ற அடிப்படையில் கள உதவியாளர் ஒரு நாள் பெறும் ஊதியத்தை ஒப்பந்த தொழிலாளர்களுக்கு ஊதியமாக வழங்கிட வேண்டும். மின் வாரியம் தொடர்ந்து பொதுத்துறையாக செயலாற்றிடும் வகையில் மின்சார சட்டம் 2003 இல் மாற்றம் கொண்டு வருவதற்கு உரிய பரிந்துரையை மத்திய அரசுக்கு வழங்க வேண்டும் என்பன போன்ற கோரிக்கைகள் நமது தரப்பில் வலியுறுத்தப்பட்டது. நாம் முன் மொழிந்த கோரிக்கைகளை வாரியம் உள் வாங்கிக் கொண்டதோடு இதர தொழிற் சங்கங்களின் கோரிக்கைகளையும் கேட்டுப் பெற்று அடுத்த சுற்றுப்பேச்சு வார்த்தை நடத்தப்படும் என்று பதில் அளிக்கப்பட்டது.

2009 ஐ போல கணிசமான ஊதிய உயர்வு கிடைக்க வேண்டுமானால் நாம் ஏற்கனவே திட்டமிட்டவாறு செப்டம்பர் 25, 26 மற்றும் 27 தேதிகளில் நாம் நடத்தவுள்ள ஊதிய உயர்வு கோரிக்கை பிரச்சாரத்தில் கோரிக்கையின் நியாயத் தன்மையை மின் வாரிய ஊழியர்களின் சொந்த கோரிக்கையாக மாற்றுவதின் மூலமே இதில் முன்னேற்றம் காண இயலும் என்ற அடிப்படையில் நமது மாநிலம் தழுவிய பிரிவு வாரியான பிரச்சாரம் அமைய வேண்டுமென கேட்டுக் கொள்கிறோம். (நோட்டீஸ் நகல் இத்துடன் இணைப்பட்டுள்ளது)

## மின் வாரிய பிரிப்பு

தமிழக மின் வாரிய பிரிப்பு அறிவிப்பை வேகப்படுத்தி நடைமுறைபடுத்துகின்ற வகையில் மின் விநியோக திட்ட கட்டுப்பாட்டில் உள்ள 66 கே.வி., 110 கே.வி, கிரிட்டு மற்றும் கிரிட்டு அல்லாதது, 230 கே.வி,. துணை மின் நிலையங்களை அங்கு பணியாற்றும் ஊழியர்களோடு டிரான்டிரான்ஸ்கோ மேற்பார்வை பொறியாளர் / இயக்குதல் அவர்களின் கட்டுபாட்டிற்கு 31.8.2012 க்குள் ஒப்படைத்திட வேண்டும் என்று 6..8.2012 இல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. மத்திய அமைப்பை பொருத்த வரையில் மின் வாரிய பிரிப்பை அமலாக்கம் சம்மந்தமான நீதிமன்ற வழக்கு உள்ளதையும் சுட்டிக்காட்டி பிரிப்பை அமல்படுத்துவதில் வேகம் காட்ட வேண்டாம் என்று நாம் வலியுறுத்தியதின் அடிப்படையில் இந்த மாற்றங்களை தற்காலிகமாக நிறுத்தி வைக்குமாறு வாரியம் உத்தரவு பிறபித்துள்ளது. இந்த பின்னணியில் மின் வாரிய பிரிப்புக்கு எதிராக நாம் பிரச்சாரத்தை தொடர்ந்து கொண்டு செல்ல வேண்டியுள்ளது.

## கூட்டுறவு நாணய சங்க தேர்தல்

தமிழகத்தில் கூட்டுறவு அமைப்புகளுக்கு தேர்தல் நடத்துவதற்கான ஏற்பாடுகளை தமிழக அரசு செய்து வருகிறது. அந்த அடிப்படையில் மின் வாரியத்தில் செயல்படும் கூட்டுறவு நாணய சங்கங்கள் வெகு சீக்கிரத்தில் இயக்குநர் பதவிகளுக்கு தேர்தல் வர வாய்ப்பு உள்ளது. தற்போது அனைத்து கூட்டுறவு அமைப்புக்களிலும் அதன் மகாசபைகளை நடத்தி 2006 இல் உறுப்பினர் சேர்ப்புக்கு விதிக்கப்பட்ட தடையை ரத்து செய்து உறுப்பினர்களை சேர்ப்பதற்குண்டான வழிகாட்டுதலை அரசு உத்தரவாக வழங்கியுள்ளது. அந்த அடிப்படையில் 2012 செப்டம்பர் 21க்குள் மகாசபை நடத்தி புதிய உறுப்பினர்கள் சேர்க்க திட்டமிட்டுள்ளதாக தெரிய வருகிறது வட்டங்களில் கூட்டுறவு நாணய சங்க மகாசபைகளை நடத்திடவும், உறுப்பினர் சேர்ப்பை உறுதிப்படுத்துவதற்குண்டான நடவடிக்கையில் நமது கிளைகளும் ஈடுபட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

கூட்டுறவு நாணய சங்க தேர்தலில் நாம் பங்கு பெறுவதும், வெற்றி காண்பதும் நமது ஸ்தாபன பலத்தை ரகசிய வாக்கெடுப்பு மூலம் உறுதி செய்வதற்கு ஒரு வாய்ப்பாகும் என்ற அடிப்படையில் இந்த நாணய சங்க தேர்தலில் நாம் பங்கு பெற்று வெற்றி பெறுவதற்குண்டான தயாரிப்பு பணிகளில் ஈடுபட வேண்டுமென கேட்டுக் கொள்கிறோம்.

## ஒப்பந்த தொழிலாளர் தேசீய கருத்தரங்கு

இந்திய நாடு முழுவதும் மின்சார துறையில் உள்ள ஒப்பந்த தொழிலாளர்களின் உழைப்புச் சுரண்டலுக்கெதிராக ஒப்பந்த தொழிலாளிகளை அணி திரட்டுகின்ற வகையில் மண்டல வாரியான கருத்தரங்குகள் நடைபெற்று அதனுடைய தொடர் நிகழ்வாசக 31.8.2012 அன்று டெல்லியில் ஒப்பந்த தொழிலாளர்களின் தேசிய கருத்தரங்கு நடைபெற்றது. அத்தேசிய கருத்தரங்கில் இந்த நாடு முழுவதுதிலிருந்து 1000க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

தமிழகத்திலிருந்து 50 தோழர்கள் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டனர். இக்கருத்தரங்கினை அகில இந்த சிஐடியூ-வின் பொதுச் செயலாளர் தோழர் தபன் சென் துவக்கி வைத்தார். மாநாடு தீர்மானத்தை இந்திய மின் ஊழியர் கூட்டமைப்பின் அகில இந்திய செயலாளர் தோழர் பிரசாந்த் நந்தி சௌத்திரி முன்மொழிய மின் ஊழியர் மத்திய அமைப்பின் பொதுச் செயலாளர் தோழர் எஸ். எஸ். சுப்ரமணியன் உள்ளிட்ட 19 தோழர்கள் வழிமொழிந்து பேசினர்கள். இக்கருத்தரங்கில் சிஐடியூ-வின் அகில இந்திய தலைவர் தோழர் ஏ.கே. பத்மநாபன் அவர்களும் வாழ்ந்துரை வழங்கினர்.

இந்த தேசிய கருத்தரங்கில் 2012 நவம்பர் 21 ந்தேதியன்று மாநில தலைநகரங்களில் மின் வாரிய ஊழியர்கள் பெரும் திரளாக கலந்து கொள்ளும் தர்ணாவை நடத்துவதென்றும் அதன் பின்னர் இதர தொழிற்சங்க அமைப்புகளோடு கலந்து பேசி பாராளுமன்றம் நடைபெறும் போது பேரணிக்கு திட்டமிடுவது என்றும் முடிவு செய்யப்பட்டது இம்முடிவுகளை தமிழகத்திலும் நாம் எழுச்சிகரமாக அமல்படுத்த வேண்டியுள்ளது.

## கணக்கீட்டுப்பிரிவு குழுக்கூட்டம்

மின் வாரியத்தில் பணியாற்றுகின்ற கணக்கீட்டுப்பிரிவு ஊழியர்கள் நீண்ட நாள் தீர்க்கப்படாத கோரிக்கைகள், அன்றாடம் சந்தித்துக் கொண்டிருக்கும், பிரச்சனைகளின் மீது தொடர்ந்து வலியுறுத்தியும், பேசியும், கடிதம் கொடுத்தும் கவனம் செலுத்தாத வாரியத்தை வலியுறுத்துகின்ற வகையில் இயக்கத்திற்கு திட்டமிடும் கணக்கீட்டுப் பிரிவுக்குழு கூட்டம் சென்னையில் 3.9.2012 அன்று நடைபெற்றது. அக்கூட்டத்தில் கணக்கீட்டுப் பிரிவு ஊழியர்களின் பல்வேறு பிரச்சனைகள் சம்மந்தமாக விவாதிக்கப் பட்டது. கணக்கீட்டு ஊழியர்கள் பிரச்சனைகள் சம்மந்தமாக நாம் எடுத்த நடவடிக்கைள் அதில் ஏற்பட்ட மாற்றங்கள் ஆகியவற்றை ஊழியர்கள் மத்தியில் கொண்டு செல்ல திட்ட மிடப்பட்டது. மேலும் இப்பிரிவு சந்திக்கும் பிரச்சனைகள் சம்மந்தமாக வாரியத்திற்கு கடிதம் எழுதுவது, வாரியத்தை வலியுறுத்துகின்ற வகையில் அக்டோபர் மாதத்தில் மின் வாரிய தலைமையகத்திற்கு முன்னாள் ஒரு மாநிலம் தழுவிய இயக்கத்தை நடத்துவது என்று திட்டமிடப்பட்டுள்ளது.

## மின் வாரிய உழைக்கும் பெண்கள் ஒருங்கிணைப்புக்குழு

மின் வாரிய உழைக்கும் பெண்கள் ஒருங்கிணைப்புக்குழு கூட்டங்கள் பரவலாக நடைபெற்று வருகிறது. அதன் அடிப்படையில் 5.9.2012 அன்று இராமநாதபுரம் மின் விநியோக வட்டத்திலும், 7.9.2012ல் திருச்சியிலும், 8.9.2012 இல் நாகையிலும் பின்னர் நெல்லை, பெரம்பலூர், மதுரை, தஞ்சை ஆகிய வட்டங்களிலும் உழைக்கும் பெண்கள் ஒருங்கிணைப்புக்குழு வட்டங்கள் நடத்திட திட்டமிடப்பட்டு வருகிறது. ஏனைய கிளைகளும் உழைக்கும் பெண்கள் ஒருங்கிணைப்புக்குழுவை அமைப்பதற்கும், பெண்களை அணி திரட்டுவதற்கும் திட்டமிட வேண்டுகிறோம்.

## பேரவை - தணிக்கை

கோவையில் நடைபெறும் மத்திய அமைப்பின் மாநில மாநாட்டிற்கு முன்னர், திட்ட வாரியாக ஸ்தாபன பேரவைகளை நடத்தவும் முன்னதாக கிளையின் கணக்குகளை தணிக்கை செய்து முடிக்க வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது அந்த அடிப்படையில் பேரவைகளும், தணிக்கைகளும் நடைபெற்று வருகிறது ஏனைய கிளைகளும் பேரவையையும், தணிக்கையையும் நடத்தி முடிப்பதற்குரிய நடவடிக்கையில் ஈடுபடுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

## 2012 ஆம் ஆண்டு உறுப்பினர் சேர்ப்பு

2012 ஆம் ஆண்டு இதுவரையில் மாநில மையத்திற்கு 14000 உறுப்பினருக்கான ஈவுத் தொகையே வந்துள்ளது. பல கிளைகளில் சென்ற ஆண்டு உறுப்பினர் எண்ணிக்கையில் 50% சதவீதத்தைகூட எட்டாத நிலை உள்ளது. அதாவது தர்மபுரி, திருச்சி மாநகர், பெரம்பலூர், புதுக்கோட், தஞ்சை, மதுரை, இராமநாதபுரம், விருதுநகர், கன்னியாகுமரி, நீலகிரி, கோவை தெற்கு, கோவை வடக்கு, சேலம் போன்ற கிளைகள் 50% சதவீத உறுப்பினர் எண்ணிக்கை அடையாத கிளையாக உள்ளது. புதுக்கோட்டை, வடசென்னை அனல், எண்ணூர் அனல், காடம்பாறை உற்பத்தி, நெல்லை உற்பத்தி போன்றவைகள் இரு இலக்க உறுப்பினர் எண்ணிக்கையே சேர்த்துள்ளனர். இவை மட்டுமல்லாமல் மதுரை மாநகர், குந்தா உற்பத்தி, தலைமையகம், பொறியாளர் அமைப்பு போன்ற கிளைகளிலிருந்து மாநில மையத்திற்கு சந்தா ஈவுத் தொகையே ஒரு உறுப்பினருக்கு கூட இதுவரையில் வரவில்லை. உறுப்பினர் சேர்ப்பு சம்மந்தமான நிலைமையை விளக்கியுள்ளோம். சம்மந்தப்பட்ட கிளைகள் உறுப்பினர் சேர்ப்பில் தீவிர கவனம் செலுத்துபடி கேட்டுக் கொள்கிறோம்.

வாழ்த்துக்களுடன்
தோழமையுள்ள

(signature)

**(எஸ்.எஸ். சுப்பிரமணியன்)**
பொதுச் செயலாளர்.

**குறிப்பு**

வருவாய் மேற்பார்வையிலிருந்து கணக்கீட்டு அலுவலர் பதவிக்கு 88 பேர்களுக்கு வாரியம் தகுதிகாண் அறிக்கை கேட்டு கடிதம் அனுப்பியுள்ளது.

# மின் வாரிய ஊழியர்களின் ஊதிய உயர்வு பேச்சு வார்த்தையை விரைவுப்படுத்திடுக! நியாயமான ஊதிய உயர்வை வழங்கிடுக!

தமிழக மின் வாரிய ஊழியர்களுக்கு 1.12.2011 முதல் ஊதிய உயர்வு அளித்திருக்க வேண்டும். அரசும் வாரியமும் நடவடிக்கை எடுக்கவில்லை. ஊதிய உயர்வு பேச்சு வார்த்தைக்கான குழு அமைத்து சென்ற ஒப்பந்தத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட கோரிக்கைகளின் மீது பேச்சு வார்த்தை நடத்திடுக என 21.11.2011 அன்று மத்திய அமைப்பு வாரியத்திற்கு கடிதம் கொடுத்தது. 16.12.2011 இல் பேச்சு வார்த்தைக்கான குழு அமைத்தது, ஆனால் பேச்சு வார்த்தை துவக்கிட காலதாமதம் செய்தது.

ஊதிய உயர்வு பேச்சு வார்த்தை நடத்திடுக என்று 24.01.2012 அன்று பெருந்திரள் ஆர்ப்பாட்டமும் 26.04.2012 அன்று இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சி சட்டமன்ற உறுப்பினர் கே. பாலகிருஷ்ணன் அவர்கள் மின் வாரிய ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு வழங்கிடுக என்ற குரலை சட்டமன்றத்தில் ஒலிக்க, அமைச்சரும் பேச்சு வார்த்தைக்கான குழு அமைக்கப்பட்டுள்ளது. பேச்சு வார்த்தை நடத்தி விரைவில் ஊதிய உயர்வு வழங்கப்படும் என்ற வாக்குறுதியையும் அளித்தார்.

மின் வாரிய ஊழியர்களுக்கு வழங்க வேண்டிய ஊதிய உயர்வு சம்மந்தமான கோரிக்கை பட்டியலை தயாரித்து 23.06.2012 அன்று வெளியிட்டு 29.06.2012 அன்று மின்துறை அமைச்சரையும் வாரிய அதிகாரிகளையும் சந்தித்து கோரிக்கை பட்டியல் வழங்கி பேச்சு வார்த்தையை துவங்கிட வலியுறுத்தினோம்.

- மின் நுகர்வோர்களின் தேவைக்கேற்ப மின்சாரத்தை உற்பத்தி செய்து தடையின்றி வழங்கிடுக!
- மின்வாரிய ஊழியர்களின் பென்சன்தாரர்களின் உரிமைகளை பறிக்கும் மின் வாரிய பிரிப்பை மறு பரிசீலனை செய்திடுக!
- தாங்கமுடியா பணிச்சுமையை சுமந்து பணியாற்றும் ஊழியர்கள் மீது மீண்டும் ஒரு வேலை பளுவை சமத்தாதே!
- மின் வாரியத்தில் உள்ள காலி பணி இடங்களை நிரப்பி மக்கள் சேவையை தொடர்ந்திடுக!
- மின் வாரிய ஊழியர்களுக்கு அடிப்படை ஊதியத்தில் 50% ஊதிய உயர்வை வழங்கிடுக!
- குறைந்த பட்ச உயர்வாக ரூ.5000/- அளித்திடுக!
- ஆண்டு உயர்வு 5 சதவீதமாக வழங்கிடுக!
- சர்வீஸ் வெயிட்டேஜ் 7, 14, 21 மற்றும் 30 ஆண்டுகள் என வழங்கிடுக!
- வாரிய ஊழியர்களின் மொத்த பணிக்காலத்தில் 3 பதவி உயர்வு அளித்திடுக!
- பெட்ரோல் அலவன்ஸாக ரூபாய் 1500 வழங்கிடுக!
- அரசு அறிவித்துள்ள ஓய்வு, குடும்ப ஓய்வுகால சலுகைகளை வழங்கிடுக!

என்பன போன்ற நியாயமான கோரிக்கைகளை எழுப்பி உள்ளோம்.

2007 இல் மின் வாரிய ஊழியர்களுக்கு 40% சதவீதம் ஊதிய உயர்வாக அளிக்கப்பட்டது கடந்த 5 ஆண்டுகளில் பெட்ரோலிய பெருள்களின் விலை உயர்வு இல்லாத மாதமே இல்லை என்று சொல்லும் அளவிற்கு பெட்ரோலிய பெருள்களின் விலை உயர்வு அதனால் சாதாரண மக்கள் பயன்படுத்துகின்ற அனைத்து அத்யாவசிய பெருள்களின் விலையும் இறக்கை கட்டி பறக்கும் நிலை ஆட்சி மாற்றத்திற்கு பிறகு போக்குவரத்து, பால், மின் கட்டண உயர்வு இவைகளை தாங்கி பணியாற்றும் மின் வாரிய ஊழியர்கள் இப்போது கொடுக்கும் உயர்வோடு வருகின்ற 4 ஆண்டுகளில் ஏற்படும் மாற்றங்களை சந்தித்து சேவையை தொடர வேண்டிய நிலை. இந்த அடிப்படையில் நாம் வைத்துள்ள கோரிக்கைகள் நியாயமானதேயாகும்.

தமிழக மின் வாரியத்தில் 2009 இல் ஊதிய உயர்வு அளித்த போதே மின் வாரிய ஊழியர்களின் வேலை பளுவும், உயர்த்தப்பட்டது. வேலைபளு அதிகரிப்பின் அடிப்படையில் 2009 இல் கூடியுள்ள மின் இணைப்புகளுக்கான கூடுதலான பதவிகள் அனுமதிக்கப்பட்டதே தவிர, 2010,2011 ஆண்டுகளில் கூடியுள்ள மின் இணைப்புகளுக்கேற்ப பதவிகள் அனுமதிக்காத போதும் மின் வாரியத்தில் 55000க்கும் மேற்பட்ட பதவிகள் காலியாக உள்ளது. அந்த பணிச்சுமையை ஏற்று மின் வாரிய ஊழியர்கள் பணியாற்றுக்கின்ற காரணத்தால் வாரியத்திற்கு மாதத்திற்கு ரூ.57 கோடியே 20 லட்சம் செலவு வாரியத்திற்கு மிச்சமே. அதில் ஒரு பகுதியாகத்தான் நமது நியாயமான ஊதிய உயர்வு கோரிக்கையை முன்வைத்துள்ளோம்.

பொதுத்துறை நிறுவனங்களை ரயில்வே துறையில் அங்கு பணியாற்றும் ஊழியர்களுக்கு, ஊதியம் இதர சலுகைகளுக்காக அவர்களின் மொத்த செலவில் 37% சதவீதமும், தேசிய அனல் மின் கழகத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்கு ஊதியமும், இதர சலுகைகளுக்காக 25% ஒதுக்கின்ற போது மின் வாரியத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்கு 12% சதவீதமே ஊதியத்திற்காகவும், இதர சலுகைகளுக்காகவும் ஒதுக்கப்படுவது நியாயம்தானா? என்ற வினா எழுவதோடு இரயில்வே, தேசிய அனல் கழகம் போன்ற நிறுவனங்கள் ஊழியர்களின் நலன்களுக்காக ஒதுக்கப்படுவதைபோல மின் வாரிய ஊழியர்களுக்கும் உயர்த்தி வழங்கப்பட வேண்டும் என்ற நியாயமான குரலையே நமது கோரிக்கைப்பட்டியலில் வெளிப்படுத்தி உள்ளோம்.

தமிழக மின்சார வாரியத்தில் எரிபொருள் வாங்குவதற்கு 2010-11 ஆம் ஆண்டுகளில் 4643 கோடியும், மின்சாரம் கொள்முதல் செய்வதற்கு ரூ.19301 கோடியும் செலவிடுகின்ற மின்சார வாரியம் மின்பற்றாக்குறையும், ஊழியர்கள் பற்றாக்குறையும் இருக்கின்ற போதும் இருக்கின்ற ஊழியர்கள் பணிச்சுமையை சுமந்து பணியாற்றுகின்ற காரணத்தினால்தான் தமிழகத்தின் தனி நபர் மின் நுகர்வு 1040 அலகு என்று உயர்த்தி இருக்கும் மின் வாரிய ஊழியர்கள், ஊதிய இதர சலுகைகளுக்காக 3615 கோடி மட்டுமே பெற்று ஏமாந்து இருக்கும் நிலை தொடரலாமா? இதை மாற்றுகின்ற வகையில் தான் நாம் எழுப்பியுள்ள நியாயமான, கோரிக்கைகள் என நாம் உணர வேண்டும்.

தமிழக மின்சார வாரியத்தில் 10314 மெகாவாட் மின்சார உற்பத்தியும் 2 கோடியே 30 லட்சம் மின் நுகர்வோர்களும் 2 லட்சத்திற்கும் மேற்பட்ட மின் மாற்றிகளும் 1300க்கும் மேற்பட்ட துணை மின் நிலையங்களும் என்ற அளவில் மின் வாரியம் உயர்ந்து நிற்பதற்கு, ஊழியர்கள் பற்றாக்குறையோடு பணியாற்றுவதனால்தான், நாளும் விபத்துக்கள் ஏற்பட்டு மனித உயிர்களை பலியாக்கித்தான் மின்சார வாரியம் இன்று இந்தியாவிலேயே முதன்மையான மின்சார வாரியமாக உயர்த்தி உள்ளோம். இதை ஈடு செய்யும் வகையில்தான் நமது நியாயமான கோரிக்கைகளை முன் வைத்துள்ளோம்.

தமிழக மின் வாரிய ஊழியர்கள் தனது அன்றாட பணிகளை செய்கின்றபோதே புயல், பெருமழை, தீ விபத்து போன்ற இயற்கை பேரிடர்கள் ஏற்படும் போதெல்லாம் இவைகள் ஏற்பட்ட அடிச்சுவடே தெரியாத அளவிற்கு பணியாற்றும் பொறுப்பு மிக்க தொழிலாளர்கள் எழுப்பியுள்ள ஊதிய உயர்வு கோரிக்கை நியாயமான கோரிக்கையே.

மின் ஊழியர் மத்திய அமைப்பு எழுப்பியுள்ள கோரிக்கைகளை வென்றடைய இதை அனைத்து மின் வாரிய ஊழியர்களின் கோரிக்கைகளாக மாற்றச் செய்ய நாம் நடத்தும் செப்டம்பர் 25, 26, 27 தேதிய பிரச்சுரங்கள் அமைய வேண்டும் நாம் நடத்தும் பிரச்சாரமும், ஊழியர்கள் விழிப்புணர்வு பெற்று சிலிர்த்தெழுவதின் மூலமே நமது கோரிக்கையில் வெற்றி காண முடியும்.

ஊழியர்கள் விழிப்படையே நமது பிரச்சாரப் பயணம் வெல்லட்டும்.

CITU

**தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு**

**..................................கிளை**

# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் : 158 / CPT அங்கீகாரம் பெற்றது இணைப்பு : CITU & EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005

Telephone No: 044-28548529
Fax No: 044-28516574

Email: coteecitu_hqchennai@yahoo.com
coteecitu@gmail.com

CITU


**சுற்றறிக்கை எண் 23/2012** **நாள் : 28/09/2012**

பெறுநர்
மத்திய அமைப்பின் நிர்வாகிகள்,
கிளை செயலாளர்கள் மற்றும்
செயற்குழு உறுப்பினர்கள்.

அன்பான தோழரே,வணக்கம்

## ஊதிய உயர்வு

1.12.2011 முதல் மின்வாரிய ஊழியர்களுக்கு வழங்க வேண்டிய ஊதிய உயர்வுக்கான பேச்சு வார்த்தை நமது பெரும் முயற்சிக்கு பின்னர் 1.9.2012 அன்று நடைபெற்றது. இந்த பேச்சு வார்த்தையை ஒட்டி மின்வாரிய ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை, அவர்களின் பணிக்காலம் போன்ற விவரங்களை வாரியம் சேகரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது.

ஆனால் பொதுவாக வாரியம் தொடர்ந்து பேச்சு வார்த்தை நடத்தி ஊதிய உயர்வினை உடனடியாக வழங்கும் நிலையில் இருப்பதாக தெரியவில்லை. ஊழியர்கள் மத்தியிலும் தங்களுக்கு 1.12.2011 முதல் கிடைக்க வேண்டிய ஊதிய உயர்வை வலியுறுத்தி பெற வேண்டும் என்ற எண்ணமும் மேலோங்கி இருப்பதாக தெரியவில்லை.

வாரியத்திற்கும், ஊழியர்களுக்கும் இந்த எண்ணத்தை உருவாக்கி ஒரு கணிசமான ஊதியஉயர்வை பெற வேண்டுமானால் நாம் ஏற்கனவே திட்டமிட்டவாறு செப்டம்பர் 25,26 மற்றும் 27 தேதிகளில் நடத்திட முடிவெடுத்துள்ள ஊதிய உயர்வு கோரிக்கை பிரச்சாரத்தை முழுமையாக ஊழியர்கள் மத்தியில் கொண்டு செல்ல வேண்டும். பல திட்டங்களிலும் அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு பிரச்சாரம் துவங்கப்பட்டதாக செய்திகள் வந்து கொண்டுள்ளன.

## மின்வாரியம் பிரிப்பு

மின்வாரிய பிரிப்பை விரைந்து அமலாக்கும் விதமாக மின் தொடரமைப்பு கழகத்தை தனியாக செயல்படுத்துவதற்கான நடவடிக்கையில் வாரியம் ஈடுபட்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக மின் உற்பத்தி மற்றும் விநியோக கழகத்தில் இதுவரையில் செயல்பட்டு வந்த 66 கே.வி, 110கே.வி, 110 கே.வி. கிரிட், 230 கே.வி. துணை மின்நிலையங்களை டான்டிரான்ஸ்கோ -விற்கு மாற்றம் செய்து இந்த துணை மின்நிலையங்கள் உள்ளடங்கிய தொடரமைப்பு கழகத்திற்கு தேவையான ஊழியர்களின் எண்ணிக்கையை தன்னிச்சையாக வடிவமைத்து வாரிய குழுமத்தின் ஒப்புதல் பெற்று அதை உத்தரவாக பிறப்பித்துள்ளனர்.

அந்த உத்தரவினை பரிசீலிக்கின்ற போது 4793 பதவிகள் உபரியாக்கி 2988 பதவிகளை புதியதாக அனுமதித்து ஒட்டுமொத்தமாக 1805 பதவிகளை உபரியாக்கி உள்ளது தெரியவரும்.

வாரியம் பிறப்பித்த உத்தரவில் இளநிலை உதவியாளர் என்ற பதவியையும், உதவியாளர் பதவியையும் இணைத்து இளநிலை நிர்வாக அலுவலர் என்ற பதவியை உருவாக்கி அதற்கு குறைந்தபட்ச கல்வித் தகுதியாக ஏதாவது ஒரு பட்டம் பெற்றிருக்க வேண்டும் என்று நிர்ணயிப்பதின் மூலமாக பத்தாம் வகுப்பு, +2 பள்ளித் தேர்வில் தேர்வு பெற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு என்பது கிடைக்காது என்ற நிலை உருவாகியுள்ளது. அதுமட்டுமல்லாமல் களஉதவியாளர்களாக பணிநியமனம் பெற வேண்டியவர்கள் குறைந்தபட்ச கல்வித் தகுதியாக 10ம் வகுப்பும், ஐடிஐ-யும் படித்திருக்க வேண்டும் என்று நிர்ணயம் செய்வதின் மூலம் குறைந்த கல்வித் தகுதியுடையவர்கள் மின்வாரியத்தில் வேலை வாய்ப்பு பெறுவது என்பதை தடுக்கும் வகையில் அமைந்துள்ளது.

வாரியம் பிறப்பித்த உத்தரவின் மூலம் 2000க்கும் மேற்பட்ட இளநிலை பொறியாளர் 2ம் நிலை பதவிகளும், 500க்கும் மேற்பட்ட முகவர் முதல்நிலை பதவிகளும், 800க்கும் மேற்பட்ட எல்பர் / கம்பியாளர் பதவிகளும் உபரியாக்கப்பட்டுள்ளது.

மின்தொடரமைப்பு கழக வடிவமைப்பு சம்மந்தமாக வாரியம் அளித்துள்ள ஆலோசனையை முற்றிலுமாக நிராகரித்து தொடரமைப்பு கழக வடிவமைப்பு சம்மந்தமாக தொழிற் சங்கங்களோடு பேசியே முடிவுக்கு வரவேண்டும் என்ற அடிப்படையில் வாரியத்திற்கு கடிதம்கொடுக்கப்பட்டு பேசப்பட்டுள்ளது. வாரியத்திற்கு அளித்த கடிதத்தின் நகல் இம்மாத மின்கதிர்இதழில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

## கணக்கீட்டுப் பிரிவு ஊழியர்கள்<br>சென்னை தலைமையகம் முன் ஆர்ப்பாட்டம்

மின்வாரியத்தில் பணியாற்றும் கணக்கீட்டு பிரிவு ஊழியர்களுக்கு தீர்வுகாணாமல் - நீண்ட நாட்களாக தேங்கியுள்ள பல பிரச்சனைகள் உள்ளது. அதில் சில கோரிக்கைகளை மின்ஊழியர் மத்திய அமைப்பு கையிலெடுத்து முறையீடு செய்து மாற்றங்களை உருவாக்கியுள்ளது. கணக்கீட்டு பிரிவுஊழியர்களின் பதவி உயர்வுக்கு மட்டும் விதித்துள்ள தேவையற்ற நிபந்தனைகளை முற்றிலுமாக அகற்றிட வேண்டி நாம் முயற்சி எடுத்தோம்.

நிபந்தனைகளை முற்றிலுமாக ரத்து செய்வதற்கு பதிலாக சில நிபந்தனைகளை தளர்த்தியுள்ளது. இருப்பினும் தேவையற்ற நிபந்தனைகளை முற்றிலுமாக அகற்ற மின்ஊழியர் மத்திய அமைப்பு தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது. பதவி உயர்வு வாய்ப்பு என்பது கணக்கீட்டு பிரிவு ஊழியர்களுக்கு மிகமிக குறைவாகவே உள்ளது. இப்பிரிவு ஊழியர்கள் தன்னுடைய முழுமையான பணிகாலத்தில் ஒரேஒரு பதவி உயர்வோடு பணிஓய்வு பெறுகின்ற அவலநிலை சில பத்தாண்டுகளாக நீடிக்கின்றது. 1982ல் பணியில் சேர்ந்த கணக்கீட்டாளர்களுக்கு பணியில் சேர்ந்த முதல் 1 1/2 ஆண்டு காலத்தை ஒப்பந்த காலம் என்று சொல்லி ஓய்வூதியம் கணக்கீடு செய்வதற்கு கூட கணக்கில் கொள்ள மறுத்து வருகிறது.

இப்பிரச்சனையில் மத்திய அமைப்பின் சமீபத்திய நடவடிக்கையின் வாயிலாக அந்த போக்கில் அசைவு என்பது ஏற்பட்டுள்ளது. மின்எரிப்பு கணக்கீடு எடுத்தல், பதிவு செய்யப்பட்ட விவரங்களை கணினிக்கு மாற்றுவது போன்றவற்றில் தொடர்ந்து குழப்ப நிலையே நீடிக்கின்றது.

கணக்கிட்டாளர் 2ம் நிலை ஊழியர்களின் 10.08.2007 ஒப்பந்தப்படி 6.9.12ல் 5 ஆண்டு காலம் பணி நிறைவு செய்துள்ளதை தொடர்ந்து அவர்கள் அனைவரையும் கணக்கீட்டாளர் என்று பெயர் மாற்றம்செய்து அதற்குரிய ஊதியமும் வழங்க வேண்டும் என்பன போன்ற கோரிக்கைகள் மீது தீர்வு காண்பதற்கு வாரியத்தின் கவனத்தை ஈர்க்கின்ற வகையில் 19.10.2012 அன்று சென்னை மின்வாரிய தலைமை அலுவலகத்திற்கு முன்னர் அப்பிரிவு ஊழியர்களை திரட்டி பெருந்திரள் ஆர்ப்பாட்டம்

நடத்துவதென்று கணக்கீட்டாளர் குழு கூட்டத்திலும், மாநில மைய்யத்திலும் அவசரத்தையொட்டி முடிவு செய்யப்பட்டுள்ளது. அந்த முடிவை வெற்றிகரமாக்கிட கிளைகள் உடனடி தயாரிப்பு வேலைகளில் ஈடுபட வேண்டுகிறோம்.

கணக்கீட்டு பிரிவு ஊழியர்களின் கோரிக்கைகளை வென்றடைவதில் மத்திய அமைப்பு எடுத்துள்ள நடவடிக்கைகளை அப்பகுதி ஊழியர்கள் மத்தியில் கொண்டு செல்லும் விதமாகவும், 19.10.2012 அன்றைய பெருந்திரள் ஆர்ப்பாட்டத்திற்கு தோழர்களை திரட்டுகின்ற வகையிலும் பல திட்டங்களில் அப்பிரிவு ஊழியர்களின் பேரவைகள் நடைபெற்று வருகின்றன.

30.09.2012ல் கோபியிலும், 3.10.2012 அன்று தஞ்சை, நாகையிலும், 5.10.2012 சென்னை மைய்யத்திலும் மற்றும் திருநெல்வேலியிலும், 06.10.2012 அன்று கன்னியாகுமரியிலும், 7.10.2012 உடுமலைபேட்டையிலும், 09.10.2012 சென்னை வடக்கிலும், 10.10.2012 அன்று சென்னை மேற்கிலும், 12.10.2012 சென்னை தெற்கிலும், 13.10.2012 கோவை மாநகரிலும் கணக்கீட்டு பிரிவு ஊழியர்களின் பேரவைகள் நடத்திட திட்டமிடபட்டுள்ளது. சமீபத்தில் கூட திருவண்ணாமலை திட்டத்தில் அப்படிப்பட்ட ஊழியர்கள் கூட்டத்தில் 100க்கும் மேற்பட்ட கணக்கீட்டுப் பிரிவு ஊழியர்கள் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

இந்த பின்னணியில் கணக்கீட்டு பிரிவு ஊழியர்களின் பேரவையை நடத்தாத கிளைகள் பேரவைகளை நடத்தி நாம் எடுத்த நடவடிக்கைகளை அப்பகுதி ஊழியர்கள் மத்தியில் கொண்டு செல்வது அதே நேரத்தில் 19.10.2012 இயக்கத்திற்கு ஊழியர்களை திரட்டுவதற்குண்டான நடவடிக்கையிலும் ஈடுபட வேண்டுகிறோம். ஆர்ப்பாட்டத்துக்கான போஸ்டர் மாநில மையம் சார்பில் அச்சிட்டு கிளைகளுக்கு அனுப்பி வைக்கப்படும். நோட்டீஸ் நகல் இத்துடன் இணைக்கப் பட்டுள்ளது. கிளைகள் தேவையான அளவு அச்சிட்டு பரவலாக விநியோகம் செய்திட கேட்டுக் கொள்கிறோம்.

## பஞ்சப்படி வழக்கில் வெற்றி

1.1.2002 மற்றும் 1.7.2002 ஆகிய தேதிகளில் முறையே வழங்க வேண்டிய 4% மற்றும் 3% பஞ்சப்படி உயர்வை வழங்காமல் மின் வாரியத்தில் உள்ள ஒப்பந்த சரத்துக்கு மாறாக 1.10.2002 முதல் மட்டுமே பஞ்சப்படி உயர்வினை வாரியம் அறிவித்து வழங்கியது, அதற்கு காரணம் தமிழக அரசு அதன் ஊழியர்களுக்கு பஞ்சப்படி உயர்வினை 1.10.2002 முதல் தான் வழங்கியது. அந்த அடிப்படையில் தான் மின்வாரிய ஊழியர்களுக்கும் வழங்க முடியும் என்று வாதிட்டு 1.10.2002 முதல் வழங்கிய பஞ்சப்படியை நியாயப்படுத்தியது. ஆனால் அதை நாம் ஏற்றுக் கொள்ளவில்லை. 1998 ஆம் ஆண்டு ஏற்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் 1.1.2002 மற்றும் 1.7.2002 ஆகிய கட்டங்களில் உயருகின்ற விலைவாசி புள்ளிக்கேற்ப பஞ்சப்படி வழங்கப்பட வேண்டும் என்று வாரியத்தோடு முறையிட்டதுமல்லாமல் 2003ல் நீதிமன்றத்தை நாடினோம்.

9 ஆண்டுகளுக்கு பிறகு நீதிமன்றத்தில் 14.09.2012 அன்று நியாயம் கிடைத்துள்ளது. மின்வாரிய ஊழியர்களுக்கு பஞ்சப்படி வழங்குவது என்பது ஒப்பந்தத்தின் அடிப்படையில் வழங்க வேண்டுமே தவிர தமிழக அரசு ஊழியர்களுக்கு வழங்குவதை மேற்கோள் காண்பித்து வழங்க முடியாது என்று சொல்லி மின்வாரிய ஊழியர்களுக்கு 1.1.2002 மற்றும் 1.7.2002 மொத்தம் 7% பஞ்சப்படியை நிலுவைத் தொகையோடு வழங்கிட வேண்டும் என்ற தீர்ப்பினை அளித்துள்ளது. இதில் மின்வாரிய ஊழியர்களுக்கு கிடைக்கும் பணப்பயனைவிட ஒப்பந்த சரத்தை அடிப்படையாக கொண்டு தான் பஞ்சப்படி வழங்கிட வேண்டும் என்ற கொள்கை ரீதியான தீர்ப்பினை நாம் பெற்றுள்ளோம். இதை ஊழியர்கள் மத்தியில் நமக்கு கிடைத்த வெற்றியாக கொண்டு செல்ல நடவடிக்கை எடுத்திட வேண்டுகிறோம்.

## கூட்டுறவு நாணய சங்க தேர்தல்

கூட்டுறவு நாணய சங்க தேர்தல் இந்த ஆண்டு இறுதியில் அல்லது 2013 ஆம் ஆண்டு துவக்கத்தில் நடத்தப்படலாம் என எதிர்பார்க்கப்படுவதையும் அந்த கூட்டுறவு நாணய சங்க தேர்தலை நாம் எதிர்கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் சென்ற சுற்றறிக்கையில் குறிப்பிட்டிருந்தோம்.தேர்தலை சந்திப்பதற்கான உறுப்பினர் சேர்ப்பு என்பது நடைபெற்று வருகிறது. அதற்கான பேரவைகள் நடத்துவதில் அதிமுக தொழிற் சங்கம் தலையிட்டு பலமுறைகேடுகளை செய்ய முயற்சித்து வருகின்றது. அதையொட்டி பல திட்டங்களில் நமது தலையீடு பலமாக உள்ளதோடு முறைகேடுகளை சரிசெய்து உறுப்பினர் சேர்ப்பதற்குண்டான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. இதுவரையில் இப்பிரச்னையில் கவனம் செலுத்தாத கிளைகள் உடனடியாக இதில் கவனம் செலுத்திட வேண்டுகிறோம்.

25.05.2001 தேதிக்கு பின்னர் பதிவு செய்யப்பட்டுள்ள 'B' கிரேடு உறுப்பினர்கள் அனைவரையும் வாக்களிக்கும் உரிமை பெற்ற 'A' கிரேடுஉறுப்பினர்களாக மாற்றம் செய்யும் தீர்மானத்தை சம்மந்தப்பட்ட நாணய சங்கங்கள் பேரவை நடத்தி தீர்மானம் நிறைவேற்றுவதை உறுதிப்படுத்த வேண்டுகிறோம்.

வாழ்த்துக்களுடன்
தோழமையுள்ள

**(எஸ்.எஸ். சுப்பிரமணியன்)**
பொதுச் செயலாளர்.

## செய்திகள்

1. *ஏற்கனவே வாரிய குழுமத்தால் அனுமதிக்கப்பட்ட ரூ. 120/- தினக்கூலி பெறும் 4037 ஒப்பந்த தொழிலாளர்களும், 226 தினக்கூலி தொழிலாளர்களும் மஸ்தூர் பயிற்சியாக பணிநியமனம் செய்வதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது. இந்த வார இறுதியில் அதற்கான உத்தரவுகள் வெளிவர வாய்ப்புள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.*

2. *அனல் மின்நிலைய பதவி உயர்வு சம்மந்தமாக வாரிய தலைமை அலுவலகத்தில் இருந்து வழங்கப்பட வேண்டிய விளக்கம் இன்னும் சில தினங்களில் வெளியாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.*

3. *தொழில்நுட்ப உதவியாளர் ஊள்முக தேர்வில் கணக்கீட்டாளர் இரண்டாம் நிலை, எல்பர் கம் - மீட்டர் ரீடர்களையும் இணைத்து தேர்வு செய்து பட்டியல் வெளியிட தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*

4. *களப்பணியாளரிலிருந்து இளநிலை பொறியாளர் இரண்டாம் நிலையாக உள்முக தேர்வு மூலம் தேர்வு செய்யும் பணிகள் நடைபெற்று வருகிறது. அதற்கான பட்டியல் இன்னும் சில தினங்களில் வெளியாகலாம்என எதிர்பார்க்கப்படுகிறது.*

5. *இளநிலை உதவியாளர் (கணக்கு), (நிர்வாகம்) ஆகியவற்றில் இருந்து உதவியாளர்களாக பதவி உயர்வு அளிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*

6. *கணக்கீட்டாளரிலிருந்து கணக்கீட்டு ஆய்வாளராகவும் கணக்கீட்டு ஆய்வாளரிலிருந்து வருவாய் மேற்பார்வையாளராகவும் பதவி உயர்வு வழங்க விபரங்கள் கேட்க வாரியத்தை வற்புறுத்தியுள்ளோம்.*

# கணக்கீட்டுப்பிரிவு ஊழியர்களின்

# கவனஈர்ப்பு ஆர்ப்பாட்டம்!

# சென்னை/19.10.2012

அன்பார்ந்த தோழர்களே,

வணக்கம்,

தமிழ்நாடு மின்சார வாரியம் தமிழக அரசின் கட்டுப்பாட்டில் செயல்படும் மிகப்பெரிய சேவைத்துறை நிறுவனமாகும். தமிழக மக்களுக்கும் மற்றும் விவசாயம், தொழில் வளர்ச்சிக்கும் தேவையான மின்சாரத்தை வழங்குவதே இதன் பிரதான வேலையாகும். மக்களுக்கு மின்சாரம் வழங்கும் வேலையை களப்பிரிவு ஊழியர்களும், வழங்கப்பட்ட மின்சாரத்திற்கான தொகையை கணக்கீடு செய்து வசூல் செய்யும் வேலையை கணக்கீட்டுப்பிரிவு ஊழியர்களும், இவர்களின் பணிச்சார்ந்த வேலைகளை நிர்வாகம் மற்றும் கணக்குப்பிரிவு ஊழியர்களும் செய்து வருகிறார்கள்.

இவர்களில் வாரியத்தின் வருமானத்திற்கு முக்கிய காரணமாக விளங்குபவர்கள் கணக்கீட்டு பிரிவு ஊழியர்கள் ஆவார்கள். இப்பிரிவில் சுமார் 12,000 ஊழியர்கள் பணிபுரிந்து வருகிறார்கள்.

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் அட்டைப்பட்டியல் முறையை 1980ம் ஆண்டு அப்போதைய மின்துறை அமைச்சர் பண்ருட்டி ராமச்சந்திரன் அறிமுகப்படுத்தினார். கணக்கெடுப்பவர், பட்டியல் தயார் செய்பவர், பட்டியல் விநியோகம் செய்பவர், பண வசூல் செய்பவர் என்று நான்கு பேர்கள் செய்து வந்த மின்கட்டண கணக்கெடுப்பு பணியை ஒருவரே செய்யும் வகையில் அறிமுகப்படுத்தப்பட்ட ஆட்குறைப்புக்கான திட்டம் என்பதால் தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு இத்திட்டத்தை எதிர்த்தது. வழக்கம் போல நிர்வாகத்திற்கு ஆதரவான நிலை எடுத்த சில சங்கங்கள் இத்திட்டத்தை ஆதரித்தன.

அட்டைப்பட்டியல், திருத்தப்பட்ட அட்டைப்பட்டியலாக 1985ல் மாற்றம் செய்யப்பட்டது. 1987முதல் இருமாதத்திற்கு ஒருமுறை கணக்கெடுப்பு முறை அறிமுகம் செய்யப்பட்டது. 2005 முதல் மாதம்தோறும் கணக்கெடுக்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இவை அனைத்திலும் மக்கள் சேவை என்பதைவிடவும் ஆட்குறைப்பு நோக்கமே அதிகமாக இருந்ததால் தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு இத்திட்டத்தை எதிர்த்து வந்துள்ளது.

கணக்கீட்டு பிரிவில் பணிபுரியும் ஊழியர்கள் ஏனைய பிரிவு ஊழியர்களைவிடவும் மிகப்பெரிய பாதிப்புக்கு ஆளாகியுள்ளார்கள். 08.07.1998 இருதரப்பு ஒப்பந்தப்படி பணிக்காலத்தில் மூன்று பதவி உயர்வுகள் வழங்கப்படாததால் இரண்டு பதவி உயர்வோடு பணி ஓய்வு பெற்று செல்லும் அவலநிலை இப்பிரிவில் மட்டுமே தொடர்கிறது.

ஒரே சம்பளவிகிதத்தில் (Scale of Pay) பணியில் சேர்ந்த ஒரே தகுதியுடைய இளநிலை உதவியாளர் தற்போது கணக்கு அலுவலராகவோ, நிர்வாக அலுவலராகவோ பணிபுரிந்து கொண்டிருக்க, கணக்கீட்டாளராக பணியில் சேர்ந்தவர் இரண்டாவது பதவி உயர்வான வருவாய் மேற்பார்வையாளராக பணிசெய்து கொண்டிருப்பார். அந்த பதவியிலேயே பணி ஓய்வும் பெற்றிடும் பரிதாபம் இன்றும் தொடர்கிறது. எதிர்காலத்திலும் இந்த நிலையே நீடிக்கும்.

வேலைபளுவினாலும், கணினி கோளாறினாலும், கவலையிலும், மனஅழுத்தத்திலும் பணிபுரியும் இப்பிரிவு ஊழியர்களின் கோரிக்கைகள் நிர்வாகத்தால் தொடர்ந்து அலட்சியப் படுத்தப்பட்டு வருகிறது.

தமிழக அரசின் / மின்சார வாரியத்தின் கவனத்தை நமது நியாயமான, நீண்ட நாட்களாக தீர்க்கப்படாமல் இருக்கும் கோரிக்கைகளின் மீது ஈர்ப்பதற்காக **19.10.2012 அன்று சென்னை தலைமையம் முன்பாக நடைபெறும் கணக்கீட்டு பிரிவு ஊழியர்களின் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ள அலைகடலென ஆர்ப்பரித்து வருமாறு உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.**

**சினந்து நிற்கும் சிங்கக் கூட்டம்**
**சீறி வரட்டும் சென்னை நோக்கி.**
**பொறுத்தது போதும் புயலென காட்டிட**
**போர்ப்பறை கொட்டி புறப்படு தோழா!**

## கோரிக்கைகள்

- கணக்கீட்டாளர் II-ம் நிலை அகற்றி கணக்கீட்டாளராக பணியமர்வு செய்தல்,
- பதவி உயர்வு தேக்க நிலையை அகற்ற பணிக்காலத்தில் மூன்று பதவி உயர்வுகள் உத்தரவாதப்படுத்துதல்.
- அனைத்து கோட்டங்களுக்கும் கணக்கீட்டு அலுவலர் பதவியினை உருவாக்குதல்.
- கணக்குப் பிரிவில் உள்ளதைப்போல கணக்கீட்டுப் பிரிவிலும் எட்டு அடுக்கு பதவி உயர்வு வாய்ப்பினை உருவாக்க வேண்டுதல்.
- வசூல் மையங்களின் முக்கியத்துவத்தை குறைக்கும் வகையில் வசூல் பணியில் அறிமுகப்படுத்தப்படும் Outsoursing முறையை ரத்து செய்தல்
- மின்நுகர்வோர்க்குரிய சேவை பாதிக்காத வகையில் எப்போதும் கணக்கீட்டுப் பிரிவில் கணினிகள் மற்றும் அச்சு இயந்திரங்கள் பழுதடையாமல் இருக்கவும், மேலும் இணையதள சேவைகள் தடைபடாமல் இருக்கவும் உத்தரவாதப்படுத்த வேண்டுதல்.
- 1982ம் ஆண்டு நியமனம் செய்யப்பட்ட கணக்கீட்டாளர்களின் முதல் ஒன்றரை ஆண்டு பணிக்காலம் ஓய்வூதியம் கணக்கீடு செய்வதற்கு சேர்த்துக் கொள்ள வேண்டுதல்.
- ஆண்டுதோறும் கூடுதலாக வழங்கப்படும் மின்இணைப்புகளுக்கு ஏற்ப புதிய பதவிகள் அனுமதிக்கப்பட்டு நிரப்பிட வேண்டுதல்.
- முப்பது நாள் கணக்கீடு, முப்பது நாள் வசூல் முறை இரத்து செய்யப்பட வேண்டுதல்.
- கணக்கீட்டாளரிலிருந்து தகுதிவாய்ந்த, விருப்பப்படுகிற ஊழியர்களை உள்முகத் தேர்வு மூலம் விரும்பும் பணியில் சேர்வதற்கு அனுமதிக்க வேண்டுதல்.
- விரும்புகின்ற / பெண் கணக்கீட்டாளர்களுக்கு மாற்றுப் பணியில் பணிபுரிய அனுமதிக்க வேண்டுதல்.
- அக்கவுண்டன்சி தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு ஒரு ஆண்டு உயர்வு வழங்க வேண்டுதல்.
- 25 ஆண்டுகள் பணிமுடித்த கணக்கீட்டுப்பிரிவு ஊழியர்களுக்கு கணக்கீட்டு அலுவலர் சம்பளம் வழங்க வேண்டுதல்.
- உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தில் உதவி கணக்கீட்டு அலுவலர் பதவியும், மத்திய அலுவலகத்தில் சிறப்பு நிலை கணக்கீட்டு அலுவலர் பதவியும், மண்டல அலுவலகத்தில் முதன்மை கணக்கீட்டு அலுவலர் பதவியும் புதியதாக அனுமதிக்க வேண்டுதல்.

CITU

**தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு**
**. . . . . . . . . . கிளை**

# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் : 158 / CPT அங்கீகாரம் பெற்றது இணைப்பு : CITU & EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005

Telephone No: 044-28548529
Fax No: 044-28516574

Email: coteecitu_hqchennai@yahoo.com
coteecitu@gmail.com


CITU

**சுற்றறிக்கை எண் 24/2012** **நாள் : 29/09/2012**

*பெறுநர்*
அனைத்து நிர்வாகிகள்

## மாநில நிர்வாகிகள் கூட்டம்
## 2012 அக்டோபர் 11 / சென்னை

அன்பான தோழரே!, வணக்கம்.

மத்திய அமைப்பின் **மாநில நிர்வாகிகள் கூட்டம் எதிர்வரும் 11.10.2012 வியாழக்கிழமை**

**நேரம் :** **காலை 10.00 மணிக்கு**
**இடம் :** **டி.ஜே. நினைவகம்**
எண்: 177, சிங்கண்ண செட்டித் தெரு
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை 600 002.

என்ற முகவரியில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் மாநில சி.ஐ.டி.யூ.-வின் சார்பாக உதவிப் பொதுச் செயலாளர் தோழர் ஆர். கருமலையான் கலந்து கொள்கிறார்.

ஒரு நாள் கூட்டம் என்பதால் தோழர்கள் உரிய நேரத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**நிகழ்ச்சி நிரல்**

1. அஞ்சலி
2. தலைவர் உரை
3. சி.ஐ.டி.யூ. -வின் முடிவுகள் (தோழர் ஆர். கருமலையான்)
4. நடைபெற்ற பணிகள்
5. மின் ஊழியர் மத்திய அமைப்பின் மாநில மாநாடு திட்டமிடல்
6. வரவு-செலவு
7. கிளையின் பேரவை/தணிக்கை
8. கணக்கீட்டு ஊழியர்களின் ஆர்ப்பாட்ட திட்டமிடல்
9. இதர பிரச்சனைகள்

தோழமையுள்ள

**(எஸ்.எஸ். சுப்பிரமணியன்)**
பொதுச் செயலாளர்.

# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் : 158 / CPT அங்கீகாரம் பெற்றது இணைப்பு : CITU & EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005

Telephone No: 044-28548529
Fax No: 044-28516574

Email: coteecitu_hqchennai@yahoo.com
coteecitu@gmail.com

CITU

**சுற்றறிக்கை எண் 25/2012** **நாள் : 16/10/2012**

பெறுநர்
மத்திய அமைப்பின் நிர்வாகிகள்,
கிளை செயலாளர்கள் மற்றும்
செயற்குழு உறுப்பினர்கள்.

அன்பான தோழரே,வணக்கம்

மின் ஊழியர் மத்திய அமைப்பின் மாநில நிர்வாகிகள் கூட்டம் 11.10.2012 அன்று சென்னையில் மாநிலத் தலைவர் தோழர் கே. விஜயன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் கலந்து கொண்ட சிஐடியூவின் துணைப் பொதுச் செயலாளர் தோழர் ஆர். கருமலையான் அவர்கள் கோவையில் நடைபெற்ற அகில இந்திய சி.ஐ.டியூ. -வின் பொதுக்குழுவில் எடுக்கப்பட்ட போராட்ட முடிவுகள், தமிழகத்தில் அமலாக்கப்பட்டது. இந்த கால கட்டத்தில் தொழில்வாரியான இயக்கங்கள் நடைபெற்றுள்ளதையும் சுட்டிக்காட்டியதோடு 28.2.2012 அகில இந்திய வேலை நிறுத்தம் அதில் பல கோடி ஊழியர்கள் கலந்து தமது எதிர்ப்பினை பதிவு செய்த பிறகும் மத்தியில் ஆளுகின்ற ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு புதிய தாராளமய கொள்கையின் இரண்டாம் கட்ட அமலாக்கல் என்ற தாக்குதலாக சில்லரை வர்த்தகத்தில் அந்நிய முதலீடு, டீசல் விலை உயர்வு, காப்பீட்டுத்துறையில் அந்நிய முதலீட்டின் சதவீதத்தை அதிகப்படுத்துவது, மின்சாரத்துறையில் உள்நாட்டு வெளி நாட்டு முதலீடுகளை அதிகப்படுத்துவது, ஓய்வூதிய திட்டத்தில் அந்நிய முதலீடுகளை அனுமதிப்பது போன்ற தாக்குதலை இந்திய தொழிலாளி வர்க்கத்தின் மீது தொடுப்பது சம்மந்தமாகவும், இவைகளை பின்னுக்கு தள்ளும் விதமாக தொழிற்சங்கங்களின் கூட்டு நடவடிக்கை பாராளுமன்ற முற்றுகை, 48 மணி நேர வேலை நிறுத்தம் போன்ற அறைகூவல்களை அமல்படுத்துவதற்குண்டான நடவடிக்கையில் ஈடுபட வேண்டியதின் அவசியத்தையும் விளக்கினார்.

நடைபெற உள்ள மாவட்ட, மாநில, அகில இந்திய மாநாடுகள் வெற்றி பெற மின் ஊழியர் மத்திய அமைப்பு ஆற்ற வேண்டிய பணிகளை விளக்கியதோடு இவைகளுக்கு இடையே டிசம்பர் 2012 இல் நடைபெற்ற மின் ஊழியர் மத்திய அமைப்பின் மாநாட்டிற்கு முன்பாக மின் ஊழியர் மத்திய அமைப்பின் உறுப்பினர் எண்ணிக்கையை குறைந்தபட்சம் 30000 உறுப்பினர்களை அடைய வேண்டியதின் அவசியத்தை விளக்கினார்.

மின் ஊழியர் மத்திய அமைப்பின் மாநிலத்தலைவர் தமது தலைமை உரையில் நாடு முழுவதுமுள்ள மின் பற்றாக்குறை, காவிரி நதி நீர் பிரச்சனை, அதனால் மின் உற்பத்தி பாதிப்பு மற்றும் மின் ஊழியர் பிரச்சனைகளை அதற்கான இயக்கங்களையும் விளக்கினார்.

அதன் பின்னர் மின் ஊழியர் மத்திய அமைப்பின் பொதுச் செயலாளர் சென்ற நிர்வாகிகள் கூட்டத்திற்கு பின்னர் நடைபெற்ற பணிகளை ஊதிய உயர்வு சம்மந்தமாக நாம் எடுத்த நடவடிக்கைகளை விளக்கியதோடு 25, 26 மற்றும் 27 தேதிகளில் நடைபெற்ற பிரச்சாரம் சம்மந்தமாகவும் இந்த ஆண்டு துவக்கதில் இருந்து ஊதிய உயர்வு சம்மந்தமாக நாம் எடுத்த

நடவடிக்கைகள் பிரச்சாரங்கள், ஊழியர்கள் மத்தியில் விழுப்புணர்வையும், நிர்வாகத்திற்கும், அரசிற்கும் ஊதிய உயர்வு பிரச்சனையை பேசி முடிக்க வேண்டும் என்ற நிர்பந்தம் உருவாகி உள்ளதை விளக்கினார்.

மின் வாரிய பிரிப்பு அதற்கான முத்தரப்பு ஒப்பந்தத்திற்கு வாரியம் எடுத்த முயற்சி, அதனை தொடர்ந்து பேச்சு வார்த்தைக்கு ஏற்பாடு, பிரிந்து கிடக்கும் பொறியாளர் சங்கம், நீதிமன்றத்திற்கு சென்று தடை வாங்கியுள்ளது போன்றவைகளை விளக்கியதோடு இதற்கிடையில் வாரியம் தன்னிச்சையாக தொடரமைப்பு கழகத்திற்குண்டான வடிவமைப்பை வாரிய குழு கூட்டத்தில் ஒப்புதல் பெற்று தன்னிச்சையாக அறிவித்துள்ளது அதனுடைய பாதகமான அம்சங்களான பதவிகளை குறைப்பது, கல்வித்தகுதியை நிர்ணயிப்பது அதை நாம் எதிர்த்து நிற்க வேண்டியத்தின் அவசியத்தையும் விளக்கினார்.

மேலும் விடுபட்டுபோன ஒப்பந்த தொழிலாளர்கள் பணி நிரந்தரம், நீதிமன்ற தீர்ப்பு அதையொட்டி மத்திய அமைப்பு மேல் முறையீடு செய்ய எடுத்துள்ள நடவடிக்கைகளை விளக்கினார். பின்னர் நமது நீதிமன்ற வழக்கு பட்டியலில் உள்ளவர்கள் உட்பட 4037 ஒப்பந்த ஊழியர்களை மஸ்தூர்களாக நியமிப்பதில் உள்ள காலதாமதம் அது சம்மந்தமாக வாரிய நிர்வாகத்துடன் நடைபெற்ற பேச்சு, அவர்களுக்கு மஸ்தூர்களாக பணி நியமனத்திற்குகான உத்தரவு வெகு சீக்கிரத்தில் வர உள்ளது போன்றவைகளை விளக்கினார்

மஸ்தூர்களாக பணி நியமனம் செய்யப்பட்ட 18000 ஊழியர்கள் 6596 ஊழியர்களுக்கு மட்டும் கள உதவியாளர்களாக பணி நியமனம் செய்யப்பட்டு மீதமுள்ளவர்களுக்கும் கள உதவியாளர்களாக பணி நியமனம் செய்ய மத்திய அமைப்பு எடுத்துள்ள நடவடிக்கைகள் சம்மந்தமாகவும் விளக்கினார். நாடு முழுவதும் மின் துறையில் உள்ள ஒப்பந்த தொழிலாளர்களின் சுரண்டலுக்கு எதிராக டெல்லியில் நடைபெற்ற கருத்தரங்கு, அக்கருத்தரங்கில் நவம்பர் 21 இல் மாநில தலைநகரங்களில் நடத்த வேண்டிய இயக்கங்கள் பற்றியும் விளக்கினார். மின் வாரியத்தில் உதவிப் பொறியாளர், ஐடிஐ படித்தவர்கள் பணி நியமனம் சம்மந்தமாக அவர்களின் வயது வரம்பை தளர்த்துதல் அனைத்து டிரேடுகளில் ஐடிஐ படித்தவர்களுக்கு வாய்ப்பளிப்பது அனைத்து ஒதுக்கீடுகளையும் முறையாக அமல்படுத்த வேண்டும் என்பன போன்ற கோரிக்கைளையும் முன்வைத்து அரசிற்கும் வாரியத்திற்கும் கடிதம் எழுதியுள்ளதையும் குறிப்பிட்டு இவைகளை பயன்படுத்தி அவர்களோடு நெருக்கத்தை உண்டாக்குவதற்கான அவசியத்தை விளக்கினார்.

கணக்கீட்டு பிரிவு ஊழியர்களின் கோரிக்கைகளை முன்வைத்து 19.10.2012 அன்று மின் வாரியம் தலைமை அலுவலகம் முன்னர் நடத்த உள்ள ஆர்ப்பாட்டம், தமிழகத்தில் தனியார் மின் நிறுவன ஊழியர்கள திரட்டுதல், கூட்டுறவு நாணய சங்க தேர்தல், 2012 ஆம் ஆண்டு உறுப்பினர் சேர்ப்பு, மின் வாரிய உழைக்கும் பெண்களின் வட்ட வாரியான ஒருங்கிணைப்பு குழு கூட்டங்களை நடத்துதல், பேரவை, தணிக்கை, தீக்கதிர் விரிவாக்கம்,6.11.2012 அன்று ஓய்வூதிய உரிமையை பாதுகாப்பது என்ற கோரிக்கையை முன் வைத்து மின் வாரிய தலைமை அலுவலக முன்னர் நடைபெற உள்ள பெருந்திரள் ஆர்ப்பாட்டத்தில் மின் ஊழியர் மத்திய அமைப்பின் தலைவர்களும், ஊழியர்களும் திரளாக கலந்து கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் விளக்கினார்.

2012 டிசம்பர் 15, 16 மற்றும் 17 தேதிகளில் நடைபெற உள்ள மின் ஊழியர் மத்திய அமைப்பின் மாநில மாநாடு வெற்றிகரமாக நடத்துவதற்குண்டான பணிகள் சம்மந்தமாகவும், தயாரிப்புகள் சம்மந்தமாகவும் விளக்கினார்.

மின் ஊழியர் மத்திய அமைப்பின் மாநில பொருளாளர் 2012, ஜுலை முதல் செப்டம்பர் முடிய உள்ள மத்திய அமைப்பின் மாநில வரவு செலவு கணக்குகளை பேசியதோடு, தணிக்கை நடைபெற்ற கிளைகள் சம்மந்தமாகவும் மின் ஊழியர் மத்திய அமைப்பின் உறுப்பினர் சேர்ப்பு ஆகியவற்றை முன் வைத்து பேசினார்.

மின் ஊழியர் மத்திய அமைப்பின் மாநில துணைப் பொதுச்செயலாளர் தோழர் எம். வெங்கடேசன் மின்கதிர் விரிவாக்கம் சம்பந்தமாகவும், 2012 டைரி பாக்கி சம்மந்தமாகவும் முன் வைத்து பேசினார்.

## தோழர்களின் விவாதங்களுக்கு பின்னர் கீழ்கண்ட முடிவுகள் ஏக மனதாக எடுக்கப்பட்டன.

1. ஊதிய உயர்வு கோரிக்கை, மின் வாரிய பிரிப்பு அதனால் ஏற்படும் பாதகமான அம்சங்களை ஊழியர்கள் மத்தியில் கொண்டு செல்லும் விதமாக பிரச்சாரம் நடத்தாத கிளைகள் பிரச்சாரத்தை தொடர்ந்து நடத்திட வேண்டும்.
2. 19.10.2012 அன்று ஏற்கனவே திட்டமிட்டவாறு கணக்கீட்டு பிரிவு ஊழியர்களின் சென்னை மின் வாரிய தலைமையகம் முன் ஆர்ப்பாட்டத்தை பெரும் திரளாக ஊழியர்களை திரட்டி கலந்து கொள்ளும் ஆர்பாட்டமாக நடத்திட வேண்டும்.
3. ஊதிய உயர்வு, மின் வாரிய பிரிப்பு அதை அமல்படுத்தும் விதமாக பதவிகளை தன்னிசையாக குறைப்பது, ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு தொடர்ந்து ஓய்வூதியம் கிடைக்கச் செய்வது ஒப்பந்த தொழிலாளர்களின் சுரண்டலுக்கு எதிராக ஒப்பந்த தொழிலாளர்களை திரட்டுவது என்ற கோரிக்கைகளை முன்வைத்து 21.11.2012 அன்று மின் வாரியம் தலைமை அலுவலகம் முன் பெருந்திரள் ஆர்ப்பாட்டம் நடத்திடுவது. அதில் சென்னை மண்டலங்கள், வேலூர், விழுப்புரம் ஆகிய மண்டலங்கள் அதிகமான ஊழியர்களை திரட்டுவது, மற்ற வட்டங்களில் இருந்து குறைந்தபட்சம் 5 ஊழியர்களையாவது அந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கு பெற செய்ய வைப்பது என்று முடிவு செய்யப்பட்டது.
4. கணக்குப்பிரிவு ஊழியர்களின் குழு கூட்டத்தை உடனடியாக நடத்தி அப்பிரிவு ஊழியர்களின் கோரிக்கைகளை பட்டியலிட்டு வாரியத்திடம் அளிப்பது.
5. கூட்டுறவு நாணய சங்க தேர்தலில் நமது தலைமையை முன்னிருத்துகின்ற வகையில் அனைத்து பணிகளிலும் ஈடுபடுவது
6. 4631 ஒப்பந்த தொழிலாளர்களின் பணி நிரந்தரம் சம்மந்தமாக நீதிமன்றம் அளித்த தீர்ப்பின் மீது மேல்முறையீடு செய்வது.
7. மஸ்தூர்களை கள உதவியாளர்களாக பதவி உயர்வு செய்வது. 4037 ஒப்பந்த ஊழியர்களை மஸ்தூர்களாக பணி நியமனம் செய்யும் உத்தரவை வெளிகொண்டுவருவது போன்ற நடவடிக்கையில் தொடர்ச்சியாக ஈடுபடுவது.
8. அ) இந்த ஆண்டு போனஸ் கோரிக்கையாக மின்வாரிய ஊழியர்களுக்கு அனைத்து வரம்புகளையும் அகற்றி ஒப்பந்ததொழிலாளர் உள்ளிட்ட அனைவருக்கும் 30 சதவீதம் போனஸ் வழங்க வேண்டும் என கோரிக்கை வைக்கப்பட்டது

   ஆ) போனஸ் நன்கொடையாக ரூபாய் 200/- வசூலிப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.
9. விருதுநகர் ஸ்தாபன பரிசீலனை கூட்டம் 29.10.2012 அன்று நடத்துவது என்றும் அக்கூட்டத்தில் தோழர் எஸ்.எஸ். சுப்ரமணியன், தோழர் கே. செல்லப்பன், தோழர் எஸ். முத்துக்குமாரசாமி மற்றும் தோழர் வி.பாலசுப்ரமணியன் ஆகியோர் கலந்து கொள்வது.
10. மேட்டூர் ஸ்தாபன பரிசீலனை சம்மந்தமான கூட்டத்தை 21.10.2012 அன்று மேட்டூரில் நடத்துவது அதில் தோழர்கள் எஸ்.எஸ். சுப்ரமணியன், டி. கோவிந்தராஜு, எஸ்.இராஜேந்திரன், பி.கே. சிவக்குமார் மற்றும் வி. இளங்கோ ஆகியோர் கலந்து கொள்வது.

11. அ) 2011 ஆம் ஆண்டு உறுப்பினர் எண்ணிக்கையை கிளைகள் நவம்பர் முதல் வாரத்தில் புதுப்பிப்பது, டிசம்பர் ஜனவரி மாதத்தில் புதிய உறுப்பினர்களை சேர்ப்பதற்குண்டான நடவடிக்கையில் ஈடுபடுவது.

ஆ) உழைக்கும் பெண்கள் ஒருங்கிணைப்புக்குழுவின் பேரவை நடத்தாத கிளைகள், பேரவை நடத்துவதற்குண்டான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

12. பேரவை, தணிக்கை முடிக்காத கிளைகள், மாநில மாநாட்டிற்கு முன்னர் தணிக்கை, பேரவைகளை முடிப்பது என்று முடிவு செய்யப்பட்டது.

13. அடுத்து நடைபெறும் மதுரை மண்டலக் குழு கூட்டத்தில் மாநில பொதுச்செயலாளர் மற்றும் ஒரு நிர்வாகியும் கலந்து கொண்டு மாநில நிர்வாகிகள் கூட்ட முடிவுகளை விளக்குவது.

## மத்திய அமைப்பின் 14 வது மாநில மாநாடு தயாரிப்பு சம்மந்தமாக கீழ்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன.

- 2011 ஆம் ஆண்டு உறுப்பினர் எண்ணிக்கை அடிப்படையில் பிரதிநிதிகளை தேர்வு செய்வது 75 உறுப்பினர்களுக்கு ஒரு பிரதிநிதி என்ற வகையில் தேர்வு அமைய வேண்டும் மாநில நிர்வாகிகள் தவிர மற்ற அனைவரும் பிரதிநிதிகளாக தேர்வு செய்யப்பட்டுத்தான் மாநில மாநாட்டில் கலந்து கொள்ள வேண்டும்.

- ஒரு வட்டத்திற்கு ஒரு பெண் பிரதிநிதி என்பதை வட்டங்கள் உறுதி செய்யப்பட வேண்டும். இந்தப் பெண் பிரதிநிதி எண்ணிக்கையும் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட பிரதிநிதி எண்ணிக்கைக்குள்ளேயே இருக்க வேண்டும்.

- இவை தவிர ஒரு மண்டலத்திற்கு ஒரு ஒப்பந்த தொழிலாளி பிரதிநிதியாக கலந்து கொள்ள செய்ய வேண்டும்.

- பொறியாளர் அமைப்புக்கு 10 பிரதிநிதிகளும் ஒய்வு பெற்ற நல அமைப்பு 5 பிரதிநிதிகளும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- பிரதிநிதிகள் கட்டணமாக ஒரு பிரதிக்கு ரூ. 650/- என்று நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

- மாநில மாநாட்டு அரங்கத்திற்கு தோழர் எம்.கே. பாந்தே அரங்கம் என்றும் பொதுக்கூட்டத்திடலுக்கு தோழர் என். வரதராஜன் திடல் என்றும், திறந்தவெளி கருத்தரங்க திடலுக்கு தோழர் உ.ரா. வரதராஜன் திடல் என்றும் பிரதிநிதிகள் தங்குகின்ற நகருக்கு தோழர். பாப்பா உமாநாத், தோழர் சி.ஆர். ஹேமலதா நகர் என பெயர் வைப்பது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

- மத்திய அமைப்பின் 14 வது மாநில மாநாட்டிற்கு அகில இந்திய சிஐடியூ தலைவர் தோழர் ஏ.கே.பத்மநாபன் இந்திய மின் ஊழியர் கூட்டமைப்பின் அகில இந்திய தலைவர் தோழர் கே.ஓ. ஹபீப், சிஐடியூ அகில இந்திய துணை தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தோழர் டி.கே. ரங்கராஜன், நாடாளுமன்ற உறுப்பினர் தோழர் நடராஜன், சிஐடியூவின் மாநில பொதுச்செயலாளர் தோழர் அ. சவுந்தரராஜன் சட்டமன்ற உறுப்பினர், கே. பாலகிருஷ்ணன், மார்க்சீய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர் தோழர் கே. கனகராஜ், சி.ஐ.டி.யூ. மாநில துணைப் பொதுச் செயலாளர் தோழர் ஆர். கருமலையான், சி.ஐ.டி.யூ. வின் மாநிலக்குழு உறுப்பினர் தோழர் எஸ். பஞ்சரத்னம் உழைக்கும் பெண்கள் ஒருங்கிணைப்பு குழுவினுடைய மாநில கன்வீனர் தோழர் மாலதி சிட்டிபாபு ஆகிய தலைவர்களை மாநில மாநாட்டில் கலந்து கொள்ள செய்வது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு விவசாயிகள் சங்கம், அரசு போக்குவரத்து ஊழியர் சங்கம், ஜனநாயக மாதர் சங்கம் ஆகியோர்களை வாழ்த்துரைக்காக அழைப்பது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

- 14வது மாநில மாநாட்டை குறிக்கும் வகையில் 20.11.2012 அன்று கோட்ட, வட்ட, அலுவலகங்கள் முன்னாள் 14 மாநாட்டை குறிக்கும் வகையில்14 கொடிகள் ஏற்றி தட்டி, போர்டுகள் வைத்து சிறப்பான விளம்பர ஏற்பாட்டை செய்வது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

- மாநில மாநாட்டின் நோக்கத்தை பிரச்சாரமாக கொண்டு செல்லும் வகையில் நவம்பர் 27, 28 மற்றும் 29 ஆகிய தினங்களில் பிரிவு வாரியான பிரச்சாரத்தை மேற்கொள்வது என்றும் முடிவு செய்யப்பட்டது. மாநில மாநாட்டு பேரணியில் 10,000 தோழர்களை திரட்டுவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

மாநாட்டுக்கிடையே திறந்த வெளி கருத்தரங்கு ஒன்றை நடத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது. அதன் தலைப்புகள் பின்னர் முடிவு செய்யப்படும்.

மாநில மாநாட்டையொட்டி மலர் ஒன்று கொண்டுவருவது என்றும் மலர் பணிகளை மேற்கொள்ள கீழ்கண்டவாறு மலர் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

மலர்க்குழுவின் கன்வீனராக தோழர். எம். வெங்கடேசன் அவர்களும், துணை கன்வீனராக தோழர் டி. கோவிந்தராஜு அவர்களும் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

**மலர்க்குழு**

1. தோழர் எம்.வெங்கடேசன்
2. தோழர் டி. கோவிந்தராஜு
3. தோழர் எஸ். முத்துக்குமாரசாமி
4. தோழர் எஸ். இராஜேந்திரன்
5. தோழர் எம். புருசோத்தமன்
6. தோழர் ஆர். சிவராஜ்
7. தோழர் கே. ரவிச்சந்திரன்
8. தோழர் ஈ. அந்தோணி
9. தோழர் எச். ஜான் சௌந்தர்ராஜ்
10. தோழர் வி. இளங்கோ
11. தோழர் ஐ. தங்கராஜ்
12. தோழர் எம். பன்னீர் செல்வம்
13. தோழர் எம். தனலட்சுமி
14. தோழர் டி. அறிவழகன்
15. தோழர் ஜி. மோகன்ராஜ்
16. தோழர் எ. பெருமாள்
17. தோழர் கே. அருள் செல்வன்
18. தோழர் டி. ஜெயசங்கர்
19. தோழர் எஸ். ஆனந்தன்

தோழர்களே

ஊதிய உயர்வு பிரச்சாரம், கணக்கீட்டு பிரிவு ஊழியர்களின் ஆர்ப்பாட்டம், 21.11.2012 அன்றைய இந்திய மின் ஊழியர் கூட்டமைப்பின் அறைகூவலான கோரிக்கை ஆர்ப்பாட்டம் இவைகள் வெற்றி பெற ஊழியர்களை திரட்டுகின்ற அதே நேரத்தில் மின் ஊழியர் மத்திய அமைப்பின் 14 வது மாநாட்டை கோவையில் நடத்துவது என்றும், மாநில மாநாடு நடக்கின்ற இந்த ஆண்டில் நமது உறுப்பினர் இலக்கான 30,000த்தை அடைவது போன்ற பிரதான முடிவுகள் நிர்வாகிகள் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. இவைகளை அமல்படுத்த கிளைகள் முழுமூச்சுடன் செயல்பட வேண்டுகிறோம்.

தோழமையுள்ள

**(எஸ்.எஸ். சுப்பிரமணியன்)**
பொதுச் செயலாளர்.

# 2012 ஆம் ஆண்டு நடைபெற உள்ள கிளை பேரவைகளில் கலந்து கொள்ளும் மாநில நிர்வாகிகள்

**சென்னை வடக்கு மண்டலம்**

| | | |
|---|---|---|
| 1. | வடசென்னை | து. கோவிந்தராஜு |
| 2. | மத்திய சென்னை | கே. செல்லப்பன் |

**சென்ன தெற்கு மண்டலம்**

| | | |
|---|---|---|
| 3. | மேற்கு சென்னை | ஆர். ஸ்ரீதர் |
| 4. | தென்சென்னை | ஆர். குருவேல் |
| 5. | செங்கல்பட்டு | கே. விஜயன் |

**வேலூர் மண்டலம்**

| | | |
|---|---|---|
| 6. | காஞ்சிபுரம் | **பேரவை நடந்து விட்டது** |
| 7. | வேலூர் | பி.கே. சிவக்குமார் |
| 8. | திருப்பத்துார் | **பேரவை நடந்து விட்டது** |
| 9. | தர்மபுரி | எஸ். முத்துக்குமாரசாமி |

**விழுப்புரம் மண்டலம்**

| | | |
|---|---|---|
| 10. | விழுப்புரம் | **பேரவை நடந்து விட்டது** |
| 11. | கடலுார் | **பேரவை நடந்து விட்டது** |
| 12. | திருவண்ணாமலை | **பேரவை நடந்து விட்டது** |

**திருச்சி மண்டலம்**

| | | |
|---|---|---|
| 13. | பெரம்பலுார் | **பேரவை நடந்து விட்டது** |
| 14. | திருச்சி/மாநகர் | ஈ. அந்தோணி |
| 15. | கரூர் | **பேரவை நடந்து விட்டது** |
| 16. | புதுக்கோட்டை | வி. இளங்கோ, வி.பி. கந்தசாமி |
| 17. | தஞ்சாவூர் | **பேரவை நடந்து விட்டது** |
| 18. | நாகப்பட்டிணம் | **பேரவை நடந்து விட்டது** |

**மதுரை மண்டலம்**

| | | |
|---|---|---|
| 19. | மதுரை | **பேரவை நடந்து விட்டது** |
| 20. | மதுரை மாநகர் | எஸ். தங்கராஜ் |
| 21. | தேனி | **பேரவை நடந்து விட்டது** |
| 22. | ராமநாதபுரம் | **பேரவை நடந்து விட்டது** |
| 23. | சிவகங்கை | **பேரவை நடந்து விட்டது** |
| 24. | திண்டுக்கல் | எஸ். ராஜேந்திரன் |

**திருநெல்வேலி மண்டலம்**

| | | |
|---|---|---|
| 25. | விருதுநகர் | **பேரவை நடந்து விட்டது** |
| 26. | திருநெல்வேலி | **பேரவை நடந்து விட்டது** |
| 27. | தூத்துக்குடி | கே. அருட்செல்வன் |
| 28. | கன்னியாகுமரி | கே. ரவிச்சந்திரன் |

**கோவை மண்டலம்**

| | | |
|---|---|---|
| 29. | நீலகிரி | **பேரவை நடந்து விட்டது** |
| 30. | கோவைதெற்கு | ஆர். சிவராஜ் |
| 31. | கோவைவடக்கு | சி. ஜோதிமணி |
| 32. | கோவை மாநகர் | எம்.வெங்கடேசன் |
| 33. | திருப்பூர் | **பேரவை நடந்து விட்டது** |
| 34. | உடுமலைபேட்டை | எஸ். வண்ணமுத்து |

**ஈரோடு மண்டலம்**

| | | |
|---|---|---|
| 35. | சேலம் | பி. கண்ணன் |
| 36. | மேட்டூர் | வீ. பாலசுப்ரமணியன் |
| 37. | ஈரோடு | எம். பன்னீர்செல்வம் |
| 38. | கோபி | தி. ஜெய்சங்கர் |
| 39. | நாமக்கல் | ஈ. மதுசூதனன் |

**அனல் மின்நிலையங்கள்**

| | | |
|---|---|---|
| 40. | வடசென்னை அனல் | எம். தனலட்சுமி |
| 41. | எண்ணூர் | **பேரவை நடந்து விட்டது** |
| 42. | மேட்டூர் அனல் | எச். ஜான்சௌந்தரராஜ் |
| 43. | தூத்துக்குடி அனல் | **பேரவை நடந்து விட்டது** |

**புனல் மின்நிலையங்கள்**

| | | |
|---|---|---|
| 44. | ஈரோடுஉற்பத்தி | எஸ். ஆனந்தன் |
| 45. | காடம்பாறை | டி. அறிவழகன் |
| 46. | குந்தா உற்பத்தி | ஜி. மோகன்ராஜ் |
| 47. | நெல்லைஉற்பத்தி | எம். புருசோத்தமன் |
| 48. | காற்றாலைபண்ணை | **பேரவை நடந்து விட்டது** |
| 49. | பொதுகட்டுமான ம் | எம். பழனி |

# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் : 158 / CPT அங்கீகாரம் பெற்றது இணைப்பு : CITU & EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005

Telephone No: 044-28548529
Fax No: 044-28516574

Email: coteecitu_hqchennai@yahoo.com
coteecitu@gmail.com

CITU


**சுற்றறிக்கை எண் 26/2012** **நாள் : 23/10/2012**

பெறுநர்
அனைத்து மாநில நிர்வாகிகள்,
கிளை செயலாளர்கள் மற்றும்
செயற்குழு உறுப்பினர்கள்.

அன்பான தோழரே,

வணக்கம்

## போனஸ் பேச்சுவார்த்தை

மின்வாரிய ஊழியர்களுக்கு 2011 - 12 ஆம் ஆண்டுக்கான போனஸ் வழங்குவது சம்மந்தமாக தொழிற்சங்கங்களோடு 20.10.2012 அன்று பேச்சு வார்த்தை நடைபெற்றது. அப்பேச்சுவார்த்தையில் வாரிய தரப்பில் இயக்குநர் / நிதி, இயக்குநர் / விநியோகம், செயலாளர், தலைமைப் பொறியாளர் (பணியமைப்பு), தொழில் உறவு ஆலோசகர் அவர்களும் சங்கத்தின் சார்பில் தோழர்கள் எஸ்.எஸ். சுப்ரமணியன், கே. விஜயன், டி. கோவிந்தராஜு, இ. அந்தோணி, கே. ரவிச்சந்திரன், டி. அறிவழகன் ஆகியோர்களும் கலந்து கொண்டனர்.

இயக்குநர் / நிதி அவர்கள் போனஸ் சம்மந்தமான பேச்சு வார்த்தையை துவங்குவதற்கு முன்பாக மின் வாரியத்தின் சாதனைகளாக ஒப்பந்த தொழிலாளர் பணி நிரந்தரம், பகுதி நேர ஊழியர்களுக்கு சத்துணவு ஊழியர்களுக்கான ஊதியத்தை அளித்தது, பஞ்சப்படியை தொடர்ச்சியாக வழங்குவது போன்றவைகளை விளக்கியதோடு வாரியத்தில் நல்ல தொழில் அமைதி நிலவுவதாகவும் குறிப்பிட்டு இந்த அடிப்படையில் இந்த ஆண்டு போனஸ் பிரச்சனையும் அணுகப்படும் என்றும், இவைகளின் பின்னனியில் போனஸ் சம்மந்தமாக தொழிற்சங்கங்கள் தங்களது கோரிக்கைகளை முன்வைக்குமாறு கோரினார்.

பேச்சு வார்த்தையில் கலந்து கொண்ட நாம் போனஸ் கோரிக்கையை முன் வைப்பதற்கு முன்பாக இயக்குநர் / நிதி அவர்கள் மின் வாரியம் செய்த சாதனைகளை சுட்டிக்காட்டியதை குறிப்பிட்டு, மின் வாரியம் தொழிலாளர் பிரச்சனையில் சில கோரிக்கைகளில் சில சாதகமான உத்தரவுகளை வழங்கிய போதிலும் அவை முழுமையடைந்த நிலையில் இல்லை என்பதை சுட்டிக்காட்டினோம். அதாவது இரண்டாண்டு பணி முடித்த மஸ்தூர்கள் சுமார் பதினேழுாயிரம் ஊழியர்கள் இருந்த போதிலும் 6593 ஊழியர்களுக்கு மட்டுமே கள உதவியாளர்களாக பணி நியமனம் செய்யப்பட்டு இருப்பதை நாம் சாதனையாக ஏற்றுக் கொள்ள முடியாத நிலையில் உள்ளோம் என்பதை சுட்டிக்காட்டி, இரண்டாண்டு காலம் மஸ்தூர்களாக பணி முடித்து மீதமுள்ள 11000 மஸ்தூர்களையும் கள உதவியாளர்களாக நியமித்திட வேண்டும் மென்று எடுத்துகூறினோம்.

அடுத்து பல ஆண்டுகள் தினக்கூலி தொழிலாளியாக பணி புரிந்த 4037 ஒப்பந்த தொழிலாளர்கள், 236 தினக்கூலி தொழிலாளிகளை மஸ்தூர்களாக நியமிக்கின்ற அனுமதி வாரிய

கூட்டத்தில் வழங்கப்பட்ட பின்னரும் மஸ்தூருக்கான உத்தரவு இன்றைய நாள் வரை வெளியிடபடாததை சுட்டிக்காட்டினோம்.

வாரியத்தில் பணியாற்றும் 5546 பகுதி நேர பணியாளர்களுக்கு சத்துணவு ஊழியர்களுக்கான ஊதியத்தை அளித்ததாக வாரியம் குறிப்பிட்டுள்ளதை சுட்டிகாட்டி நீதிமன்றம் அறிவுறுத்திய 5546 பேர்களில் வயது, பிறந்ததேதி, இன்சியல் போன்றவைகளில் தவறு இருப்பதாக சொல்லி பலருக்கு உத்தரவு வழங்காத நிலையையும் அவர்களுக்கு பணி நியமன உத்தரவு உடனடியாக வழங்க வேண்டியதின் அவசியத்தையும் வலியுறுத்தியதோடு திட்டங்களில் புதியதாக துவங்கப்பட்ட அலுவலகங்களுக்கு பகுதி நேர ஊழியர்களை நியமிப்பது சம்மந்தமாக திட்டமட்டத்திலிருந்து அனுமதி கேட்டு தலைமை அலுவலகத்தில் கோரிக்கை வந்துள்ளதன் மீது இறுதி முடிவு எடுக்காததையும் சுட்டிக்காட்டி அதற்கான அனுமதியை விரைவாக வழங்கிட வேண்டி வலியுறுத்தினோம்.

அனல் மின் நிலைய ஊழியர்களுக்கு பதவி உயர்வு வழங்குவது சம்மந்தமாக ஒப்பந்தமும், ஒப்பந்தத்தோடு ஏற்றுக் கொள்ளப்பட்ட கோரிக்கைகளின் மீது தலைமை அலுவலகத்தில் இருந்து அதற்காக உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை, அதை உடனடியாக பிறப்பித்திட வேண்டுமென்றும் வலியுறுத்தினோம். மேலும் புனல், பொதுகட்டுமான வட்டம், சிவில் போன்ற பகுதிகளில் பணியாற்றும் ஊழியர்களின் பதவி உயர்வு சம்மந்தமாக நியமிக்கப்பட்ட குழுக்கள் செயலற்று கிடைக்கின்றது என்றும், குழுக்களின் பணியை விரைவு படுத்திட வேண்டுமெனவும், பொதுகட்டுமான வட்டம் சம்மந்தமாக வாரியம் தயாரித்துள்ள திட்டம் சம்மந்தமாக பேச்சு வார்த்தை நடத்தி வாரிய உத்தரவை வெளியிட வேண்டுமென்றும் வலியுறுத்தினோம்.

உதவி பொறியாளர் / மின்னியல், இயந்திரவியல், சிவில் போன்ற பதவிகளை நிரப்ப உள்முக தேர்வு மூலம் தேர்வு செய்ய பட்டியல் தயாரிக்கப்பட்ட பின்னரும் அதை வெளியிடாமல் காலதாமதம் செய்து வருவதையும் அதே போல் தொழில் நுட்ப உதவியாளர் உள்முகத்தேர்வு பட்டியல் தயாரிக்கும் போது கள உதவியாளர் கம் மீட்டர் ரீடராக பணியாற்றுகின்றவர்களையும் இணைத்து பட்டியல் உடனடியாக வெளியிட வேண்டியும் வலியுறுத்தினோம்.

இயக்குநர் / நிதி அவர்கள் முன்னுரையில் மின் வாரியத்தில் தொழிலமைதி நிலவுவதாக குறிப்பிட்டார். ஆனால் நாம் பேசும் போது மின் வாரியத்தின் நில தன்னிச்சையான நடவடிக்கைகள் தொழிலமைதிக்கு பாதகம் ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சம் எழுந்துள்ளதாகவும், அதாவது மின் தொடரமைப்பு கழகத்திற்கு ஊழியர்களின் வடிவமைப்பு சம்மந்தமாக தன்னிச்சையாக தொழிற்சங்கங்களோடு எந்த வித பேச்சு வார்த்தையும் நடத்தாமல் முடிவு எடுத்துள்ளதை சுட்டிக்காட்டி அதன் மூலம் 1800 க்கும் மேற்பட்ட பதவிகள் உபரியாக்குகின்ற அபாயம் எழுந்துள்ளது என்றும் இவை போன்ற நடவடிக்கைகளை வாரியம் தொடருமானால் நிலவுகின்ற தொழிலமைதிக்கு பாதகம் ஏற்பட்டு விடுமோ என்ற அச்சம் எழுந்துள்ளதையும் குறிப்பிட்டு இவை போன்றவைகளை தவிர்த்திட வேண்டுமென்றும் நாம் விவாதப்பொருளாக முன் வைத்தோம்.

இவைகளுக்கு பின்னர் மின் வாரியத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்கு 2011-12 ஆம் ஆண்டு போனஸாக பொறியாளர்கள், அதிகாரிகள், ஊழியர்கள், பகுதிநேர ஊழியர்கள் மற்றும் ஒப்பந்த தொழிலாளர்களுக்கு 30% வழங்கிட வேண்டுமென்றும் நமது கோரிக்கையை முன்வைத்தோம்.

கோரிக்கையின் நியாயத்தை வலியுறுத்தும் வகையில் கடந்த பத்து ஆண்டுகளாக மின் வாரிய ஊழியர்களுக்கு 20 சதவீதம் மட்டுமே போனஸாக வழங்கப்படுகிறது. கடந்த பத்தாண்டுகளில் அனைத்து பொருள்களின் விலை உயர்ந்துள்ளதோடு மின்சாரத்தை பயன்படுத்தும் தனியார் நிறுவனங்கள், தொழில்நுட்ப தகவல் துறையில் பணியாற்றும் ஊழியர்கள் 25 சதவீதத்திற்கு மேலும் போனஸ் பெறுவதை சுட்டிக்காட்டி அவைகளின்

அடிப்படையில் கூடுதல் போனஸ் வழங்கிட வேண்டும் என வலியுறுத்தினோம். மேலும் மின்சார வாரியத்தில் கடந்த பல ஆண்டுகளாக 50,000க்கும் மேற்பட்ட பதவிகள் காலியாக உள்ளதையும் அந்த காலிப்பணி இடங்களை நிரப்பாததினால் மின்சார வாரியத்திற்கு 60 கோடி ரூபாய்க்கு மேலும் ஒரு மாதத்திற்கு மிச்சம் ஏற்படுகிறது என்றும் அதில் ஒரு பகுதியை மின் வாரிய ஊழியர்களுக்கு கூடுதல் போனஸாக வழங்கிடலாம் என்றும் வாதிட்டோம்.

மேலும் மின்சார வாரியம் 2011-12 ஆண்டுகளில் எரிபொருள் வாங்க 5500 கோடியும், மின்சாரத்தை கொள்முதல் செய்ய ரூ.22274/- கோடியும் செலவு செய்கின்ற போது வாரிய ஊழியர்களுக்கு செலவிடும் தொகையோ ரூ.4099/- கோடி மட்டுமே என்றும் இது மொத்த செலவில் 15% என்பதை சுட்டிகாட்டி இரயில்வே துறையில் பணிபுரிகின்றவர்களுக்கு கூடுதல் போனஸ் கிடைத்தையும் விவாதத்தில் முன்வைத்ததோடு, மின் வாரியத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்கு மட்டும் 20 சதவீதத்தில் உயர்வு இல்லாதது எந்த விதத்திலும் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றும் மின்வாரிய ஊழியர்களுக்கு ஒரு சதவீதம் கூடுதல் போனஸ் கொடுத்தாலும் ரூ.3 கோடி மட்டுமே கூடுதல் செலவாகும் என்பதை சுட்டிக்காட்டி அந்த அடிப்படையில் ஏற்கனவே வழங்கிய 20 சதவீதத்தை உயர்த்தி தர வேண்டும் என்றும் வாதிட்டோம்.

வாரியம் தொழிற்சங்கங்களின் கோரிக்கையை கேட்டு அது சம்மந்தமாக முடிவு ஏதும் சொல்லாமல் நன்றி தெரிவிக்க முயற்சித்தபோது நாம் இடைமறித்து தொழிற்சங்கங்களின் கோரிக்கையின் மீது அரசோடு பேசிய பின்னர் தொழிற்சங்கங்களை அழைத்து பேசிய பின்னர்தான் இறுதி முடிவை அறிவிக்க வேண்டும் என்றும் அளிக்கின்ற போனசை தீபாவளி பண்டிகைக்கு பத்து தினங்களுக்கு முன்பாக வழங்கிட வேண்டுமென்றும் வாதிட்டோம்.

நமது இடைமறிப்புக்கு பின்னர் அரசோடு பேசி வந்த பின்னர் தொழிற்சங்கங்களுக்கு தெரிவித்த பின்னரே அறிவிப்பு வெளியிடப்படும் என்றும் வாரிய தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

## போனஸ் நன்கொடை

மின் வாரிய ஊழியர்களுக்கு வழங்கின்ற போனஸில் ரூ.200/- சங்கத்திற்கு நன்கொடையாக வசூலிக்க வேண்டுமென்று ஏற்கனவே சுற்றறிக்கையில் குறிப்பிட்டு இருந்தோம். அந்த நன்கொடையை ஊழியர்களின் விருப்பத்தின் அடிப்படையில்வாரியமே வசூலித்து தருவதற்குண்டான அனுமதியை பெற முயற்சித்து வருகிறோம். அனுமதி கிடைத்தவுடன் ஊழியர்களின் மத்தியில் விருப்பம் தெரிவுக்கின்ற படிவத்தில் கையொப்பம் பெற்று உரிய அதிகாரியிடம் வழங்கிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நமது சங்கத்தின் அனைத்து நிரந்தத ஊழியர் உறுப்பினர்களிடமும் தவறாமல் கையொப்பம் பெறுவதற்குண்டான அவசர நடவடிக்கையில் ஈடுபட வேண்டுமென கேட்டுக்கொள்கிறோம்.

## சென்னை தலைமையகம் முன்பாக<br>கணக்கீட்டு பிரிவு ஊழியர்களின் 19.10.2012 ஆர்ப்பாட்டம்

தமிழக மின் வாரியத்தின் வருவாய்க்கு ஊற்றுக்கண்ணாக விளங்கும் கணக்கீட்டு பிரிவு ஊழியர்களின் நீண்ட நாள் கோரிக்கையின் மீது வாரியத்தின் கவனத்தை ஈர்க்கின்ற வகையில் 19.10.2012 அன்று 1000க்கும் மேற்பட்ட கணக்கீட்டுப்பிரிவு ஊழியர்களின் பெருந்திரள் ஆர்ப்பாட்டம், கொட்டும் மழையிலும் ஆவேச முழக்கங்களுடன் கணக்கீட்டு பிரிவு ஊழியர்களின் குழு கன்வீனர் தோழர் டி. கோவிந்தராஜு அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழகத்தின் அனைத்து விநியோக வட்டங்களிலிருந்தும் கணக்கீட்டுப்பிரிவு ஊழியர்கள் மற்றும் கிளை நிர்வாகிகள், முன்னனி ஊழியர்கள் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

ஆர்ப்பாட்டத்தை ஒட்டி இயக்குநர் / நிதி, இயக்குநர் / உற்பத்தி, தலைமைப்பொறியாளர் / பணியமைப்பு, செயலாளர், தொழில் பிரிவு ஆலோசகர்கள் மற்றும் பல உள்மட்ட அதிகாரிகள் கலந்து கொண்ட பேச்சு வார்த்தை நடைபெற்றது.

பேச்சு வார்த்தையில் 1982 ஆம் ஆண்டு பணியில் சேர்ந்த கணக்கீட்டாளர்களின் 1.12.1983க்கு முந்தைய 1 1/2 ஆண்டு பணி காலத்தை வரன்முறைபடுத்தி ஓய்வூதியம் வழங்க கணக்கில் கொள்ள வேண்டும் என்று வாதிட்டோம்.

வாரியம் கோரிக்கையை ஏற்றுக் கொண்டு இன்னும் சில தினங்களில் அதற்கான உத்தரவு வெளியிடப்படும் என வாக்குறுதி அளித்துள்ளனர்.

கணக்கீட்டு ஆய்வாளர் பதவியிலிருந்து வருவாய் மேற்பார்வையாளர் பதவிக்கும், வருவாய் மேற்பார்வையாளர் பதவியிலிருந்து மதிப்பீட்டு அலுவலர் பதவிக்கு முறையே 3 மற்றும் 4 ஆண்டுகள் பணிபுரிந்து இருக்க வேண்டும் என்று நிபந்தனையை அகற்றிட வேண்டும் என்று நாம் வலியுறுத்திய போது அது சம்மந்தமாக பரிசீலிக்கப்படும் என்று வாரிய தரப்பில் பதில் அளிக்கப்பட்டுள்ளது.

எஞ்சியுள்ள 26 கோட்டங்களுக்கும் எந்தவித பதவி குறைப்பும் இன்றி கணக்கீட்டு அலுவலர் பதவிகள் அனுமதிக்கப்பட வேண்டும் என்று நாம் எடுத்துரைத்த போது கணக்கீட்டு அலுவலர் பதவி வழங்குவதற்கு உள்ள நிபந்தனைகள் பொருந்துகின்ற கோட்டங்களுக்கு கணக்கீட்டு அலுவலர் பதவி அனுமதிக்கப்படும் என்று வாரிய தரப்பில் பதில் அளிக்கப்பட்டது.

கணக்கீட்டாளர் இரண்டாம் நிலை என்பது நீக்கப்பட்டு கணக்கீட்டாளர் என்று மாற்றம் செய்யப்பட்டு கணக்கீட்டாளருக்கு உரிய சம்பளம் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையின் மீது வாரியம் பரிசீலிப்பதாக தெரிவித்துள்ளது. மேலும் 6.9.2012 அன்றோடு 5 ஆண்டுகள் பணி முடித்த கணக்கீட்டாளர் இரண்டாம் நிலை ஊழியர்களுக்கு பதவி உயர்வு வழங்கிட வேண்டும் என்றும் இவர்களுக்கான முதன்மைப் பட்டியல் வெளியிட வேண்டும் என்று வாதிட்ட போது, முதன்மை பட்டியல் வெளியிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் 5 ஆண்டு பணி முடித்த கணக்கீட்டாளர் இரண்டாம் நிலைக்கு பதவி உயர்வு வழங்கப்படும் என்று வாரிய தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

ஒவ்வொரு கணக்கீட்டு அலுவலருக்கும் ஒரு கணக்கீட்டு ஆய்வாளர் பதவி அனுமதிப்பது உதவி செயற் பொறியாளர் அலுவலகத்தில் உதவி கணக்கீட்டு அலுவலர், மத்திய அலுவலகத்தில் சிறப்பு நிலை கணக்கீட்டு அலுவலர், மண்டல அலுவலகத்தில் முதன்மை கணக்கீட்டு அலுவலர் போன்ற புதிய பதவிகள் அனுமதிக்க வேண்டும் என்று நமது தரப்பில் கோரிக்கை வைக்கப்பட்டது. இவைகள் அனைத்தும் ஊதிய உயர்வோடு பரிசீலிக்கப்படும் என்று வாரிய தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

30 நாட்கள் கணக்கீடு, வசூல் நடைபெறும் பிரிவுகளுக்கு கூடுதலாக ஒரு கணக்கீட்டாளர் பதவியும் ஆண்டுதோறும் கூடும் மின் இணைப்புகளின் எண்ணிக்கைகேற்ப புதிய பதவிகள் அனுமதிக்க வேண்டும் என்ற நமது கோரிக்கையின் மீது பரிசீலிப்பதாக வாரியம் தெரிவித்துள்ளது.

15 நாட்கள் கணக்கீட்டு பணிக்கு என நிர்ணயித்துள்ள கணக்கீட்டுபடியை 30 நாட்கள் கணக்கீட்டு பணி என கணக்கீட்டு உயர்த்தி வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைக்கு வாரிய தரப்பில் சாதகமாக பரிசீலிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பணிகாலத்தில் 3 பதவி உயர்வு என்பதை உத்தரவாதப்படுத்துவதோடு கணக்கீட்டு பிரிவில் 27 ஆண்டுகள் பணி முடித்தவருக்கு கணக்கீட்டு அலுவலர் சம்பளம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கை மீது வாரியம் பரிசீலிப்பதாக கூறியுள்ளது.

2002 ஆம் ஆண்டில் சிறப்பு நிலை பதவியும், சூப்பர் நியூமரி கணக்கீட்டு ஆய்வாளர் பதவிகளை அளித்து நிரப்பியதனால் ஏற்பட்ட அனாமலியை களைத்திட வேண்டும் என்று நமது தரப்பில் கோரிக்கை முன்வைத்தபோது இதை சாதகமாக உடனடியாக தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் வாரிய தரப்பில் உறுதியளிக்கப்பட்டுள்ளது. கணக்கீட்டாளர் பயிற்சி காலத்தை இரண்டாண்டுகளாக குறைத்திட வேண்டுமென்றும், கணக்கீட்டு பிரிவில் ஏற்படும் காலி இடங்களை உடனுக்குடன் நிரப்பி கணக்கீட்டு பணியை முறைப்படுத்திட வாரியத்திற்கு வரும் வருவாயை உத்தர வாதப்படுத்திட வேண்டும் என்ற கோரிக்கைகளின் மீது வாரியம் பரிசீலிப்பதாக கூறியுள்ளது.

## கணிணி கையாள்வது சம்மந்தமாக

கணிணியை பயன்படுத்துகின்ற போது ஏற்படும் பல்வேறு பிரச்சனைகளான பாதுகாப்பான வசூல் மையம், தரமான கணிணி, பிரிண்டர் போன்றவைகள் உத்தரவாதப்படுத்துதல் அதற்காக மேற்பார்வையாளர்களுக்கு வழங்கப்படும் ரூபாய் 10 லட்சத்தை உயர்த்தி தருவது, தவறான பதிவுகளை நீக்கம் செய்யும் அதிகாரத்தை பிரிவு அலுவலர் மற்றும் கோட்டமட்டத்தில் இருக்கச் செய்தல், தரமான ஜெனரேட்டரும் அதற்கான எரிபொருளுக்கான தொகையை வழங்குதல் கணிணி கையாளும் பயிற்சி, கோட்டங்களுக்கு ஒரு கணிணி, பொறியாளர் நியமித்தல், அனைத்து பிரிவுகளிலும் உள்ள பேட்டரிகளை சரி செய்வது, PHASE 1 இல் பணிபுரியும் வருவாய் மேற்பார்வையாளருக்கு கணிணி வழங்கிடுவது வசூல் பணிபாதிக்காத வகையில் தரமான உபகரணங்களும், இடையறாத தொடர்பும் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் மீது நம்மோடு தனியாக பேச்சு வார்த்தை நடத்தி தீர்வு காணலாம் என வாரிய தரப்பில் பதில் அளிக்கப்பட்டுள்ளது.

பொதுவாக 19.10.2012 அன்றைய ஆர்ப்பாட்டம் உறங்கிக் கொண்டிருந்த மின் வாரியத்தை அசையச் செய்து, நமது கோரிக்கையின் மீது கவனத்தையும், தீர்வுகான நடவடிக்கையும் ஏற்படுத்தி உள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

தோழமையுள்ள

**(எஸ்.எஸ். சுப்பிரமணியன்)**
பொதுச் செயலாளர்.

## கடைசி செய்தி

1. *உதவிப் பொறியாளர் உள்முகத் தேர்வு, சிவில் பிரிவில் உதவிபொறியாளர்க்குண்டான உத்தரவு வெளியிடப்பட்டுள்ளது. உதவி பொறியாளர் (மெக்கானிக்கல்) உள்முகத்தேர்வுக்கான உத்தரவு வெகு சீக்கீரத்தில் வெளியிடப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. உதவிப்பொறியாளர் / மின்னியல் நீதிமன்ற தடை நீக்கப்பட்ட பின்னர் அதற்கான உத்தரவு வெளி வரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.*

2. *ஒப்பந்த தொழிலாளர்கள் நாளொன்றுக்கு ரூ.120/- தினக்கூலியாக பெறும் 4037 ஒப்பந்த தொழிலாளி, 236 தினக்கூலி தொழிலாளர்களுக்கு மஸ்தூர் (பயிற்சி) என்ற உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.*

***குறிப்பு***

3. 2011-12 ஆம் ஆண்டு போனஸ் நன்கொடை வசூலிப்பது சம்மந்தமாக இந்த சுற்றறிக்கையில் பக்கம் 3ல் ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த அடிப்படையில் இந்த ஆண்டு போனஸ் நன்கொடை ஊழியர்களிடம் விருப்பத்தை பெற்று வாரியமே வசூலித்து தருவதற்குண்டான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதற்கான வாரிய உத்தரவும், ஊழியர்களிடம் விருப்பம் பெறுகின்ற படிவத்தின் நகலையும் இத்தோடு இணைத்துள்ளோம். (நகல் நமது இணைய தளத்தில் www. cotee.org போடப்பட்டுள்ளது) தேவையான " விருப்ப படிவம்" (Option Form) அச்சடித்து முழுமையாக கையொப்பம் பெற்று போனஸ் வசூலில் ஈடுபட வேண்டுமாய்கேட்டுக் கொள்கிறோம்.

4. கணக்கீட்டுப் பிரிவு ஊழியர்களின் 19.10.2012 கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டமும், அதையொட்டி நடைபெற்ற பேச்சு வார்த்தை விபரத்தை ஊழியர்கள் மத்தியில் கொண்டு செல்லும் வகையில் துண்டு பிரசுரத்தின் நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இதை முழுமையாக பயன்படுத்த வேண்டுமாய்கேட்டுக்கொள்கிறோம்.,

# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் : 158 / CPT    அங்கீகாரம் பெற்றது    இணைப்பு : CITU & EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005

Telephone No: 044-28548529    Email: coteecitu_hqchennai@yahoo.com
Fax No: 044-28516574    coteecitu@gmail.com

CITU


**சுற்றறிக்கை எண் 27/2012**    **நாள் : 30/10/2012**

*பெறுநர்*
அனைத்து நிர்வாகிகள்

## மாநில நிர்வாகிகள் கூட்டம்
## 2012 நவம்பர் 22 / சென்னை

அன்பான தோழரே!, வணக்கம்.

மத்திய அமைப்பின் **மாநில நிர்வாகிகள் கூட்டம் எதிர்வரும் 22.11.2012 வியாழக்கிழமை**

**நேரம் :** **காலை 10.00 மணிக்கு**

**இடம் :** **டி.ஜே. நினைவகம்**
எண்: 177, சிங்கண்ண செட்டித் தெரு
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை 600 002.

என்ற முகவரியில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் மாநில சி.ஐ.டி.யூ.-வின் சார்பாக உதவிப் பொதுச் செயலாளர் தோழர் ஆர். கருமலையான் கலந்து கொள்கிறார்.

ஒரு நாள் கூட்டம் என்பதால் தோழர்கள் உரிய நேரத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தோழமையுள்ள

**(எஸ்.எஸ். சுப்பிரமணியன்)**
பொதுச் செயலாளர்.

**நிகழ்ச்சி நிரல்**

1. அஞ்சலி
2. தலைவர் உரை
3. மாநாட்டு அறிக்கை இறுதிப்படுத்துதல்
4. மாநாடு தயாரிப்பு
5. போனஸ், நன்கொடை
6. வரவு-செலவு
7. கிளையின் பேரவை/தணிக்கை

# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் : 158 / CPT அங்கீகாரம் பெற்றது இணைப்பு : CITU & EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005

Telephone No: 044-28548529
Fax No: 044-28516574

Email: coteecitu_hqchennai@yahoo.com
coteecitu@gmail.com

CITU

சுற்றறிக்கை எண் 28/2012 நாள் : 30/10/2012

*பெறுநர்*
மத்திய அமைப்பின் அனைத்து நிர்வாகிகள்,
அனைத்து கிளைச் செயலாளர்கள்,
மாநில செயற்குழு உறுப்பினர்கள்

## மாநில செயற்குழுகூட்ட அழைப்பிதழ்

அன்பான தோழரே!, வணக்கம்

மத்திய அமைப்பின் **மாநில செயற்குழுக் கூட்டம் எதிர்வரும் 25.11.2012 ஞாயிற்றுக்கிழமை**

**நேரம் :** **காலை 10.00 மணிக்கு**

**இடம் :** **டி.ஜே. நினைவகம்**
எண்: 177, சிங்கண்ண செட்டித் தெரு
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை 600 002.

என்ற முகவரியில் நடைபெற உள்ளது. ஒரு நாள் கூட்டம் என்பதால் தோழர்கள் உரிய நேரத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தோழமையுள்ள

**(எஸ்.எஸ். சுப்பிரமணியன்)**
பொதுச் செயலாளர்.

**நிகழ்ச்சி நிரல்**

1. அஞ்சலி
2. தலைவர் உரை
3. மாநாட்டு தயாரிப்பு
4. போனஸ், நன்கொடை
5. வரவு-செலவு
6. கிளையின் பேரவை/தணிக்கை

# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் : 158 / CPT அங்கீகாரம் பெற்றது இணைப்பு : CITU & EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005

Telephone No: 044-28548529
Fax No: 044-28516574

Email: coteecitu_hqchennai@yahoo.com
coteecitu@gmail.com

CITU


**சுற்றறிக்கை எண் 29/2012** **நாள் : 07/11/2012**

*பெறுநர்*
மத்திய அமைப்பின் அனைத்து நிர்வாகிகள்,
கிளைச் செயலாளர்கள் மற்றும்
மாநில செயற்குழு உறுப்பினர்கள்.

அன்பான தோழரே, வணக்கம்

## அனைவருக்கும் நவம்பர் புரட்சி தின வாழ்த்துக்கள்

### போனஸ் 2012

2011 - 2012 ஆம் ஆண்டுக்கான போனஸ் பேச்சு வார்த்தை 20.10.2012 அன்று நடைபெற்றது.

பேச்சு வார்த்தையின் போது தீபாவளிக்கு 10 தினங்களுக்கு முன்பாக போனஸ் வழங்க வேண்டும் என்ற அனைத்து சங்கத்தின் கோரிக்கையும் புறந்தள்ளி போனஸ் வழங்குவதில் ஏற்பட்ட காலதாமதத்தை கண்டித்து நமது சங்கத்தின் சார்பில் மாநிலம் முழுவதும் 3.11.2012 அன்று பெருந்திரள் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. இதில் கணிசமான ஊழியர்கள் கலந்து கொண்டு தங்களது கோபாவேசத்தை அரசுக்கும், வாரியத்திற்கும் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையில் இன்று (07.11.2012) 2012 ஆம் ஆண்டு போனசுக்கான உத்தரவை வாரியம் வெளியிட்டுள்ளது இந்த ஆண்டும் எவ்வித உயர்வும் இல்லாமல் 20 சதவீத போனசும், கருணைத் தொகையும் வழங்குவதாக வாரியம் உத்தரவு வெளியிட்டுள்ளது. நமது சங்கத்தின் சார்பில் இன்று இயக்குநர்/நிதி அவர்களை சந்தித்து பகுதி நேர ஊழியர்களுக்கும், நிரந்தர ஊழியர்களுக்கு வழங்கப்படுவது போல் சதவீத அடிப்படையில் போனஸ் 20 சதவீதம் வழங்க வேண்டும் என்றும் எவ்வித உயர்வுமின்றி அறிவிக்கப்பட்டுள்ள மாற்றமில்லாத போனசுக்கு சங்கத்தின் சார்பில் ஆட்சேபணையும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே போனஸ் நன்கொடை வசூலையொட்டி கிளைகளுக்கு வழங்கப்பட்டிருக்கும் ஒப்புதல் கடிதத்தில் (Option Form) தோழர்களிடமும், ஆதரவாளர்களிடமும் கையொப்பம் பெற்று நிர்வாகத்திற்கு வழங்கும் பணியை துரிதமாக தாமதமின்றி மேற்கொள்ளுமாறு கிளைகளை கேட்டுக்கொள்கிறோம்.

### 21.11.2012 சென்னை ஆர்ப்பாட்டம்.

ஊதிய உயர்வு, மின்வாரிய பிரிப்பு, பதவிகள் குறைப்பு, ஓய்வூதியத்திற்கான உத்தரவாதம், உழைப்பு சுரண்டலுக்கு எதிரான ஒப்பந்த ஊழியர்களை திரட்டுவது ஆகிய கோரிக்கைகளை

வலியுறுத்தி 21.11.2012 அன்று சென்னை தலைமையகம் முன்பு நடைபெற கவனஈர்ப்பு ஆர்ப்பாட்டத்திற்கு சென்ற சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு சென்னை, வேலூர் , விழுப்புரம் மண்டலங்களை தவிர்த்து ஏனைய மண்டலங்கள் கிளைகளுக்கு 5 தோழர்களையாவது கலந்து கொள்ள உத்தரவாதப்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறோம். சென்னை, வேலூர், விழுப்புரம் மண்டலங்களுக்குட்பட்ட கிளைகளிலிருந்து பெருவாரியான ஊழியர்களை திரட்ட வேண்டும். (ஆர்ப்பாட்டத்திற்கான போஸ்டர் சென்னை மாநில மையத்திலிருந்து அனுப்பி வைக்கப்படும்).

## 2012 உறுப்பினர் சந்தா

2012 ஆம் ஆண்டு பத்து மாதங்கள் முடிந்த பின்னரும் மாநில மையத்திற்கு இதுவரையில் சுமார் 16,000 உறுப்பினர் சந்தாக்களே வரவாகியுள்ளது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

2011 ஆம் ஆண்டு உறுப்பினர் எண்ணிக்கை 28,510 என்பதையும் சுட்டிக் காட்டுகிறோம்.

சென்ற ஆண்டைவிடவும் உறுப்பினர் எண்ணிக்கையை கூடுதலாக்கி மாநில மாநாட்டை சந்திக்க வேண்டிய அவசியம் உள்ளது எனவே சம்மந்தப்பட்ட கிளைகள் கவலையோடு உறுப்பினர் சேர்ப்பில் கவனம் செலுத்துமாறு கேட்டுக் கொள்கிறோம்.

## 14வது மாநில மாநாடு

மத்திய அமைப்பின் 14வது மாநாடு டிசம்பர் 15,16,17 ஆகிய தேதிகளில் கோவையில் நடைபெறுவது தாங்கள் அறிந்ததே, மாநாட்டைவெற்றிகரமாக நடத்துவதற்கு உரிய ஏற்பாட்டை மாநாட்டு வரவேற்புக்குழுவும், மாநில மையமும் மேற்கொண்டு வருகிறது. மாநாட்டிற்குரிய முதல் போஸ்டர் அனைத்து கிளைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## மாநாட்டு மலர்

மாநில மாநாட்டையொட்டி வெளியிடப்படவுள்ள மாநாட்டு மலர்க்குழு கூட்டம் 27.10.2012 அன்று நடைபெற்றுள்ளது. அதன் முடிவுகள் தனிச்சுற்றறிக்கையாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மலருக்கான விளம்பரம், படைப்புகள் சேகரிப்பு உள்ளிட்ட விவரங்கள் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இன்று விளம்பர கட்டண விவரங்கள் (Tariff) தனியாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கிளைகளுக்கான விளம்பர சேகரிப்பு கோட்டா இத்துடன் இணைக்கப் பட்டுள்ளது. விளம்பரம் மற்றும் படைப்புகளை கிளைகள் பரவலாக சேகரித்து இம்மாதம் 25தேதிக்குள் மாநில மைய்யத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். இப்பணியை உயர் முன்னுரிமை கொடுத்து நிறைவேற்றுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

## மாநாட்டு பிரதிநிதிகள்

மாநில மாநாட்டில் கிளைகள் வாரியாக கலந்து கொள்ளும் பிரதிநிதிகளின் எண்ணிக்கை பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. 2011 ஆம் ஆண்டு உறுப்பினர் எண்ணிக்கையின் அடிப்படையில் 75 உறுப்பினர்களுக்கு 1பிரதிநிதி என்ற அடிப்படையில் இந்த ஒதுக்கீட்டு பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. தோழர்களை தேர்வு செய்வதற்கும், போக்குவரத்து ஏற்பாடுகளை செய்வதற்கும் உதவிகரமாக இருக்கும் எனும் நோக்கத்தில் இப்பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது.

நவம்பர் 22,25.11.2012 ஆகிய தேதிகளில் நடைபெற உள்ள நிர்வாகிகள் மற்றும் செயற்குழு கூட்டத்தில் வரும் கருத்தையொட்டி பிரதிநிதிகள் பட்டியல் இறுதி செய்யப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

கிளைகளில் உறுப்பினர்களாக உள்ள ஒப்பந்த ஊழியர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப பிரதிநிதிகளின் தேர்வு அமைய வேண்டும் என்பதில் கிளைகள் கவனமாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். பெண் பிரதிநிதிகள் ஒதுக்கீட்டில் பெண் பிரதிநிதிகளை தான் அழைத்து வரவேண்டும். பெண் பிரதிநிதிகள் கோட்டாவில் ஆண் பிரதிநிதிகளை அழைத்து வரக்கூடாது.

## பயணக்குழுக்கள்

மாநாட்டையொட்டி கொடி, மற்றும் தியாகிகள் ஜோதி மாநிலத்தின் 4முனைகளிலிருந்து புறப்பட்டு கோயம்புத்தூரை அடைவதாக ஏற்கனவே திட்டமிடப்பட்டுள்ளது.

1. சென்னை,
2. திருவண்ணாமலை,
3. நாகை
4. கன்னியாகுமரி,

சம்மந்தப்பட்ட மண்டல, கிளைச் செயலாளர்கள், பயணக்குழுவிற்கான வாகன மற்றும் பயணக்குழு தோழர்கள் உட்பட அனைத்து ஏற்பாடுகளுக்கும் உடனடியாக திட்டமிட்டு செயலாற்றிட கேட்டுக் கொள்கிறோம்.

## பேரணி

2012 டிசம்பர் 17-மாநாட்டின் இறுதிநாள் பேரணியில் கிளைகளிலிருந்து கலந்து கொள்ளவேண்டிய உறுப்பினர்கள் எண்ணிக்கையும் பிரதிநிதிகளுக்கான பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளது. தயாரிப்பு வேலைகளை திட்டமிட்டு முன்கூட்டியே செய்து பேரணியில் பெருவாரியான மின்ஊழியர்கள் பங்கேற்பதை உறுதி செய்திடுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

## பேரவை-தணிக்கை

மாநில மாநாட்டிற்கு முன் கிளைகளின் ஸ்தாபன பேரவைகளை நடத்தி முடிக்க வேண்டும் என்ற முடிவின் அடிப்படையில் 18.11.2012 மற்றும் 2.12.2012 ஆகிய தேதிகளில் பெரும்பாலான கிளைகளின் பேரவை நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகிறது. நிர்வாகிகள் கூட்டத்தின் முடிவின்படி அனைத்து கிளைகளின் ஸ்தாபன பேரவைகளை மாநில மாநாட்டிற்கு முன்னதாக நடத்தி முடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

14.12.2011 அன்று நடைபெற்ற செயற்குழு கூட்ட முடிவின்படி 2009 மற்றும் 2010ம் ஆண்டிற்கான கிளைகளின் வரவு - செலவுகளை தணிக்கை செய்து முடிப்பதற்கான தணிக்கையாளர்களின் ஒதுக்கீட்டு பட்டியல் அனைத்து கிளைகளுக்கும் அனுப்பப்பட்டது. பாதிக்கும் மேற்பட்ட கிளைகளில் இதுவரையிலும் கிளையின் வரவு-செலவுகள் தணிக்கை செய்யப்படவில்லை என்பதை கவலையுடன் சுட்டிக் காட்டுகிறோம். மாநில மாநாட்டிற்கு முன்னதாக கிளைகளின் தணிக்கையை நடத்தி முடிக்க வேண்டுமென்றுகேட்டுக்கொள்கிறோம்

## பேரவை நடத்தாத கிளைகள்

1. வடசென்னை
2. மத்திய சென்னை
3. மேற்குசென்னை
4. தென்சென்னை
5. செங்கல்பட்டு
6. வேலுார்
7. தர்மபுரி
8. திருச்சி
9. புதுக்கோட்டை
10. மதுரை/மாநகர்
11. திண்டுக்கல்
12. துாத்துக்குடி
13. கன்னியாகுமரி
14. கோவை தெற்கு
15. கோவை/வடக்கு
16.கோவை/மாநகர்
17.உடுமலை
18. சேலம்
19.மேட்டூர்
20. ஈரோடு
21. கோபி
22. நாமக்கல்
23. வடசென்னை அனல்
24. மேட்டூர் அனல்
25. ஈரோடு உற்பத்தி
26. காடம்பாறை
27. குந்தா
28. நெல்லை உற்பத்தி
29. பொதுக் கட்டுமானம்

## தணிக்கை செய்யாத கிளைகள்

1. வடசென்னை
2. மேற்கு சென்னை
3. தென்சென்னை
4. தர்மபுரி
5. விழுப்புரம்
6. கடலூர்
7. திருவண்ணாமலை
8. பெரம்பலுார்
9. திருச்சி
10. புதுக்கோட்டை
11. தஞ்சாவூர்
12. தேனி
13. ராமநாதபுரம்
14. விருதுநகர்
15. துாத்துக்குடி
16. நீலகிரி
17.கோவை தெற்கு
18. கோவை வடக்கு
19. திருப்பூர்
20. உடுமலை
21. சேலம்
22. மேட்டூர்
23. ஈரோடு
24. கோபி
25. நாமக்கல்
26. மேட்டூர் அனல்
27. துாத்துக்குடி அனல்
28. காடம்பாறை
29. குந்தா உற்பத்தி
30. நெல்லை உற்பத்தி
31. மதுரை மாநகர்.

---

**குறிப்பு**

**மாநில மாநாட்டிற்கு கிளைகள் வழக்கமாக வழங்கும் நிதிஉதவியோடு கிளைகளிலிருந்து மாநாட்டிற்கு தேவைப்படும் பொருட்களாகவும் வழங்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். வழங்கப்படவுள்ள பொருட்களின் விவரங்களை முன்கூட்டியே மையத்திற்கும், வரவேற்புக்குழுவுக்கும் தெரிவிக்குமாறும் கேட்டுக் கொள்கிறோம்.**

தீபாவளி வாழ்த்துக்களுடன்
தோழமையுள்ள

**(எஸ்.எஸ். சுப்பிரமணியன்)**
பொதுச் செயலாளர்.

# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு
## 14வது மாநில மாநாடு - கோவை - 2012 டிசம்பர் 15-17
### கிளைகளுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள பிரதிநிதிகள் பட்டியல்

| கிளைகள் | | பேரணி கோட்டா | பெண் | ஆண் | ஒப்பந்த ஊழியர் | மொத்த பிரதிநிதிகள் |
|---|---|---|---|---|---|---|
| **சென்னை வடக்கு மண்டலம்** | | | **-** | **-** | **1** | **1** |
| 1. | வடசென்னை | 500 | 2 | 12 | | 14 |
| 2. | மத்திய சென்னை | 500 | 2 | 11 | | 13 |
| **சென்ன தெற்கு மண்டலம்** | | | **-** | **-** | **1** | **1** |
| 3. | மேற்கு சென்னை | 500 | 2 | 12 | | 14 |
| 4. | தென்சென்னை | 500 | 2 | 14 | | 16 |
| 5. | செங்கல்பட்டு | 250 | 1 | 6 | | 7 |
| **வேலூர் மண்டலம்** | | | **-** | **-** | **1** | **1** |
| 6. | காஞ்சிபுரம் | 300 | 1 | 8 | | 9 |
| 7. | வேலூர் | 150 | 1 | 4 | | 5 |
| 8. | திருப்பத்தூர் | 300 | 1 | 7 | | 8 |
| 9. | தர்மபுரி | 400 | 2 | 10 | | 12 |
| **விழுப்புரம் மண்டலம்** | | | **-** | **-** | **1** | **1** |
| 10. | விழுப்புரம் | 500 | 2 | 16 | | 18 |
| 11. | கடலூர் | 500 | 2 | 10 | | 12 |
| 12. | திருவண்ணாமலை | 500 | 2 | 14 | | 16 |
| **திருச்சி மண்டலம்** | | | **-** | **-** | **1** | **1** |
| 13. | பெரம்பலூர் | 200 | 1 | 4 | | 5 |
| 14. | திருச்சி/மாநகர் | 300 | 1 | 7 | | 8 |
| 15. | கரூர் | 200 | 1 | 4 | | 5 |
| 16. | புதுக்கோட்டை | 250 | 1 | 6 | | 7 |
| 17. | தஞ்சாவூர் | 250 | 1 | 6 | | 7 |
| 18. | நாகப்பட்டிணம் | 200 | 1 | 5 | | 6 |
| **மதுரை மண்டலம்** | | | **-** | **-** | **1** | **1** |
| 19. | மதுரை | 400 | 1 | 7 | | 8 |
| 20. | மதுரை மாநகர் | 100 | 1 | 2 | | 3 |
| 21. | தேனி | 150 | 1 | 3 | | 4 |
| 22. | ராமநாதபுரம் | 150 | 1 | 3 | | 4 |
| 23. | சிவகங்கை | 250 | 1 | 6 | | 7 |
| 24. | திண்டுக்கல் | 300 | 1 | 7 | | 8 |

| கிளைகள் | பேரணி கோட்டா | பெண் | ஆண் | ஒப்பந்த ஊழியர் | மொத்த பிரதிநிதிகள் |
|---|---|---|---|---|---|
| **திருநெல்வேலி மண்டலம்** | **-** | **-** | **1** | **1** | |
| 25. விருதுநகர் | 150 | 1 | 3 | | 4 |
| 26. திருநெல்வேலி | 500 | 3 | 18 | | 21 |
| 27. தூத்துக்குடி | 500 | 2 | 12 | | 14 |
| 28. கன்னியாகுமரி | 500 | 2 | 12 | | 14 |
| **கோவை மண்டலம்** | | **-** | **-** | **1** | **1** |
| 29. நீலகிரி | 200 | 1 | 3 | | 4 |
| 30. கோவைதெற்கு | 400 | 1 | 5 | | 6 |
| 31. கோவைவடக்கு | 200 | 1 | 3 | | 4 |
| 32. கோவை மாநகர் | 300 | 1 | 4 | | 5 |
| 33. திருப்பூர் | 400 | 1 | 5 | | 6 |
| 34. உடுமலைபேட்டை | 300 | 1 | 3 | | 4 |
| **ஈரோடு மண்டலம்** | | **-** | **-** | **1** | **1** |
| 35. சேலம் | 200 | 1 | 4 | | 5 |
| 36. மேட்டூர் | 400 | 2 | 9 | | 11 |
| 37. ஈரோடு | 400 | 2 | 9 | | 11 |
| 38. கோபி | 500 | 1 | 7 | | 8 |
| 39. நாமக்கல் | 300 | 1 | 4 | | 5 |
| **அனல் மின்நிலையங்கள்** | | | | | |
| 40. வடசென்னை அனல் | 100 | 1 | 4 | | 5 |
| 41. எண்ணூர் | 100 | 1 | 2 | | 3 |
| 42. மேட்டூர் அனல் | 100 | 1 | 6 | | 7 |
| 43. தூத்துக்குடி அனல் | 100 | 1 | 3 | | 4 |
| **புனல் மின்நிலையங்கள்** | | | | | |
| 44. ஈரோடுஉற்பத்தி | 150 | 1 | 3 | | 4 |
| 45. காடம்பாறை | 100 | 1 | 2 | | 3 |
| 46. குந்தா உற்பத்தி | 50 | 1 | 2 | | 3 |
| 47. நெல்லைஉற்பத்தி | 75 | 1 | 2 | | 3 |
| 48. காற்றாலைபண்ணை | 10 | 1 | 2 | | 3 |
| 49. பொதுகட்டுமான ம் | 150 | 1 | 4 | | 5 |
| 50. தலைமையகம் | 5 | 3 | - | - | 3 |
| 51. ஓய்வு பெற்றோர் அமைப்பு | - | - | | 5 | |
| 52. பொறியாளர் அமைப்பு | 210 | 2 | 8 | | 10 |
| 53. மாநில நிர்வாகிகள் | - | 1 | 33 | | 34 |
| மொத்தம் | 14,200 | 69 | 361 | 9 | 439 |

# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் : 158 / CPT அங்கீகாரம் பெற்றது இணைப்பு : CITU & EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005

Telephone No: 044-28548529 Email: coteecitu_hqchennai@yahoo.com
Fax No: 044-28516574 coteecitu@gmail.com

CITU


**சுற்றறிக்கை எண் 30/2012** **நாள் : 16/11/2012**

*பெறுநர்*
மத்திய அமைப்பின் அனைத்து நிர்வாகிகள்

அன்பான தோழரே, வணக்கம்

மின் ஊழியர் மத்திய அமைப்பின் 14வது மாநில மாநாட்டுக்கான தயாரிப்பு பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன. விளம்பரத்திற்காக சுவரொட்டி ஒன்று வரவேற்பு குழு சார்பாக கிளைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதை முறையாக கீழே கொண்டு செல்வதற்குண்டான நடவடிக்கை எடுக்க வேணுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

மாநாட்டையொட்டி கொண்டு வர உள்ள மாநாட்டு மலர் சம்மந்தமான விளம்பர சேகரிப்பதற்குண்டான டாரிப்புகள், கிளைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன. குறுகிய காலமே உள்ளது என்பதை உணர்ந்து கிளைகளுக்கு ஒதுக்கப்பட்ட விளம்பரங்களை பெற்றுத் தந்து மாநாட்டு மலர் சிறப்பாக வெளி வருவதற்கு உதவிட வேணுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

மாநாட்டில் முன் வைக்கப்பட உள்ள வேலை அறிக்கை மாநில மையத்தால் தயாரிக்கப்பட்டு போதிய கால அவகாசம் அளித்து அனுப்பட்டுள்ளது. படித்து சேர்க்க வேண்டியவைக்கள், நீக்க பட வேண்டிய விபரங்கள் மற்றும் முறைப்படுத்தபட வேண்டியவைகள் ஏதேனும் இருப்பின் அதை எழுத்து பூர்வமாக நிர்வாகிகள் கூட்டத்தில் அளித்திட வேண்டுகிறோம்.

அறிக்கையில் சேர்க்க / நீக்க மற்றும் முறைப்படுத்த வேண்டியவைகளை மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் சொல்லுகின்றபோது குறிப்பெடுப்பதில் ஏதேனும் விடுபட வாய்ப்புள்ளது. எனவே தான் அறிக்கையின் மீது சொல்லப்பட வேண்டியவைகளை எழுத்து பூர்வமாக அளித்திட வேண்டுகிறோம்.

நிர்வாகிகள் கூட்டத்தில் வரும் போது இந்த அறிக்கையோடு வந்து உதவிட வேண்டுமென கேட்டுக் கொள்கிறோம்.

தோழமையுள்ள

**(எஸ்.எஸ். சுப்பிரமணியன்)**
பொதுச் செயலாளர்.

**குறிப்பு**

களப்பணியாளர் பதவியில் இருந்து இளநிலை பொறியாளர் இரண்டாம் நிலையாக உள்முக தேர்வு மூலம் 472 ஊழியர்களுக்குண்டான பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

தேர்வு பெற்ற அனைவருக்கும் மின் ஊழியர் மத்திய அமைப்பு தனது நெஞ்சார்ந்த வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறது.

| **தோர்வு செய்யப்பட்டவர் விபரம்** | |
|---|---|
| ஓ.சி. | 21.5.1998 |
| பி.சி. | 25.5.1998 |
| எம்.பி.சி. | 30.12.1999 |
| எஸ்.சி. | 31.12.1999 |
| எஸ்.டி. | 22.12.2000 |
| முஸ்லீம் பிரிவு | 16.12.1999 |
| எஸ்.சி. / அருந்ததியர் | 20.12.2000 |

# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

**மாநில செயற்குழு கூட்டம்**

**நாள்: 25.11.2012**

**இடம்: சென்னை**

## நிகழ்ச்சி நிரல்

அஞ்சலி

தலைவர் உரை

மாநில சிஐடியு முடிவுகள்

நடைபெற்ற பணிகள்

மாநில மாநாடு தயாரிப்பு

உறுப்பினர் சேர்ப்பு

வரவு - செலவு

## தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு
## 14வது மாநில மாநாடு
## பிரச்சார பயணத்திட்டம்
**2012 டிசம்பர் 12 முதல் 14 வரை**

### தோழர் உ.ரா. வரதராஜன் நினைவு ஜோதி

குழுத்தலைவர்: தோழர் **கே. ரவிச்சந்திரன்**

**கிளைகள்**

வட சென்னை அனல்

எண்ணூர் அனல்

சென்னை வடக்கு

சென்னை மேற்கு

சென்னை மையம்

சென்னை தெற்கு

செங்கல்பட்டு

காஞ்சிபுரம்

வேலூர்

திருப்பத்தூர்

தர்மபுரி

மேட்டூர்

பவானி

கோபி

கோவை

### தோழர் என். வரதராஜன் செங்கொடி

குழுத்தலைவர்: தோழர் **கே. ஆனந்தன்**

**கிளைகள்**

திருவண்ணாமலை

விழுப்புரம்

கடலூர்

சேலம்

ஈரோடு

அவினாசி

திருப்பூர்

கோவை

## வெண்மணி தியாகிகள் நினைவு ஜோதி

குழுத்தலைவர்: தோழர் **எம். பன்னீர் செல்வம்**

**கிளைகள்**

நாகப்பட்டினம்
தஞ்சை
பெரம்பலூர்
திருச்சி
கரூர்
காங்கேயம்
பல்லடம்
கோவை

## தோழர் ஜே. ஹேமச்சந்திரன் நினைவு ஜோதி

குழுத்தலைவர்: தோழர் **வீ. பாலசுப்ரமணியன்**

**கிளைகள்**

கன்னியாகுமரி
தூத்துக்குடி
தூத்துக்குடி அனல்
நெல்லை
விருதுநகர்
இராமநாதபுரம்
சிவகங்கை
மதுரை
திண்டுக்கல்
பழனி
உடுமலை
கோவை

## மாநாடு சம்மந்தமான விவரங்கள்

| | | |
|---|---|---|
| மாநாட்டு மண்டபம் | : | **கல்பனா கல்யாண மண்டபம்** |
| | | **மேட்டுப்பாளையம் ரோடு, கவுண்டம்பாளையம், கோவை** |
| பிரதிநிதிகள் தங்குமிடம் | : | **காளியப்ப திருமண மண்டபம்** |
| | | **மேட்டுபாளையம் ரோடு, கவுண்டம்பாளையம், கோவை** |
| பெண்கள் தங்குமிடம் | : | **கல்பனா கல்யாண மண்டபம்** |

(இரு மண்டபங்களும் எதிர் எதிரே உள்ளது)

இரயிலில் ஈரோடு, திருப்பூர், பீளமேடு மார்க்கமாக வருபவர்கள் வடகோவை (Coimbatore North Junction) ல் இறங்கவும். வாகன வசதி உண்டு.

**Coimbatore Junction ல் இறங்குபவர்கள்**

துடியலூர் செல்லும் அனைத்து பேருந்துகளிலும் ஏறி, கவுண்டம்பாளையம் நிறுத்ததில் இறங்கவும். (வண்டி எண். 27A, 27B, 32A)

## பேருந்துகளில் வருபவர்களின் கவனத்திற்கு

**உக்கடம் பேருந்து நிலையத்தில் வருபவர்கள்**

துடியலூர் செல்லும் அனைத்து பேருந்துகளிலும் ஏறி, கவுண்டம்பாளையம் நிறுத்தத்தில் இறங்கவும். (வண்டி எண். 4, 4B, 4D, 27, 32H)

**சிங்காநல்லூர் பேருந்து நிலையத்தில் வருபவர்கள்**

காந்திபுரம் பேருந்து நிலையம் வரவும். வாகன வசதி உண்டு (ஆர்.வி. ஹோட்டல் அருகில் காந்திபுரம்) அல்லது காந்திபுரத்திலிருந்து துடியலூர் செல்லும் அனைத்து பேருந்துகளிலும் ஏறி கவுண்டம்பாளையம் நிறுத்ததில் இறங்கவும். (வண்டி எண். 6A, 20B, 20C, 26, 27A, 27B, 32, 32D, 85, 102, 102A)

**வரவேற்புக்குழு சார்பில் செய்யப்பட்டுள்ள விளம்பரம்**

| | |
|---|---|
| 1) | போஸ்டர் 2000 எண்ணிக்கை |
| 2) | ப்ளக்ஸ் 5x3 300 எண்ணிக்கை |
| | ப்ளக்ஸ் 10x8 30 எண்ணிக்கை |
| | ப்ளக்ஸ் 12x10 20 எண்ணிக்கை |
| | ப்ளக்ஸ் 30x10 3 எண்ணிக்கை |
| 3) | ஸ்டிக்கர் 5000 எண்ணிக்கை |
| 4) | சுவர் விளம்பரம் 60 இடங்களில் |
| 5) | ஆர்ச் இரு மண்டபங்களையும் இணைக்கும் வகையில் |
| 6) | நோட்டிஸ் 10,000 |

பேரணி 17.12.12 மாலை 4.00 மணிக்கு

| | | |
|---|---|---|
| புறப்படும் இடம் | : | வி.கே.கே. மேனன் ரோடு<br>(ஆர்.வி. ஹோட்டல் அருகில் காந்திபுரம்) |
| பொதுக்கூட்டம் | : | சிவானந்தா காலணி |
| பேரணி தூரம் | : | சுமார் 3 கி.மீ. |
| பேரணிக்கு | : | 1000 கொடிகள் 20x30<br>100 கொடிகள் 30x40<br>14 கொடிகள் 40x55 |
| தோரணம் | : | 5 கி.மீ. |
| சேர் | : | 2500 எண்ணிக்கை |

**பேரணிக்கு வருபவர்களின் கவனத்திற்கு**

தோழர்களை காந்திபுரம் நகரப் பேருந்து நிலையம் அருகில் உள்ள ஆர்.வி. ஹோட்டல் அருகே இறக்கிவிட்டு வாகனத்தை பொதுக்கூட்டம் நடைபெறும் இடத்தின் அருகில் (டாடாபாத் பவர் ஹவுஸ்) உள்ள கட் ரோடுகளில் நிறுத்திக் கொள்ளவும்.

***குறிப்பு***

*குளிர் இருக்கின்ற காரணத்தால் ஸ்வெட்டர் மற்றும் கம்பளி ஆடைகளை எடுத்து வரவும்.*

# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் : 158 / CPT  அங்கீகாரம் பெற்றது  இணைப்பு : CITU & EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005

Telephone No: 044-28548529
Fax No: 044-28516574

Email: coteecitu_hqchennai@yahoo.com
coteecitu@gmail.com

CITU


**சுற்றறிக்கை எண் 31/2012**  **நாள் : 01/12/2012**

*பெறுநர்*
மத்திய அமைப்பின் அனைத்து நிர்வாகிகள்,
கிளைச் செயலாளர்கள் மற்றும்
மாநில செயற்குழு உறுப்பினர்கள்.

## மாநாட்டு தயாரிப்பு சிறப்பு சுற்றறிக்கை

அன்பான தோழரே, வணக்கம்

2012 டிசம்பர் 15, 16, 17 ஆகிய தேதிகளில் நடைபெற உள்ள மின் ஊழியர் மத்திய அமைப்பின் 14 வது மாநில மாநாட்டு பணிகளான சுவர் எழுத்துக்கள், டிஜிட்டல் பேனர்கள் வைப்பது, சுவரொட்டிகள் கொண்டு வருவது போன்ற பணிகள் நடைபெறுவதாக செய்திகள் வந்துள்ளன.

மாநாட்டின் பிரச்சார துவக்கமாக மின் ஊழியர் மத்திய அமைப்பு துவங்கிய நாளான நவம்பர் 20 அன்று 14 வது மாநில மாநாட்டை குறிக்கும் வகையில் கோட்ட மட்டத்தில் 14 செங்கொடிகளை ஏற்றி, தட்டி போர்டுகள் வைத்து பிரச்சாரத்தை துவங்க வேண்டும் என்ற முடிவு பல வட்டங்களில் உற்சாகமாக நிறைவேற்றப்பட்டதாக செய்திகள் வந்துள்ளன. அப்படி பிரச்சாரத்தை துவங்காத கிளைகள் நவம்பர் 20 என்று பார்க்காமல் உடனடியாக கொடிகளை ஏற்றி, தட்டி போர்டுகள் வைத்து பிரச்சாரத்தை துவங்கிட வேணுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

நடைபெற உள்ள மத்திய அமைப்பின் மாநாட்டில் கலந்து கொள்வோர்களின் பிரதிநிதிகளின் எண்ணிக்கை ஏற்கனவே கிளைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன. 25.11.2012 அன்று நடைபெற்ற மாநில செயற்குழு கூட்டத்தில் சென்னை மையம், மதுரை, தேனி, திண்டுக்கல், தூத்துக்குடி, திருப்பூர், எண்ணூர் அனல், தூத்துக்குடி அனல், பொதுகட்டுமான வட்டம் போன்ற கிளைகளுக்கு கூடுதல் ஒரு பிரதிநிதி அனுமதிக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. இவைகளையும் சேர்த்து ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் பெயர்பட்டியலை உடனடியாக கீழ்கண்ட வரவேற்பு குழு முகவரிக்கும் மத்திய அமைப்பிற்கும் அனுப்பி வைப்பதுடன், இத்துடன் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளை முழுமையாக கலந்து கொள்வதற்கான ஏற்பாட்டையும் செய்திட வேணுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

***வரவேற்புக் குழு முகவரி :***

**எண். 277, டாக்டர் ராஜேந்திர பிரசாத் ரோடு,**
**டாடாபாத், கோவை - 641012**
**E Mail : raj.cotee@g.mail.com**

மாநாட்டையொட்டி விரிவடைந்த பிரச்சாரத்தை கொண்டு செல்லும் வகையில் தமிழகத்தின் 4 முனைகளில் இருந்து ஜோதி, கொடி, பிரச்சார பயணமாக கோவையை நோக்கி வர உள்ளனர். பிரச்சார பயணங்கள் வருகின்ற பாதை, தங்கும் இடம் போன்றவைகள் அடங்கிய பட்டியல் இத்தோடு இணைக்கப்பட்டுள்ளது. இவைகளின் அடிப்படையில் இந்த பிரச்சாரம் சிறப்பாக அமையவும் ஆங்காங்கே, வாயிற்கூட்டங்கள், வரவேற்பு கொடுப்பது போன்றவைகளை எழுச்சிகரமாக நடத்துவதற்குண்டான பணிகளை செய்ய வேணுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

பிரச்சார பயணத்திற்கான காவல்துறை அனுமதியை மாநில மையத்திலிருந்து இதுவரை பெற்றது போல் பெறுவதற்குண்டான நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகிறது.

மாநாட்டின் நிறைவு நிகழ்ச்சியாக நடைபெற உள்ள பேரணிக்கு ஏற்கனவே திட்டமிட்டவாறு 10,000 ஊழியர்களுக்கு மேற்பட்டவர்களை திரட்டுவதற்குண்டான நடவடிக்கையை எடுத்திடும் வகையில் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட கோட்டாக்கள் அடிப்படையில் தோழர்களை முழுமையாக திரட்டி வருவதற்குண்டான நடவடிக்கையை எடுக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம். மேலும் பேரணி சிறக்க செந்தொண்டர்கள், கலைக்குழுக்கள், பிலேகார்ட்ஸ் போன்ற ஏற்பாடுகளோடு கலந்து கொள்ள வேணுமாய் கேட்டுக் கொள்கிறோம். **மேலும் பேரணிக்கு வரும் தோழர்கள் டிசம்பர் 18 ந் தேதி அவரவர் ஊர்களுக்கு சென்று அங்கு நடைபெறும் மறியல் போராட்டத்தில் கலந்து கொள்ளும் வகையில், அவர்களின் சுற்றுலா ஏற்பாடுகள் அமைத்து கொள்ள வேணுமாய் கேட்டுக் கொள்கிறோம்.**

### தீக்கதிர் விரிவாக்கம்

தீக்கதிர் பொன்விழா ஆண்டையொட்டி, மின் அரங்கத்தில் தீக்கதிர் விரிவாக்கம் சம்மந்தமாக கோவையில் நடைபெறும் மாநில மாநாட்டில் 1000 தீக்கதிர்களை கூடுதல் ஆக்குவது என்ற திட்டமிடப்பட்டது. அதை நடைமுறைப்படுத்துகின்ற வகையில் 300 தீக்கதிருக்கான மாத ஆண்டு சந்தாக்கள் திட்ட வாரியாக செலுத்தி, தீக்கதிர் விரிவாக்கபணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த அடிப்படையில் நமது இலக்கான கோவை மாநாட்டில் 1000 பிரதிகளை அதிகப்படுத்துவதற்கான கோட்டாக்கள் நிர்ணயிக்கப்பட்டு விரிவாக்கப்பணிகள் நடைபெற்று வருகின்றன. திட்டமிடப்பட்டதை முழுமையாக அமலாக்கும் விதத்தில் திட்டங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட கோட்டக்களை மாநில மாநாட்டில் நிறைவேற்றுவதற்குண்டான ஏற்பாட்டை கிளைகள் செய்திட வேணுமாய் கேட்டுக் கொள்கிறோம்

### உறுப்பினர் சேர்ப்பு

2012 ஆம் ஆண்டு உறுப்பினர் சேர்ப்பில் இதுவரை மாநில மையத்திற்கு 17,500 உறுப்பினர்களுக்குண்டான ஈவுத் தொகையே வந்துள்ளது. இந்த ஆண்டு முடிகின்ற தருவாயில் உள்ள நிலையில் நமது இலக்கான 30,000த்தை அடைய இன்னும் நீண்ட இடைவெளி உள்ளது. இதன் அவசர அவசியத்தை உணர்ந்து மாநாட்டிற்கு வருவதற்கு முன்பாக உங்களது கிளையின் சந்தா இலக்கை முழுமையாக அடைவதற்குண்டான ஏற்பாட்டை செய்திட வேணுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

மின்வாரியத்தில் 4000 ஐடிஐ படித்தவர்களை பணி நியமனம் சம்மந்தமாக அவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட வயது வரம்பை தளர்த்திட நமது வழிகாட்டுதலின் அடிப்படையில் தொடுக்கப்பட்ட வழக்கில் வயது வரம்பை முற்றிலுமாக அகற்றி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. நீதிமன்ற உத்தரவை பெற்று, வாரியத்திற்கு கடிதம் எழுதி தீர்ப்பை உடனடியாக அமல் படுத்த கோரியுள்ளோம்.

தோழமையுள்ள

**(எஸ்.எஸ். சுப்பிரமணியன்)**
பொதுச் செயலாளர்.

*குறிப்பு :*

✸ இரண்டாண்டு பணிமுடித்த அனைத்து மஸ்தூர்களையும், கள உதவியாளர்களாக பதவி உயர்வு அளிக்க வேண்டும், வாரியத்தில் பணியாற்றும் பகுதி நேர ஊழியர்களுக்கு நிரந்தர தொழிலாளர்களுக்கு அளித்ததைப் போல் 20 சதவீதம் போனஸ் அளித்திட வேண்டும்.

✸ கணக்கீட்டாளர் இரண்டாம் நிலை அனைவரையும் கணக்கீட்டாளர் பதவி மாற்றம் செய்ய வேண்டும் என்பன போன்ற பிரச்சனைகளின் மீது வாரியத் தலைவருக்கு கடிதம் கொடுத்து வற்புறுத்தப்பட்டுள்ளது.

# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் : 158 / CPT அங்கீகாரம் பெற்றது இணைப்பு : CITU & EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005

Telephone No: 044-28548529
Fax No: 044-28516574
CITU
Email: coteecitu_hqchennai@yahoo.com
coteecitu@gmail.com


**சுற்றறிக்கை எண் 32/2012** **நாள் : 22/12/2012**

*பெறுநர்*
மத்திய அமைப்பின் அனைத்து நிர்வாகிகள்,
அனைத்து கிளைச் செயலாளர்கள் மற்றும்
அனைத்து மாநில செயற்குழு உறுப்பினர்கள்.
அனைத்து பொதுக்குழு உறுப்பினர்கள்.

அன்பான தோழரே, வணக்கம்

மின் ஊழியர் மத்திய அமைப்பின் 14 வது மாநில மாநாடு கோவை மாநகரில் சீரும், சிறப்புமாக எழுச்சியோடும், உற்சாகத்தோடும் நடைபெற்று முடிந்துள்ளது. மாநாடு பிராச்சாரம் பேரணி பொதுக்குகூட்டம் ஆகியவைகள் வெற்றிகரமாக நடைபெற்றுள்ளது. இந்நிகழ்ச்சிகள் நடைபெற முயற்சி எடுத்த அத்துணை மாநில நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள், முன்னணி ஊழியர்கள் மாநாட்டு வரவேற்புக்குழு உறுப்பினர்கள் ஆகிய அனைவருக்கும் மின் ஊழியர் மத்திய அமைப்பு பாராட்டுதல்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறது.

மாநில மாநாட்டையொட்டி மாநாட்டு நோக்கங்களை மின் பயனீட்டாளர்கள் மற்றும் மின்வாரிய ஊழியர்கள் மத்தியில் கொண்டு செல்லும் விதமாக தமிழகம் முழுவதும் உள்ள கோட்ட, திட்ட அலுவலகங்கள் முன்னால் 14 வது மாநாட்டை குறிக்கும் வகையில் 14 செங்கொடி ஏற்றப்பட்டு நவம்பர் 20 முதல் பிரச்சாரம் கொண்டு செல்லப்பட்டது. கிடைத்துள்ள தகவலின் அடிப்படையில் பெரும்பாலான கோட்டங்களில் செங்கொடி ஏற்றப்பட்டு பிரச்சாரம் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

தமிழகம் முழுவதும் சுவர் எழுத்துக்களாலும், செங்கொடி தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டன. கோவை மாநகரம் முழுவதும் செங்கொடிகளாலும், தோரணங்களாலும், டிஜிட்டல் பேனர்களாலும் அலங்கரிக்கப்பட்டு இருந்தன.

சென்னை, கன்னியாகுமரி நாகை, திருவண்ணாமலை ஆகிய 4 முனைகளிலும் இருந்து புறப்பட்ட பிரச்சார பயணக்குழுக்களுக்கு தமிழகம் முழுவதும் உற்சாகமான வரவேற்பு அளிக்கப்பட்டது. அது மட்டுமல்லாமல் கோவையில் சின்னியம்பாளையம் தியாகிகள் நினைவாகவும், ஸ்டோன்ஸ்மில் தியாகிகள் நினைவாகவும் இரண்டு பிரச்சாரப் பயணக்குழுக்கள் கோவை மாநகரில் பிரச்சாரத்தை மேற்கொண்டது. பிரச்சாரப் பயணக்குழுக்கள், டிசம்பர் 14 ந்தேதி இரவு மாநாடு மண்டபத்தை வந்தடைந்தது.

மாநாடு நடைபெறும் கல்பனா திருமண மண்டபம் தோழர் எம்.கே. பாந்தே நினைவரங்கம் மாநாட்டு நிகழ்ச்சிகள் சிறப்பாக அமைவதற்கு ஏற்ற வகையில் அமைந்தது என்பது சிறப்பு அம்சமாகும்.

## பொதுமாநாட்டின் நிகழ்ச்சிகள் துவக்கம்

15 ந் தேதி காலை பிரச்சார பயணக்குழுக்களில் வந்தவர்களும், மாநாட்டில் பங்கு கொண்ட தலைவர்களும், பிரதிநிதிகளும், மாநாட்டு அரங்கத்திற்கு அருகாமையில் உள்ள திடலில், வான வேடிக்கை முழங்க மேளதாளங்களுடன் பிரச்சார பயணக்கொடி, ஜோதியை பெற்றுக் கொண்ட நிகழ்ச்சிகள் நடந்தேறியது.

சென்னையில் இருந்து கொண்டு வரப்பட்ட தலைவர் தோழர் உ.ரா. வரதராஜன் நினைவு ஜோதியை தோழர்கள் கே. ரவிச்சந்திரன், ஈ. அந்தோணி, ஏ. பழனி, கோ. மோகன்ராஜ், எஸ். கண்ணன், கே. வெங்கடேசன், ஆர். உமாநந்தன் ஆகியோர் வழங்க கோவை மாவட்ட சிஐடியு செயலாளர் தோழர் எஸ். ஆறுமுகம் பெற்றுக் கொண்டார்.

கன்னியாகுமரியில் இருந்து தோழர் ஜே. ஹேமச்சந்திரன் தியாகிகள் நினைவு ஜோதியை தோழர்கள் வீ. பாலசுப்ரமணியன், எஸ். வண்ணமுத்து, ஐ.எம்.ஆர். கணேசன், எஸ். தங்கராஜ் ஆகியோர் வழங்க முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தோழர் கே.சி. கருணாகரன் பெற்றுக் கொண்டார்

திருவண்ணாமலையில் இருந்து கொண்டு வரப்பட்ட து. ஜானகிராமன் நினைவு செங்கொடியை தோழர்கள் எஸ். ஆனந்தன், ஆர். சிவராஜ், கே. காங்கேயன், வி.எம். வெங்கடேசன் ஆகியோர் வழங்க கோவை நாடாளுமன்ற உறுப்பினர் தோழர் பி. ஆர். நடராஜன் பெற்றுக் கொண்டார்.

தஞ்சையில் இருந்து புறப்பட்ட வெண்மணி தியாகிகள் நினைவு ஜோதியை தோழர்கள் எம். பன்னீர் செல்வம், வி.பி. கந்தசாமி தோழர் எஸ். ராஜாராமன், ஜீ. ராமகிருஷ்ணன், கே. செல்வராஜ், ஆர். குமரேசன், எஸ். அகஸ்டின், ஆர். ராஜகுமாரன் ஆகியோர் வழங்க திருப்பூர் மாவட்ட சிஐடியு செயலாளர் தோழர் எம். சந்திரன் பெற்றுக் கொண்டார்.

## செங்கொடி ஏற்றுதல்

மின் ஊழியர் மத்திய அமைப்பின் மாநில தலைவரும், மாநாட்டின் தலைவருமான தோழர்கள் கே. விஜயன் அவர்கள் உணர்ச்சி மிகு முழக்கங்களுக்கிடையே செங்கொடி ஏற்றினார்.

## தோழர் ஏ.கே. பத்மநாபன் துவக்கவுரை

இரு மாநாடுகளுக்கும் இடையில் மறைந்த தலைவர்களுக்கும், தியாகிகளுக்கும், மத்திய அமைப்பின் துணைப் பொதுச் செயலாளர் தோழர் ஈ. அந்தோணி அவர்கள் அஞ்சலியை முன் மொழிய அஞ்சலி செலுத்திய பின்னர் மாநாட்டின் பொது நிகழ்ச்சிகள் துவங்கின.

தோழர் கே. விஜயன் மாநாட்டிற்கு தலைமை தாங்கினார். வரவேற்புக்குழு தலைவரான தோழர் யு. கே. வெள்ளியங்கிரி அவர்கள் கோவை மாநகரத்தின் சிறப்பு அம்சங்களை விளக்கி அங்கு நடைபெறும் மாநாட்டிற்கு வருகை தந்துள்ள தலைவர்களையும், பிரதிநிதி தோழர்களையும் வரவேற்று உரை நிகழ்த்தினார்.

சிஐடியு வின் அகில இந்திய தலைவர் தோழர் ஏ.கே. பத்மநாபன் துவக்கவுரையாற்றினார். அடுத்த நிகழ்ச்சியாக மத்திய அமைப்பின் தலைவரும் மாநாட்டின் தலைவருமான தோழர் கே. விஜயன் அவர்கள் தலைமையுரையாற்ற, பொதுச் செயலாளர் மாநாட்டின் நிகழ்ச்சி நிரலுக்கான ஒப்புதலையும் பெற்றார்.

## மாநாட்டு நடவடிக்கைக்கு கீழ்க்கண்ட குழுக்கள் தேர்வு செய்யப்பட்டன

தீர்மானக்குழுவில் தோழர்கள் ஆர். குருவேல் (கன்வீனர்) வீ. பாலசுப்ரமணியன், கே. அருட்செல்வன், சி. ஜோதிமணி, ஏ. பழனி, டி. ஸ்ரீதர் ஆகியோரும் தகுதி ஆய்வுக்குழுவில் தோழர்கள் வீ. இளங்கோ (கன்வீனர்) எம். வெங்கடேசன், ஆர். சிவராஜ், டி. ஜெய்சங்கர், டி. பழனிவேலு ஆகிய தோழர்களும், கூட்ட நடவடிக்கை பதிவு செய்யும் மினிட்ஸ் குழுவில் தோழர்கள் ஈ. அந்தோணி (கன்வீனர்), எஸ். வண்ணமுத்து, ஆ.பெருமாள், எஸ். ராஜாராமன், ஏ. வீரணன் ஆகியோரும் ஏகமனதாக தேர்வு செய்யப்பட்டனர்.

மாநாட்டின் அடுத்த நிகழ்ச்சியாக மத்திய அமைப்பின் பொதுச் செயலாளர் தோழர் எஸ்.எஸ். சுப்ரமணியன் கடந்த மாநாட்டிற்கு பிறகு நடந்த பணிகள் குறித்த வேலை அறிக்கையையும், ஸ்தாபன அறிக்கையையும், முன் வைத்தார். அதனை தொடர்ந்து 2009, 2010, 2011, 2012 அக்டோபர் மாதம் முடிய உள்ள வரவு செலவு கணக்குகளை மாநில பொருளாளர் தோழர் டி. கோவிந்தராஜு முன் வைக்க மின்கதிர் மாத இதழின் வரவு செலவு கணக்குகள் வளர்ச்சி சம்மந்தமாக மத்திய அமைப்பின் மாநில துணை பொதுச் செயலாளர் தோழர் எம். வெங்கடேசன் அறிக்கை ஒன்றினையும் முன் வைத்தார்.

மின் ஊழியர் குடும்ப நல பாதுகாப்புத் திட்டத்தின் வரவு செலவு கணக்குகள் திட்டம் சம்மந்தமாக அறிக்கையை மின் ஊழியர் மத்திய அமைப்பின் மாநில செயலாளர்களின் ஒருவரான தோழர் கே. ரவிச்சந்திரன் முன் வைத்தார்.

வேலை ஸ்தாபன அறிக்கையின் மீது 63 பிரதிநிதிகள் விவாதத்தில் பங்கு கொண்டனர். விவாதம் உயர்ந்த தரத்தில் இருந்ததோடு விமர்சன, சுய விமர்சன அடிப்படையில் அமைந்திருந்தது ஒரு குறிப்பிட தக்க அம்சமாகும்.

## வாழ்த்துரைகள்

மாநாட்டின் இடையே இந்திய மின் ஊழியர் கூட்டமைப்பின் அகில இந்திய தலைவரும், கேரள மின் வாரிய தொழிற்சங்கத்தின் முதுபெரும் தலைவருமான தோழர் **கே.ஓ. ஹபீப்** அவர்கள் புதிய தாராளமய கொள்கை அமலாக்கம், மின்சாரத்துறையில் ஏற்பட்டுள்ள மாறுதல்களையும் அதற்கு எதிராக ஸ்தாபன பலத்தோடு மின் வாரிய ஊழியர்கள் வீறுகொண்டு எழ வேண்டிய அவசியத்தையும் மலையாள மொழியில் முன் வைத்து மாநாட்டினை வாழ்த்தி உரையாற்றினார்.

கோவை நாடாளுமன்ற உறுப்பினர் தோழர் **பி. ஆர். நடராஜன்** அவர்கள் பொதுத்துறையில் அந்நிய முதலீடு சில்லரை வர்த்தகத்தில் அந்நியர் தலையீடு அதனால் ஏற்பட்டுள்ள பாதகமான அம்சங்களை முன் வைத்து கோவை நாடாளுமன்ற உறுப்பினர் தோழர் பி. ஆர். நடராஜன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்.

சிஐடியு வின் தமிழ் மாநில செயலாளர்களில் ஒருவரும், உழைக்கும் பெண்கள் ஒருங்கிணைப்புக்குழுவின் கன்வீனருமான தோழர் **மாலதி சிட்டிபாபு** அவர்கள் மின் வாரியத்தில் குவிந்து கிடக்கும் பெண்களை அணி திரட்ட வேண்டிய அவசியத்தை முன் வைத்து வாழ்த்துரை வழங்கினார்.

அகில இந்திய ஜனநாயக மாதர் சங்க தமிழ் மாநிலக்குழுவின் பொதுச் செயலாளரான தோழர் **சுகந்தி** அவர்கள் மின் வாரியத்தில் பணியாற்றும் பகுதி நேர ஊழியர்களுக்கு மின் ஊழியர்

மத்திய அமைப்பின் முயற்சியினால் சத்துணவு ஊழியர்களுக்கான சம்பளத்தைப் பெற்றுத் தருவதற்கு மத்திய அமைப்பு ஆற்றிய அரும்பணியை பாராட்டியதோடு இன்றைக்கு தமிழகத்தில் நிகழும் தீண்டாமைகொடுமை, ஜாதீய கொடுமைகளுக்கெதிராக மின் வாரிய ஊழியர்கள் அணி திரள வேண்டும் என்ற எழுச்சி உரையோடு வாழ்த்துரை வழங்கினார்.

மாநில பொதுத்துறை நிறுவனமாகவும், போராட்ட களம் பல கண்ட அரசு போக்குவரத்து ஊழியர் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் தோழர் **ஏ.பி. அன்பழகன்** போக்குவரத்து துறையில் ஏற்பட்ட அனுபவத்தை விளக்கியதோடு இரு துறைகளும் இணைந்து செயலாற்ற வேண்டியதன் அவசியத்தை முன் வைத்து வாழ்த்துரை வழங்கினார்.

மின் வாரிய ஓய்வு பெற்றோர் நல அமைப்பின் துணைப் பொதுச்செயலாளர் தோழர் **என். சின்னசாமி** அவர்கள் மாநாட்டில் கலந்து கொண்டு மின் வாரியத்தில் பணியாற்றி ஓய்வு பெற்றோரும், மின் வாரியத்தில் பணியாற்றும் ஊழியர்களும் இரண்டறக் கலந்து அரசின் ஓய்வூதியத்திட்ட பறிப்பு போன்றவைகளுக்கு இரு அமைப்புகளும் இணைந்து வலிமையான போராட்டத்தில் ஈடுபட வேண்டும் என்பதை முன் வைத்து வாழ்த்துரை வழங்கினார்.

## கருத்தரங்கம்

மாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்ச்சியான 16.12.2012 அன்று பொது நிகழ்ச்சியாக தரமான மின்சாரம், தடையில்லா மின்சாரம் என்ற தலைப்பிலும், கேள்விக்குறியாகும் சமூகப் பாதுகாப்பு என்ற தலைப்பிலும் மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினரான தோழர் கே.கனகராஜ் அவர்களும், மாநில சிஐடியு வின் துணை பொதுச் செயலாளர் தோழர் ஆர். கருமலையான் அவர்களும், மின் ஊழியர் மத்திய அமைப்பின் முன்னாள் தலைவரான எஸ். பஞ்சரத்னம் அவர்களும் கருத்தரங்கு உரை வீச்சை நிகழ்த்தினார்கள். இந்நிகழ்ச்சியில் மாநாட்டின் பிரதிநிதிகளோடு, மக்களும் கலந்து கொண்டு உரையை செவிமடுத்தனர். கருத்தரங்கம் சிறப்பாக இருந்தது.

## மாநாட்டு மலர் வெளியீடு

மாநாட்டின் ஒரு நிகழ்வாக மாநாட்டு மலரை தோழர் **ஆர். கருமலையான்** அவர்கள் வெளியிட மின் ஊழியர் மத்திய அமைப்பின் முன்னணி தலைவர்களில் ஒருவரும், ஓய்வுபெற்றோர் நல அமைப்பின் செயல்வீரருமான தோழர் **சி.வி. மீனாட்சி சுந்தரம்** அவர்கள் பெற்றுக் கொண்ட நிகழ்ச்சி நடந்தேறியது.

## தொகுப்புரை

மாநாட்டின் நிகழ்ச்சிகளில் பிரதான நிகழ்ச்சியாக அறிக்கையின் மீது வந்த பல்வேறு விவாதங்களுக்கு மத்திய அமைப்பின் மாநில பொதுச் செயலாளர் தொகுப்புரை வழங்கினார். மாநில பொருளாளர் தோழர் டி. கோவிந்தராஜு அவர்களும் வரவு செலவு கணக்குகளின் மீது வந்த சந்தேகங்களுக்கு விளக்கம் அளித்தார். அதன் பிறகு பொதுச் செயலாளர் அறிக்கையும், வரவு செலவு கணக்குகளும் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

அடுத்த நிகழ்ச்சியாக கீழ்க்கண்டவாறு புதிய நிர்வாகிகள் தேர்தலுக்கு பின்னர் தேர்வ செய்யப்பட்டனர்.

**தலைவர்**

தோழர் கே.விஜயன்

**பொதுச் செயலாளர்**

தோழர் எஸ்.எஸ்.சுப்பிரமணியன்

**பொருளாளர்**

தோழர் ஈ. அந்தோணி

**துணைப் பொதுச்செயலாளர்கள்**

தோழர் எம். வெங்கடேசன்

தோழர் எஸ். ராஜேந்திரன்

தோழர் வீ. இளங்கோ

தோழர் கே. ரவிச்சந்திரன்

## துணைத் தலைவர்கள்

தோழர் ஆர். கருமலையான்

தோழர் ஆர். குருவேல்

தோழர் வை. பாலசுப்பிரமணியம்

தோழர் டி. அறிவழகன்

தோழர் எச். ஜான் சௌந்திரராஜன்

தோழர் ஜி. மோகன்ராஜ்

தோழர் எஸ். ஆனந்தன்

தோழர் பி. கே. சிவகுமார்

தோழர் ஐ.எம்.ஆர். கணேசன்

தோழர் ஜி. இராமகிருஷ்ணன்

தோழர் ஆர். ரவிக்குமார்

தோழர் கே. அம்பிகாபதி

தோழர் டி. கோபாலகிருஷ்ணன்

## செயலாளர்கள்

தோழர் து. கோவிந்தராஜு

தோழர் ஆர். ஸ்ரீதர்

தோழர் ஆர். சிவராஜ்

தோழர் எ. பழனி

தோழர் எம். தனலட்சுமி

தோழர் கே. அருட்செல்வன்

தோழர் வி. மதுசூதனன்

தோழர் எம். பன்னீர் செல்வம்

தோழர் சி. ஜோதிமணி

தோழர் டி. ஜெய்சங்கர்

தோழர் எஸ். வண்ணமுத்து

தோழர் டி. பழனிவேல்

தோழர் டி. ஸ்ரீதர்

தோழர் ஏ.வீரண்ணன்

மாநில செயற்குழு உறுப்பினர்களுக்கான பட்டியலும், பொதுக்குழு உறுப்பினர்களுக்கான பட்டியலும் முழுமையாக பெற்று அடுத்து வரும் மின்கதிர் மாத இதழில் வெளியிடப்பட உள்ளன.

பிரதிநிதிகள் மாநாட்டின் நிறைவு நிகழ்ச்சியாக சிஐடியு வின் தமிழ் மாநில பொதுச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான தோழர் அ.சவுந்தரராஜன் அவர்களின் நிறைவு பேருரையோடும், வரவேற்புக்குழு செயலாளர் தோழர் எஸ். இராஜேந்திரன் அவர்களின் நன்றியுரையோடும் மாநாட்டு நிகழ்வுகள் நிறைவு பெற்றன.

## தீர்மானங்கள்

1. மாநாட்டில், நாட்டு மக்களை பாதிக்கும் மத்திய அரசின் கொள்கைகளை கண்டித்து 2012 டிசம்பர் 18 மறியலிலும் 2013 ஆம் ஆண்டு பிப்ரவரி 20 - 21 தேதிகளில் நடைபெற உள்ள அகில இந்திய வேலை நிறுத்தத்திலும் மின் வாரிய ஊழியர்கள் பங்கு பெறுவோம் என்ற தீர்மானத்தை தோழர் வீ. மதுசூதனன் அவர்கள் முன் மொழிய தோழர் ஆர். ஸ்ரீதர் அவர்கள் வழி மொழிந்தார்

2. தமிழக மின் நுகர்வோர்களுக்கு தேவையான மின்சாரத்தை பெற்று சமச்சீராக பகிர்ந்தளிக்க வேண்டும் என தமிழக அரசை வலியுறுத்தும் தீர்மானத்தை தோழர் கே. செல்லப்பன் அவர்கள் முன்மொழிய தோழர் பி. கண்ணன் அவர்கள் வழிமொழிந்தார்.

3. மின் வாரியம் பிரிக்கப்பட்ட மாநிலங்களில் மின் பற்றாக்குறையும், மின் வாரிய ஊழியர்களின் உரிமைப் பறிப்பும் தான் நடைபெற்றுள்ளது. ஆகவே பிரிக்கப்பட்ட மின் வாரியத்தை மின் வாரியமாகவே செயல்படுத்திடுக என்ற தீர்மானத்தை ஆர். குருவேல் முன்மொழிய எம். வெங்கடேசன் வழிமொழிந்தார்.

4. தமிழக மின்வாரியத்தில் ஆண்டு தோறும் 8 முதல் 11 சதவீதம் வரை மின்துறை வளர்ச்சி ஏற்பட்டு நுகர்வோர் எண்ணிக்கை உயர்ந்து வரும் நிலையில் சுமார் 52,000 காலிப்பணியிடங்கள் உள்ள நிலையிலும் இருக்கின்ற ஊழியர்கள் வேலைப்பளுவை சுமந்து மனஉளசலுக்கு ஆளாக்கப்படுகின்றதால் நுகர்வோர் சேவையிலும் அது பாதிப்பை ஏற்படுத்துகின்றது. எனவே மின்வாரியத்தில் உள்ள காலிப்பணியிடங்களை உடனடியாக நிரப்பிடுக என்ற தீர்மானத்தை ஆர்.சிவராஜ் முன் மொழிய கே. அருள் செல்வன் வழி மொழிந்தார்

5. தமிழக மின் வாரிய ஊழியர்களுக்கு 1.12.2011 முதல் புதிய ஊதிய உயர்வு வழங்குவதற்குண்டான பேச்சு வார்த்தையை உடனே நடத்தி ஊதிய உயர்வை காலதாமதமின்றி வழங்கிடுக என்ற தீர்மானத்தை டி. ஜெயசங்கர் முன்மொழிய எஸ். முத்துக்குமாரசாமி வழிமொழிந்தார்.

6. கணக்கீட்டுப் பிரிவு ஊழியர்களின் பதவி உயர்வு புதிய பதவிகளை அனுமதிப்பது, ஒப்பந்த காலத்தை ஓய்வூதியத்திற்கும் கணக்கிடுவது கணினியை பயன்படுத்தி மக்கள் சேவையை தொடர்ந்திடுவது என்பன போன்ற கோரிக்கைகளை தோழர் வை. பாலசுப்ரமணியம் அவர்கள் முன் மொழிய தோழர் எச். ஜான்சௌந்தரராஜ் வழிமொழிந்தார்.

7. மின் பராமரிப்பு பணிகள் செய்யவும், மின் தடைகள் நீக்கவும் போதிய தளவாடப் பொருட்கள் தரமானதாக வழங்கப்படாததின் காரணமாக வாரியத்திற்கு வருவாய் இழப்பு ஏற்படுகிறது.

தளவாட பொருட்கள் தடையின்றி வழங்குவதின் மூலம் மின்சாரத்தை சேதாரமில்லாமல் நுகர்வோருக்கு கொண்டு சேர்க்க முடியும். வாரிய வருவாய் இழப்பை தடுக்க முடியும். எனவே தளவாடப் பொருட்கள் தடையின்றி வழங்கி வாரியத்திற்கு ஏற்படும் நஷ்டத்தை தவிர்க்க வேண்டும் என்ற தீர்மானத்தை வி.பி. கந்தசாமி முன் மொழிய கோ.மோகன்ராஜ் வழி மொழிந்தார்

8. மின்சார தொடரமைப்பு கழகத்தின் தன்னிச்சையான வடிவமைப்பு அறிவிப்பை திரும்ப பெற கோருதல் சம்மந்தமான தீர்மானத்தை தோழர் ஏ.பழனி முன் மொழிய தோழர் என்.மூர்த்தி வழி மொழிந்தார்.

9. சேவை துறையாம் மின்துறையில் பணியாற்றும் ஊழியர்களின் இடமாற்றம், பதவி உயர்வு போன்றவைகளின் பணி நிலைமைகள் சமந்தமாக வாரிய விதிகள் வரையறுக்கப்பட்டு அதன் அடிப்படையில் பதவி உயர்வு, ஊர்மாற்றம் வழங்கப்பட்டு வந்த நிலையில் கடந்த பல ஆண்டுகளாக வாரிய விதிகள் மீறப்பட்டு அமைச்சரும், அமைச்சரின் அலுவலகமும் தலையிட்டால் தான் இவைகள் அமல்படுத்தப்படும் என்ற நிலை உள்ளது. எனவே வாரிய ஊழியர்களின் பதவி உயர்வு, இடமாற்றம் போன்றவைகளில் அரசியல் தலையீடு இல்லாமல் வாரிய விதிகளின் அடிப்படையில் வழங்கிட வேண்டும் என்ற தீர்மானத்தை தோழர் எம்.பன்னீர் செல்வம் முன் மொழிய தோழர் எஸ். தங்கராஜ் வழி மொழிந்தார்.

10. மின் வாரியத்தில் பணியாற்றும் ஒப்பந்த தொழிலாளர்களுக்கு சம வேலைக்கு சம ஊதியம் என்ற தீர்மானத்தை தோழர் எஸ். ஆனந்தன் முன் மொழிய தோழர் எஸ். வண்ணமுத்து வழி மொழிந்தார்.

11. ஓய்வு பெற்ற ஊழியர்களின் ஓய்வூதியத்தை தொடர்ந்திட, புதிய ஓய்வூதிய மசோதவை திரும்பப் பெற்றிட என்ற தீர்மானத்தை தோழர் பி. கே. சிவக்குமார் முன்மொழிய தோழர் எஸ். தங்கராஜ் வழி மொழிந்தார்.

12. பணி நிரந்தரம் செய்யப்பட்ட பகுதி நேர ஊழியர்களுக்கு இதர பகுதி ஊழியர்களுக்கு அளிக்கும் உரிமைகளை அளிக்க கோரிய தீர்மானத்தை தோழர் வி. இளங்கோ முன்மொழிய தோழர் ஐ.எம்.ஆர். கணேசன் அவர்கள் வழிமொழிந்தார்.

13. பழுதுபட்ட மின் நிலையங்களை சீரமைத்து மின் உற்பத்தியை உறுதிப்படுத்தி மின் பற்றாக்குறையை போக்கிட வேண்டும் என்ற தீர்மானத்தை தோழர் எம். தனலட்சுமி முன் மொழிந்திட தோழர் ஏ. வீரணன் வழி மொழிந்தார்.

14. தமிழக மின் நிலையங்களுக்கு தேவையான நிலக்கரியை வழங்கிட வேண்டும் என்ற தீர்மானத்தை தோழர் சி. ஜோதிமணி முன்மொழிய தோழர் ஈ. அந்தோணி வழிமொழிந்தார்.

15. தமிழக மின் வாரியத்தில் ஏற்படும் மின் விபத்துக்களை தவிர்த்திட நடவடிக்கை எடுத்திட வேண்டும் என்ற தீர்மானத்தை தோழர் கே.ரவிச்சந்திரன் முன் மொழிய தோழர் கே. ஜெயசீலன் வழி மொழிந்தார்.

16. மின் விநியோக பராமரிப்பு பணிகளை செய்து மின் விநியோக தடங்கலை தடுத்திடுக, வருவாய் பிரிவு, நிர்வாகப்பிரிவு, தணிக்கை பிரிவு மற்றும் பண்டகசாலை பிரிவு ஊழியர்களின் கோரிக்கைகளை தீர்த்திடுக என்ற 2 தீர்மானங்களையும் தோழர் டி. பழனிவேல் முன் மொழிய தோழர் கே. காங்கேயன் வழி மொழிந்தார்.

இவைகள் தவிர மாநாட்டில் பொதுவாக வந்த தீர்மான தலைப்புகளை தீர்மானக்குழுத் தலைவர் தோழர் ஆர். குருவேல் அவர்கள் முன் மொழிய தோழர் வை. பாலசுப்ரமணியம் வழி மொழிய அனைத்து தீர்மானங்களும் ஏகமானதாக மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன.

## பேரணி

டிசம்பர் 17 மாலை 5 மணியளவில் காந்திபுரம் பேருந்து நிலையம் அருகில் சித்தா புதூர் என்ற இடத்தில் இருந்து அதிர்வேட்டுக்கள் முழங்க பேரணி துவங்கியது. தோழர்கள், ஆர். கருமலையான், கே. விஜயன், எஸ்.எஸ். சுப்ரமணியன், ஈ. அந்தோணி, கே. செல்லப்பன், எஸ். இராஜேந்திரன், வீ. மதுசூதனன், டி. கோவிந்தராஜு, யு.கே. வெள்ளியங்கிரி, கே.சி. கருணாகரன், எஸ். ஆறுமுகம், பத்மநாபன் ஆகிய தலைவர்கள் தலைமையில் கோவை மாநகரின் பிரதான வீதிகள் வழியாக பேரணி நடைபெற்றது. பேரணி பாதையில் இன்சூரன்ஸ் ஊழியர்கள், வங்கி ஊழியர்கள், ஆட்டோ தொழிலாளர்கள் வழி எங்கும் வாழ்த்தி முழக்கமிட்டனர். மாநாட்டு பேரணியில் ஆயிரக்கணக்கான மின்சார ஊழியர்களும் பொறியாளர்களும், ஒப்பந்த தொழிலாளர்களும், பெண்களும், பகுதி நேர ஊழியர்களும் கலந்து கொண்டனர். மாநாடு வெற்றி பெற தையல் தொழிலாளர்கள் சங்கம் சுவரொட்டி வெளியிட்டுள்ளது.

## பொதுக்கூட்டம்

தோழர் என். வரதராஜன் நினைவுத்திடலில் (சிவானந்தா காலணி பேருந்து நிறுத்தம் அருகில்) பொதுக்கூட்டம் நடைபெற்றது. பொதுக்கூட்டத்திற்கு மத்திய அமைப்பின் தலைவர் தோழர் கே. விஜயன் தலைமை தாங்கினார். மாநில சிஐடியு வின் துணைப் பொதுச் செயலாளர் தோழர் ஆர். கருமலையான் அவர்கள் மாநில மாநாட்டில் தேர்ந்தெடுக்கபட்ட நிர்வாகிகளை அறிமுகப்படுத்தி உரையாற்றினார்

மத்திய அமைப்பின் துணைப் பொதுச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்ட தோழர் எஸ். இராஜேந்திரன் அவர்கள் வரவேற்புரையோடு மத்திய அமைப்பின் பொதுச் செயலாளர் தோழர் எஸ். எஸ். சுப்ரமணியம் மாநில மாநாட்டில் இயற்றப்பட்ட தீர்மானங்களையும், போராட்ட அறிவிப்புகளையும் முன் வைத்து உரையாற்றினார்.

பொதுகூட்டத்தின் முத்தாய்ப்பாக மாநில சிஐடியுவின் பொதுச்செயலாளரும், பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினருமான தோழர் அ. சவுந்தரராஜன் அவர்கள் தமிழக மின் வாரிய ஊழியர்கள் முன் உள்ள சவால்களை விளக்கி எழுச்சி பேருரையாற்றினார்.

பொதுக்கூட்டத்தின் நிறைவு நிகழ்ச்சியாக புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்ட செயலாளர்களில் ஒருவரான தோழர் வீ. மதுசூதனன் நன்றியுரையாற்றினார்.

## எதிர்கால இயக்கங்களுக்கான அறைகூவல்

1. மின்சார சட்டம் 2003 ஐ பயன்படுத்தி தமிழக மின் வாரிய பிரிப்பை மறு பரிசீலனை செய்ய வேண்டும்.
2. ஊதிய உயர்வு பேச்சு வார்த்தையை முடித்து உடனடியாக புதிய ஊதிய உயர்வினை வழங்கிட வேண்டும்.
3. வேலை பளுவற்ற ஊதிய உயர்வை வழங்கிட வேண்டும்.
4. காலி பணி இடங்களை உடன் நிரப்பிட வேண்டும், அவ்வாறு பணியிடங்கள் நிரப்பப்படும்

போது ஒப்பந்த ஊழியர்களையும், ஐடிஐ படித்தவர்களையும் கொண்டு கள உதவியாளர் பணியிடங்களை நிரப்பிடவேண்டும்.

5. தேவையான தளவாட சாமான்களை தடையின்றி விநியோகித்து மக்கள் சேவையை தொடர்ந்திட வேண்டும்.

6. இடம் மாற்றம், ஊர்மாற்றம் புதிய ஊழியர்களை நியமிப்பதில் நிலவுகின்ற ஊழலுக்கு எதிராக

7. பழைய ஓய்வூதிய பயன்கள் தொடர்ந்திட புதிய பென்சன் திட்டத்தை கைவிட

8. இரண்டாண்டு பணிமுடித்த அனைத்து மஸ்தூர்களையும் கள உதவியாளர்களாக நியமித்து நிலுவைத் தொகை வழங்கிட

9. மின் வாரியத்தில் பணியாற்றும் ஒப்பந்த ஊழியர்களுக்கு சம வேலைக்கு சம ஊதியம் என்ற அடிப்படையில் குறைந்த பட்ச ஊதியம் ரூ. 10,000/- என நிர்ணயித்திடுக.

10. மின் வாரியத்தில் பணியாற்றும் பகுதி நேர ஊழியர்களை பணி நிரந்தரம் செய்யும் போது, விடுபட்டு போன பகுதி நேர ஊழியர்களை பணி நிரந்தரம் செய்திடுக, பகுதி நேர ஊழியர்களுக்கு இதர நிரந்தர ஊழியர்களுக்கு வழங்கும் சலுகைகள் அனைத்தையும் வழங்கிடுக. புதிய பிரிவு அலுவலங்களில் பணியாற்றும் பகுதிநேர ஊழியர்களை அங்கீகரித்திடுக

11. கணக்கீட்டுப் பிரிவு ஊழியர்களின் கோரிக்கைகளை அனைத்தையும் தீர்த்து வைத்திடுக.

## 24 மணி நேர கூட்டு பெருந்திரள் முறையீடு

மேற்கூறிய கோரிக்கைகளின் மீது வாரியத்திடம் பல முறை பேசிய பின்னரும் தீர்வு காணப்படாததால் வாரியத்தின் அரசின் கவனத்தை ஈர்க்கின்ற வகையில் வருகின்ற 5.3.2013 அன்று 24 மணி நேர கூட்டு பெருந்திரள் முறையீடு செய்வதென்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

## ஸ்தாபனம்

அ. எஸ்.எம்.எஸ். மூலம் தகவல் அனுப்புவதை முறைப்படுத்துவது

ஆ. கோட்டங்களுக்கு சுற்றறிக்கை அனுப்புவது.

இ. தனி நபர் பிரச்சனையில் மேலும் கூடுதல் கவனம் செலுத்துவது

ஈ. துணை விதியை தமிழாக்கம் செய்து வெளியிடுவது.

உ. கிளை பேரவை நடத்தாத கிளைகள், கிளை பேரவைகளை உடனடியாக நடத்துவது.

ஊ. தணிக்கை நடத்தாத கிளைகள் உடனடியாக தணிக்கை நடத்துவது.

எ. கிளை, கோட்ட செயல்பாட்டை உத்தரவாதப்படுத்துவது.

ஏ. கேட்டகிரி குழுக்களை முறையாக செயல்பட வைப்பது.

ஐ. உழைக்கும் பெண்கள் ஒருங்கிணைப்புக் குழுவின் அடுத்த மாநில மாநாட்டிற்கு திட்டமிடுவது.

ஒ. பொறியாளர் அமைப்பின் கிளைகள் துவங்காத வட்டங்களில் கிளைகளை துவக்கி பொறியாளர் அமைப்பை விரிவு படுத்துவது.

ஓ. மின் வாரிய ஓய்வு பெற்றோர் நல அமைப்பை பலப்படுத்துவது

ஔ. மத்திய அமைப்பில் செயலாற்றும் முன்னணி ஊழியர்களை பயிற்றுவிக்கும் விதமாக தொழிற்சங்க வகுப்புகளை நடத்துவது வருகின்ற நாட்கள் தொழிலாளர்களுக்கும். தொழிற் சங்கங்களுக்கும் சவாலான நாட்கள் என்பதை கணக்கில் கொண்டு நாம் எடுத்த முடிவுகளை முனைப்பாக அமல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென அறைகூவல் விடப்பட்டுள்ளது.

*மாநாடு நடைபெற்ற மண்டபம், பிரதிநிதிகள் தங்குமிடம், தகவல் தொடர்பு, மருத்துவமுகாம், பேரணி, பொதுக்கூட்டம், பிரச்சாரம் என அனைத்து வழிகளிலும் சிறப்பான ஏற்பாடுகளை செய்து தந்த, மாநாட்டு வரவேற்புக்குழுவை மத்திய அமைப்பு மனதார பாராட்டுகிறது. வாழ்த்துகிறது.*

வாழ்த்துக்களுடன்,
தோழமையுள்ள

**(எஸ்.எஸ். சுப்பிரமணியன்)**
பொதுச் செயலாளர்.

# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் : 158 / CPT அங்கீகாரம் பெற்றது இணைப்பு : CITU & EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005

Telephone No: 044-28548529 Email: coteecitu_hqchennai@yahoo.com

Fax No: 044-28516574 coteecitu@gmail.com

CITU


**சுற்றறிக்கை எண் 32/2012** **நாள் : 25/12/2012**

*பெறுநர்*
அனைத்து நிர்வாகிகள்

## மாநில நிர்வாகிகள் கூட்டம்
## 2013 ஜனவரி 05 / சென்னை

அன்பான தோழரே!, வணக்கம்.

மத்திய அமைப்பின் **மாநில நிர்வாகிகள் கூட்டம் எதிர்வரும் 05.01.2013, சனிக்கிழமை**

**நேரம் :** **காலை 10.00 மணிக்கு**

**இடம் :** **டி.ஜே. நினைவகம்**
எண்: 177, சிங்கண்ண செட்டித் தெரு
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை 600 002.

என்ற முகவரியில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் மாநில சி.ஐ.டி.யூ.-வின் சார்பாக உதவிப் பொதுச் செயலாளர் தோழர் ஆர். கருமலையான் கலந்து கொள்கிறார்.

ஒரு நாள் கூட்டம் என்பதால் தோழர்கள் உரிய நேரத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தோழமையுள்ள

**(எஸ்.எஸ். சுப்பிரமணியன்)**
பொதுச் செயலாளர்.

**நிகழ்ச்சி நிரல்**

1. அஞ்சலி
2. தலைவர் உரை
3. சிஐடியு-வின் முடிவுகள் (தோழர் ஆர்.கருமலையான்)
4. மாநில மாநாடு பரிசீலனை
5. நிர்வாகிகள் வேலை பங்கீடு
6. சிஐடியு-வின் மாநிலமாநாட்டு பிரதிநிதிகள் தேர்வு
7. 2013 பிப்ரவரி 20,21 வேலை நிறுத்த தயாரிப்பு
8. 05.03.2013 போராட்ட திட்டமிடல்
9. இதர பிரச்சனைகள்